**பெருநகர சென்னை மாநகராட்சி மன்றம்**
**திருவள்ளுவராண்டு 2056, ஐப்பசி மாதம் 13 – ஆம் நாள்,**
**2025-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30-ஆம் நாள்**
**வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு ரிப்பன் கட்டிடத்தில்**
**உள்ள மன்றக் கூடத்தில் நடைபெற்ற சாதாரண மன்ற கூட்ட நிகழ்ச்சிகள்**

**மாண்புமிகு மேயர்**

முதலில் தமிழ்த்தாய் வாழ்த்து.

**(அவையில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது)**

திருக்குறள். 82 – "தீ நட்பு" என்கிற அதிகாரம். குறள் எண்.814.

" அமரகத் தாற்றறுக்கும் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை. "

போர்க்களத்தில் கீழே தள்ளி விட்டு தப்பித்து ஓடி போகும் குதிரையை போன்றவர்களின் நட்பை பெறுவதை காட்டிலும் தனித்து இருப்பது எவ்வளவோ சிறப்புடையதாகும்.

2025-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30-ஆம் நாள் வியாழக்கிழமை இம்மன்றத்தின் சாதாரண கூட்ட நிகழ்ச்சிகள் தொடங்குகின்றன.

**(தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழியினை மாண்புமிகு மேயர் அவர்கள் படிக்க மன்ற உறுப்பினர்கள் அனைவரும் திரும்ப சொல்லுதல்)**

**தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்திய குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாக கொண்டு எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல்

என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படை கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற, சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியலமைப்பின்பால் எனக்குள்ள முழு பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

**அனைவருக்கும் வணக்கம்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள், சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டு விழாவில் உரையாற்றிய போது, திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சியை பயன்படுத்தி சட்டங்களாலும், விதிமுறைகளாலும், நெறிமுறைகளாக வகுப்போம் என்று உறுதி அளித்தது.

அதன்படி, அரசின் சார்பில் வெளியிடப்பட்ட அரசாணையின் மூலம், மாநிலம் முழுவதும் உள்ள தெருக்கள், சாலைகள், வருவாய் கிராமங்களின் பெயர்களில் காணப்படும் சாதி பெயர்கள் நீக்கப்பட்டு மறுபெயரிடப்படுவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

சாதி, மதம், பாலினம், செல்வம், அதிகாரம் போன்ற எந்த ஒரு காரணத்தாலும் வேறுபாடு இல்லாத, சம வாய்ப்புகளை கொண்ட, நியாயமான மற்றும் முன்னேற்றமிக்க சமத்துவ சமூக அமைப்பை உருவாக்கும் நோக்கத்திற்கான வழி இது. அதே போல், ஆதிக்கத்தின் அடையாளமாகவும், தீண்டாமையின் குறியீடாகவும், வசை சொல்லாகவும் மாறியிருக்கும் “காலனி” என்கிற சொல் அரசு ஆவணங்களிலிருந்தும், பொது புழக்கத்திலிருந்தும் நீக்கப்படுவதற்கான நடவடிக்கையை தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது. காலம் காலமாக மக்கள் மனங்களில் ஊறி போன ஒன்றை அரசாணையின் மூலம் மாற்றியமைத்த இந்தச் செயல், வீரமும் விவேகமும் இணைந்த செயலாகும்.

தலைவர் கலைஞர் அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த போது, அனைத்து சாதியினரும் ஒரே இடத்தில் வசிக்கும் வகையில் "சமத்துவபுரம்" உருவாக்கினார். அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் கொள்கை வாரிசாக திகழும் தளபதி அவர்களின் இச்செயல், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நடவடிக்கையாகும்.

நம்முடைய திராவிட மாடல் அரசு எல்லோருக்கும் எல்லாம் என்பதை குறிக்கோளாக கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்தியாவின் ஜனநாயக பணிகள், முதுகெலும்பாக உள்ள கிராமங்களில் இருந்து தான் தொடங்கப்பட வேண்டும் என்கிற அண்ணல் காந்தி அடிகளின் கூற்றை நிரூபிக்கும் வகையில், உள்ளாட்சி அமைப்புகள், உள்ளாட்சி நிர்வாகத்தில் மக்கள் பங்கேற்கவும், தேவையானதை கேட்டு பெறவும், வழிவகை செய்கிறது. அந்த வகையில் தமிழ்நாடு அரசு கொண்டு வரும் திட்டங்களும் அதன் செயல்பாடுகளும், எப்படி மக்களிடம் சென்றடைகிறது என்பதை அறியும் பொருட்டும், மக்களின் தேவைகளை அறியவும், தமிழ்நாடு அரசு நடத்திய கிராம சபை கூட்டமும், அதில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொளி மூலம் பங்கேற்றதும் இந்தியாவின் கவனத்தை ஈர்த்துள்ளது. இக் கூட்டம் 12,480 ஊராட்சிகளில் காணொளி வாயிலாக நடைபெற்றது என்பது தமிழ்நாடு அரசு நகரங்களுக்கு இணையாக கிராமப்புறங்களிலும் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியில் அபார சாதனை புரிந்துள்ளது என்பதை எடுத்து காட்டுவதாக உள்ளது.

அதே போன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் சென்னை மாநகரில் உள்ள அனைத்து வார்டுகளிலும் சிறப்பு ஏரியா சபை கூட்டங்கள் நடத்தி, முக்கியமான மூன்று கோரிக்கைகளை தெரிவு செய்து, அவற்றை முதல்வரின் முகவரி இணையதளத்தில் பதிவேற்றம் செய்து, அக்கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதை கண்காணிக்கவும் உத்தரவிட்டுள்ளார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெண்களின் முன்னேற்றத்திற்காக கொண்டு வரப்பட்ட கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டம் குறித்து, மாநில திட்டக்குழு அளித்த ஆய்வறிக்கையில், இத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் தொகையானது மருத்துவ செலவு, குழந்தைகளின் கல்வி, தரமான உணவு பொருட்கள், பெண்கள் தாமாகவே முடிவெடுத்து தங்கள் குடும்ப செலவை கவனிக்க பயன்படுகிறது என்று பெரும்பாலான பெண்கள் தெரிவித்துள்ளார்கள். அதே போல், விடியல் பயணம் மூலம் தங்களது பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி கிடைத்துள்ளது. தளபதி அவர்களின் மீது நம்பிக்கை வைத்து, "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் மூலம் தமிழ்நாடு முழுவதும் 28 லட்சம் பேர் விண்ணப்பித்துள்ளார்கள். தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு டிசம்பர் 15ஆம் தேதி முதல் உரிமை தொகை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மகளிர் தம் வாழ்க்கையில் முன்னேற்றம் காண வழிவகை கண்டுள்ளார்கள் என்பதை பெருமையுடன் தெரிவித்து கொள்கிறேன்.

திராவிட மாடல் ஆட்சி காலம் விளையாட்டு துறைக்கு பொற்காலம் என்கின்ற வகையில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் எடுத்து வரும் சீரிய முயற்சியின் காரணமாக, கடந்த ஆட்சி காலத்தில், ஐந்து ஆண்டுகளில் விளையாட்டு துறை உட்கட்டமைப்புக்காக 170 கோடியே 33 லட்சம் ரூபாய் மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில், கழக ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து கடந்த 4 ஆண்டுகளில் 601 கோடியே 38 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக விளையாட்டு துறைக்கு ஆயிரத்து 945 கோடியே 7 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதே போல், தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலம் 1369 விளையாட்டு வீரர்களுக்கு ரூபாய் 25 கோடிக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும் விளையாட்டு துறையை மேம்படுத்தும் வகையில் நடத்தப்பட்ட முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளுக்கு 37 கோடி ரூபாய் பரிசு தொகை வழங்கப்பட்டு, விளையாட்டு வீரர்கள் ஊக்கப்படுத்தப்பட்டுள்ளனர்.

அதே போல், ஒரு சிறப்பு நிகழ்வாக, Bahrain நாட்டில் நடைபெற்ற ஆசிய இளையோர் கபடி போட்டியில் இந்திய அணி தங்கப் பதக்கம் பெற்றது. இந்திய அணிக்கு துணை கேப்டனாக நம்முடைய சென்னையின் தெற்கு எல்லையாக உள்ள கண்ணகி நகர் பகுதியில் வசிக்கும் அரசு பள்ளி மாணவி " கார்த்திகா " என்கிற இளம் வீராங்கனை சிறப்பாக விளையாடி தங்க பதக்கம் வெல்ல காரணமாக இருந்திருக்கிறார். மிகவும் ஏழ்மை நிலையில் தனது மகளின் கபடி கனவிற்கு எந்தவிதமான தொய்வும் ஏற்படாமல் அவரது பெற்றோர்கள் ஊக்குவித்துள்ளனர். அதே போல், ஏழை, எளிய, விளிம்பு நிலையில் உள்ள கண்ணகி நகர் மக்களும், அவருக்கு ஊக்கம் அளித்துள்ளார்கள் என்பது மிகவும் பாராட்டுக்குரியது.

இந்திய அணி கபடி போட்டியில், தங்கம் வென்ற மாணவி கார்த்திகாவிற்கும், திருவாரூரை சேர்ந்த அபினேஷ் அவர்களையும் ஊக்குவிக்கும் விதமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் தலா ரூ. 25 லட்சம் வழங்கியுள்ளார் என்பது மிகவும் போற்றி மகிழத்தக்க கூடிய ஒன்றாகும். அதே போல், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக ரூபாய் ஐந்து லட்சம் ரொக்க பரிசு வழங்கி சிறப்பிக்கப்பட்டது. அப்போது, மாணவி கார்த்திகா, தான் வசிக்கின்ற கண்ணகி நகர் பகுதியில், பல விளையாட்டு வீரர்களை உருவாக்கும் விதத்தில், கபடி ஆடுகளம் மற்றும் விளையாட்டு திடல் அமைத்து தர கோரிக்கை வைத்துள்ளார். அவரது கோரிக்கை பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக நிறைவேற்றப்படும் என்பதையும் தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களும், விளையாட்டு வீரர்களின் திறமையை கண்டு வெளி கொணரும் முயற்சியின் விளைவு தான் நமது சென்னை மாநகருக்கு பெருமை சேர்த்துள்ளது. இந்த நேரத்தில் அவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன். **(கைதட்டல்)**

**மாண்புமிகு மேயர்**

அடுத்து,கேள்வி நேரம்.

கேள்வி எண்.1. மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி. க. வி. நாகவள்ளி அவர்கள், வார்டு எண்.88.

**திருமதி க.வி. நாகவள்ளி**

அனைவருக்கும் வணக்கம். எம் மக்கள் அத்தியாவசிய ரேஷன் பொருட்கள் கொள்முதல் செய்ய சிறிதளவும் அலைக்கழிய வேண்டாம் என்கிற தாயுள்ளத்துடன், “இல்லம் தேடி ரேஷன்”, “இல்லம் தேடி கல்வி”, “இல்லம் தேடி மருத்துவம்” போன்ற திட்டங்களை உருவாக்கி, மக்களின் இல்லங்களுக்கே சென்று சேவையாற்றும் உலகத்தின் தாயுமானவரான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.

“பெண்களின் உயர்வே நாட்டின் உயர்வு” என்கிற கோட்பாட்டினை அடிப்படையாக கொண்டு, மகளிர் சுய உதவி குழு பெண்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்திய மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

மகளிர் சாதிக்க இயலும் என்பதை நம்பிக்கையாக கொண்டு, எங்களுக்கு பொறுப்புகளை வழங்கிய எங்கள் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலைய துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு மேயர் அவர்களே, பெருநகர சென்னை மாநகராட்சியில் 14,000-க்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவி குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இக்குழுக்கள் பல்வேறு வகையான பொருட்களை தயாரித்து வருகின்றன. இவர்கள் தயாரிக்கும் பொருட்களை சந்தைப்படுத்த “பூங்கா சந்தை” என்கிற முன்னெடுப்பு, மாநகராட்சி மூலம் செயல்பாட்டில் உள்ளது.

**கேள்வி:**

மாண்புமிகு மேயர் அவர்களே, பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் உள்ள மகளிர் சுய உதவி குழுக்களுக்கு பொதுமக்கள் அதிகம் கூடும் மாநகராட்சி பூங்காக்களில் மகளிர் சுய உதவி குழு மகளிர் வாழ்வாதாரம் மேம்பட உதவும் வகையில், அவர்கள் தயாரிக்கும் பொருட்களை சந்தைப்படுத்த அனுமதி அளித்தும், பெருநகர சென்னை மாநகராட்சியில் அவர்களை விற்பனையாளர்களாக பதிவு செய்து கொள்ள அனுமதி வழங்கி அவர்களின் பொருட்களை பல்வேறு நிறுவனங்களுக்கு விற்க ஏதுவாகும் என்பதால் இதற்கு அனுமதி அளிப்பீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேயர்**

**பதில்:**

பெருநகர சென்னை மாநகராட்சி பூங்காக்களுக்கு நடைபயிற்சி மற்றும் பொழுதுபோக்கிற்காக வரும் பொதுமக்கள், தங்கள் களைப்பினை போக்கி புத்துணர்வு பெறும் வகையில், பூங்காக்களில் சுய உதவி குழுக்களால் தரமான மற்றும் சுகாதாரமான உணவு மையங்கள் அமைக்கப்படும் என்கிற 2025-2026 நிதிநிலை அறிக்கை அறிவிப்பு எண்-47ஐ செயல்படுத்துவதற்கு, முதற்கட்டமாக 10 பூங்காக்களில் இந்தத் திட்டத்தை செயல்படுத்த தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது.

அதன் அடிப்படையில், மண்டலம்-5, வார்டு-62, சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள மே தின பூங்கா, மண்டலம்-5, வார்டு-52, இராயபுரத்தில் உள்ள அறிஞர் அண்ணா பூங்கா, மண்டலம்-10, வார்டு-127, கோயம்பேட்டில் உள்ள ஜெய்நகர் பூங்கா ஆகிய பூங்காக்களில் 100 சதவீதம் பணி முடிக்கப்பட்டுள்ளது.

மண்டலம்-6, வார்டு-71, பெரம்பூரில் உள்ள முரசொலி மாறன் பூங்கா, மண்டலம்-9, வார்டு-109, சூளைமேட்டில் உள்ள கில் நகர் பூங்கா ஆகிய பூங்காக்களில் பணிகள் நடைபெற்று வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி நிதியின் கீழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகத்தின் மூலம் (1) மண்டலம்-10, வார்டு-136, கே.கே நகரில் உள்ள சிவன் பூங்கா, (2) மண்டலம்-10, வார்டு-133, தி.நகரில் உள்ள நடேசன் பூங்கா, (3) மண்டலம்-7, வார்டு-88, பாடியில் உள்ள மில்லினியம் பூங்கா, (4) மண்டலம்-8, வார்டு-101, அண்ணா நகரில் உள்ள டவர் பூங்கா, (5) மண்டலம்-8, வார்டு-102, அண்ணாநகரில் உள்ள போகன்வில்லா பூங்கா ஆகிய பூங்காக்களில் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளது. பொதுமக்களின் வரவேற்புக்கு ஏற்ப இத்திட்டம் விரிவுப்படுத்தப்படும்.

மேலும், மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி, சென்னை மாநகர பகுதிகளில் பொதுமக்கள் அதிகம் கூடும் பூங்காக்களில் மகளிர் சுய உதவி குழு மூலம் தயாரிக்கப்படும் பொருட்களை சந்தைப்படுத்துவது குறித்து பரிசீலனை செய்து கொள்கை முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்து கொள்ளப்படுகிறது.

**திருமதி க. வி. நாகவள்ளி**

மில்லினியம் பூங்காவில் CAFÉ அமைப்பதற்கான உத்தரவு இந்த மாதம் வெளியிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் தொடர்பாக நாங்களும் தொடர்ந்து கவனம் செலுத்தி அதன் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

**துணை கேள்வி**

மகளிர் சுய உதவி குழுக்கள் பல்வேறு பொருட்கள் மற்றும் உணவு பொருட்களை தயாரித்து வருகின்றனர். இக்குழுக்களை பெருநகர சென்னை மாநகராட்சியில் விற்பனையாளர் (Vendor) பதிவாக செய்தால், அவர்கள் தயாரிக்கும் பொருட்களை நமக்கே நேரடியாகவும், பிற துறைகளுக்கும் வழங்கும் வகையிலும் பயன்பட கூடியதாக இருக்கும்.

**மாண்புமிகு மேயர்**

இது தொடர்பாக உரிய கலந்தாலோசனை மேற்கொண்டு, தேவையான முடிவுகள் எடுக்கப்படும்.

**திருமதி. க. வி. நாகவள்ளி**

நன்றி.

**மாண்புமிகு மேயர்**

அடுத்து, கேள்வி எண்.2. மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. ச. சங்கர் கணேஷ் அவர்கள், வார்டு எண்.151.

**திரு. ச. சங்கர் கணேஷ்**

அனைவருக்கும் வணக்கம். மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, 151-ஆவது வார்டில், தனியார் ஆக்கிரமிப்பில் இருந்த SVS நகர் ஏரியை சுமார் ஆறரை ஏக்கர் பரப்பளவில் மீட்டெடுத்து, ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் நடைபாதை மற்றும் பூங்கா அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணி தற்போது நிறைவு பெறும் நிலையில் உள்ளன.

அதே போன்று, 151வது வார்டு, சின்ன போரூர் மற்றும் லஷ்மி நகர் பகுதிகளில், மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி ரூ.3.00 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு, அவையும் முடிவடையும் தருவாயில் உள்ளன.

இந்த முக்கியமான வளர்ச்சி பணிகளுக்காக, 151-ஆவது வார்டு பொதுமக்களின் சார்பிலும், மாண்புமிகு மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் திரு. க. கணபதி அவர்களின் சார்பிலும், 11வது வார்டுகுழு தலைவர் திரு. வே. ராஜன் அவர்களின் சார்பிலும், மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும் மற்றும் மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

**கேள்வி:**

151வது வார்டு போரூர் மவுண்ட் பூந்தமல்லி சாலையில் அமைந்துள்ள மயான பூமி எந்தவித பயன்பாட்டிற்கும் பயன்படாமல் இருக்கும் 20000 சதுர அடி காலி இடத்தினை 151வது வார்டு இளைஞர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று விளையாட்டு திடல் (Play Field) அமைத்து தருமாறு கேட்டு கொள்கிறேன்.

**மாண்புமிகு மேயர்**

**பதில்:**

மண்டலம்-11, வார்டு-151 மதுரவாயல் வட்டம், போரூர் கிராமம், சர்வே எண்.70/2A மற்றும் 70/2Bல் போரூர் மவுண்ட் பூந்தமல்லி சாலையில் உள்ள மயான பூமி நிலமானது ருத்திர பூமி வகைப்பாட்டை சார்ந்ததாகும்.

நில வகைப்பாடு மாற்றுவதற்கு மண்டலம்-11ன் மூலம் நிலம் மற்றும் உடைமை துறைக்கு கடிதம் அனுப்பப்பட உள்ளது. அதன் அடிப்படையில் நிலம் மற்றும் உடைமை துறை மூலம் மன்றத்தில் உரிய அனுமதி பெற்று மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு கடிதம் அனுப்ப மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்து கொள்ளப்படுகிறது.

**திரு. ச. சங்கர் கணேஷ்**

மாண்புமிகு மேயர் அவர்களே, ஆறரை ஏக்கர் நிலத்தில், ஒரு தனியார் நிறுவனம் கட்டிட அனுமதிக்காக விண்ணப்பித்துள்ள நிலையில், அதில் திறந்தவெளி நிலமாக அரை ஏக்கர் கிடைக்கும். இந்த இரு இடங்களையும் இணைத்து, மொத்தமாக சுமார் ஒரு ஏக்கர் காலி நிலம் கிடைக்கும். அந்த நிலத்தில் விளையாட்டு திடல் அமைக்கப்பட்டால், 151-ஆவது வார்டு மக்களின் நீண்ட நாள் கனவு நிறைவேறும்.

**மாண்புமிகு மேயர்**

வட்டார துணை ஆணையர் அவர்கள், இது குறித்த திறந்தவெளி நிலத்தை முதலில் மேம்படுத்தி, பின்னர் நில வகைப்பாட்டை மாற்றுவதற்கான மன்ற அனுமதியை பெற்ற பின், மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு உரிய கடிதம் அனுப்ப வேண்டுமென கேட்டு கொள்கிறேன்.

**திரு. ச. சங்கர் கணேஷ்**

திறந்தவெளி நிலத்திற்கு அருகில் ஏற்கனவே மூன்று பூங்காக்கள் உள்ளன. அங்கு மூன்று பூங்காக்கள் இருப்பதனால், புதிய பூங்கா அமைப்பதை விட விளையாட்டு திடலை அமைப்பது பயனுள்ளதாக இருக்கும். எனவே, விளையாட்டு திடலை அமைத்து தருமாறு கேட்டு கொள்கிறேன், நன்றி.

**மாண்புமிகு மேயர்**

நன்றி. அடுத்து, கேள்வி எண்.3, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு.வே.ஆனந்தம் அவர்கள், வார்டு எண்.176.

**திரு.வே. ஆனந்தம்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், ஆணையர் அவர்களுக்கும், அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும், பத்திரிகை மற்றும் ஊடக துறையினை சார்ந்த நண்பர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்து கொள்கிறேன்.

**கேள்வி**:

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13, பகுதி-39, 176வது வார்டுக்குட்பட்ட பகுதிகளான லட்சுமி நகர், ஏ.ஜி.எஸ் காலனி, முருகு நகர் ஆகிய பகுதிகளில் மூன்று கழிவுநீர் உந்து நிலையம் (Pumping Station) அமைந்துள்ளது. 176வது வார்டில் மக்கள் அடர்த்தி கொண்ட தெருக்கள்

அதிகமாக உள்ளதால், கழிவுநீரானது அடிக்கடி வெளியேறுகிறது. மேலும், மழைக்காலங்களில் கழிவு நீரானது அதிகமாக நிரம்பி சாலைகளில் தேங்கி நிற்கிறது. இதனால் வாகன ஓட்டிகள், பொதுமக்கள் என அனைவரும் சாலையை கடப்பதற்கு சிரமப்படுகின்றனர். எனவே, 176வது வார்டில் புதியதாக கழிவுநீர் உந்து நிலையம் (Pumping Station) அமைத்தால் மட்டுமே இதற்கான நிரந்தர தீர்வை காண முடியும். ஆகவே, ஏ.ஜி.எஸ் காலனி மற்றும் முருகு நகரில் உள்ள கழிவுநீர் உந்து நிலையத்திலேயே (Pumping Station) போதுமான இட வசதி உள்ளதால் தலா இரண்டு இடங்களிலுமே கழிவுநீர் உந்து நிலையம் (Pumping Station) அமைத்து தருமாறு கேட்டு கொள்கிறேன்.

**மாண்புமிகு மேயர்**

**பதில்:**

சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் பகுதி-13, வார்டு-176 - க்குட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும் கழிவு நீரானது லட்சுமி நகர், AGS காலனி மற்றும் முருகு நகர் ஆகிய PUMPING STATION-ல் சுத்திகரிப்பு செய்யப்பட்டு LIC காலனி PUMPING STATION மூலம் பெருங்குடி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பப்படுகின்றது.

மேலும், கழிவுநீர் அடைப்பு குறித்து பெறப்படும் புகார்கள் கழிவுநீர் இயந்திரங்கள் மூலம் சரி செய்யப்பட்டு வருகிறது. அப்பகுதியில் உள்ள கழிவுநீர் கட்டமைப்புகள், தூர் வாரும் இயந்திரம் மற்றும் அடைப்பு நீக்கும் இயந்திரங்கள் மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

மேலும், பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட Core City பகுதிகளில் தற்போதுள்ள கழிவுநீர் கட்டமைப்புகளை மேம்படுத்தவும், புதிய PUMPING STATION அமைக்கவும் சாத்திய கூறுகள் ஆராயப்பட்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது என்று சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**திரு. வே. ஆனந்தம்**

**துணை கேள்வி**:

வார்டு-176ல் உள்ள 70 சதவிகித தண்ணீர் ஒரு தனியார் நிலத்தின் வழியாக செல்கிறது. எனவே, அந்த நிலத்தினை கையகப்படுத்தி, 10 அடி அகலமுடைய கால்வாயை அமைத்து தர வேண்டும். அல்லது, அந்த நிலத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சியினால் அனுமதி வழங்கும் போது, 10 அடி இடத்தை அவர்களிடமிருந்து கேட்டு பெற்று, வீராங்கல் ஓடையில் இணைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கல்கி நகர் வழியாக வீராங்கல் ஓடையில் நீர் சென்று சேர்கிறது. இது பெரும் பிரச்சனையாக உள்ளது. பல மாமன்ற கூட்டங்களில் இதனை நான் தொடர்ந்து எடுத்துரைத்துள்ளேன்.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

மாண்புமிகு மேயர் அவர்களின் வழியாக, ஆணையர் அவர்களின் கவனத்திற்கு. மாமன்ற உறுப்பினர் அவர்கள் கடந்த 3–4 ஆண்டுகளாக இந்தக் கோரிக்கையை முன் வைத்து வருகின்றார். இந்த இடத்தினை நானும் நேரில் சென்று பார்வையிட்டேன். அது ஒரு தனியார் நிலம். இது மிகவும் கண்டிப்பாக செய்து கொடுக்க வேண்டிய பணி. இதனால் 15–20 தெருக்கள் பாதிக்கப்படுகின்றன.

**திரு. வே. ஆனந்தம்**

வார்டு-176ல் உள்ள முழு தண்ணீரும் அந்த வழியாகவே செல்கிறது.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

தகுந்த இழப்பீடு வழங்கி அந்த நிலத்தை கையகப்படுத்த வேண்டும். மாற்று பாதை ஏற்பாடு செய்யலாம் என அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

**மாண்புமிகு மேயர்**

இது குறித்து ஏற்கனவே தாங்கள் மாமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளீர்கள். நானும் அந்தப் பகுதிக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டுள்ளேன். துணை ஆணையர் (பணிகள்) மற்றும் வட்டார துணை ஆணையர் ஆகியோர் கூடுதல் கவனம் செலுத்தி, மாற்று பாதையை திட்டமிட்டு அவற்றை செயல்படுத்த வேண்டும். மாமன்ற உறுப்பினர் கூறுவது போல, 176வது வார்டு முழுவதும் பாதிப்படைகிறது. அந்த மழைநீர் வீராங்கல் ஓடையில் சென்று சேர வேண்டும்.

**திரு. வே. ஆனந்தம்**

4 அடி கால்வாயை 5 அடி ஆக மாற்றினாலும், முழு தண்ணீரையும் வெளியேற்ற முடியாது. எனவே, ஒரு நிரந்தர தீர்வை வகுத்து, பணியை மேற்கொள்ள வேண்டும்.

**ஆணையர்**

நிலம் கையகப்படுத்தாமல் வேறு வழி இருந்தால் கூறுங்கள். அதை செயல்படுத்தலாம்.

**திரு. வே. ஆனந்தம்**

இது ஒரு ஏக்கர் நிலமாகும். தற்போது அந்த வழியாகவே தண்ணீர் செல்கிறது. அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் அனுமதி பெறுகின்ற போது, 10 அடி இடத்தை கேட்டு பெறலாம்.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

அந்த இடத்தில் கால்வாயின் ஓரமாக பம்பிங் செய்து, வீராங்கல் ஓடைக்கு தண்ணீரை அனுப்புகிறார்கள். அந்த நிலத்தை கையகப்படுத்துவது சாத்தியமானதாகும். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

**ஆணையர்**

ஒன்று, அந்த நிலத்தை கையகப்படுத்தி தேவையான கால்வாய் அமைப்பது. மற்றொன்று, மாற்று பாதையை வகுத்து, அந்தத் தண்ணீரை வீராங்கல் ஓடைக்கு செல்ல வைப்பது. ஆக இரண்டு வழிகள் உள்ளன.

**மாண்புமிகு மேயர்**

மாமன்ற உறுப்பினர் அவர்கள் கூறுவது சரியானது.

**திரு. வே. ஆனந்தம்**

மாண்புமிகு மேயர் மற்றும் ஆணையர் ஆகியோர் நேரில் வந்து ஆய்வு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன், நன்றி.

**மாண்புமிகு மேயர்**

நன்றி. அடுத்து கேள்வி எண்.4, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு.ர. ஜெய்சங்கர் அவர்கள், வார்டு எண்.17.

**திரு.ர. ஜெய்சங்கர்**

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே மற்றும் சக மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் வணக்கம்.

**கேள்வி:**

மண்டலம்-2 பகுதி-04 வார்டு-17யில் உள்ள கொசப்பூர் அரியலூர் தீயம்பாக்கம் மற்றும் பெரியார் நகர் பகுதியில் முந்நூறுக்கும் மேற்பட்ட சிறுவர், சிறுமிகள் மணலி மேல்நிலை பள்ளியில் பயின்று வருகின்றனர்.

எனவே, சிறுவர் சிறுமிகள் பள்ளிக்கு செல்வதற்கு போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தால் பள்ளிக்கு செல்ல சிரமப்படுகிறார்கள்.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிக்கு செல்ல வாகனத்தை ஏற்பாடு செய்து தருமாறு கேட்டு கொள்கிறேன்.

**மாண்புமிகு மேயர்**

**பதில்:**

மண்டலம்-2, வார்டு 17ல் வட பெரும்பாக்கம், சின்ன தோப்பு பெருநகர சென்னை மாநகராட்சி கல்வி துறையின் கீழ் வார்டு 17ல் சென்னை நடுநிலைப்பள்ளி, அரியலூர் சென்னை தொடக்க பள்ளி, தீயம்பாக்கம் சென்னை தொடக்கப்பள்ளி மற்றும் வடபெரும்பாக்கம் சென்னை தொடக்கப்பள்ளி ஆகிய பள்ளிகள் இயங்கி வருகின்றன. மேலும், தாங்கள் குறிப்பிட்டுள்ள மணலி மேல்நிலை பள்ளி கல்வி துறை வரம்பிற்குள்ளதால் அப்பள்ளியில் இயங்கவில்லை என்று தெரிவித்து கொள்கிறேன்.

**திரு.ர. ஜெய்சங்கர்**

மணலியில் உள்ள மேல்நிலை பள்ளிக்கு செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. எங்கள் பகுதியில் இருந்து பள்ளிக்கு செல்வதற்கு சுமார் 7 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. நேரடி போக்குவரத்து வசதி இல்லாததால் சுற்று வழியாக செல்ல வேண்டியிருப்பதால், நடந்து சென்றால் ஒரு மணி நேரம் ஆகிறது. போக்குவரத்து வசதி இருந்தால், 20 நிமிடங்களில் பள்ளியை அடைய முடியும்.

**மாண்புமிகு மேயர்**

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக கடந்த ஆண்டு மூன்று பேருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

**திரு. ர. ஜெய்சங்கர்**

அந்தப் பேருந்துகள் பக்கத்து வார்டிற்கே செல்கின்றன. 17வது வார்டையும் அந்த வழியில் இணைத்தால், மேல்நிலை பள்ளிக்கு செல்லும் மாணவ, மாணவியர்கள் பயனடைவர். தற்போது, போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தினால், சுமார் 300 மாணவ, மாணவியர்கள் தினமும் பள்ளிக்கு நடந்து செல்கின்றனர்.

**மாண்புமிகு மேயர்**

தேவையான அளவில் கூடுதல் பேருந்துகள் வழங்கப்படும்.

**திரு. ர. ஜெய்சங்கர்**

**துணை கேள்வி:**

மண்டலம்-2, பகுதி-04, வார்டு-17 வடபெரும்பாக்கம் சின்னத்தோப்பு பகுதியில் உள்ள சமுதாய நல கூடத்தை சீரமைத்து மின்சாரம் மற்றும் குடிநீர் வசதி செய்து தருமாறு கேட்டு கொள்கிறேன்.

**மாண்புமிகு மேயர்**

**பதில்:**

இந்த சமுதாய நலக்கூடம் எந்த ஆண்டில் கட்டப்பட்டது?

**திரு. ர. ஜெய்சங்கர்**

2011ஆம் ஆண்டிற்கு முன்னரே, ஊராட்சியாக இருந்த போது கட்டப்பட்டது.

**மாண்புமிகு மேயர்**

வரவிருக்கும் நிதிநிலை அறிக்கையில் புதிய சமுதாய நலக்கூடம் கட்டும் திட்டத்தில் இவை சேர்க்கப்படும்.

மண்டலம்-2 மண்டல அலுவலர் அவர்கள் தற்போதைக்கு குறைந்தபட்ச வசதிகளான குழாய், மின்சாரம், இருக்கைகள், benches மற்றும் கழிவறைகள் ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். நிதிநிலை அறிக்கையின் போது புதிய சமுதாய நலக்கூடம் கட்டும் திட்டத்தில் இவை சேர்க்கப்படும்.

**திரு. ர. ஜெய்சங்கர்**

பெரியார் நகர், தீயம்பாக்கம் மற்றும் அரியலூர் பகுதிகளில் உடற்பயிற்சி கூடம் இல்லை. பொதுமக்கள் தொடர்ந்து கோரிக்கையினை முன் வைத்து வருகின்றனர்.

**மாண்புமிகு மேயர்**

அடுத்து, கேள்வி எண்.5, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு.அ.தீர்த்தி அவர்கள், வார்டு எண்.22.

**திரு.அ. தீர்த்தி**

நாளைய இந்தியா எங்களுடைய தலைவர் திரு. ராகுல்காந்தி அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், நிரந்தர தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களை வணங்குகிறேன். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர், திரு. கு. செல்வப்பெருந்தகை அவர்களை வணங்குகிறேன். வட சென்னை கிழக்கு மாவட்ட செயலாளரும் மாண்புமிகு மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான திரு. எஸ். சுதர்சனம் அவர்களை வணங்குகிறேன்.

திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், மரியாதைக்குரிய திரு. கே.பி. சங்கர் அவர்களை வணங்குகிறேன். 2வது வார்டுகுழு தலைவர், திரு. ஆ.வ. ஆறுமுகம் அவர்களை வணங்குகிறேன். என்னை இந்த மேடையில் பேசுவதற்கான வாய்ப்பை அளித்த மாவட்ட காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. ம. சாமுவேல் திரவியம் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, ஆணையர் அவர்களே, உங்களுக்கு என் மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

**வார்டு–22 இல் பல முக்கியமான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.** கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் பத்து ஆண்டுகளாக புறக்கணிக்கப்பட்டிருந்த பகுதிகளில், முதல் மன்ற கூட்டத்தில் நான் முன் வைத்த அனைத்து கோரிக்கைகளையும் செயல்படுத்தி நிறைவேற்றி தந்த மாண்புமிகு மேயர் அவர்களுக்கு, என் மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

**கேள்வி:**

சின்ன சேக்காடு பேரூராட்சியாக இருந்து சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட வார்டு-22ல் இது நாள் வரை லட்சுமி நகர், புத்தபிரான் தெரு, அப்பாராஜ் தெரு, திருவேங்கடம் தெரு, அண்ணா தெரு ஆகிய தெருக்களில் மழை நீர் வடிக்கால்வாய் அமைத்து தரவில்லை. எனவே, இந்த இடங்களுக்கு மழைநீர் வடிகால்வாய் அமைத்து தருமாறு கேட்டு கொள்கிறேன்.

**மாண்புமிகு மேயர்**

பதில்:

மண்டலம்-2, வார்டு-22ல் உள்ள லட்சுமி நகர், அப்பாராஜ் தெரு, திருவேங்கடம் தெரு, மற்றும் அண்ணா தெரு ஆகிய தெருக்களில் மழைநீர் வடிகால்வாய் கட்டுவதற்கு ரூ.1.89 கோடி மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி பெற்று பணி மேற்கொள்ள உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்து கொள்ளப்படுகிறது.

**திரு.அ. தீர்த்தி**

முன்னாள் பாரத பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களின் சிலையை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் நிறுவுவதற்கு ஆவன செய்யுமாறு வட சென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பாக பணிவுடன் கேட்டு கொள்கிறேன்.

**மாண்புமிகு மேயர்**

மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன் வைத்துள்ள இந்தக் கோரிக்கை, அரசின் கவனத்திற்கு எடுத்து செல்லப்படும்.

அடுத்து கேள்வி எண்.6, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு.கே.ஆர். கதிர்முருகன் அவர்கள், வார்டு எண்.170.

**திரு.கே.ஆர். கதிர்முருகன்**

கேள்வி:

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, ஆணையர் அவர்களே, 170 ஆவது வார்டுக்குட்பட்ட பகுதியில் சுமார் 20க்கும் மேற்பட்ட கால்நடை உரிமையாளர்கள் சுமார் 200க்கு மேற்பட்ட மாடுகளை வைத்து பராமரித்து வருகின்றனர். இங்கு நவீன மாட்டு தொழுவம் அமைத்து கால்நடை உரிமையாளர்களின் வாழ்வாதாரத்தை காத்திட ஆவன செய்ய வேண்டும்.

**மாண்புமிகு மேயர்**

**பதில்**:

மண்டலம்-1 முதல் 15 வரையில், மண்டலத்திற்கு ஒரு மாட்டு தொழுவம் என்கிற அடிப்படையில் 17 இடங்களில் மாட்டு தொழுவம் அமைக்கும் பணி ரூ.28.91 கோடி மதிப்பீட்டில் எடுத்து கொள்ளப்பட்டு,

தற்பொழுது வரை மண்டலம்-1, 2, 3 மற்றும் 5ல் மாட்டு தொழுவம் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

மண்டலம்-13ல் மாட்டு தொழுவம் அமைக்க போதிய இடவசதி இல்லாத காரணத்தினால் மாட்டு தொழுவம் அமைக்க இயலவில்லை.

மண்டலம்-14ல் மூன்று இடங்களில் மாட்டு தொழுவம் அமைக்கப்பட்டு வருகிறது. அதில், மண்டலம்-13க்காக மண்டலம்-14ல் வார்டு-188 பள்ளிக்கரணை பகுதியில் தாம்பரம் வேளச்சேரி சாலையில் ரூ.2.56 கோடி மதிப்பீட்டில் மாட்டு தொழுவம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இப்பணி விரைவில் முடிக்கப்பட்டு மண்டலம்-13ல் உள்ள கால்நடை வைத்திருப்பவர்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என்று தெரிவித்து கொள்ளப்படுகிறது.

**திரு. கே.ஆர். கதிர்முருகன்**

170வது வார்டு, கோட்டூர் பகுதியில் பொது பணி துறைக்கு சொந்தமான 8 கிரவுண்ட் நிலம் பயன்பாடின்றி காலியாக உள்ளது. அந்த இடம் மாட்டு தொழுவம் அமைக்க மிகவும் பாதுகாப்பான இடமாக உள்ளது. இது குறித்து மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், வார்டுகுழு தலைவர் அவர்களுக்கும் தெரியும். Unit-40 பகுதியில் உள்ள நான்கு இடங்களும் பாதுகாப்பானதாகும். தற்போது, பொன்னியம்மன் கோவில் தெரு - மார்கெட் வீதியில், 80க்கும் மேற்பட்ட மாடுகள் காலை மற்றும் மாலை நேரங்களில் சாலைகளில் உலாவுகின்றன. இதன் காரணமாக பொதுமக்களும் பாதிப்படைகின்றனர். மாநகராட்சியும் அபராதம் விதித்து வருகிறது.

எனவே, 1200 முதல் 2000 சதுர அடி பரப்பளவில், மாநகராட்சி மூலமாக மாட்டு தொழுவம் அமைத்து தர ஆவன செய்ய வேண்டும்.

**மாண்புமிகு மேயர்**

தாங்கள் குறிப்பிடும் இடம் பொது பணி துறைக்கு சொந்தமானதாகும்.

**திரு. கே.ஆர். கதிர்முருகன்**

அது பொது பணி துறைக்கு சொந்தமானது தான். ஆனால், பயன்பாடின்றி காலியாக உள்ளது.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

மாமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் இடம் 169வது வார்டில் உள்ளது. அந்த இடம் பயன்பாடின்றி உள்ளது. அடுத்த நிதியாண்டில், மாமன்ற உறுப்பினர் அவர்கள் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியில் இதற்கான நிதியினை ஒதுக்கி வழங்குவார்.

**மாண்புமிகு மேயர்**

வட்டார துணை ஆணையர் அவர்கள், இந்த இடத்தை நேரில் ஆய்வு செய்து, பொது பணி துறையினரிடமிருந்து No Objection Certificate பெற்று, தற்காலிக கட்டமைப்பை அமைக்கும் வகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

மேலும், பொதுப்பணி துறைக்கு எதிர்கால திட்டங்கள் ஏதேனும் இருந்தால், அந்த நிலம் மாநகராட்சியால் ஒப்படைக்கப்படும் என தெரிவித்து, "அந்த திட்டங்கள் செயல்படுத்தப்படும் வரை, மாநகராட்சி அந்த இடத்தை பயன்படுத்தி கொள்ளும்" என கூறி, பொதுப்பணி துறைக்கு கடிதம் அனுப்பி, தொடர்ந்து நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும், நன்றி.

**திரு. கே.ஆர். கதிர்முருகன்**

நன்றி.

**மாண்புமிகு மேயர்**

அடுத்து, கேள்வி எண்.7. மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு.வே. ராஜன் அவர்கள், வார்டு எண்.143.

**திரு. வே. ராஜன்**

மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய ஆணையர், இணை ஆணையர், துணை ஆணையர்கள், வட்டார துணை ஆணையர்கள், ஆளுங்கட்சி தலைவர், நிலைக்குழு தலைவர்கள், வார்டுகுழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து துறை சார்ந்த அதிகாரிகள் அனைவருக்கும் எனது காலை வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

**கேள்வி:**

பெருநகர சென்னை மாநகராட்சி, வளசரவாக்கம் மண்டலம்-11, மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியின் மூலம் பாப்காட் (Bobcat) வாகனம் கொள்முதல் செய்ய இயலுமா? என்பதை மன்றத்தின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேயர்**

பெருநகர சென்னை மாநகராட்சியில் Bobcat மற்றும் பிற இயந்திரங்களின் தேவை அதிகரித்து வருகிறது. மாமன்ற உறுப்பினர்களின் நிதியிலிருந்து Bobcat வாகனங்களை மாநகராட்சி சார்பாக கொள்முதல் செய்ய முன் வந்தால், அது பரிசீலிக்கப்படும். வரவிருக்கும் நாட்களில் இந்த வகை கொள்முதல் நடவடிக்கைகள் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

வார்டுக்கு ஒன்று வீதம் Battery Operated Vehicle வழங்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டிருந்தது. ஆனால், பல மாதங்கள் கடந்தும் வழங்கப்படவில்லை. நேற்றைய ஆளுங்கட்சி மாமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், வார்டுக்கு ஒரு பாப்காட் வழங்க வேண்டும் என அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் கருத்து தெரிவித்தனர்.

**ஆணையர்**

5 மற்றும் 6வது மண்டலங்களில் இருந்த BOV வாகனங்கள், ஒவ்வொரு வார்டிற்கும் மூன்று வீதம், மொத்தம் 600 எண்ணிக்கையில் வழங்கப்பட்டுள்ளன.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

Bobcat வாகனம் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியிலிருந்து கொள்முதல் செய்வதற்கு அனுமதி வழங்க வேண்டும்.

**ஆணையர்**

மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியிலிருந்து Bobcat வாகனம் கொள்முதல் செய்வதற்கு அனுமதி வழங்கலாம். மாமன்ற உறுப்பினரின் இந்தக் கோரிக்கையினை ஏற்று கொள்ளலாம்.

Operation & Maintenance (O&M) செலவுகளை மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியிலிருந்து மேற்கொள்வீர்களா?

**திரு. வே. ராஜன்**

Bobcat வாகனத்தின் தோராயமான விலை ரூபாய் 22,94,000/- ஆகும். தற்போது மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி ரூபாய் 60 இலட்சம் வழங்கப்படுகின்றது. அதை ரூபாய் 80 இலட்சமாக உயர்த்தி வழங்கினால், O&M

செலவுகளையும் மாமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் ஏற்று பராமரிக்க தயாராக உள்ளோம்.

NULM திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களில், ஓட்டுநர் தகுதி பெற்றவர்களை ஓட்டுநர்களாக பணியமர்த்தலாம்.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

மாண்புமிகு மேயர் மற்றும் ஆணையர் அவர்களின் கவனத்திற்கு, இது தீர்மானம் மூலம் ஒப்புதல் பெற்று வழங்கப்பட வேண்டும்.

**ஆணையர்**

இந்த மன்றக் கூட்டத்திலேயே இதற்கான பொருள் சமர்ப்பிக்கப்படும்.

**திரு. வே. ராஜன்**

மிக்க நன்றி. தற்போது ஒவ்வொரு யூனிட்டிற்கும் ஒரு Bobcat வாகனம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆணையர் அலுவலகத்தில் புகார் பெறப்பட்டால், செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, உடனடியாக Bobcat வாகனம் அனுப்பப்படுகிறது.

மேயர் அலுவலகத்தில் புகார் பெறப்பட்டால், மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் உடனடியாக Bobcat வாகனம் அனுப்பப்படுகிறது.

ஒரு யூனிட்டில் நான்கு வார்டுகள் இருந்தால், அந்த Bobcat வாகனம் ஒரு வார்டிலிருந்து மற்றொரு வார்டிற்கு செல்ல 3–4 மணி நேரம் எடுத்து கொள்கிறது.

பாப்காட் வாகனத்தை இயக்குவதற்கான ஓட்டுநர்கள் தேவை. அதற்கு ஆணையர் அவர்களே ஒரு ஆலோசனை தெரிவிக்க வேண்டும்.

**ஆணையர்**

அதற்காக தான் Operation & Maintenance செலவுகளை மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியிலிருந்து மேற்கொள்வீர்களா என்று கேட்டேன்.

**திரு. வே. ராஜன்**

இதற்கு தாங்களே ஆலோசனை கூறுங்கள். நிரந்தர பணியாளர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ளனர். NULM பணியாளர்களும் தகுதியுடையவர்களே. Bobcat இயந்திரம் 10–15 நபர்கள் செய்யும் பணியை மேற்கொள்ளும். சிங்கார சென்னை திட்டத்தை செயல்படுத்துவதில் இந்த Bobcat வாகனம் முக்கிய பங்கு வகிக்கிறது. எனது கோரிக்கையை ஏற்று இதற்கு அனுமதி அளித்தமைக்கு மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர் மற்றும் ஆணையர் ஆகியோர்களுக்கு மாமன்றத்தின் சார்பாக எனது நன்றியினை தெரிவித்து கொண்டு அமைகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மேயர்**

அடுத்து, நேரமில்லா நேரம்.

முதலில், மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி மெட்டில்டா கோவிந்தராஜ் அவர்கள், வார்டு எண்.101.

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரும், கழக தலைவருமான அய்யா அவர்களுக்கு மரியாதை செலுத்துகிறேன். அவருக்கு உறுதுணையாக இருந்து நம்மை வழிநடத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், ஆற்றல் மிக்க சென்னை மேற்கு மாவட்ட செயலாளரும், பணிகள் நிலைக்குழு தலைவருமான திரு நே. சிற்றரசு அவர்களுக்கும், மாண்புமிகு மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தயாநிதி மாறன் அவர்களுக்கும், அண்ணாநகர்

தொகுதியின் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு எம்.கே. மோகன் அவர்களுக்கும், எங்கள் பகுதி செயலாளர் திரு ச. பரமசிவம் அவர்களுக்கும், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் திரு. கார்த்திக் மோகன் அவர்களுக்கும், மாண்புமிகு மேயர் மற்றும் மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய ஆணையர் அவர்களுக்கும், எனக்கு உரையாற்ற வாய்ப்பளித்த ஆளுங்கட்சி தலைவர் அவர்களுக்கும், நிலைக்குழு தலைவர்கள், வார்டுகுழு தலைவர்கள், நியமனக்குழு உறுப்பினர்கள், 8வது மண்டலக்குழுத் தலைவர் திரு கூ.பீ. ஜெயின் அவர்களுக்கும், அனைத்து துறை அதிகாரிகள், சக மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஊடக மற்றும் பத்திரிகை துறை சார்ந்த நண்பர்களுக்கும் என் மனமார்ந்த காலை வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

ஷெனாய் நகர் புல்லா அவென்யூவில் நவீன வசதியுடன் கட்டப்பட்ட மகப்பேறு மருத்துவமனை, 11.06.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொளி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது. இதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர், மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர் மற்றும் ஆணையர் ஆகியோருக்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

முன்னதாக மகப்பேறு சிகிச்சை மட்டுமே வழங்கி வந்த இந்த மருத்துவமனை, தற்போது முதுகலை பட்டதாரி மருத்துவர்கள், தோல், எலும்பு, குழந்தை நல மருத்துவர்கள் உள்ளிட்ட பல துறை நிபுணர்கள் மூலம் சேவை அளித்து வருகின்றனர். 10 படுக்கை வசதியுடன் தொடங்கிய இந்த மருத்துவமனை தற்போது 100 படுக்கைகளுடன் 24x7 சேவையளித்து வருகிறது. தினசரி 300-400 மருத்துவ பயனாளர்கள் பயனடைந்து வருகின்றனர். கடந்த செப்டம்பரில் 104 தாய்மார்களுக்கு சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளது.

இத்தனை வசதிகளுடன் இயங்கும் மருத்துவமனைக்கு இன்னும் பெயர் சூட்டப்படவில்லை. 19.03.2025 அன்று திறப்பு நிகழ்விற்கு முன்னதாகவே "கலைஞர் மகப்பேறு மருத்துவமனை" என பெயர் சூட்ட வேண்டி மாண்புமிகு மேயர் மற்றும் ஆணையர் அவர்களிடம் கடிதம் அளித்திருந்தேன். எனவே, இந்த மருத்துவமனைக்கு "கலைஞர் மகப்பேறு மருத்துவமனை" என பெயர் சூட்டப்பட வேண்டும்.

**வார்டு 101 தொடர்பான கோரிக்கைகள்**:

- வார்டு 101-ற்கு தனிப்பட்ட பாப்காட் மற்றும் லாரி வழங்கப்பட வேண்டும். இது சிங்கார சென்னைக்கு வழிகாட்டும் முயற்சியாக இருக்கும்.
- தரமற்ற குப்பை தொட்டிகள் வழங்கப்படுவதால் அவை ஒரு மாத காலத்திற்குள் பழுதடைந்து விடுகின்றன. எனவே, தரமான குப்பை தொட்டிகள் வழங்கப்பட வேண்டும்.
- தூய்மை பணியில் மேஸ்திரிகள் குறைவாக உள்ளனர். இப்பற்றாக்குறை நீக்கப்பட வேண்டும்.
- திருவீதியம்மன் கோயில் பிரதான சாலையில் தார்சாலை அமைக்க 25.05.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு திரு. முகிலன் என்பவருக்கு பணி ஆணை வழங்கப்பட்டது. ஆனால், இதுவரை இவர் பணியினை தொடங்கவில்லை.
- வார்டுகள் 100 மற்றும் 106-லும் சாலை சீரமைப்பு பணிக்கான ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டுள்ளன. ஆனால், பணிகள் தொடங்கப்படவில்லை. எனவே, ஒப்பந்ததாரரின் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- வ.உ.சி. நகர் சாலை மிகவும் சேதமடைந்து மக்கள் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். எனவே, விரைவில் சீரமைத்து தர வேண்டும்.
- ஓட்டேரி நல்லா கால்வாய் பணி முடிவடைய உள்ளதற்காக நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

**மாண்புமிகு மேயர்**

மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியபடி, மருத்துவமனைக்கு “கலைஞர் மகப்பேறு மருத்துவமனை” என பெயர் சூட்டப்பட அரசின் கவனத்திற்கு எடுத்து செல்லப்படும்.

பழுதடைந்த குப்பை தொட்டிகள் ஒரு வார காலத்திற்குள் மாற்றி தரப்படும். சாலை பணி தொடங்கப்படவில்லை என்று தெரிவித்துள்ளீர்கள். சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு நோட்டீஸ் வழங்கப்படும். மழைக்காலங்களில் சாலைகள் அமைக்க முடியாததால், குடிநீர் வாரிய பணிகள் மற்றும் மழைநீர் வடிகால்வாய் பணிகள் முடிவடைந்த பின்னர் சாலை அமைத்து தரப்படும்.

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு ந. அதியமான் அவர்கள், வார்டு எண் 105.

**திரு. ந. அதியமான்**

“தமிழுக்கு அமுதென்று பேர், அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!” எனும் வரிகளை மனமார கூறி, அச்சமின்றி அகிலத்தை ஆளும் தமிழ், எங்கும் கமழ்ந்து மணக்க வேண்டும்; காலத்தை வென்று தமிழ் சிறக்க வேண்டும்; இமயத்தில் பொறித்த புகழ் உயிர்க்க வேண்டும்; இமை மூடி கிடப்போர் விழிக்க வேண்டும் என்பதற்காக, இந்த மன்றத்தில் என்னை அனுப்பி உரையாற்ற செய்த என் அன்னை தமிழுக்கு அமுத வணக்கம்.

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, உடல்நிலை சற்று பாதிக்கப்பட்டிருந்தாலும், மன உறுதியுடன் களத்தில் தொடர்ந்து செயல்பட்டு வரும் மரியாதைக்குரிய ஆளுங்கட்சி தலைவர் அவர்களே, எங்களுக்காக குரல் கொடுப்பதோடு மட்டுமல்லாமல், தோளோடு தோள் நின்று எங்களை வழிநடத்தி வரும் மாவட்ட கழகத்தின் ஆற்றல் மிக்க செயலாளர் திரு நே. சிற்றரசு அவர்களே, மாமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளை ஆணையிட்டு நிறைவேற்றி கொண்டிருக்கும் பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர் அவர்களே, நான் கோயிலுக்கு

செல்வதில்லை. ஆனால், சென்னை மாநகராட்சியின் வாயிலை ஒரு கோயிலாக கருதுகிறேன். இது சென்னை மாநகர மக்களுக்கு ஒரு அர்ப்பணிப்பு கோயிலாக விளங்குகிறது. இந்த மாநகராட்சி, நகரத்தின் முன்னேற்றத்திற்காக அனைத்து நிலைகளிலும் அரும்பாடுபட்டு செயல்பட்டு வருகிறது.

இந்திய தீபகற்பம் முப்புறமும் கடலால் சூழப்பட்டிருப்பதை போல, 105 ஆவது வார்டும் சிறு மழை பெய்தாலே மழைநீரால் சூழப்பட்ட பகுதியாக இருந்தது. பாஞ்சாலி அம்மன் கோயில் தெருவிலிருந்து இந்திரா காந்தி தெரு, அமராவதி நகர் A-பிளாக்கிலிருந்து J-பிளாக்கு வரை நீர்ப்பெருக்கால் பாதிக்கப்பட்டிருந்த பகுதிகள், தற்போது பல கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்ட பணியின் மூலம் 75 சதவீதம் நிறைவு பெற்றுள்ளன. சமீபத்திய மழையிலும் இந்த வார்டு மழைநீரிலிருந்து விடுதலை பெற்றிருப்பது தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இதற்காக மாண்புமிகு மேயர் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகளுக்கு 105 ஆவது வார்டு மக்களின் சார்பில் என் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

“கல்வியில் சிறந்த தமிழ்நாடு, உயர் கம்பன் பிறந்த தமிழ்நாடு” இன்று மருத்துவ துறையிலும் இந்தியாவிற்கே வழிகாட்டியாக உயர்ந்து வருகிறது. “நலம் காக்கும் ஸ்டாலின்” என்கிற முழக்கத்துடன் மண்டல வாரியாக நடைபெறும் பிரம்மாண்ட மருத்துவ முகாம்கள் பெரும் வரவேற்பினை பெற்றுள்ளன. இதற்கான திட்டத்தினை தீட்டி அவற்றை செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், இந்த கட்டமைப்பை அமைத்து கொடுத்த பெருநகர சென்னை மாநகராட்சியின் மருத்துவ துறை அதிகாரிகளுக்கும் என் மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

11வது வார்டுகுழு தலைவர் திரு. வே. ராஜன் அவர்கள் கூறியது போல், அனைத்து வார்டுகளுக்கும் பாப்காட் வாகனங்கள் மற்றும் லாரிகள் வழங்கப்பட வேண்டும் என்கிற கோரிக்கையை இந்த மாமன்றத்தில் தீர்வாக கொண்டு

வந்தமைக்காக, 105 ஆவது வார்டு மக்களின் சார்பில் மீண்டும் எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அடுத்து, பட்டா பிரச்சனை குறித்து பேச விரும்புகிறேன். 105-ஆவது வார்டில் உள்ள அசோகா நகர், விநாயகபுரம், பெருமாள் கோயில் தோட்டம், சக்தி நகர், பால விநாயகர் நகர் உள்ளிட்ட பகுதிகளில், பட்டா வழங்கும் பணியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் பெரும் சுணக்கம் காட்டி வருகிறது. இது தொடர்பாக துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

நாம் ஆட்சி பொறுப்பேற்ற போது, கிரயப்பத்திரம் வைத்துள்ளவர்களுக்கு பட்டா வழங்கப்படும் என்று உறுதியளித்தோம். ஆனால், கடந்த நான்கு ஆண்டுகளாக, கிரயப்பத்திரம் வைத்திருப்பவர்களுக்கு பட்டா வழங்கப்படாமல் உள்ளது. இது தொடர்பான பிரச்சனைக்கு உடன் தீர்வு காணப்பட வேண்டும். அரசாணை எண் 804-ஐ செயல்படுத்துவதில் என்ன தடை இருக்கிறது என்பது தெரியவில்லை. நமது ஆட்சி நடைபெறும் காலத்திலேயே இதற்கான தீர்வை நாம் எடுக்க வேண்டும். மேலும், வரும் தேர்தலுக்குள் அரசாணை எண் 804-ஐ முழுமையாக செயல்படுத்த வேண்டும். இந்த மன்றமே இதற்கான முன்னோட்ட நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென கேட்டு கொள்கிறேன். ஏனெனில், பல மாமன்ற உறுப்பினர்களும் இதே பிரச்சனையை முன் வைத்து வருகின்றனர். இப்பிரச்சனை தீர்க்கப்பட்டால், சென்னை மாநகரத்தில் பல லட்சம் மக்கள் பயனடைவார்கள் என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

தற்போது கட்டிட அனுமதியில் *FSI* (Floor Space Index) விதிமுறைகள் நடைமுறையில் உள்ளன. ஆனால், பலர் வழங்கப்பட்ட கட்டிட வரைபட அனுமதியின்படி கட்டடங்களை கட்டுவதில்லை.

*Stilt* பகுதியில் கார் நிறுத்துமிடமாக அமைக்க வேண்டிய இடத்திற்கு அனுமதி பெற்று விட்டு, அதில் கட்டடம் கட்டி விட்டு, இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களை சாலைகளில் நிறுத்தும் நிலை உருவாகியுள்ளது. இதனால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். ஆட்டோ கூட அந்தத் தெருவிற்குள் செல்ல முடியாத நிலைமை உள்ளது.

சென்னை மாநகரில் 50 சதவீத மக்களிடம் கார் உள்ளது. ஆனால், அவை பெரும்பாலும் தெருக்களில் நிறுத்தப்படுகின்றன. 105-ஆவது வார்டில் உள்ள எம்.எம்.டி.ஏ காலனியில், *C பிளாக்கிலிருந்து J பிளாக்கு* வரை, கட்டிட வரைபட அனுமதி பெற்று வீடுகள் கட்டப்பட்டுள்ளன. ஆனால், தரைதளத்தில் வாகன நிறுத்துமிடம் இல்லாமல் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இதனால் வாகனங்கள் தெருக்களில் நிறுத்தப்படுகின்றன. ஒரு வீட்டில் நால்வர் வசிக்க வேண்டிய நிலையில், இன்று 20 பேர் வசித்து வருகின்றனர். 5 வாடகைதாரர்கள், 10 இரு சக்கர வாகனங்கள் வைத்திருப்பதை காணலாம். இவை அனைத்தும் சாலைகளில் நிறுத்தப்படுவதால், இரவு நேரங்களில் ஆட்டோ கூட செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, 250 சதுர அடியில் வீடுகள் கட்டும் நபர்களுக்கும், வாகன நிறுத்துமிடம் இல்லாமல் கட்டிட வரைபட அனுமதி வழங்க கூடாது என்கிற என் பணிவான வேண்டுகோளை முன் வைக்கிறேன்.

எனவே, கட்டிட வரைபட அனுமதியின்படி *Stilt Parking* பகுதிகள் முறையாக வாகன நிறுத்துமிடமாக பயன்படுத்தப்படுகிறதா என்பதை கண்காணிக்க வேண்டிய அவசியம் உள்ளது.

அண்ணாநகர் பகுதியில், போக்குவரத்து துறை அதிகாரிகள், மாண்புமிகு அண்ணாநகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்ட கூட்டம் நடைபெற்றது. ஆனால், அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் இதுவரை செயல்படுத்தப்படவில்லை.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

மாண்புமிகு மேயர் மற்றும் ஆணையர் அவர்களின் கவனத்திற்கு. கட்டிட வரைபட அனுமதியில் *Stilt + 3* கட்டிடங்களுக்கு, உயரத்தை 46 அடி என நிர்ணயித்துள்ள நிலையில், அதை 50 அடியாக உயர்த்தி அனுமதி வழங்க வேண்டும். ஏனெனில், A/C, Ducting level மற்றும் Fall Ceiling அமைப்பதற்காக கூடுதல் 3 அடி தேவைப்படுகிறது.

**திரு. ந. அதியமான்**

சமீபத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி சுகாதார துறை ஊழியர்களுக்காக ஒரு செயலி வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் எந்த இடத்தில் என்ன பணி செய்கிறார்கள் என்பதை பதிவு செய்யும் செயலியாக இது உள்ளது. ஆனால், அந்த ஊழியர்களில் பலர் கல்வி கற்றவர்கள் அல்லாததால், செயலியை பயன்படுத்த தெரியவில்லை.

மேலும், ஒரு தெருவில் மலேரியா போன்ற காய்ச்சல் ஏற்பட்டால், அந்தத் தெருவின் ஊழியரே பொறுப்பாளியாக்கப்படுகிறார்கள். இதனால், அவர்களின் ஊதியத்தில் சம்பளம் பிடித்தம் செய்யப்படுகின்றது. எனவே, இதனை மறுபரிசீலனை செய்யுமாறு பணிவுடன் கேட்டு கொள்கிறேன்.

**ஆணையர்**

மரியாதைக்குரிய உறுப்பினர் அவர்களே, மலேரியா பணியாளர்களுக்கான வருகை பதிவு *Mobile App* மூலம் மேற்கொள்ளப்படுகிறது. அதற்கான பயிற்சி வழங்கப்படும். ஆனால், சம்பளத்தில் பிடித்தம் செய்யப்படுவதற்கான வாய்ப்பு இல்லை. இது குறித்து சரிபார்க்கப்படும்.

**திரு. ந. அதியமான்**

நன்றி.

**மாண்புமிகு மேயர்**

Fogging பணி தற்பொழுது தீவிரமாக நடைபெற்று வருகிறது. புகைப்படங்களை பதிவேற்றம் செய்யுமாறு அனைத்து துறைகளுக்கும் அறிவுறுத்தியுள்ளோம். அதே போன்று, மலேரியா துறைக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனால், சம்பளத்தில் பிடித்தம் செய்யப்படுவதற்கான வாய்ப்பு இல்லை. இது குறித்து சரிபார்க்கப்படும்.

3,300 சதுர அடி வரையிலான பரப்பளவுள்ள தனி வீடுகளில், இரண்டு கார், இரண்டு இரு சக்கர வாகனங்கள் நிறுத்த இடத்தை ஒதுக்க வேண்டும். அதே போன்று, 3,300 சதுர அடிக்கு மேற்பட்ட பரப்பளவுள்ள வீடுகளில், நான்கு கார் நிறுத்துமிடம், நான்கு இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் ஒதுக்குவதை கட்டாயமாக்கும் வகையில் பொது கட்டட விதிகள் திருத்தப்பட்டுள்ளன.

**திரு. ந. அதியமான்**

மாண்புமிகு மேயர் அவர்களே, விதிகள் உள்ளன. ஆனால், நாம் இவற்றை கண்காணிக்க வேண்டும்.

**மாண்புமிகு மேயர்**

தற்போது பொது கட்டட விதிகளில் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளன என தெரிவித்து கொள்கிறேன்.

**திரு. ந. அதியமான்**

மாண்புமிகு மேயர் அவர்களே, "என் குப்பை, என் பொறுப்பு" என நாம் கூறுகிறோம். அதைப் போலவே, சாலைகளில் மாடுகள் போடும் சாணங்களை அதன் உரிமையாளர்களே பொறுப்பேற்று அகற்ற வேண்டும். அதே போன்று, வளர்ப்பு நாய்களின் கழிவுகளை அதன் உரிமையாளர்களே அகற்ற வேண்டும். இதற்காக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

எங்கள் மாவட்ட செயலாளர் மற்றும் பணிகள் நிலைக்குழு தலைவர் அவர்களின் வழிகாட்டுதலால், 105வது வார்டில் பல பணிகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளன. பாரதி சொன்னது போல், "சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம், சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம், வங்கத்தில் ஓடி வரும் நீரின் மிகையால் மையத்து நாடுகளில் பயிர் செய்வோம்" என்கிற வரிகளை நினைவு கூறுகிறேன்.

105 மற்றும் 106வது வார்டிலும் நான்கு பாலங்கள் உயர்த்தப்பட்டு வருகின்றன. இதற்காக பணிகள் நிலைக்குழு தலைவர் அவர்களுக்கும், மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களுக்கும், வார்டுகள் 105, 106, 107 மக்களின் சார்பில் என் மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், விடியும் வரை காத்திருக்காமல், விடிவதற்கு முன்பே கரூருக்கு சென்று, மக்களை நேரில் பார்த்து ஆறுதல் கூறி, “நான் என்றைக்கும் மக்கள் முதல்வன்” என்பதை மீண்டும் நிரூபித்துள்ளார்.

"விடியலுக்கில்லை தூரம், விடியும் மனதில் இன்னும் ஏன் பாரம்? உன் நெஞ்சம் முழுதும் ஈரம், இருந்தும் கண்ணில் ஏன் இன்னும் ஈரம்?"

எனவே, நிச்சயமாக வரும் ஆட்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் ஆட்சியாகவே அமையும் **(கைதட்டல்)**

கமழ்கின்ற தமிழ் எங்கும் மணக்க வேண்டும் என்று நாம் சொல்வோமே, அந்த மணக்கின்ற தமிழை போலவே, இந்த ஆட்சி மென்மேலும் மலர்ந்து ஓங்கும், ஓங்கும்.

கிழக்கு வெளிச்சம் இருட்டை கிழிக்கட்டும், கிழியும் இருட்டில், உதய சூரியனின் தகதகவென்ற கதிர்கள் மீண்டும் ஒளிரும், ஒளிரும் என்று கூறி பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மேயர்**

நன்றி. மன்ற கூட்டம் முடிவடைந்த பிறகு, அம்மா மாளிகை கலையரங்கில் குழு புகைப்படம் எடுக்க உள்ளதால், அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன்.

அடுத்து, மரியாதைக்குரிய திரு. கே.பி.கே. சதீஷ்குமார் அவர்கள், மாமன்ற உறுப்பினர், வார்டு எண் 182.

**திரு. கே.பி.கே. சதீஷ்குமார்**

மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், ஆணையர் அவர்களுக்கும், நிலைக்குழு தலைவர்களுக்கும், வார்டுகுழு தலைவர்களுக்கும், சக மாமன்ற உறுப்பினர்களுக்கும், மாநகராட்சியை சார்ந்த அனைத்து துறை அதிகாரிகளுக்கும், அலுவலர்களுக்கும், ஊடகம் மற்றும் பத்திரிகை துறை நண்பர்களுக்கும், என் மனமார்ந்த காலை வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

2022ஆம் ஆண்டு நடைபெற்ற பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் தேர்தலில், 200 வார்டுகளில், வார்டு எண் 182-இல் நான் மாமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டேன். பெருந்தலைவர் காமராஜர் நகர் பகுதி, வாக்காளர் பட்டியலில் வார்டு 182-இல் சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால், மாநகராட்சியின் வரைபடம், ERP மற்றும் பதிவேடுகளில் அந்தப் பகுதி 184-வது வார்டாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதுகுறித்து இதுவரை தெளிவான விளக்கம் வழங்கப்படவில்லை.

இதன் விளைவாக கடந்த மூன்று ஆண்டுகளாக, அந்தப் பகுதியில் உள்ள மெயின் சாலை மற்றும் ஐந்து குறுக்கு தெருக்களில் பாதாள சாக்கடை திட்டம், மழைநீர் வடிகால்வாய், தெரு விளக்கு வசதிகள் வழங்கப்படவில்லை. சில தெருக்களுக்கு மட்டும் சாலை வசதி செய்யப்பட்டுள்ள நிலையில், அப்பகுதியை 182-வது வார்டாக மாற்றி, உரிய அடிப்படை வசதிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு கொள்கிறேன். ஏனெனில், அப்பகுதி மக்கள் என்னை தேர்ந்தெடுத்ததாலேயே, அவர்களது நலனுக்காக இது அவசியமாகிறது.

**திரு எஸ்.வி. ரவிச்சந்திரன் (குறுக்கீடு)**

வார்டு மறுவரையறையின்படி, அந்தப் பகுதி 184-வது வார்டில் வருகிறது. ஆனால், வாக்குகள் 182-வது வார்டில் பதிவு செய்யப்படுகின்றன.

**மாண்புமிகு மேயர்**

ஒரு வாரத்திற்குள் இதற்கான தீர்வு காணப்பட்டு, உரிய பதில் வழங்கப்படும்.

**திரு கே.பி.கே. சதீஷ்குமார்**

182-வது வார்டில் உள்ள கற்பக விநாயகர் கோவில் தெரு, விவேகானந்தர் தெரு, கம்பர் தெரு, பாரதியார் தெரு, பாரதிதாசன் தெரு, அவ்வையார் தெரு, பாலகங்காதர தெரு ஆகிய 7 தெருக்களில், பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பக்கவாட்டு கால்வாய் மற்றும் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

ஆனால், அருகிலுள்ள நேரு தெரு, கண்ணகி தெரு, காந்தி தெரு, வ.உ.சி. தெரு, சேரன் செங்குட்டுவன் தெரு உள்ளிட்ட 6 தெருக்களில் சாலை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், இங்கு கால்வாய் வசதி இல்லை. பொதுமக்கள், இத்தெருக்களிலும் கால்வாயுடன் கூடிய சாலை அமைக்க வேண்டுமென்கிற கோரிக்கையினை முன் வைத்து வருகின்றனர். எனவே, இக்கோரிக்கையை நிறைவேற்றி தருமாறு கேட்டு கொள்கிறேன். அப்பகுதியில் மழை பொழியும் நேரங்களில் மழைநீர் தேங்கும் நிலை காணப்படுகிறது. எனவே, அங்கு மழைநீர் வடிகால்வாய் அமைத்து தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

**மாண்புமிகு மேயர்**

மழைநீர் தேங்கி நிற்கும் சாலைகளில் மட்டுமே மழைநீர் வடிகால்வாய் அமைக்கப்படும் என தெரிவித்து கொள்கிறேன்.

**திரு கே.பி.கே. சதீஷ்குமார்**

இப்பகுதியில் மழைக்காலங்களில் மழைநீர் பெரிதும் தேங்கி நிற்கும் நிலை காணப்படுகிறது. எனவே, பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு, இங்கு மழைநீர் வடிகால்வாய் அமைத்து தர வேண்டுமென கேட்டு கொள்கிறேன்.

**மாண்புமிகு மேயர்**

வரவிருக்கும் நாட்களில், அந்தப் பகுதியில் இப்பணிகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்து கொள்கிறேன்.

**திரு கே.பி.கே. சதீஷ்குமார்**

நன்றி. அதே போன்று, கடந்த ஆறு மாதங்களாக மகாகவி பாரதியார் தெரு, செல்வ விநாயகர் கோவில் தெரு மற்றும் OMR பாண்டியன் சாலையில் சுமார் 270 மீட்டர் நீளத்தில் உள்ள பழைய மழைநீர் வடிகால்வாயில் அடைப்புகள் இருப்பதாக பொதுமக்கள் புகார் தெரிவித்தனர். இதையடுத்து, 2025 செப்டம்பர் 8ஆம் தேதி மேற்பார்வை பொறியாளர் உள்ளிட்ட அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு இவற்றை உறுதிப்படுத்தினர். அதனை தொடர்ந்து, பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஆனால், அப்பகுதியில் பைப்லைன்கள் மற்றும் கேபிள் வயர்கள் இருப்பதால், பணியை மேற்கொள்ள முடியாது என அதிகாரிகள் தெரிவித்தனர். எனவே, மாற்று ஏற்பாடுகள் செய்து, அந்தத் தாழ்வான பகுதியில் புதிதாக மழைநீர் வடிகால்வாய் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மழைக்காலத்தில் மக்கள் பாதிக்கப்படாமல் இருக்க இது அவசியம். மழைநீர் வெளியேற ஒரே வழி, புதிய மழைநீர்வடிகால்வாய் அமைப்பதே. இதற்கான அனைத்து ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**மாண்புமிகு மேயர்**

மாமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சாலை நெடுஞ்சாலை துறையின் கட்டுப்பாட்டின் கீழ் வருகிறது. எனவே, அந்தத் துறையிடம் தொடர்பு கொண்டு, தேவையான அனுமதி (NOC) பெற்ற பிறகு, மாநகராட்சி சார்பில் தூர் வாரும் பணி மேற்கொள்ளப்படும்.

**திரு கே.பி.கே. சதீஷ்குமார்**

அங்கு தூர் வாரும் அளவிற்கு பெரிய பணிகள் இல்லை. மிகவும் குறுகிய தெருவாகவே உள்ளது. ஆனால், மழை பொழியும் போதெல்லாம் முட்டி அளவிற்கு மழைநீர் தேங்கி நிற்கிறது. வார்டுக்குழு தலைவர், மண்டல அலுவலர், செயற் பொறியாளர் ஆகியோர் பார்வையிட்டு, கட்சி பாகுபாடு இன்றி அனைவரும் இந்தப் பணிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளனர்.

**திரு எஸ்.வி. ரவிச்சந்திரன் (குறுக்கீடு)**

மாண்புமிகு மேயர் அவர்களே, அவர் குறிப்பிட்ட சாலையை நானும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் மற்றும் அனைத்து அதிகாரிகளும் பார்வையிட்டோம். அந்தத் திட்டத்தில் சில savings உள்ளன. அவற்றை பயன்படுத்தி பணியை மேற்கொள்ள வாய்ப்பு இருந்தால், மேற்கொள்ளலாம் என ஆணையர் அவர்களும் உத்தரவு வழங்கியுள்ளார். ஆனால், trial pit தோண்டிய போது, உள்ளே பெரிய பைப்புகள் இருப்பது தெரிய வந்ததால், அங்கு பணியை மேற்கொள்ள இயலவில்லை. அதனாலேயே அப்பணி நிறைவேற்றப்படவில்லை.

**மாண்புமிகு மேயர்**

வட்டார துணை ஆணையர் அவர்கள் இந்த விஷயத்தை கவனத்தில் கொண்டு, மாற்று வழிகள் குறித்து ஆய்வு செய்து, மழைக்காலம் முடிவுற்றவுடன் பணிகளை மேற்கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன்.

**திரு கே.பி.கே. சதீஷ்குமார்**

எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும். இங்கு இல்லாமை இல்லாத நிலை நிலவ வேண்டும். மக்களால் நான், மக்களுக்காகவே நான். உங்களால் நான், உங்களுக்காகவே நான். மக்களுக்காகவே இந்த அரசு. இவ்வாறு தவ வாழ்க்கை வாழ்ந்த தங்க தாரகை இதய தெய்வம், மாண்புமிகு புரட்சி தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த அம்மா உணவகத்திற்கு, இன்று வரை பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி ராம் அண்ட் கோ நிறுவனத்திற்கு பணி நேர் செய்யப்பட்டு 6–7 மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால், எந்தப் பணியும் நடைபெறவில்லை.

182-வது வார்டில் உள்ள நான்கு அம்மா உணவகங்களில், இரண்டு உணவகங்கள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. மேற்கூரை உள்ளிட்ட கட்டமைப்புகள் பழுதடைந்துள்ளன. எனவே, அவற்றை சீரமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு ஏற்கனவே நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், அவர் பணிகளை மிகவும் மெத்தனமாகவே மேற்கொண்டு வருகிறார்.

**மாண்புமிகு மேயர்**

இது தொடர்பாக உரிய விதிகளின்படி ஒப்பந்ததாரருக்கு நோட்டீஸ் வழங்கி, வேறு ஒப்பந்ததாரரை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**திரு கே.பி.கே. சதீஷ்குமார்**

மாண்புமிகு மேயர் அவர்களிடம் இதற்கு முன் கேள்வி நேரத்திலும், நேரமில்லா நேரத்திலும் நான் தெரிவித்திருந்தேன். நாடாளுமன்ற தேர்தல் நடைபெறும் முன்பாக, 182வது வார்டில் இருந்த **இ-சேவை மையம்** மூடப்பட்டது. மாண்புமிகு மேயர் அவர்கள், கேள்விக்கான பதிலில், உங்கள் வார்டு

மட்டுமல்லாமல் 200 வார்டுகளிலும் இ சேவை மையம் புதிதாக துவங்கப்படும் என நிதிநிலை அறிக்கையின் **போது** தெரிவித்திருந்தீர்கள். ஆனால், இன்று வரை இந்த **இ சேவை மையம்** மூடப்பட்டே உள்ளது. அதனை மீண்டும் திறந்து, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு கொள்கிறேன்.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

மன்ற உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு. இ சேவை மையம் மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் இல்லை. அது செய்தி மக்கள் தொடர்பு துறையின் கீழ் செயல்படுகிறது. மாண்புமிகு மேயர் அவர்கள், இந்த விஷயத்தை அந்தத் துறையின் கவனத்திற்கு எடுத்து சென்றுள்ளார். இது அரசின் கொள்கை முடிவு. கலந்தாலோசனை செய்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்து கொள்கிறேன்.

**திரு கே.பி.கே. சதீஷ்குமார்**

பொதுமக்கள் வலியுறுத்தும் கோரிக்கை என்னவெனில், ஏற்கனவே அந்த இடத்தில் இ சேவை மையம் செயல்பட்டு கொண்டிருந்ததால், அதே இடத்தில் மீண்டும் அமைக்க வேண்டும் என்பதாகும்.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

உங்கள் கோரிக்கையை நாங்கள் அரசின் கவனத்திற்கு எடுத்து செல்கிறோம்.

**திரு கே.பி.கே. சதீஷ்குமார்**

பெருங்குடி ஏரி சீரமைப்பு பணிகளுக்காக ரூ.10.00 கோடி நிதி 2023-இல் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருந்தும் இதுவரை பணிகள்

துவங்கப்படவில்லை. எனவே, பணிகளை உடனடியாக துவக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு மேயர்**

அதற்கான விரிவான திட்ட அறிக்கை (DPR) தயார் செய்யப்பட்டு உள்ளது. இந்தத் திட்டத்திற்காக ரூ.13.00 கோடி நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது. இதுகுறித்து அரசின் கவனத்திற்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது. வரவிருக்கும் நாட்களில் இதற்கான தீர்வு காணப்படும் என தெரிவித்து கொள்கிறேன்.

**திரு கே.பி.கே. சதீஷ்குமார்**

அதே போன்று, 182வது வார்டில் உள்ள மிக முக்கியமான சாலை எம்.ஜி.ஆர். சாலை. இது நெடுஞ்சாலை துறையின் பராமரிப்பில் உள்ளது. மழைநீர் தேக்கம் ஏற்பட்டாலும், Manhole Door திறந்திருந்தாலும், எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுவதில்லை. எனவே, அந்தச் சாலையை நெடுஞ்சாலை துறையிலிருந்து பெருநகர சென்னை மாநகராட்சி பெற்று, தேவையான பணிகளை மேற்கொள்ள வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

**திரு எஸ்.வி. ரவிச்சந்திரன் (குறுக்கீடு)**

மாண்புமிகு மேயர் அவர்களே, சமீபத்தில் பெய்த மழையின் போது, நானும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், மன்ற உறுப்பினர் குறிப்பிட்ட அந்த இடத்திற்கு சென்று பார்வையிட்டோம். அங்கு சில சிரமங்கள் இருந்தன. தொலைபேசியில் அழைத்தவுடன், ஆணையர் அவர்கள் 20 நிமிடங்களில் அந்த இடத்திற்கு வருகை தந்தார். அங்குள்ள பிரச்சனைகளை புரிந்து கொண்டார். வார்டுகுழு தலைவர் என்கிற முறையில், நானும் ஆணையர் அவர்களிடம் அந்தச் சாலையை மாநகராட்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என கோரிக்கை வைத்தேன். சட்டரீதியாக சில சிக்கல்கள் இருந்தன. அவற்றை எளிதாக தீர்த்து வைத்த ஆணையர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன்.

**திரு கே.பி.கே. சதீஷ்குமார்**

இந்த நேரத்தில் நன்றியோடு இன்னொன்றையும் தெரிவித்து கொள்ள கடமைப்பட்டுள்ளேன். 182வது வார்டு மாமன்ற உறுப்பினர் என்கிற முறையில், என்னையும் அழைத்தால், இரண்டு நிமிடத்தில் வந்து விடுவேன் என தெரிவித்து கொள்கிறேன்.

**மாண்புமிகு மேயர்**

மன்ற உறுப்பினர் முன்வைத்த கோரிக்கை, ஆணையர் அவர்களின் கவனத்திற்கு வந்துள்ளது. அவர் நேரடியாக அந்த இடத்தை ஆய்வு செய்துள்ளார். இது பிற துறை சார்ந்ததாக இருப்பதால், அத்துறையுடன் ஒருங்கிணைந்து, கலந்தாலோசனை செய்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்து கொள்கிறேன்.

**திரு கே.பி.கே. சதீஷ்குமார்**

மணிக்குழு சீனிவாசன் நகர் 4வது தெரு, KfW திட்டத்தின் கீழ் மழைநீர் வடிகால்வாய் திட்டத்தில் அடங்குகிறது. ஆனால், யாரோ ஒரு அதிகாரி அந்தப் பணியை தடுக்கிறார் என மக்கள் தெரிவிக்கின்றனர். இதனால், அந்தப் பணி துவங்கப்படாமல் உள்ளது. எனவே, ஆணையர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

மிக முக்கியமான ஒரு விஷயத்தை இந்த நேரத்தில் தாழ்மையுடன் எடுத்துரைக்கிறேன். இது 182வது வார்டு என்று மட்டுமல்ல, பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்து 200 வார்டுகளிலும் காணப்படும் பொது பிரச்சனையாக உள்ளது. முக்கியமாக, 182வது வார்டில் உள்ள IT நிறுவனங்கள் செயல்படும் எம்.ஜி.ஆர் சாலை, கோதண்டராமன் நகர், ராஜீவ் காந்தி சாலைகளில், மக்கள் செல்ல முடியாத அளவிற்கு 50–60 பேர் ஒரு தெருவில் நின்று புகைபிடித்து வருகின்றனர். இது பொதுமக்கள் நலனுக்கும், சுற்றுச்சூழலுக்கும் கேடு விளைவிக்கிறது.

பொது இடங்களில் புகைபிடிப்பது தடை செய்யப்பட வேண்டும். அதற்கு பதிலாக, அந்த IT நிறுவனங்கள் தங்கள் வளாகத்திற்குள் தனிப்பட்ட புகைபிடிக்கும் பகுதி **(Smoking Zone)** அமைக்க வேண்டும். இதற்காக ஆணையர் மற்றும் வட்டார துணை ஆணையர் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

**மாண்புமிகு மேயர்**

இதுகுறித்து மாநகராட்சி சார்பில் ஆய்வு மேற்கொண்டு, என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பது குறித்து கலந்தாலோசனை செய்து தீர்மானிக்கப்படும்.

**திரு கே.பி.கே. சதீஷ்குமார்**

சந்தோஷ் நகர் மெயின் ரோடு, சாய்பாபா நகர், முரசொலி மாறன் தெரு, ராஜேஸ்வரி தெரு ஆகிய பகுதிகளில் உள்ள திறந்தவெளி நிலங்கள், தனியார் ஆக்கிரமிப்பில் உள்ளன. இதுகுறித்து மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் தாசில்தார் ஆகியோர்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, அந்த நிலங்களை **கையகப்படுத்த உரிய** நடவடிக்கை எடுக்க வேண்டும். இதை ஆணையர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

**(மாண்புமிகு மேயர் அவர்கள் மணியடித்தல்)**

182வது வார்டில் மாண்புமிகு புரட்சி தலைவி அம்மா அவர்கள், **கடல்நீரை குடிநீராக மாற்றும் திட்டத்தை** கொண்டு வந்து, சோழிங்கநல்லூர் தொகுதி மக்களின் குடிநீர் பிரச்சனையை தீர்த்து வைத்தார்.

**(அவையில் கூச்சல்)**

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

அந்தத் திட்டம் திராவிட முன்னேற்ற கழக ஆட்சி காலத்தில் கொண்டு வரப்பட்டது.

**திரு. எஸ்.வி. ரவிச்சந்திரன் (குறுக்கீடு)**

திரு. மன்மோகன் சிங் அவர்கள் மாண்புமிகு பாரத பிரதமராக இருந்த காலத்தில், திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில் ரூபாய் ஆயிரம் கோடி மதிப்பீட்டில் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால், அவையில் 182வது மாமன்ற உறுப்பினர் அவர்கள், இந்தத் திட்டம் அ.இ.அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் கொண்டு வரப்பட்டது என தவறான தகவலை பதிவு செய்துள்ளார்.

**(அவையில் கூச்சல்)**

**(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தல்)**

**மாண்புமிகு மேயர்**

இந்தத் திட்டம் முத்தமிழ் அறிஞர், தலைவர் கலைஞர் அவர்களால் கொண்டு வரப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இத் திட்டத்தை விரிவுபடுத்தியுள்ளார் என தெரிவித்து கொள்கிறேன்.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

அவையில் 24 நிமிடங்கள் அ.இ.அ.தி.மு.க. சார்ந்த மாமன்ற உறுப்பினர் பேசியிருக்கிறார் என்பதை மாமன்றத்தில் பதிவு செய்கிறேன். உங்களுக்கு 24 நிமிடங்கள் உரையாற்றுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு மேயர்**

உள்ளாட்சி பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட 2022 மார்ச் மாதம் முதல் இன்று 2025 ஆம் ஆண்டு வரை, கூட்டணி கட்சிகளாக இருந்தாலும், எதிர்க்கட்சிகளாக இருந்தாலும், பாரதிய ஜனதா கட்சியை சேர்ந்த மாமன்ற உறுப்பினராக இருந்தாலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியபடி, அனைத்து கட்சி மாமன்ற உறுப்பினர்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதை அடிப்படையாக கொண்டு, மாமன்றத்தில் உரையாற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.

இன்றைய தினத்தில், 182வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு கே.பி.கே. சதீஷ்குமார் அவர்கள் 24 நிமிடங்கள் உரையாற்றியுள்ளார். எனவே, உரையாற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்படவில்லை என்று கூறுவது தவறாகும்.

**(அவையில் சலசலப்பு)**

அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் மன்றத்தில் அமைதி கடைபிடிக்குமாறு கேட்டு கொள்கிறேன்.

**மாண்புமிகு மேயர்**

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. கே. கண்ணன் அவர்கள், வார்டு எண்.138.

**திரு. கே. கண்ணன்**

முதலில், பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களை வணங்கி, தமிழ்நாட்டின் சிற்பி, எங்களை ஆளாக்கிய தமிழின தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன்.

1952ஆம் ஆண்டு வெளியான *பராசக்தி* திரைப்படம் மூலம், அறியாமையில் மூழ்கியிருந்த சினிமா உலகத்தை பகுத்தறிவு பாதையில் திருப்பிய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. அன்றிலிருந்து இன்று வரை, சினிமா உலகம் பகுத்தறிவு பாதையில் பயணித்து கொண்டிருக்கிறது.

பெரும்பான்மையான மக்களின் ஆதரவை பெற்று, 2026ஆம் ஆண்டு மீண்டும் தமிழ்நாடு முதலமைச்சராக தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் எங்கள் தலைவரை வணங்குகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் இந்தியாவிற்கே ஒரு முன்னுதாரணமாக திகழ்ந்து வருகிறார். பல மாநிலங்களில் துணை முதலமைச்சர்கள் இருப்பினும், அவர்கள் பெயருக்கே துணை முதலமைச்சர்களாக உள்ளனர். ஆனால், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள், அதிகாரிகளை விட மிக வேகமாக செயல்பட்டு

மக்களுக்கு சேவை ஆற்றி வருகிறார். 24x7 உழைக்கும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களுக்கும் என் மனமார்ந்த வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர் அவர்கள், நான்கரை ஆண்டுகளில் மேயராக மட்டுமல்லாமல், ஒரு சிறந்த சபாநாயகராகவும், பெண் சிங்கமாகவும், இந்த மன்றத்தை சிறப்பாக வழிநடத்தி வருகிறார். மதிப்பிற்குரிய துணை மேயர், ஆணையர் மற்றும் திராவிட மாடல் ஆட்சியின் 2.0 வெற்றிக்கு உறுதுணையாக இருக்கும் அனைத்து அதிகாரிகளுக்கும் எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன். எனக்கு உரையாற்ற வாய்ப்பளித்த ஆளுங்கட்சி தலைவர் திரு.ந.இராமலிங்கம் அவர்களுக்கும் எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

மழை காலத்தில், இரவு நேரத்தில் தொலைபேசி அழைப்புகள் எந்த தெருவிலிருந்து வரும் என்கிற அச்சம் இருந்தது. ஆனால், தற்பொழுது அவை 10 சதவீதம் மட்டுமே உள்ளது. இது, மாண்புமிகு மேயர், ஆணையர் மற்றும் அதிகாரிகள் இணைந்து செய்த கடுமையான உழைப்பின் பயனாகும் என தெரிவித்து கொள்கிறேன்.

138வது வார்டில், MGR கால்வாய் பணிகள் குறித்து கேட்டவுடன், உடனடியாக ஆய்வு செய்து, பணி ஆணை வழங்கப்பட்டது. பாரதிதாசன் காலனி, நெஞ்சளவிற்கு மழை நீர் தேங்கி நிற்கும் இடங்களில், மழைநீர் வடிகால்வாய் மற்றும் சாலை உயர்த்தும் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது பாதி சாலை பணிகள் நடைபெற்று வரும் நிலையில், நீர் தேங்கும் பிரச்சனை இல்லை. மீதமுள்ள பணியும் முடித்து தர வேண்டும். முன்னாள் மண்டல அலுவலர் திரு. முருகேசன் மற்றும் செயற் பொறியாளர் திரு. புகழேந்தி, திரு. இனியன் ஆகியோர் மிக சிறப்பாக செயல்பட்டனர். தி.நகர் மற்றும் விருகம்பாக்கம் பகுதிகள் மழையினால் பாதிக்கப்படும் பகுதிகள் என்பதால், அந்த இடங்களில் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தகவல் ஊடகங்கள், பத்து நிமிடங்கள் மழை பெய்தாலே அதனை உடனுக்குடன் செய்தியாக வெளியிடுகின்றன. ஆனால், மழைநீர் வடிந்த பின்பு, அந்தப் புகைப்படங்களை அவர்கள் வெளியிடுவதில்லை.

கடந்த ஆண்டில் மழைநீர் தேங்கி நின்ற இடங்களில், இந்த ஆண்டு அதே இடங்களில் பிரச்சனை இல்லாமல் இருந்தால், அதையும் ஊடகங்கள் செய்தியாக வெளியிட வேண்டும்.

பிரச்சனைகளை மட்டுமே செய்தியாக வெளியிடாமல், அவற்றுக்கு கண்ட தீர்வுகளையும் செய்தியாக வெளியிட வேண்டும். அப்படி செய்தால், ஊடகங்கள் அனைவராலும் மதிக்கப்படுவார்கள்.

இந்த நான்கு ஆண்டுகள் முடிவடையும் தருணத்தில், பூங்காக்கள் சிறப்பாக செயல்படுகின்றன. பெண்கள் மட்டுமே பயன்படுத்தும் வகையில் ஒரு தனிப்பட்ட பூங்கா — 'பிங்க் பூங்கா' — அமைக்கப்பட வேண்டும். இத்தகைய பூங்கா உருவாக்கப்படுவதால், பெண்கள் தங்கள் தனிப்பட்ட தேவைகளுக்கேற்ப பாதுகாப்பாகவும், சுதந்திரமாகவும் பொழுதை கழிக்கக்கூடிய சூழல் உருவாகும்.

இந்த 'பிங்க் பூங்கா' உருவாக்கப்பட்டால் இந்தியாவிலேயே முதன் முறையாக உருவாகும் பெண்கள்-மட்டுமே பயன்படுத்தும் பூங்காவாக இருக்கும் என்பதையும், இது ஒரு முன்னோடியான முயற்சியாகும் என்பதையும் பெருமையுடன் தெரிவித்து கொள்கிறேன்.

கட்டிட அனுமதி பெறாமல் கட்டப்பட்ட குறைந்த அளவிலான 600 சதுர அடி கொண்ட வீடுகளுக்கு, அபராதம் விதித்து, அனுமதி வழங்கும் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

சென்னை மாநகரில், தெரு விளக்கு கம்பங்கள் மற்றும் மரங்களில் தொங்கும் *கேபிள் ஒயர்கள்* (Cable Wires) சென்னையின் அழகை கெடுக்கின்றன. மின் துறையிடம் தெரிவித்து, தேவையில்லாத மற்றும் அனுமதி பெறாத கேபிள் ஒயர்கள் நீக்கப்பட்டு, சென்னை மாநகரை அழகுபடுத்த வேண்டும்.

**மாண்புமிகு மேயர்**

மன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல், ஒவ்வொரு சனிக்கிழமையிலும் வார்டு வாரியாக கேபிள் ஒயர்கள் அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இருப்பினும், மின்துறை, உட்புற சாலைகளில் கூடுதல் கவனம் செலுத்தி, வாரத்தில் ஒரு முறை மட்டுமல்லாமல் Alternative நாட்களிலும் கேபிள் ஒயர்கள் அகற்றும் பணியை மேற்கொள்வது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

**திரு. கே. கண்ணன்**

அதே போல், மின்மாற்றிகளின் அருகில் வியூ கட்டர் (View Cutter) அமைப்பது மிகவும் சிறந்த முயற்சி. பெரும்பாலும் பேருந்து சாலைகளில் அதிகமாக அமைக்கப்பட்டுள்ளது. உட்புற சாலைகளிலும் இதை அமைக்க மேற்பார்வை பொறியாளர் (கட்டிடம்) அவர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதையும் விரைவில் செயல்படுத்த வேண்டும்.

**மாண்புமிகு மேயர்**

மாநகராட்சியின் அனைத்து சாலைகளிலும், உட்புற சாலைகளிலும் வியூ கட்டர் அமைப்பதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**திரு. கே. கண்ணன்**

138வது வார்டில் தற்போது 4 இடங்களில் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 11–12 இடங்களில் வியூ கட்டர் அமைக்கும் பணி இன்னும் தொடங்கப்படவில்லை.

**மாண்புமிகு மேயர்**

பேருந்து சாலைகளில் வியூ கட்டர் அமைக்கும் பணி முடிவுற்ற பின்னர் உட்புற சாலைகளிலும் அமைக்கப்படும்.

**திரு. கே. கண்ணன்**

இது 5 வருட கால கோரிக்கையாக இருப்பதால், தேர்தல் வருவதற்கு முன், பணிகளை துரிதப்படுத்த வேண்டும்.

**மாண்புமிகு மேயர்**

நவம்பர் அல்லது டிசம்பர் மாத இறுதிக்குள் அனைத்து இடங்களிலும் பணிகள் முடிக்கப்படும்.

**திரு. கே. கண்ணன்**

மலேரியா பணியாளர்களுக்காக வழங்கப்பட்ட செயலி (App) ஆங்கிலத்தில் இருப்பதால், பயன்படுத்துவதற்கு சிரமமாக உள்ளது. தமிழ் மொழியில் இருந்தால் சிறப்பாக இருக்கும்.

**ஆணையர்**

அதற்கான நடவடிக்கை உடன் எடுக்கப்படும்.

**திரு. கே. கண்ணன்**

தலைமையகத்தில் வழங்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்து மன்ற உறுப்பினர்களுக்கு தகவல் தெரிவிக்கப்படுவதில்லை. நான் Center Median அழகுபடுத்துவதற்காக சில கோரிக்கைகளை முன் வைத்திருந்தேன். அண்ணா பிரதான சாலை, அம்பேத்கர் சாலை போன்ற பகுதிகளில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தத்தின் மூலம் என்ன பணி செய்யப்பட உள்ளன என்பது தெரியவில்லை.

உதாரணமாக, கோவிந்தசாமி தெரு சென்னை தொடக்க பள்ளிக்கு வர்ணம் பூச கோரிக்கை விடுக்கப்பட்டது. பிரவுன் நிறத்தில் வர்ணம் பூசப்பட்டுள்ளது. பள்ளிகளின் கட்டமைப்பு மாணவர்களையும், பெற்றோர்களையும் கவரும் வகையில் இருக்க வேண்டும். ஆனால், அந்த நிறம் அதற்கேற்றதாக இல்லை. மேலும், MGR நகர் மேல்நிலை பள்ளியில் கட்டப்பட்ட மேடைக்கு தரமற்ற ஆரஞ்சு நிற டைல்ஸ் பயன்படுத்தப்பட்டுள்ளது.

வார்டுகளில் பணிகள் நடைபெறும் போது, ஏன் மன்ற உறுப்பினர்களுக்கு தகவல் வழங்கப்படுவதில்லை? தலைமையகம் மூலம் நடைபெறும் பணிகள் குறித்து மாமன்ற உறுப்பினர்களுக்கு முறையாக தெரிவிக்கப்பட வேண்டும்.

முன்னதாக திரு. மகேஷ் என்பவருக்கு பூங்கா பராமரிப்பு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. ஆனால், அவர் சரிவர பூங்காக்களில் பராமரிப்பு பணிகளை

மேற்கொள்ளவில்லை. அவர் தற்பொழுது இந்தப் பணிகளை எடுக்கவில்லை. முன்பெல்லாம் டீ கடை, அரசியல் மற்றும் பொது விவாதங்களுக்கு மேடையாக இருந்தது. தற்பொழுது பூங்கா அந்த இடத்தை பிடித்துள்ளது என்று பணிகள் நிலைக்குழு தலைவர் அவர்கள் இதை அடிக்கடி குறிப்பிடுவார்.

தற்போது திரு. பத்மாவதி ஒப்பந்ததாரருக்கு பூங்கா பராமரிப்பு பணி நேர் செய்யப்பட்டுள்ளது. ஆனால், அவர் பணியாளர்களுக்கு ஒப்பந்த நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஊதியத்தினை வழங்குவதில்லை.

**ஆணையர்**

ஒப்பந்த நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்ட ஊதியம் வழங்கப்பட்டதற்கான ஆதாரம் கோரப்பட்டுள்ளது.

**திரு. கே. கண்ணன்**

தவறான ஆதாரம் வழங்கப்படலாம். ரூ.18,000/- வழங்கப்பட வேண்டிய நிலையில், ரூ.8,000/- அல்லது ரூ.10,000/- மட்டுமே வழங்கப்படுகின்றது. இது குறித்து தலைவர் அவர்களிடம் புகார் வந்துள்ளது.

**மாண்புமிகு மேயர்**

இந்தப் புகார் எனக்கும் ஆணையர் அவர்களுக்கும் ஏற்கனவே வந்துள்ளது. இதற்கான விரிவான பதில் பின்னர் வழங்கப்படும்.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

மாண்புமிகு மேயர் மற்றும் ஆணையர் அவர்களுக்கு, திரு. பத்மாவதி ஒப்பந்ததாரர் மீது பூங்கா துறை மட்டுமல்ல, பிற துறைகளிலுமிருந்தும் புகார்கள் வந்துள்ளன. இந்த ஒப்பந்தப்புள்ளியினை மறு பரிசீலனை செய்ய வேண்டும்.

**திரு. கே. ஏழுமலை, வார்டு எண் 133 (குறுக்கீடு)**

மாண்புமிகு மேயர் மற்றும் ஆணையர் அவர்களே, இது குறித்து மூன்று, நான்கு மாதங்களுக்கு முன்னதாகவே நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தொடர்ந்து பேசி வருகிறேன். பூங்கா பணியாளரின் ஊதியம் தொடர்பாக தொடர்ந்து கேட்டு கொண்டே இருக்கிறேன். இன்று ஒரு தீர்வை வழங்க

வேண்டும். இதுவரை 133-வது வார்டை சார்ந்த பூங்கா பணியாளருக்கு நாங்களே ஊதியம் வழங்கி வருகிறோம். எனவே, தயவு செய்து இதற்கான தீர்வை உடனடியாக வழங்க வேண்டும்.

**மாண்புமிகு மேயர்**

இதற்கான உரிய பதில் மாமன்ற உறுப்பினர் திரு. கண்ணன் அவர்களுக்கு வழங்கப்படும்.

**திரு. கே. கண்ணன்**

பணியாளர்களுக்கு சரியான ஊதியம் வழங்கப்பட்டால் தான் அவர்களின் உழைப்பு, பங்களிப்பு முழுமையாக பூங்காவிற்கு சென்று சேரும். பூங்கா நன்கு பராமரிக்கப்பட்டால் மக்கள் சுகாதாரமான, அமைதியான, அழகான சூழலை அனுபவிக்க முடியும்.

ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் இது குறித்து தெரிவிக்கப்பட்டு, உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டும், பத்மாவதி என்ற ஒப்பந்ததாரர் தலைமையகத்திலிருந்து வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை மதிக்கவில்லை. இவ்வாறான நபர்களுக்கு ஒப்பந்தப்புள்ளி நேர் செய்துள்ளதால் அவை பூங்காக்களின் பராமரிப்பினை பாதிக்கும்.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

அந்த ஒப்பந்ததாரர் பூங்கா மட்டுமல்ல, பிற துறைகளிலும் இந்த ஒப்பந்ததாரருக்கு பணி நேர் செய்யப்பட்டுள்ளது.

**திரு. கே. கண்ணன்**

தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளின் பராமரிப்பு பணிகளும் பத்மாவதி ஒப்பந்ததாரருக்கு நேர் செய்யப்பட்டுள்ளது. அங்கும் இவர் சரிவர பணிகளை மேற்கொள்வதில்லை.

**மாண்புமிகு மேயர்**

தாங்கள் குறிப்பிட்ட ஒப்பந்ததார் குறித்து வார்டுகுழு தலைவர்களும் பல புகார்களை தெரிவித்துள்ளனர். ஆணையர் அவர்கள் விதிகளின்படி நடவடிக்கை எடுத்துள்ளார்.

**ஆணையர்**

ஒப்பந்ததாரருக்கு பணம் வழங்கப்படவில்லை. பணியாளர்களின் வங்கி கணக்கில் எவ்வளவு தொகை செலுத்தப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தும் ஆதாரங்களை கேட்டுள்ளோம். ஆனால், அவர் இதுவரை எந்த ஒரு ஆதாரத்தையும் வழங்கவில்லை.

ஒவ்வொரு ஊழியருக்கும் எவ்வளவு ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்பது தொடர்பான விவரம் ஒப்பந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தின்படி, கடந்த அக்டோபர் மாதம் 1 முதல் 31 வரை பணியாற்றிய ஊழியர்களுக்கு, நவம்பர் 5 அல்லது 7ஆம் தேதிக்குள் வங்கியில் செலுத்தியதற்கான Remittance Proof வழங்கப்பட வேண்டும்.

இது ராம்கி மற்றும் உர்பேசர் நிறுவனத்திடமிருந்தும் கேட்கப்பட்டுள்ளது. ஆனால், பத்மாவதி ஒப்பந்ததாரர் Remittance Proof வழங்கவில்லை. எனவே, பெருநகர சென்னை மாநகராட்சியும் அவர்களுக்கு பணம் வழங்கவில்லை. இதற்கான இறுதி முடிவு எடுக்கப்பட உள்ளது. இது சட்டபூர்வமாக நடைபெற்று வருகிறது. உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கே. கண்ணன்**

நன்றி. சென்னை மாவட்ட தேர்தல் அதிகாரியாக ஆணையர் அவர்கள் இருக்கின்ற காரணத்தினால், வாக்காளர் பட்டியல் தொடர்பாக ஒரு முக்கிய விஷயத்தினை தெரிவிக்க விரும்புகிறேன்.

வட இந்திய மாநிலங்களான பீகார், உத்திரபிரதேசம் போன்ற பகுதிகளில் ஏற்கனவே வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளவர்கள், தற்போது சென்னை மாநகர வாக்காளர் பட்டியலிலும் தங்கள் பெயரை பதிவு செய்யும் வாய்ப்பு பெற்றுள்ளனர். ஆதார் அட்டை இருப்பின், எங்கு வேண்டுமானாலும் வாக்காளர் பதிவு மாற்றம் செய்ய கூடிய வசதி தற்போது வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஒரே நபர் இரண்டு இடங்களில் வாக்காளராக இருப்பதால், "அங்கு ஒரு வாக்கு, இங்கு ஒரு வாக்கு" என்கிற நிலை உருவாகி, போலி வாக்காளர்கள் தோன்றும் அபாயம் உள்ளது.

எனவே, இது தொடர்பாக தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பணிவுடன் கேட்டு கொள்கிறேன், நன்றி.

**மாண்புமிகு மேயர்**

நன்றி. அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. நே. சிற்றரசு, தலைவர், நிலைக்குழு (பணிகள்) / மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.110

**திரு. நே. சிற்றரசு**

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் மற்றும் துணை ஆணையர் (பணிகள்) உட்பட மாநகராட்சி அதிகாரிகளே, ஆளுங்கட்சி தலைவர், நிலைக்குழு தலைவர்கள், வார்டுகுழு தலைவர்கள், மற்றும் சக மாமன்ற உறுப்பினர்களே—உங்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த காலை வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் நிரந்தர முதலமைச்சர் மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சியின் கீழ், இன்று தமிழ்நாடு வீரநடையுடன் முன்னேறி வருகிறது. அந்த அடிப்படையில், நம்முடைய பெருநகர சென்னை மாநகராட்சி, வரலாற்று சிறப்புமிக்க ஒரு மாநகராட்சியாக திகழ்ந்து வருகிறது.

பருவமழை காலத்தில், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் மற்றும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் ஆகியோர், தளபதியார் அவர்களின் உத்தரவின்படி, பல்வேறு ஆய்வு கூட்டங்களை நடத்தி, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொள்ள வேண்டுமென கூறியுள்ளார். கடந்த 10 நாட்களில் 27 செ.மீ. மழை பொழிந்துள்ள நிலையில், மழை தொடங்கிய நாளிலிருந்து புயல் கரையை கடக்கும் வரை, இரவு பகல் பாராமல் மக்களை பாதுகாக்கும் பொறுப்பை திராவிட மாடல் அரசு மிக சிறப்பாக மேற்கொண்டு வருகிறது.

இளம் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், காலை 5.00 மணி ஆனாலும், இரவு 12.00 மணி ஆனாலும், நேரடியாக ஆணையர் அவர்களை

தொடர்பு கொண்டு நிலவரங்களை அறிந்து, ICCC கட்டுப்பாட்டு அறையில் நேரில் சென்று, மழைபொழிவுகள், மேம்பாலங்களில் தேங்கும் மழைநீர், மக்களின் கோரிக்கைகள் ஆகியவற்றை ஆராய்ந்து, தீர்வுகளை வகுத்து வருகிறார். இதன் மூலம், சென்னை மாநகர மக்களின் மனதை வென்றெடுத்துள்ளார்.

இங்கு அமர்ந்திருக்கும் ஊடக நண்பர்களுக்கும், தொலைக்காட்சி நிருபர்களுக்கும், ஊடக துறையினருக்கும் சில முக்கியமான தகவல்களை பகிர்வது என் கடமையாகும். பெருநகர சென்னை மாநகராட்சி தொடர்ந்து விரிவடைந்து கொண்டிருக்கிறது. திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து, மக்களின் தேவைகளை அறிந்து, மழைநீர் தேங்கும் பகுதிகளில் மழைநீர்வடிகால்வாய்கள் கட்டப்பட வேண்டும் என்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவினை அடிப்படையாக கொண்டு, பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

மாமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகள் மற்றும் மக்களின் தேவைகளை உணர்ந்து, சிறு சிறு சிப்பங்களாக பணிகள் தொடங்கப்பட்டு, பணிகள் தொடர்ந்து நடைபெற்று பணிகளில் முன்னேற்றம் காணப்படுகின்றது. சில ஊடகங்கள் மற்றும் பத்திரிகைகள் எந்தவித ஆதாரமுமின்றி குற்றச்சாட்டுகளை முன் வைத்து வருகிறார்கள். இன்னும் இத்தனை இடங்களில் Missing Link பணிகள் முடிவடையவில்லை என கூறுகின்றனர். நாங்கள் அதனை ஏற்று கொள்கிறோம். ஆனால், அந்த இடங்களை சுட்டிக் காட்டுகின்ற போது, நாங்கள் விளக்கம் வழங்க தயாராக இருக்கின்றோம்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு இரண்டு SWD சிப்பங்களுக்கு பணியாணை வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. நீங்கள் கூறுவது ஒன்றரை வருடத்திற்கு முன்பு தொடங்கிய Missing Link பணிகள் இன்னும் முடிவடையவில்லை எனில், அதற்கான காரணங்களை விளக்க தயாராக இருக்கின்றோம். சிறிய தவறுகள் எங்காவது நிகழலாம். அவற்றை நிவர்த்தி செய்வதற்கும் நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

அரசாக இருந்தாலும், மக்களாக இருந்தாலும், குடும்பமாக இருந்தாலும், தனி நபராக இருந்தாலும், அனைத்து பணிகளையும் ஒரே நேரத்தில் முழுமையாக நிறைவேற்ற முடியாது. நம்மையும் அறியாமல் ஒரு சில தவறுகள் நிகழலாம். ஆனால், ஒப்பந்தப்புள்ளி எப்போது கோரப்பட்டது, பணிகள் எப்போது தொடங்கப்பட்டன, அதன் தற்போதைய நிலை என்ன என்பது தெரியாமல் பத்திரிகைகளும், ஊடகங்களும் குற்றச்சாட்டுகளை முன் வைத்து வருகின்றன. நம்முடைய திராவிட மாடல் அரசு என்பது எல்லோருக்குமான அரசு. வெளிப்படைத்தன்மை கொண்ட அரசு. நீங்கள் எதை கேட்டாலும், அதற்கான தகவல்களை வெளிப்படையாக வழங்க நாங்கள் எப்போதும் தயாராக இருக்கின்றோம்.

மழைக்காலங்களில் இரண்டு அல்லது மூன்று மணி நேரம் மழை பொழிந்தாலே, சில சாலைகள் சிதிலமடைவதும், திடீர் பள்ளங்கள் உருவாகுவதும் இயற்கையில் இயல்பான நிகழ்வாகும். இது இயற்கை பேரிடர் காலங்களில் ஏற்படும் ஒரு பொதுவான சூழ்நிலை. இத்தகைய சூழ்நிலையில் கூட, நம்முடைய சாலை ஒட்டு பணிகள் குறித்து தெளிவாக பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

வடகிழக்கு பருவமழையை எதிர்நோக்கி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையை ஏற்று, மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், ஆணையர் உள்ளிட்ட நிர்வாகம் இணைந்து, தற்போது மண்டலத்திற்கு ரூ.1.00 கோடி வீதம், மொத்தம் ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் சாலை சீரமைப்பு மற்றும் ஒட்டுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கான ஒப்பந்தப்புள்ளியும் கோரப்பட்டுள்ளது. தேவை ஏற்படின், ஒப்பந்ததாரர்களுக்கு கூடுதலாக 25% பணி ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளப்படும்.

மழையினால் பாதிப்புகள் ஏற்பட்டால், ஊடகங்கள் அதனை செய்தியாக வெளியிடலாம். ஆனால், அதற்கும் அரசால் முன் கூட்டியே திட்டமிட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சாலைகளில் மழைநீர் ஓடி கொண்டிருக்கும் நேரத்தில், சாலைகளை சீரமைக்க முடியாது. மழை முடிந்த பின்பே ஒட்டுப்பணிகள் தொடங்க முடியும். இதற்கான "Breathing Time" என்பது இயல்பானது. பொதுமக்கள் இதனை புரிந்து கொண்டு கால அவகாசம் அளிக்கின்றனர். ஆனால், சில ஊடகங்கள் இதனை புரிந்து கொள்ளாமல், குற்றச்சாட்டுகளை முன் வைத்து வருகின்றன என்பது வருத்தமளிக்கிறது.

எதிர்கட்சிகள் எவ்வளவு குறை சொல்கிறீர்களோ, அவ்வளவிற்கும் அதிகமாக இந்த திராவிட மாடல் அரசு கடுமையாக உழைத்து, மக்களின் நன்மதிப்பை பெற்றுள்ளது. அதனால், 2026-ஆம் ஆண்டு மீண்டும் திராவிட மாடல் ஆட்சி தமிழ்நாட்டில் அமையும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

வடகிழக்கு பருவமழை முடிவுற்றவுடன், 286 சாலை பணிகள் ரூ.37.00 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. தற்போது 111 சாலைகளின் ILP பணிகள், 257 சாலைகள், 296 சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் ஆகியவை நடைபெற்று வருகின்றன. கூடுதல் தேவை ஏற்படின், அரசின் முடிவிற்கு ஏற்ப கூடுதல் சாலை பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்படும்.

மேலும் தகவல்கள் தேவைப்பட்டால், மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், ஆணையர், துணை ஆணையர் (பணிகள்) ஆகியோரை அணுகி விரிவான அறிக்கைகளை தாங்கள் பெறலாம். திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில் உள்ள ஒவ்வொரு மாமன்ற உறுப்பினரும் ஆதாரமின்றி பேச மாட்டார்கள் என்பதற்கான சாட்சியாக மாமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் இருக்கின்றோம்.

இன்றைக்கு, முதன் முதலாக நேரம் கேட்டு, இந்த நேரமில்லா நேரத்தில் பேசும் வாய்ப்பு எனக்கு கிடைத்துள்ளது. நான் பேச விரும்பிய செய்தியை, எதிர்க்கட்சி மாமன்ற உறுப்பினர் திரு. கே.பி.கே. சதீஷ்குமார் அவர்கள் முன் வைத்தார். நீர் மேலாண்மை குறித்து பேச வேண்டும் என்கிற எண்ணத்தில்

வந்தேன். அவர் அதையே பேசினார். எனவே, என் கருத்தை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

“நீரின்றி அமையாது உலகு” — இது வள்ளுவனின் வாக்கு. “முதல்வா நீயின்றி அமையாது தமிழ்நாடு அரசு” — இது மக்களின் வாக்கு. **(கைதட்டல்)**

இந்த வாக்கிற்கிணங்க, பெருநகர சென்னை மாநகராட்சி என்பது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மிகவும் பிடித்தமான ஒரு மாநகராட்சி. பெருநகர சென்னை மாநகராட்சியின் மேயராக பணியாற்றி, பின்னர் துணை முதலமைச்சராக பொறுப்பேற்று, இன்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக, ஒப்பற்ற தலைவராக விளங்கி கொண்டு இருக்கின்றார் நம்முடைய தலைவர் அவர்கள்.

சென்னை மாநகரம் குறித்து அவர் கூறும் போது, “சென்னை நிலமாக மட்டுமல்ல, இந்த நிலத்தின் மீது வாழும் ஒவ்வொரு மனிதரின் உயிராகவும் இருக்கிறது” என குறிப்பிடுகிறார். அவர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தாலும், சென்னை மாநகர வளர்ச்சி மீது மிகுந்த அக்கறை கொண்டவர் என்பது அனைவரும் அறிந்த உண்மை.

சென்னை மாநகரம் சமமான நிலப்பகுதியாகும். ஏறத்தாழ 1.27 கோடி மக்கள் தொகையுடன், இந்தியாவின் மிகப் பெரிய நகரங்களில் ஒன்றாக திகழ்கிறது. இந்நகரத்தில் வாழும் மக்களின் நலன்களை கருத்தில் கொண்டு, வருங்கால சந்ததிக்காக பல்வேறு திட்டங்களை தீட்டி நமது திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வருகிறது.

முதலில், சுற்று சூழலுக்காக நம்முடைய அரசு என்ன செய்து கொண்டிருக்கிறது என்ன செய்திருக்கிறது என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். இவை அனைத்தும் நம் சந்ததியினருக்காக, அவர்களின் நலனுக்காக, நம் தலைவர் அவர்கள் உருவாக்கிய திட்டங்கள். ஒரு அரசு என்பது மக்களின் தற்போதைய தேவைகளை பூர்த்தி செய்வதற்காக செயல்படுவது மட்டுமல்ல; எதிர்கால தலைமுறைகளின் நலனையும் கருத்தில் கொண்டு திட்டமிட வேண்டும். அந்த வகையில், நம் திராவிட மாடல் அரசு, மாண்புமிகு

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில், எதிர்கால சந்ததியினருக்காக பல்வேறு முக்கியமான திட்டங்களை உருவாக்கி அவற்றை செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டின் இயற்கை வளங்களை பாதுகாக்க வேண்டும், மக்களின் உணர்வுகள் மதிக்கப்பட வேண்டும், அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்கிற எண்ணத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு சுற்றுச்சூழல் சார்ந்த திட்டங்களை தீட்டி அவற்றை செயல்படுத்தி வருகிறார்.

**அடையாறு தொல்காப்பிய பூங்கா – சுற்றுச்சூழல் கல்விக்கான அடையாளம்**

சென்னை மாநகரின் அடையாளமாக விளங்கும் 58 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள அடையாறு தொல்காப்பிய பூங்கா, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் திறக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. ஆனால், ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன், கடந்த அஇஅதிமுக ஆட்சியில் இந்தப் பூங்காவை "அடையாறு சுற்றுச்சூழல் பூங்கா" என பெயர் மாற்றம் செய்து, பராமரிப்பில் கவனம் செலுத்தவில்லை.

மீண்டும் திராவிட முன்னேற்ற கழக அரசு பொறுப்பேற்றவுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையில் ரூ.42.45 கோடி மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மறு மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பூங்கா திறந்து வைக்கப்பட்டது. இங்கு நடைபெற்ற சுற்றுச்சூழல் கல்வி விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் 1446 பள்ளிகளை சேர்ந்த 1,12,826 மாணவ, மாணவியர்கள் மற்றும் 6070 ஆசிரியர்கள் பங்கேற்று பயன் பெற்றுள்ளனர்.

இனி வருங்காலங்களில் சுற்றுச்சூழல் கல்வி என்பது இன்றியமையாத ஒன்றாகும். எனவே, சென்னை பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், தொல்காப்பிய பூங்காவிற்கு

அழைத்து செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்த மன்றத்தின் வாயிலாக கோரிக்கை விடுக்கிறேன்.

**நீர் மேலாண்மை – திராவிட மாடல் அரசின் பெருமை**

நீர் மேலாண்மையை உரிமையாக கொண்டாடுவதற்கு, தமிழ்நாட்டை ஆண்ட எந்த அரசுக்கும் தகுதி இல்லை. இந்தத் தகுதி, திராவிட மாடல் அரசுக்கே உரியது என்பதை இந்தக் கூட்டத்தின் வாயிலாக தெரிவித்து கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் தஞ்சை தரணி ஈன்றெடுத்த தமிழ் தாயின் தவபுதல்வன், முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், முதலமைச்சராக இருந்த போது, சென்னை மக்களின் தாகம் தீர்க்கும் வகையில் கடல்நீரை குடிநீராக்கும் மாபெரும் திட்டத்தை வடிவமைத்தார். வடசென்னையின் மீஞ்சூர் மற்றும் தென் சென்னையின் நெம்மேலி ஆகிய இடங்களில், கடல்நீரை குடிநீராக்கும் திட்டங்களை தொடங்கி, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்.

அவரின் கொள்கை வாரிசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள், நெம்மேலியில் இரண்டாம் கட்டமாக ரூ.1516 கோடி மதிப்பீட்டில், நாள் ஒன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தினை தொடங்கி வைத்து, மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்து வருகிறார்.

மேலும், செங்கல்பட்டு மாவட்டம், பேரூரில், தெற்காசியாவின் மிகப் பெரிய கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் — நாள் ஒன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட — ரூ.4236 கோடி மதிப்பீட்டில் தொடங்குவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இது சென்னை நகரத்திற்கும் பெருமை சேர்க்கும் நிகழ்வாகும்.

**மழைநீர் சேமிப்பு**

சென்னை மாநகரம், அதன் உட்கட்டமைப்பால், சர்வதேச அளவில் வானுயுர்ந்த கட்டிடங்களுடன் உயர்ந்து வருகிறது. ஆனால், வருங்கால

தண்ணீர் தேவையை பூர்த்தி செய்வதற்காக, கடல்நீரை குடிநீராக்கும் வசதியுடன், பருவமழைக்காலங்களில் பொழியும் மழையினால் கிடைக்கும் நீரையும், நிலப்பரப்பில் சேமித்து வைக்கும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு, திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது.

**சுற்றுச்சூழல் பாதுகாப்பில் திராவிட மாடல் அரசின் முன்னேற்ற பாதை**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள், சென்னை மாநகரின் மைய பகுதியில் தனியார் கட்டுப்பாட்டில் இருந்த கிண்டி ரேஸ் கோர்ஸ் மைதானத்தை சட்டப் போராட்டம் மூலம் சுமார் 110 ஏக்கர் நிலத்தை அரசு கட்டுப்பாட்டிற்கு கொண்டு வந்து, 27,647 சதுர மீட்டர் பரப்பளவில் 4.77 கன லிட்டர் கொள்ளளவுடைய நான்கு குளங்களை உருவாக்கியுள்ளார். இதன் மூலம் மழைக்காலங்களில் மழைநீர் சேமிக்கப்படுவதுடன், நிலத்தடி நீர் மட்டமும் உயர்வதற்கான வாய்ப்பு உருவாகியுள்ளது.

இந்தத் திட்டத்தின் விளைவாக, சுமார் இரண்டு கிலோ மீட்டர் சுற்றளவுக்கு நிலத்தடி நீர் உயர்வதுடன், உப்புத்தன்மை குறைந்து சுவையான குடிநீர் கிடைக்கும் நிலை உருவாகியுள்ளது. மேலும், மழைக்காலங்களில் சாலைகளில் மழைநீர் தேங்காமல் பாதுகாக்கப்பட்டுள்ளதுடன், அதன் சுற்று பகுதிகள் வெள்ள பாதிப்பிலிருந்து விடுபட்டுள்ளன.

இது போன்ற திட்டங்களை கடந்த பத்து ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த அ.இ.அ.தி.மு.க அரசு மேற்கொண்டதா? என்கிற கேள்விக்கு பதில், கண்டிப்பாக இல்லை. இது போன்ற மக்கள் நல திட்டங்களை உருவாக்கும் ஆற்றல் நமது தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு மட்டுமே உள்ளது.

**நீர்நிலைகள் மற்றும் கோவில் குளங்கள் புனரமைப்பு**

சென்னை மாநகரில் உள்ள சேத்துப்பட்டு ஏரி, பள்ளிக்கரணை ஏரி, வேளச்சேரி ஏரி, வில்லிவாக்கம் ஏரி, அம்பத்தூர் ஏரி, கொரட்டூர் ஏரி போன்ற பெரிய ஏரிகள் நிலத்தடி நீருக்கான முக்கிய ஆதாரங்களாக உள்ளன. அதே போல், சென்னை மாநகரத்தில் உள்ள பல கோவில் குளங்கள் தூர் வாரப்பட்டு,

குளத்தில் மழைநீர் சேகரிப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக, நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து, உப்புத்தன்மை குறைந்து, நல்ல குடிநீர் கிடைக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது. கடல்நீர் புகும் அபாயமும் குறைக்கப்பட்டுள்ளது.

**பூங்காக்கள் மற்றும் நடைபாதை வசதிகள்**

பொதுமக்களின் உடல் நலத்தை கருத்திற் கொண்டு, அவர்கள் வசிக்கும் பகுதிகளுக்கு அருகிலேயே பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன. குளங்களை சுற்றி நடைபாதைகள் அமைக்கப்பட்டு, நடைபயிற்சி மேற்கொள்ளும் வசதியும் செய்து தரப்பட்டுள்ளன.

நிலத்தடி நீரை சேமிக்கும் நோக்கில், 2000 முதல் 5000 சதுரடி பரப்பளவில், 10 முதல் 15 அடி ஆழத்தில் கருங்கல்லலான தொட்டிகள் அமைக்கப்பட்டு, 5 அடி ஆழத்தில் துளைகள் அமைத்து, உயரிய தொழில்நுட்பத்துடன் 87 ஸ்பான்ச் பூங்காக்கள் ரூ.13.7 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ளன. இதனால் வெயில் காலங்களில் நிலத்தடி நீர் குறையாமல், வெப்பம் அதிகரிக்காமல் இருக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், ரூ.64.81 கோடி செலவில் 149 புதிய பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ரூ.37.68 கோடி மதிப்பீட்டில் 314 பூங்காக்களில் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திறந்தவெளி நிலங்களில் 182 இடங்களில் பூங்காக்கள் அமைக்க முன்மொழிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. அனைத்து பூங்காக்களிலும் மழைநீரை சேகரிக்கும் தொட்டிகள் அமைக்கப்பட்டு, வருங்கால சந்ததிகள் நீரின்றி அவதிப்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**சிங்கார சென்னை 2.0 – நீர்நிலைகள் புனரமைப்பு**

பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பருவமழையின் போது மழைநீரை சேகரிக்கவும், நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தவும், நீர்நிலைகள் புனரமைக்கப்பட்டு 2021 முதல் இதுவரை 35 குளங்கள் ரூபாய் 47.49 கோடி

மதிப்பீட்டில் சிங்கார சென்னை 2.O திட்டப்படி அம்ரூத் 2.O நிதியின் கீழ் முடிக்கப்பட்டுள்ளது.

மேலும் 47 நீர்நிலைகள் மற்றும் குளங்கள் புனரமைக்கும் பணி ரூபாய் 35 கோடியில் சிங்கார சென்னை 2.O மற்றும் மூலதன நிதியில் நடைபெற்று வருகிறது.

**ECO BLOCK மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள்**

நிலத்தடி நீர் மீள்திறனை அதிகரிக்கவும், வெள்ளத்தை குறைக்கவும், ரூ.22.86 கோடி மதிப்பீட்டில் 770 இடங்களில் 500 கன மீட்டர் கொள்ளளவுடைய ECO BLOCK மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. கொசஸ்தலையாறு வடிநிலப்பகுதியில் 365, கோவளம் பகுதியில் 35 இடங்களில் இத்தகைய கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**நீர்வழிக்கால்வாய்களில் சங்கிலி வேலி – நிரந்தர தீர்வு**

இந்த ஆண்டில், நீர்வழிக்கால்வாய்களில் வெள்ளத்தடுப்பு சுவர் உயர்த்தப்பட்டு, பொதுமக்கள் குப்பைகள் வீசுவதை தடுக்கும் வகையில் 37 நீர்வழி கால்வாய்களில் ரூ.286.37 கோடி செலவில் சங்கிலி வேலி அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணி 72% அளவிற்கு முடிக்கப்பட்டுள்ளது.

**சுற்றுச்சூழல் பாதுகாப்பில் திராவிட மாடல் அரசின் உறுதியான நடவடிக்கை**

கொசஸ்தலையாறு மற்றும் கூவம் ஆறு ஆகிய பகுதிகளை சுற்றி வசிக்கும் பொதுமக்கள், சுற்றுச்சூழல் குறித்து கவலைப்படாமல், ஆங்காங்கே குப்பைகளை வீசி சுகாதார சீர்கேட்டினை உருவாக்கி வருகின்றனர். இத்தகைய நிலைமையை மாற்றும் நோக்கில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் திரு. கே.என். நேரு ஆகியோரின் முயற்சியில், நிரந்தர தீர்வாக இந்தப் பகுதிகளில் கரைகள் அமைக்கப்பட்டு, சங்கிலி வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நடவடிக்கை, சுற்றுச்சூழல் பாதுகாப்பிலும், நகர சுகாதாரத்திலும், மக்கள் நலனிலும் திராவிட மாடல் அரசு எவ்வளவு உறுதியுடன் செயல்படுகிறது என்பதை நிரூபிக்கும் முக்கியமான எடுத்துக்காட்டாகும்.

**சுற்றுச்சூழல் பாதுகாப்பும் நீர் மேலாண்மையும்**

சென்னை மாநகரம், நகரமயமாக்கலின் வேகத்தில் மக்கள் தொகை, வாகன போக்குவரத்து, தொழிற்சாலைகள் என பல்வேறு வளர்ச்சிகளை சந்தித்து வருகிறது. இதன் விளைவாக, காற்று மாசு என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக உருவாகியுள்ளது. இந்தியாவின் தலைநகரம் டெல்லி மற்றும் பெங்களூரு நகரங்கள், காற்று மாசினால் பெரும் இன்னல்களை சந்தித்து வருகின்றன என்பது அனைவரும் அறிந்த உண்மை. இத்தகைய சூழ்நிலை சென்னை நகரத்திற்கு ஏற்பட கூடாது என்பதை கருத்திற் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் வழிகாட்டுதலின் கீழ், மாநகராட்சி நிர்வாகம் பல்வேறு சுற்றுச்சூழல் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

**மர நடுகை திட்டம் – பசுமை வளர்ச்சி நோக்கில்**

சாலையோரங்கள், திறந்தவெளி இடங்கள், கால்வாய் ஓரங்கள் போன்ற பகுதிகளில், இயற்கை சீற்றங்களை தாங்கும் வகையில் அரசமரம், புங்கன், வேம்பு, ஆலமரம், நாவல் போன்ற மரங்கள் நடப்படுகின்றன. ஆண்டுக்கு 2 லட்சம் மரக்கன்றுகள் நடுதல் என்கிற இலக்குடன், 5 ஆண்டுகளில் 10 லட்சம் மரங்கள் நடும் திட்டம், திராவிட மாடல் ஆட்சியின் பாராட்டத்தக்க முயற்சியாகும். மேலும், கடற்கரை பகுதிகளில் சுனாமி போன்ற பேரழிவுகளை தடுக்கும் நோக்கில் பனை விதைகள் நடப்பட்டுள்ளன. இப்பணிகள், வருங்கால சமூகத்திற்கு நாம் விட்டு செல்லும் ஒரு பசுமை சொத்தாகும்.

**பசுமைப்பூங்கா மற்றும் பசுமைப்பள்ளிகள் – கல்வி வழியாக விழிப்புணர்வு**

தமிழ்நாடு அரசின் காலநிலை மாற்ற இயக்கத்தின் கீழ், பசுமை பூங்காக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அதே போல், சென்னை பள்ளிகளில் பசுமை பள்ளிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். இதன் மூலம், மாணவ, மாணவியர்களுக்கு சூரிய ஒளி பயன்பாடு, மழைநீர் சேகரிப்பு, உரம் தயாரித்தல், காய்கறி தோட்டம் அமைத்தல்,

நீர் பயன்பாட்டை குறைத்தல், கழிவுநீரை மறு சுழற்சி செய்தல், பிளாஸ்டிக் இல்லாத சூழல் போன்ற விழிப்புணர்வுகள் இளம் வயதிலேயே கற்றுத் தரப்பட வேண்டும்.

**ஈர நில இயக்கம் – பசுமை தமிழ்நாட்டிற்கான அடித்தளம்**

2022 முதல் 2025 வரை, தமிழ்நாடு ஈர நில இயக்கத்தின் கீழ், காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை தாங்கும் நோக்கில், நகர்ப்புற மற்றும் புறநகர் பகுதிகளில் மர வளர்ப்பு ஊக்குவிக்கப்பட்டுள்ளது. ரூ.90.33 கோடி மதிப்பீட்டில், 137 கோடி நாற்றுகள் 38 மாவட்டங்களில் உள்ள பண்ணை நிலங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் சமுதாய நிலங்களில் நடப்பட்டுள்ளன. இது, தமிழ்நாட்டை பசுமைப்பரப்பாக மாற்றும் திராவிட மாடல் அரசின் மாபெரும் முயற்சியாகும்.

**நிலத்தடி நீர் பாதுகாப்பு**

சென்னை மாநகரத்தில், அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் வர்த்தக மையங்கள் பயன்பாட்டிற்காக, பூமியில் ஆயிரம் அடிக்கும் கீழ் போர் போட்டு தண்ணீர் உறிஞ்சப்படுவதால், கடல்நீர் கலக்கும் அபாயம் உருவாகியுள்ளது. இதனால், அருகிலுள்ள குடியிருப்பு பகுதிகளில் நிலத்தடி நீர் கிடைக்காத சூழ்நிலை உருவாகிறது. இதனை கண்காணித்து, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

**மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் – கட்டாய நடைமுறை**

சென்னை மாநகரில் உள்ள பள்ளி கட்டிடங்கள், அலுவலகங்கள், தனியார் கட்டிடங்கள் மற்றும் வீடுகளில், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் கட்டாயமாக அமைக்கப்பட வேண்டும். இது சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும், நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துவதற்கும் இன்றியமையாத நடவடிக்கையாகும். இதற்கான கோரிக்கையை இந்த மன்றத்தின் வாயிலாக வலியுறுத்துகிறேன்.

**வளர்ச்சி ஒப்பீடு – தமிழ்நாடு ஒரு முன்னுதாரணம்**

நோபல் பரிசு பெற்ற பொருளாதார அறிஞர் திரு. அமர்த்தியா சென் அவர்கள், தமிழ்நாட்டின் வளர்ச்சியை ஒப்பிட வேண்டுமெனில், இந்திய மாநிலங்களுடன் அல்ல, வளர்ச்சியடைந்த நாடுகளுடன் ஒப்பிட வேண்டும் என

கூறியுள்ளார். இதன் மூலம், தமிழ்நாடு உலக நாடுகளுக்கே ஒரு மாநில மாதிரியாக விளங்குகிறது என்பது உறுதி. இது, திராவிட மாடல் ஆட்சிக்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும்.

**மாநகராட்சி பணிகள் – மக்கள் மனதில் நிலைத்த இடம்**

பெருநகர சென்னை மாநகராட்சி, பல்வேறு பணிகளை சிறப்பாக செயல்படுத்தி, மக்களின் மனதில் நிலைத்த இடம் பெற்றுள்ளது. இதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு, இந்த மன்றத்தின் சார்பாக பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்து கொள்கிறேன்.

**நீர் மேலாண்மை**

ஒரு அரசின் கடமை, மக்களுக்கு தேவையான திட்டங்களை உருவாக்குவதில் மட்டுமல்ல, வருங்கால சந்ததிக்கு தேவையானவைகளையும் உருவாக்குவதிலும் இருக்கிறது. சுகாதாரமான வாழ்க்கை, சுவையான குடிநீர், காற்றோட்டமான சூழல் ஆகியவை இன்றியமையாதவை. இவற்றை உணர்ந்து செயல்படும் திராவிட மாடல் அரசு, நீர் மேலாண்மையில் பொற்கால ஆட்சியாக திகழ்கிறது.

இன்றைக்கும், நம் முப்பாட்டன் கரிகாலன் கட்டிய கல்லணையை நாம் பேசுகிறோம். அதே போன்று, நம் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், நீர் மேலாண்மை பணிகளில் சாதனை புரிந்து, அடுத்த தலைமுறைக்கும் வழிகாட்டும் நவீன கரிகாலனாக விளங்கி வருகிறார். எனவே, இந்த மன்றம், அவரை “தமிழ்நாட்டின் நவீன கரிகாலன்” என அழைப்பதில் பெருமை கொள்கிறது.

**வந்தவரை வாழவைக்கும் தமிழ்நாடு**

எந்த மாநிலத்திலிருந்து யார் வந்தாலும், நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள், அவர்களை அன்புடன் வரவேற்று, அவர்களுக்கு வாழ்வளிப்பவர். தன் மாநிலத்தவரை காக்க தள்ளாடி நிற்கும் பிற மாநில தலைவர்கள் மத்தியில், தன்னை நாடி வந்த அண்டை

மாநிலத்தவர்களையும் அள்ளி அணைக்கும் தாயுமானவரின் தன்னிகரில்லா ஆட்சி தொடரட்டும், தொடரட்டும், நன்றி, வணக்கம் **(கைதட்டல்)**

**மாண்புமிகு மேயர்**

நன்றி. அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி.பி.எம். பிருந்தா ஸ்ரீ அவர்கள், வார்டு எண். 160.

**திருமதி பி. எம். பிருந்தா ஸ்ரீ**

தமிழ்நாட்டில் சுயமரியாதை மிக்க ஆட்சி மற்றும் கழகத்தை வழிநடத்தி, நாட்டிற்கே வழிகாட்டியாக விளங்கும் ஒப்பில்லா தலைவர், தமிழ்நாட்டின் நிரந்தர முதலமைச்சர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்கி, மக்களின் குறைகளை வீட்டிலிருந்து ஆய்வு செய்யாமல், நேரடியாக களத்தில் சென்று ஆய்வு செய்து தீர்வு காணும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். மேலும், காஞ்சி வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் உள்ள பொதுமக்கள் பிரச்சனைகளை நேரில் சென்று அறிந்து உடனடியாக தீர்வு காணும் எங்களது மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

**(மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள் மேயர் இருக்கையில் அமர்தல்)**

மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், மரியாதைக்குரிய ஆணையர், எனக்கு பேச வாய்ப்பு அளித்த ஆளுங்கட்சி தலைவர், 12-ஆவது மண்டல வார்டுகுழு தலைவர் திரு என். சந்திரன், அனைத்து நிலைக்குழு மற்றும் வார்டுகுழு தலைவர்கள், சக மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது காலை வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

160-ஆவது வார்டு பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பச்சையம்மன் கோயில் இரயில்வே கேட் அருகே FOOTOVER BRIDGE அமைப்பதற்கான பரிந்துரை இரயில்வே துறையினரால் வழங்கப்பட்டு, இன்று அதற்கான பணிகள் துவங்கப்பட்டு அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளதற்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஆணையர் அவர்களிடம் நேரில் சென்று, இக்கோரிக்கையை முன் வைத்து உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டதற்காக, அவருக்கு நன்றியை தெரிவித்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

**திருமதி பி. எம். பிருந்தா ஸ்ரீ**

நான் ஏற்கனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துள்ளேன்.

160-ஆவது வார்டில் மகளிர் திறன் மேம்பாட்டு பயிற்சி மையம் அமைக்கப்பட்டு, மூன்று மாதங்கள் தையல் மற்றும் ஆரி வேலை பயிற்சி வழங்கப்பட்டதற்காக எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

இதே போன்று, மேலும் ஒரு பயிற்சி முகாம் மீண்டும் நடத்தப்பட வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். எனவே, மகளிர் திறன் மேம்பாட்டிற்காக இத்தகைய பயிற்சி முகாம்கள் தொடர்ச்சியாக நடைபெறுவதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன்.

பழைய மண்டல அலுவலக கட்டிடம் இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளதால், அந்த இடத்தில் இளைஞர்களுக்கான விளையாட்டு மைதானம் அமைக்கப்பட வேண்டுமென கேட்டு கொள்கிறேன். 160வது வார்டில் ஒரு பூங்கா மட்டுமே உள்ளது. அதிலும் ஒரு பகுதி சமுதாய நல கட்டிடத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, 160-ஆவது வார்டில் பூங்கா மற்றும் விளையாட்டு மைதானம் இல்லாத நிலையில், 20,000 சதுர அடி பரப்பளவுள்ள அந்த இடத்தில் விளையாட்டு மைதானம் அமைத்து தரப்பட வேண்டும்.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

வார்டுகுழு தலைவர் அவர்கள் இதனை ஆய்வு செய்து, சாத்திய கூறுகள் இருப்பின் திட்ட மதிப்பீடு தயார் செய்து, வார்டு குழுவின் ஒப்புதலோடு மன்ற அனுமதிக்காக சமர்ப்பிக்க வேண்டும்.

**திருமதி பி. எம். பிருந்தா ஸ்ரீ**

அந்த இடம் மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு முழுமையாக அளிக்கப்பட்டு விட்டதாக தகவல் தெரிவிக்கப்படுகிறது. மெட்ரோ ரயில் துறையினர் தற்போது கள ஆய்வில் ஈடுபட்டுள்ளனர். மெட்ரோ ரயில் வளர்ச்சிக்கு நாங்கள் உறுதுணையாக இருக்கிறோம். இருப்பினும், ஒரு விளையாட்டு மைதானம் மட்டும் அமைத்து, மீதமுள்ள இடத்தை வணிக பயன்பாட்டிற்கு பயன்படுத்தலாம். ஏற்கனவே அந்தப் பகுதியில் Kathipara Urban Square உள்ளது. அந்த தெரு Vending Zone ஆகவே உள்ளது. மேலும் வணிக வளாகத்திற்கான தேவை அங்கு கிடையாது. எனவே, விளையாட்டு துறைக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென கேட்டு கொள்கிறேன்.

தற்போது அந்த இடத்தில் கைப்பந்து விளையாட்டு நடைபெற்று வருகிறது. அதில் தேர்ச்சி பெற்ற 6 மாணவர்கள் காவல் துறையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். எனவே, இதற்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென கேட்டு கொள்கிறேன்.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

அந்த இடம் ஏற்கனவே CMRL துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.

**திருமதி பி. எம். பிருந்தா ஸ்ரீ**

மண்டல அலுவலகத்திலிருந்து இதுகுறித்து எங்களுக்கு எந்த ஒரு தகவலும் வழங்கப்படவில்லை. இதற்கான எந்தத் தீர்மானமும் வார்டுகுழுவில் நிறைவேற்றப்படவில்லை.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

CMRL துறை, அந்த இடத்தினை மக்கள் பயன்பாட்டிற்காக மாநகராட்சியிடம் இருந்து கோரி பெற்றுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் இது தெரியும். உங்கள் கருத்தையும் நாங்கள் கவனத்தில் கொள்கிறோம்.

**திருமதி பி. எம். பிருந்தா ஸ்ரீ**

CMRL பயன்பாட்டிற்கு இடம் ஒதுக்கலாம். ஆனால், ஒரு விளையாட்டு மைதானம் மட்டும் அமைத்து தர வேண்டும்.

பூங்கா ஒன்று மட்டுமே உள்ளது. அதுவும் சிதிலமடைந்த நிலையில் உள்ளது. சமீபத்தில் ரூ.3.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, நடைபாதை மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்ததாரர் அந்தப் பணியினை சரிவர மேற்கொள்ளாததுடன், பணியாற்றியவர்களுக்கு இரண்டு மாத ஊதியமும் வழங்கப்படவில்லை.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

பூங்கா மேம்பாட்டிற்கான திட்ட மதிப்பீடு தயார் செய்து, வார்டு குழு ஒப்புதலோடு மன்ற அனுமதிக்காக சமர்ப்பிக்க வேண்டும்.

**திருமதி பி. எம். பிருந்தா ஸ்ரீ**

மூலதன நிதியிலிருந்து அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்து, முழுமையான மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன்.

அங்கு ஒரு புதிய தெரு அமைந்துள்ளது. அதற்கு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. மிசா. ம. ஆபிரகாம் அவர்களின் நினைவாக, அந்த தெருவிற்கு அவரது பெயரை சூட்டுமாறு கேட்டு கொள்கிறேன்.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

வார்டு குழுவில் தீர்மானம் நிறைவேற்றி அனுப்ப வேண்டும்.

**திருமதி பி. எம். பிருந்தா ஸ்ரீ**

சரி. பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

அடுத்து, மரியாதைக்குரிய வார்டுகுழு தலைவர் திரு.ரா. துரைராஜ் அவர்கள், மண்டலம்-13 / மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.172.

**திரு.ரா. துரைராஜ்**

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, ஆளுங்கட்சி தலைவர் திரு. நா. இராமலிங்கம் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, சக மாமன்ற உறுப்பினர்களே, பத்திரிகை நண்பர்களே — உங்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு, மக்களாட்சியின் மனசாட்சியாக செயல்பட்டு வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின் அடிப்படையில், மருத்துவ துறையில் மகத்தான சாதனைகளை புரிந்து வரும், தமிழ்நாடு முழுவதும் மருத்துவ சேவையை பரப்பி, எங்கும் கால்தடம் பதித்து, கண்படாத இடமின்றி கடமையாற்றி வரும் கருமவீரர் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களின் தலைமையில், கடந்த 27 மற்றும் 28 ஆம் தேதிகளில் மண்டலம் 10, 11, 13, 14 மற்றும் 15 ஆகியவற்றை உள்ளடக்கிய மாமன்ற உறுப்பினர்கள், மரியாதைக்குரிய துணை ஆணையர் மற்றும் வட்டார துணை ஆணையர், மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் பல்வேறு சேவை துறைகளின் அதிகாரிகள் பங்கேற்ற ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

அந்த கூட்டத்தில், மழை வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து மாமன்ற உறுப்பினர்கள் தங்களது கருத்துகளை தெரிவித்து, அவற்றை சரி செய்யும் நோக்கில் உரையாடல் நடைபெற்றது. இதில், திராவிட முன்னேற்ற கழக உறுப்பினர்கள் மட்டுமின்றி, எதிர்க்கட்சியை சேர்ந்த உறுப்பினர்களும் மாநகராட்சி நிர்வாகம் மேற்கொண்ட மழைநீர் வடிகால்வாய் தூர்வாரும் பணிகள், பெரும் மழையையும் தாங்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட கட்டமைப்புகள் குறித்து பாராட்டுகளை தெரிவித்தனர்.

இந்த ஆட்சி மக்களுக்கான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது என்பதை இந்தக் கூட்டத்தின் வாயிலாக வெளிப்படுத்தியதை நான் உணர்கிறேன்.

தற்பொழுது நடைபெற்று வருகின்ற இம்மாமன்ற கூட்டத்தில் அ.இ.அ.தி.மு.க. மாமன்ற உறுப்பினர்கள், அரசியல் நோக்கில் சில கருத்துக்களை முன் வைத்து சென்று விட்டனர். ஆனால், ஒரு முக்கியமான விஷயத்தை நினைவூட்ட விரும்புகிறேன் — 2015 ஆம் ஆண்டு சென்னை மாநகரில் ஏற்பட்ட வெள்ளம் இயற்கை பேரழிவு அல்ல, அது மனித தவறால் ஏற்பட்டது. அந்த வெள்ளம் மக்கள் வாழ்வாதாரத்தை சீரழித்தது. ஆனால், அப்போது இருந்த அ.இ.அ.தி.மு.க. அரசு அதை ஒரு பாடமாக எடுத்து கொள்ளாமல், பத்தாண்டு காலம் மாநகராட்சி நிர்வாகத்தை பாழாக்கியது.

இந்நிலையில், திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவர் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்று, கடந்த நான்கு ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில், சென்னை மாநகரம் நாடு போற்றும் நகரமாக மாறியுள்ளது. அடிப்படை கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டு, 40 செ.மீ.க்கு மேல் மழை பெய்தாலும், மழைநீர் வடிகால்வாய்களில் மழைநீர் தங்காமல் கால்வாய்களில் சென்று கலக்க கூடிய வகையில் திட்டமிடப்பட்டு பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. சிறிய ஓடைகள் பெரிய கால்வாய்களுடன் இணைக்கப்பட்டு, சில இடங்களில் பணிகள் நடைபெற்று கொண்டிருந்தாலும், பெரும்பான்மையான பகுதிகள் சிறப்பாக இணைக்கப்பட்டுள்ளன.

மேலும், பெரும் மழை வந்தாலும் மக்களின் உயிர் மற்றும் உடைமைகளை பாதுகாக்கும் வகையில் நிவாரண மையங்கள், உணவு தயாரிப்பு கூடங்கள், மருத்துவ வசதிகள் போன்றவை சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு, சென்னை மாநகரத்தின் கட்டமைப்பை மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து சேவை துறைகளையும் ஒருங்கிணைத்து, கல்வி, வேலைவாய்ப்பு, மனிதவள மேம்பாடு உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் முன்னேற்றத்தை நோக்கி தமிழ்நாடு சென்று கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்து கொள்ள விரும்புகிறேன்.

"கல்வியில் சிறந்த தமிழ்நாடு" என தோழர் ஒருவர் கூறியதோடு, அது நம்மை பெருமிதம் கொள்ள வைக்கும் ஒரு சிறப்பான பாராட்டாகும். புகழ் கம்பன்

பிறந்த தமிழ்நாடு, வான்புகழ் பெற்ற வள்ளுவனை உலகிற்கு அருளிய தமிழ்நாடு, இவற்றின் தொடர்ச்சியாக, மாண்புமிகு திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்று, நம் மாநிலத்தின் வளர்ச்சி பாதையை வழிநடத்தும் தலைவராக உயர்ந்துள்ளார் என்பதை தெரிவித்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திறமையான தலைமையின் கீழ், கடந்த நான்கு ஆண்டுகளில் மழைநீர் வடிகால்வாய்கள் சுமார் 3000 கிலோ மீட்டர் நீளத்திற்கு மேம்படுத்தப்பட்டுள்ளன. இதன் விளைவாக, கனமழை பெய்தாலும் சென்னை மாநகரத்தில் வெள்ளம் ஏற்படாத வகையில் தக்க கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த முயற்சியை உலக வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி போன்ற முக்கியமான சர்வதேச அமைப்புகள் பாராட்டியுள்ளன. மேலும், சென்னை மாநகரத்தின் வெள்ள தடுப்பு நடவடிக்கைகள், நாடு முழுவதும் முன்மாதிரியாக காணப்பட வேண்டியவையாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், இந்தியாவிலேயே வெள்ள தடுப்பு நடவடிக்கைகளில் முன்னோடியாக விளங்கும் சென்னை மாநகராட்சி, தனது நிர்வாக திறமையால் சிறப்பாக செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

வெள்ள தடுப்பு நடவடிக்கைகள் குறித்து சென்னை மாநகரில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை பார்வையிடும் நோக்கில், பல்வேறு வெளி மாநிலங்களிலிருந்து அதிகாரிகள் வருகை தந்து, இங்கு பணியாற்றும் அதிகாரிகளிடம் ஆலோசனை மேற்கொண்டு வருகின்றனர்.

சட்டங்களை இயற்றுவதும், திட்டங்களை வகுப்பதும் ஆட்சியாளர்களின் கடமையாகும். ஆனால், அந்தத் திட்டங்களை மக்களுக்கு பயனுள்ளதாக செய்து சேர்ப்பது நிர்வாக அதிகாரிகளின் பொறுப்பாகும்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியாற்றும் அதிகாரிகள், தங்கள் கடமை உணர்வையும், பொறுப்புணர்வையும் தாண்டி, அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றி வருகின்றனர். இது ஒரு சிறந்த நிர்வாகத்தின் அடையாளமாகும்.

குறிப்பாக, நம்முடைய ஆணையர் அவர்கள், தொலைபேசி அழைப்புக்கு பின்னர் 10–20 நிமிடங்களில் சம்பந்தப்பட்ட இடத்திற்கு வந்து, கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் செயல்பட்டு வருகிறார்.

172வது வார்டில், குதிரை பந்தய மைதானத்தில் 4 மில்லியன் அளவிற்கு நீர்தேக்க குளம் அமைக்க சென்ற ஆண்டு செயற் பொறியாளர் திரு. ஹார்டின் ரோசாரியோ அவர்களை அழைத்து ஆணையர் அவர்கள் உத்தரவிட்டார். இந்த ஆண்டு, அதனை 8.66 மில்லியன் அளவிற்கு விரிவுபடுத்தி வழங்கியுள்ளார். அதே போல் MRTS சாலையில் Six Vent பகுதியில், நீர்தேக்க வசதி ஏற்படுத்தி, 1.25 மில்லியன் அளவிற்கு தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டு, மக்கள் வெள்ள பாதிப்பிலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளனர்.

ஆணையர் அவர்களின் அறிவுரைகளை மின்னல் வேகத்தில் நிறைவேற்றி வரும் துணை ஆணையர் (பணிகள்), வட்டார துணை ஆணையர், மண்டல அலுவலர், செயற் பொறியாளர்கள் திரு. ஹார்டின் ரோசாரியோ, திருமதி பிரேமலதா உள்ளிட்ட செயற் பொறியாளர்கள், பணியாளர்கள் ஆகியோர், 24 மணி நேரமும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். தொலைபேசியில் தொடர்பு கொண்டவுடன் உடனடியாக பதிலளிக்கும் வகையில் அவர்கள் ஆற்றும் சேவை சிறப்புக்குரியது. இவ்வளவு அர்ப்பணிப்புடன் செயல்படும் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு, சென்னை மாநகரின் கட்டமைப்பை உயர்த்தி, மற்ற நகரங்களுக்கு முன்னுதாரணமாக மாற்றிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்களுக்கும், ஆணையர் உள்ளிட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

மாநகராட்சியின் பல்வேறு வளர்ச்சி பணிகள் சிறப்பாக நடைபெற்று வந்தாலும், இன்றைய சூழலில், மக்களின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி

செய்யும் நோக்கில் சில முக்கிய கோரிக்கைகளை இங்கே முன் வைக்க விரும்புகிறேன்.

மாநகராட்சி கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டிருந்தாலும், கழிவுநீர் வசதிகளில் இன்னும் பல சவால்கள் உள்ளன. குறிப்பாக, 172வது வார்டில், சிட்டி லிங் சாலையில் (மண்டலம்-12) ஐந்து இடங்களில் கழிவுநீர் நேரடியாக மழைநீர் வடிகால்வாய்களில் கலக்கின்றது. இதனால், வீடுகளின் ஓரங்களில் உள்ள Bore மற்றும் சம்ப்களில் சாக்கடை நீர் கலப்பதால், பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். வியாபாரிகள் சங்கம் இதற்காக போராட்டம் அறிவித்துள்ள நிலையில், 12வது வார்டுகுழு தலைவர் திரு. என். சந்திரன் அவர்களும், நானும் பலமுறை அதிகாரிகளிடம் கோரிக்கையினை முன் வைத்துள்ளோம்.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

இது தொடர்பாக Executive Director, CMWSSB அவர்கள் குறிப்பெடுத்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டு கொள்கிறேன்.

**திரு.ரா. துரைராஜ்**

மண்டலம்-13ல், சென்னை குடிநீர் வாரியம் ஒரு சிறப்பு திட்டத்தை உருவாக்கி, அங்குள்ள தெருக்களை இணைத்து சிறிய உந்து நிலையம் அமைத்து, பெரிய உந்து நிலையத்திற்கு மடைமாற்றும் பணியை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

மண்டலம்-12 மற்றும் மண்டலம்-13 வார்டுகுழு தலைவர்களுடன் ஆலோசித்து, விரைவில் தீர்வு காண வேண்டும்.

**திரு.ரா. துரைராஜ்**

அதே போன்று, வேளச்சேரி பகுதியில் அமைந்துள்ள 176 மற்றும் 177 ஆவது வார்டுகளில், கழிவுநீர் பாதிப்பு மிக மோசமான நிலையில் காணப்படுகிறது. எல்.ஐ.சி நகர் பம்பிங் நிலையத்திலிருந்து பெருங்குடி நோக்கி செல்லும் குழாய்

அமைப்பில் ஏற்பட்ட உடைப்பு காரணமாக, ஆயிரம் சுற்றளவு விட்டம் கொண்ட புதிய குழாய் அமைப்பை ஏற்படுத்தி தருவது அவசியமாகிறது.

இந்நிலையில், அந்த புதிய வழித்தடம் இன்னும் அமைக்கப்படவில்லை. பருவமழையை எதிர்கொள்வதற்காக, தற்காலிகமாக எல்.ஐ.சி நகர் பம்பிங் நிலையத்தின் குதிரை திறனை (Horse Power) அதிகரித்து தர வேண்டும். எனவே, இதனை மாண்புமிகு மேயர் மற்றும் ஆணையர் அவர்கள் மெட்ரோ வாட்டரின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டுமென கேட்டு கொள்கிறேன்.

13ஆம் மண்டலம் பழமை வாய்ந்தது என்பதனால், பல ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட கழிவுநீர் வடிகால்வாய் அமைப்புகள் தற்போது பல இடங்களில் சிதிலமடைந்துள்ளன. Manhole களும் பழுதடைந்த நிலையில் உள்ளன. சில Manholeகளில் கற்கள் அடுக்கப்பட்டுள்ளதால், மழைநீர் நேரடியாக கழிவுநீர் குழாய்களில் புகுந்து, பெரும் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.

எனவே, மழைநீர் வடிகால்வாய் அமைப்பை திட்டமிட்டு சீரமைத்தது போல், கழிவுநீர் கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்தும் திட்டத்தை, மாண்புமிகு மேயர் அவர்களின் தலைமையில், ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, முழுமையான ஆய்வுடன் செயல்படுத்த வேண்டியது அவசியமாகும்.

138வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. கே. கண்ணன் அவர்கள் பூங்கா தொடர்பாக குறிப்பிட்டதற்கேற்ப, என் வேண்டுகோள் — பூங்காக்களை பராமரிக்கும் பணிகளை மண்டல அதிகாரிகளிடம் ஒப்படைத்தால், உள்ளூர் ஒப்பந்ததாரர்கள் மூலம் பூங்காக்களை சிறப்பாக பராமரிக்க முடியும். பூங்காக்கள் பொதுமக்கள் பயன்படுத்தும் இடமாக இருப்பதால், மண்டல அளவிலேயே ஒப்பந்தம் வழங்கி, அதிகாரிகள் நேரடியாக கண்காணிக்க கூடிய அமைப்பை உருவாக்க வேண்டும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டின் இதயமாகிய இருக்கின்ற சென்னை மாநகரத்திற்கு சிறப்பு கவனம் செலுத்தி, சாலைகள், மேம்பாலங்கள், கழிவுநீர் சீரமைப்பு உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். இன்று உலகமே சென்னை மாநகரத்தின் வெள்ள தடுப்பு நடவடிக்கைகளை முன்மாதிரியாக காணும் நிலையில், மாநகராட்சி நிர்வாகம் மிக சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இந்த வளர்ச்சியின் பின்னணியில், மாண்புமிகு மேயர், ஆணையர் மற்றும் துறை சார்ந்த அனைத்து அதிகாரிகளுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்து பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துஅமைகிறேன், நன்றி, வணக்கம்.

**(மாண்புமிகு மேயர் அவர்கள் மீண்டும் இருக்கையில் அமர்தல்)**

**மாண்புமிகு மேயர்**

மன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பம்பிங் ஸ்டேஷன் தொடர்பாக Executive Director, CMWSSB அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இனிமேல் அனைத்து மன்ற கூட்டங்களிலும் Executive Director, CMWSSB அவர்கள் பங்கேற்கவுள்ளதாக தெரிவித்துள்ளார். தாங்கள் குறிப்பிட்ட பம்பிங் ஸ்டேஷன் பணிகள் சில மாதங்களில் முடிவடையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

**திரு. ரா. துரைராஜ்**

வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு தற்காலிகமாக பம்பிங் ஸ்டேஷனின் குதிரை திறனை அதிகரிக்க வேண்டும்.

**மாண்புமிகு மேயர்**

இது தொடர்பாக தகுந்த நடவடிக்கை இரண்டு நாட்களில் எடுக்கப்படும் என மெட்ரோ வாட்டர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**திரு. ரா. துரைராஜ்**

நன்றி.

**மாண்புமிகு மேயர்**

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி மு. மகேஸ்வரி முருகவேல் அவர்கள், வார்டு எண் 175.

**திருமதி மு. மகேஸ்வரி முருகவேல்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் அவர்களுக்கும், இந்த பொன்னான தருணத்தில் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், ஆணையர் அவர்களுக்கும், ஆளுங்கட்சி தலைவர் அவர்களுக்கும், நிலைக்குழு தலைவர்களுக்கும், வார்டுகுழு தலைவர்களுக்கும், மாமன்ற உறுப்பினர்களுக்கும், ஊடக துறையினை சார்ந்த நண்பர்களுக்கும் எனது காலை வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

வார்டு 175, ஆலந்தூர் மண்டலம் -12, வார்டுகள் 161 மற்றும் 163 ஆகிய பகுதிகளில் கழிவுநீர் மழைநீர் வடிகால்வாயில் கலக்கிறது. இதை பலமுறை அதிகாரிகளிடம் தெரிவித்தும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்தப் பிரச்சினையை உடனடியாக சரி செய்து தர வேண்டும்.

**மாண்புமிகு மேயர்**

வட்டார துணை ஆணையர் அவர்கள் இதை கவனத்தில் கொண்டு, வார்டு 175-இல் ஆய்வு மேற்கொண்டு முறையற்ற இணைப்புகளை (Unauthorized Lines) துண்டிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**திருமதி மு. மகேஸ்வரி முருகவேல்**

மாண்புமிகு மேயர் மற்றும் ஆணையர் அவர்கள் வார்டு 175-இல் நேரில் ஆய்வு செய்து, உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுகிறேன்.

வார்டு 175-இல் காலை சிற்றுண்டி உணவு தயாரிக்கும் பணியாளர்களுக்கு தினசரி ரூ.325/- ஊதியம் வழங்கப்படுகிறது. அவர்கள் பணிக்கு வருகிற நாளில்

மட்டுமே ஊதியம் வழங்கப்படுகிறது. இதனை மாத ஊதியமாக மாற்றி தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு மேயர்**

அரசாணையில் "Daily Wages" என குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை மாத ஊதியமாக மாற்றுவதற்கான சாத்திய கூறுகள் தற்போது இல்லை.

**திருமதி மு. மகேஸ்வரி முருகவேல்**

வார்டு 175-இல் தெருக்கள் அதிகமாக உள்ளது. தற்போது 85 தூய்மை பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். மேலும், 10 தூய்மை பணியாளர்களை கூடுதலாக நியமனம் செய்ய வேண்டும்.

**மாண்புமிகு மேயர்**

கூடுதல் தூய்மை பணியாளர்களை நியமனம் செய்ய தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**திருமதி மு. மகேஸ்வரி முருகவேல்**

நன்றி.

**மாண்புமிகு மேயர்**

மாமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள இது போன்ற விஷயங்களை வார்டுக்குழு கூட்டத்திலேயே தீர்வு செய்ய வேண்டுமென்று மண்டல அலுவலர் அவர்களை கேட்டு கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு மேயர்**

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி மோ. சரஸ்வதி அவர்கள், வார்டு எண் 123.

**திருமதி மோ. சரஸ்வதி**

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, அனைத்து மாமன்ற உறுப்பினர்கள், துறை சார்ந்த அதிகாரிகள், பத்திரிகை மற்றும் ஊடகதுறை சார்ந்த நண்பர்கள்—உங்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த வணக்கம்.

இந்த மழைக்காலத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் மாநகராட்சி ஊழியர்கள் அனைவரும் மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்ததின் விளைவாக, மழைநீர் பாதிப்பு மிக குறைவாகவே இருந்தது. இது பாராட்டத்தக்க விஷயமாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) கருதுகிறது. **(கைதட்டல்)**

எல்டாம்ஸ் சாலை மற்றும் பேருந்து சாலையில் மழைநீர் வடிகால்வாய் இணைப்பு பணிகள் நடைபெறுகின்றன. இந்தப் பணிகள் மூன்று இடங்களில் நடைபெறுவதால் போக்குவரத்து மற்றும் மின்சார விநியோகத்தில் இடையூறுகள் ஏற்படுகின்றன. பணிகள் இரவு நேரத்தில் நடைபெறுவதால், பகல் வேளையில் குடிநீர் மற்றும் கழிவுநீர் விநியோகத்தில் சிக்கல்கள் உருவாகின்றன. "இப்பணிகள் நடைபெற போவதற்கான தகவல் வார்டு உறுப்பினருக்கு முன்னதாகவே அறிவிக்கப்பட வேண்டியது அவசியம். ஆனால், எனக்கு எந்த ஒரு தகவலும் தெரிவிக்கப்படவில்லை. இனிமேல், இத்தகைய பணிகள் நடைபெறுவதற்கு முன், மாமன்ற உறுப்பினருக்கு முறையான தகவல் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய கட்டிடங்களில் அரசமரம் மற்றும் ஆலமரம் போன்ற பெரிய மரங்கள் வளர்ந்து உள்ளன. அவற்றை அகற்ற இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, மாநகராட்சி இது தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தக் கோரிக்கையை நான் வார்டு குழு கூட்டங்களில் தொடர்ந்து முன் வைத்து வருகிறேன்.

118-வது வார்டில் உள்ள TANGEDCO Pillar Box-ஐ உயர்த்தி அமைக்க வேண்டும். தற்போது அவை திறந்த நிலையில் உள்ளதால், பொதுமக்கள் பாதுகாப்பு பாதிக்கப்படுகின்றது. எனவே, அவை முறையாக மூடப்பட்டு பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும். இந்தக் கோரிக்கையை கடந்த நான்கு ஆண்டுகளாக வார்டு குழு கூட்டங்களில் தொடர்ந்து முன்வைத்து வருகிறேன்.

பெரியார் நகர் சாலை மற்றும் காமராஜர் தெரு ஆகிய இடங்களில் குடிநீர் வாரியத்தின் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவை மார்க்கெட் பகுதிகள் என்பதால், பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். எனக்கு, இப்பணிகளை விரைந்து முடித்து தர கோரி பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் வந்துள்ளன. எனவே, இந்தப் பணிகளை விரைந்து முடிக்க தேவையான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டும்.

200 வார்டுகளிலும் தெரு நாய்கள் துரத்துவது மற்றும் நாய் கடியினால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இது பொதுமக்களின் பாதுகாப்புக்கு பெரும் சவாலாக உள்ளது. எனவே, ஒவ்வொரு மண்டலத்திலும் மண்டல வாரியாக நாய்கள் காப்பகங்கள் அமைக்கப்பட வேண்டும். இதன் மூலம் தெரு நாய்கள் கட்டுப்படுத்தப்படுவதுடன், பொதுமக்கள் பாதுகாப்பும் உறுதி செய்யப்படும். பேருந்து சாலைகள் மற்றும் உட்புற சாலைகளில் வேக தடை அமைத்து தர வேண்டும். இதனால் விபத்துகள் தடுக்கப்படும்.

186-வது வார்டு, புழுதிவாக்கம் பகுதியில் உள்ள ஆரம்ப பள்ளியில், ஐந்தாம் வகுப்பு மாணவி பேனா மை கொட்டியதால், ஆசிரியர் அவரை தாக்கியதில் தலையில் காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**மாண்புமிகு மேயர்**

இது தொடர்பாக அந்த ஆசிரியர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். மேலும், காவல் துறையில் புகார் அளிக்கப்பட்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திருமதி மோ. சரஸ்வதி**

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளில் தூய்மை பணி பத்மாவதி என்ற ஒப்பந்ததாரரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவரிடம் பணியாற்றும் தூய்மை பணியாளர்களுக்கு கிளவுஸ், பூட்ஸ் போன்ற பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்படவில்லை. மேலும், குப்பைகளை அகற்றுவதற்கான வாகனங்களும் வழங்கப்படாமல் உள்ளது. இதற்கிடையில், வயதானவர்கள் தூய்மை பணியில் ஈடுபடுத்தப்பட்டு, இப்பணிகளை மேற்கொள்ள

அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இது பணியாளர்களின் உடல் நலத்தையும், பணியின் தரத்தையும் பாதிக்கும் வகையில் உள்ளது. எனவே, உரிய பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் வழங்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு மேயர்**

இது தொடர்பாக ஆணையர் அவர்கள் விரிவான பதிலை வழங்கியுள்ளனர்.

**திருமதி மோ. சரஸ்வதி**

என்னுடைய கோரிக்கை என்னவென்றால், பத்மாவதி என்கிற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பட வேண்டும்.

வார்டுகளில் நடைபெறும் அனைத்து பணிகளும் தாமதமின்றி, துரிதமாக செய்து முடிக்கப்பட வேண்டும்.

Pillar Box-கள் உயர்த்தி அமைக்கப்படாததும், திறந்த நிலையில் இருப்பதன் காரணமாக, மழைக்காலங்களில் மின்சாரம் தாக்கும் அபாயம் உள்ளது. எனவே, இந்தப் பிரச்சனை குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக TANGEDCO-ற்கு கடிதம் அனுப்பப்பட வேண்டும்.

**மாண்புமிகு மேயர்**

ஒவ்வொரு வார்டு வாரியாக Pillar Box-களை உயர்த்தி அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**திருமதி மோ. சரஸ்வதி**

123வது வார்டில், குறிப்பாக பெரியார் சாலை மற்றும் கன்னி கோயில் பகுதியில் Pillar Box-கள் உயர்த்தி அமைக்கப்படவில்லை. மேலும், அவை திறந்த நிலையில் உள்ளதால் பொதுமக்கள் பாதுகாப்பு பெரிதும் பாதிக்கப்படுகின்றது. மின்சார கேபிள்கள் நிலத்தில் புதைக்கப்படாமல் வெளிப்படையாக உள்ளதால், நான் தனிப்பட்ட முறையில் மின்சார அதிர்வுக்கு உள்ளாகியுள்ளேன். எனவே, Pillar Box-களை உயர்த்தி அமைப்பதுடன், அவை பாதுகாப்பாக மூடப்பட்டிருக்க வேண்டும். மின் கேபிள்கள் நிலத்தில் முறையாக புதைக்கப்பட வேண்டும். பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாக உள்ளது.

மின்சார கேபிள்களில் பழுது ஏற்படும் போதெல்லாம், குடியிருப்போர் தாங்களே கேபிள்களை தனிப்பட்ட முறையில் கொள்முதல் செய்து வழங்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். அதன் பின்னரே TANGEDCO அவற்றை மாற்றும் நடவடிக்கையில் ஈடுபடுகிறது. இந்த நிலைமை, குறிப்பாக மழைக்காலங்களில், குடியிருப்போருக்கு மிகுந்த சிரமத்தையும் ஆபத்தையும் ஏற்படுத்துகிறது. எனவே, இந்நிலையை முறைப்படுத்தும் வகையில் மாநகராட்சி உடனடியாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு அரசு மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இதனுடன், குடியிருப்போர் எதிர்கொள்ளும் சிறிய, சிறிய பிரச்சனைகளுக்கும் தீர்வு காணும் வகையில் கவனம் செலுத்தப்பட வேண்டும். இந்த விஷயங்களை வார்டு குழு கூட்டங்களில் பலமுறை எடுத்துரைத்துள்ளேன். எனவே, இப்பிரச்சனைகளுக்கு விரைந்து தீர்வு காணுமாறு கேட்டு கொள்கிறேன்.

பல பணிகள் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளன. ஆனால், மேற்குறிப்பிட்டுள்ள சில பணிகள் இன்னும் நிலுவையில் உள்ளன. எனவே, அந்த நிலுவை பணிகளை விரைந்து செய்து முடிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு கொள்கிறேன், நன்றி.

**மாண்புமிகு மேயர்**

மன்ற உறுப்பினர் அவர்கள், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய கட்டிடங்களில் வளர்ந்துள்ள மரங்களை அகற்றும் பணியை மேற்கொள்ள வேண்டுமென கோரிக்கையினை முன் வைத்துள்ளீர்கள். மாநகராட்சி சார்பில், இந்த ஒரு முறை அந்த பணி மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்படும். மேலும், வரவிருக்கும் நாட்களில் சம்பந்தப்பட்ட துறையிடம் தகவல் தெரிவித்து, தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அதே போன்று, 123வது வார்டில் வேக கட்டுப்பாட்டு தடைகள் (Speed Breakers) அமைத்து தர வேண்டுமென்கிற கோரிக்கை மாமன்ற உறுப்பினர்

அவர்களால் முன் வைக்கப்பட்டுள்ளது. தேவையின் அடிப்படையில், அவை அமைத்து தரப்படும்.

TANGEDCO தொடர்பான பணிகள் குறித்து தாங்கள் தெரிவித்துள்ளீர்கள். இது தொடர்பாக மண்டல அலுவலரிடம் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரவிருக்கும் நாட்களில் TANGEDCO துறையினரால் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும், நன்றி.

**திருமதி மோ. சரஸ்வதி**

நன்றி.

**(அவையிலிருந்து வெளிநடப்பு செய்த அ.இ.அ.தி.மு.க. மாமன்ற உறுப்பினர் திரு.த. சந்தியநாதன் அவர்கள் மீண்டும் இருக்கையில் அமருதல்)**

**மாண்புமிகு மேயர்**

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. த. சத்தியாநாதன் அவர்கள், வார்டு எண் 145.

**திரு. த. சத்தியநாதன்**

தேசியமும், தெய்வீகமும் தனது இரு கண்களாக கொண்டு வாழ்ந்த அய்யா திரு. பசும்பொன் முத்துராமலிங்க தேவர் அவர்களின் 118ஆம் ஆண்டு ஜெயந்தி விழாவில், 145வது வார்டு பொதுமக்கள் சார்பாகவும், என் தனிப்பட்ட சார்பாகவும் வணங்கி, என் உரையை தொடங்குகிறேன்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் மாதாந்திர கூட்டத்திற்கு தலைமை வகித்து வருகின்ற மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய ஆணையர் மற்றும் துணை ஆணையர்களுக்கும், வட்டார துணை ஆணையர்களுக்கும், ஆளுங்கட்சி தலைவர்களுக்கும், நிலைக்குழு தலைவர்களுக்கும், வார்டுகுழு தலைவர்களுக்கும், சக மாமன்ற உறுப்பினர்களுக்கும், அனைத்து அரசு துறை அதிகாரிகளுக்கும், பத்திரிகை துறை சார்ந்த நண்பர்களுக்கும், 145வது வார்டு

பொதுமக்கள் சார்பாக என் மனமார்ந்த வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

**145-வது வார்டு தொடர்பான கோரிக்கைகள்:**

ஒப்பந்ததாரர் கடந்த ஏழு மாதங்களாக அம்மா உணவக பராமரிப்பு பணிகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளாமல், மாதத்திற்கு ஒருமுறை மட்டுமே பணியை மேற்கொண்டு வருகின்றார். அதன் பின்னர், பணியை தொடராமல் இடைவேளைகளுடன் செயல்படுகிறார். இவ்விஷயம் குறித்து நான் ஏற்கனவே வார்டு குழு கூட்டத்தில் எடுத்துரைத்துள்ளேன்.

எனவே, கீழ்க்காணும் விஷயங்களை தெளிவுபடுத்துமாறு கேட்டு கொள்கிறேன்:

- ஒப்பந்ததாரரின் அலட்சியத்திற்கெதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது?
- அம்மா உணவக பராமரிப்பு பணிகள் எப்போது முழுமையாக, திட்டமிட்டவாறு முடித்து தரப்படும்? என அறிய விரும்புகிறேன்.

13 ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்ட சுமார் 1500 தெரு மின் விளக்குகளின் உத்தரவாத காலம் முடிவடைந்துள்ளது. தற்போது, அவை போதிய வெளிச்சத்தை வழங்கவில்லை. இது தொடர்பாக இரண்டு மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற வார்டு குழு கூட்டத்தில் தெரிவித்த போது, ADE அவர்கள் 50–100 விளக்குகள் மாற்றி தரப்படும் என தெரிவித்தார்.எனவே, மீதமுள்ள மின் விளக்குகள் எப்போது முழுமையாக மாற்றி தரப்படும்? என அறிய விரும்புகிறேன்.

டெங்கு காய்ச்சலினால் 6 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். கொசு மருந்து தெளிக்கும் வாகனங்கள் குறைவாக உள்ளன. Fogging Machines அடிக்கடி பழுதடைகின்றன. புதிய Fogging Machines வழங்கப்பட வேண்டும். வளசரவாக்கம் மண்டலத்திலுள்ள அனைத்து வார்டுகளுக்கும் கூடுதலாக வாகனங்கள் மூலம் கொசு மருந்து தெளிக்கும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.

சேதமடைந்த 70 மின் விளக்கு கம்பங்களில் 30 மாற்றப்பட்டுள்ளன. அதற்காக எனது நன்றியினை TANGEDCO துறையினருக்கு தெரிவித்து கொள்கிறேன். மீதமுள்ள 40 மின் கம்பங்களும் போர்க்கால அடிப்படையில் மாற்றப்பட வேண்டும். தாழ்வான நிலையில் உள்ள மின்சார ஒயர்கள் மாற்றப்பட வேண்டும். சாலையின் கீழ் மட்டத்தில் உள்ள போர்டுகள் மாற்றி தரப்பட வேண்டும்.

நெற்குன்றம் பகுதியில் உள்ள என்.டி. பட்டேல் சாலையில் கடந்த காலங்களில் நான்கு மினி பேருந்துகள் இயங்கி வந்தன. தற்போது, இரண்டு பேருந்துகள் மட்டுமே இயக்கப்படுகின்றன. இதனால், குறிப்பாக வயதான பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இது ஏரியா சபை கூட்டத்தில் பொதுமக்களால் வலியுறுத்தப்பட்ட முக்கிய கோரிக்கையாகும். எனவே, நான்கு மினி பேருந்துகளும் மீண்டும் இயங்கும் வகையில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

பூந்தமல்லி நெடுஞ்சாலையில், பொதுப்பணி துறைக்கு சொந்தமான இடத்தில் அமைந்துள்ள மயானம் கடந்த 70–80 ஆண்டுகளாக பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. தற்போது இம்மயானத்தில் கழிப்பறை, போர்வெல் போன்ற அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, நவீன எரியூட்டி மயானமாக மேம்படுத்தப்பட வேண்டும். இது ஏரியா சபை கூட்டத்தில் பொதுமக்களால் முன் வைக்கப்பட்ட முக்கிய கோரிக்கையாகும். எனவே, இம்மயான மேம்பாட்டு பணிகள் விரைவில் தொடங்கப்பட வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

145-வது வார்டில் குடிநீர் மற்றும் கழிவுநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்படும் என கூறப்பட்டு, அதற்கான தொகை ஒரு வருடத்திற்கு முன்பே மெட்ரோ வாட்டரால் வசூலிக்கப்பட்டது. கழிவுநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், குடிநீர் இணைப்பு இதுவரை வழங்கப்படவில்லை. எனவே, குடிநீர் இணைப்பை உடனடியாக வழங்க வேண்டும்.

**மாண்புமிகு மேயர்**

சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தின் Executive Director அவர்கள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டு, தாங்கள் முன் வைக்கும் கோரிக்கைகளை குறிப்பெடுத்து கொண்டுள்ளார். அவர் இதை ஆய்வு செய்து, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வார் என தெரிவித்து கொள்கிறேன்.

**திரு. த. சத்தியநாதன்**

சென்னை குடிநீர் வாரியம் சாலை வெட்டுகளுக்காக பணம் பெற்றும், சாலை சீரமைப்பு பணிகளை சரிவர மேற்கொள்வதில்லை எனவே, மாநகராட்சியே சாலை சீரமைப்பிற்கான தொகையை பெற்று கொண்டு, அந்த பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

Torrent **Gas** நிறுவனம், பேருந்து சாலைகள் துறையிடமிருந்து சாலை வெட்டுதல் மற்றும் சீரமைத்தல் தொடர்பான உரிய அனுமதியுடன் குழாய்கள் பதிக்கும் பணியை மேற்கொண்டு வருகிறது. ஆனால், இந்நிறுவனம் தொழில்நுட்ப குறிப்புகள் (Specifications) படி சாலை சீரமைப்பு பணிகள் மேற்கொள்வதை அறியவில்லை.

**மாண்புமிகு மேயர்**

சம்பந்தப்பட்ட வார்டு உதவி பொறியாளர் இதனை மேற்பார்வையிடுவார்.

**திரு. த. சத்தியநாதன்**

சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அனுமதி கடிதத்தில் இத்தகைய விவரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

**மாண்புமிகு மேயர்**

இதுகுறித்து சரி பார்க்கப்படும்.

**ஆணையர்**

மாநகராட்சியே சாலை சீரமைப்பு பணிகளை நேரடியாக மேற்கொள்ளும்.

**திரு. த. சத்தியநாதன்**

கடந்த இரண்டு ஆண்டுகளாக தொடர்ந்து முன் வைக்கப்படும் கோரிக்கை — கிராம நத்தம் பட்டா. மாவட்ட ஆட்சி தலைவரை அணுகியும் தீர்வு கிடைக்கவில்லை. பட்டா இல்லாமல் வீடுகளுக்கு சொத்து வரி மதிப்பீடு செய்ய முடியவில்லை. இதனால் மின் இணைப்பு, குடிநீர் குழாய் இணைப்பு போன்ற அடிப்படை வசதிகள் பெற முடியவில்லை. நீதிமன்ற உத்தரவின்படி, நீர்நிலை பகுதிகளில் மட்டுமே சொத்து வரி மதிப்பீடு செய்ய கூடாது என கூறப்பட்டுள்ளது. 2000 பூர்வகுடி குடும்பங்கள் வசிக்கும் அந்த இடம் பட்டா நிலமாகவே உள்ளது. சிலர் பட்டா பெறாமல் விட்டு விட்ட காரணத்தினால், புதிய அரசாணை பிறப்பிக்கப்பட்டு பட்டா வழங்கப்படும் வரை, அவர்களது வீடுகளுக்கு சொத்து வரி மதிப்பீடு செய்து தர வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

**மாண்புமிகு மேயர்**

சொத்து வரி மதிப்பீடு தொடர்பாக இது போன்ற நிலங்களில் வீடுகளை கட்டியிருப்போர் குறித்து சென்னை மாநகரம் முழுவதும் கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது.

**திரு. த. சத்தியநாதன்**

இராமலிங்கர் நகர் - 1996ஆம் ஆண்டு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் 100 குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பொதுமக்களிடம் பணம் வசூலிக்கப்பட்டது. ஆனால், Sale Deed மற்றும் பட்டா வழங்கப்படவில்லை. இந்தப் பிரச்சனை குறித்து சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் பேசி ஆவன செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு மேயர்**

இது தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

**திரு. த. சத்தியநாதன்**

145வது வார்டின் சில பகுதிகள் 148ஆம் வார்டிற்கு மாற்றப்பட்டுள்ளதால், அங்குள்ள பொதுமக்கள் குடிநீர் மற்றும் கழிவுநீர் குழாய் இணைப்புகள் பெறுவதில் சிரமம் ஏற்படுகிறது. பிரிக்கப்பட்ட வரைபடத்தில் அந்தப் பகுதிகள் 145வது வார்டில் உள்ளன. EDP Cell-ல் தெரிவித்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**மாண்புமிகு மேயர்**

ERP-ல் உரிய மாற்றங்கள் ஒரு வாரத்திற்குள் மேற்கொள்ளப்படும்.

**திரு. த. சத்தியநாதன்**

1969ஆம் ஆண்டு வள்ளியம்மை நகர், நகர மற்றும் கிராம திட்டமிடல் இயக்குநரகம் (DTCP) அங்கீகரிக்கப்பட்டது. ஆனால், அந்தப் பகுதியில் ஒரு தனி நபர் 30 அடி சாலையை வேலி அமைத்து ஆக்கிரமித்துள்ளார். மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தில் கழிப்பிடம் கட்டும் முயற்சியில் மாநகராட்சி ஈடுபட்டபோது, அந்தத் தனிநபர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து Status Quo உத்தரவை பெற்றுள்ளார். DTCP திட்ட நகலை மாண்புமிகு மேயர் அவர்களிடம் சமர்ப்பிக்கிறேன். பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அந்த 30 அடி சாலையை மீட்டெடுக்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**ஆணையர்**

1969ஆம் ஆண்டு அந்த லேஅவுட்டில் ஒரு சிறிய பகுதி நிலம் மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்படாமல் விடுபட்டுள்ளது. எனவே, வருவாய் ஆவணங்களில் அந்தத் தனி நபர் பெயரில் பட்டா பதிவாகியுள்ளது. இது தொடர்பாக விரிவான விசாரணை நடத்தப்பட்டு, சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. த. சத்தியநாதன்**

பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மேயர்**

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. டி.வி. செம்மொழி அவர்கள், வார்டு எண் 104.

மதியம் 2.00 மணிக்கு அம்மா அரங்கத்தில் குழு புகைப்படம் எடுக்கப்படும் என தெரிவித்து கொள்கிறேன்.

**திரு. டி.வி. செம்மொழி**

தமிழின தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்கி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளத்துடன் சென்னை பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தி, மாணவ, மாணவியர்களின் வருகையை கணிசமாக அதிகரித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மை பணியில் ஈடுபடும் அனைத்து பணியாளர்களுக்கும்—அதாவது மாநகராட்சி பணியாளர்கள் மற்றும் ராம்கி போன்ற பொதுத்துறை நிறுவனங்களை சார்ந்த பணியாளர்கள்—சுமார் 30,000 நபர்களுக்கு காலை, மதியம் மற்றும் இரவு இலவச உணவு வழங்கும் திட்டத்தை அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

ஓட்டேரி நல்லா கால்வாயை நீர்வள துறையிடமிருந்து மாநகராட்சி பெற்றதுடன், ரூ.60 கோடி செலவில் அதன் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. அதே போன்று, விருகம்பாக்கம் கால்வாயின் பணிகள் ரூ.35 கோடி செலவில் தொடங்கப்பட்டுள்ளன. மொத்தம் ரூ.95 கோடி செலவில் மேற்கொள்ளப்படும். இந்தப் பணிகளை தொடங்கி வைத்த மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

பேசுவதற்கு இந்த வாய்ப்பினை வழங்கிய ஆளுங்கட்சி தலைவர் திரு. ந. இராமலிங்கம் அவர்களுக்கும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலைய துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்களுக்கும் எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

சென்னை மாநகரில் பல்வேறு இடங்களில் மர கிளைகள் தெரு விளக்குகளை மறைக்கும் சூழ்நிலை காணப்படுகிறது. இதனால் அவற்றை வெட்டுவதற்காக கூடுதல் செலவுகள் ஏற்படுகின்றன. தற்போது 10 அல்லது 11 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள தெரு விளக்குகளை, 5 மீட்டர் உயரத்தில் அமைத்தால், கம்பத்தின் செலவு குறையும். மேலும், 150 வாட்ஸ் மின் விளக்கிற்கு பதிலாக 90 வாட்ஸ் விளக்குகளை பயன்படுத்தினால், 25 மீட்டர் வரை ஒளி கிடைக்கும் என அறியப்படுகிறது.

இத்தகைய விளக்குகள் 104-ஆவது வார்டின் 6-ஆவது அவென்யூ, மாண்புமிகு அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் திரு. எம்.கே. மோகன் அவர்கள் வசிக்கும் பகுதியில் உள்ள சாலையில் பொருத்தப்பட்டுள்ளன. அவை சிறப்பாக செயல்படுகின்றன. இதே மாதிரியான தெரு விளக்குகளை சென்னை மாநகரின் அனைத்து சாலைகளிலும் அமைத்தால், மாநகராட்சியின் செலவுகள் குறையும் என்பது எனது பணிவான பரிந்துரை.

மண்டலம் 8ல் நீண்ட காலமாக முன் வைத்த கோரிக்கை, 94-ஆவது வார்டின் சிட்கோ நகர் லகூண் பகுதியில் உள்ள கழிவுநீரேற்று நிலையம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் அந்த கழிவுநீர் முழுவதும் ஓட்டேரி நல்லா கால்வாயில் வெளியேற்றப்பட்டு வந்தது. பலமுறை குடிநீர் வாரிய நிர்வாக இயக்குநர் மற்றும் Executive Director அவர்களிடம் தொடர்பு கொண்டு கோரிக்கை விடுக்கப்பட்டதன் விளைவாக, 5 MLD திறனுடைய குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் தற்போது தயார் நிலையில் உள்ளது. நேற்றைய முன்தினம் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. டி.ஜி. வினய், இ.ஆ.ப. அவர்கள் நேரில் வந்து பார்வையிட்டுள்ளார். அதற்காக அவருக்கு இந்த நேரத்தில் என் மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

சென்னை மாநகரில் பல்வேறு இடங்களில் புதிய சாலைகள் அமைக்கப்பட்டாலும், 104-ஆவது வார்டில் ஆற்றோரமாக அமைந்துள்ள சத்திய சாய் நகர் பகுதியில் உள்ள ஒரு கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை அமைக்க

வேண்டிய அவசியம் உள்ளது. இதற்காக பலமுறை கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது. மாநகராட்சி ஆணையர் மற்றும் வட்டார துணை ஆணையர் ஆகியோர், 2026-ஆம் ஆண்டு நடைபெறும் தேர்தலுக்கு முன்னதாக இந்தச் சாலை அமைக்கப்படும் என உறுதியளித்துள்ளனர். அதற்காக அவர்களுக்கும் எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி பொதுமக்களுக்காக பல்வேறு திட்டங்களை தீட்டி அவற்றை செயல்படுத்தி வருகின்றன. ஆனால், மாநகராட்சி செய்கின்ற பணிகள் குறித்த செய்தி மக்களிடம் முழுமையாக சென்றடையவில்லை. பல்வேறு இடங்களில் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டாலும், அவை எங்கு, எப்போது, யாரால் நடத்தப்படுகின்றன என்பது பொதுமக்களுக்கு தெரியவில்லை.

தினமும் வீடுகள் தோறும் குப்பைகளை அகற்றுவதற்காக வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அந்த வாகனங்களில் ஒலிபெருக்கி மூலம் மாநகராட்சி செய்த பணிகளை மக்களிடம் எடுத்து சொல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் திட்டங்களும் மக்களிடம் விளக்கி சொல்லப்பட வேண்டும். இதற்காக பெரிய அளவில் செலவிட வேண்டிய அவசியம் இல்லை. மழைக்காலங்களில் அல்லது பேரிடர் காலங்களில் மக்களுக்கு தெளிவாக தகவல் வழங்கும் வகையில் இது பயனளிக்கும்.

முன்னதாக பேட்டரி வாகனங்களில் ஒலிபெருக்கி இருந்தது. தற்போது எந்த வாகனத்திலும் ஒலிபெருக்கி கிடையாது. குப்பை அகற்ற வரும் போது குடியிருப்புவாசிகளுக்கு விசில் அடித்து தகவல் தெரிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மாநகராட்சி ஆணையர் தொழில்நுட்ப அடிப்படையில் பல App-களை உருவாக்கி, பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் அவற்றை செயல்படுத்தி வருகின்றார். இதை போலவே, ஒலிபெருக்கி வழியாக தகவல் பரவல் ஏற்படுத்தினால், மாநகராட்சி செய்கின்ற பணிகள் குறித்த செய்தி மக்களிடத்தில் சென்று சேர்ந்து பெரும் வரவேற்பினை பெறும்.

104வது வார்டில் கடந்த 5–6 நாட்களாக மருத்துவ முகாம் நடத்தப்பட்டு வருகிறது. பொதுவாக 4 அல்லது 5 தெருக்களுக்கு இணைந்து ஒரு இடத்தில் முகாம் நடைபெறுகிறது. குறைந்தபட்சம் 40 முதல் 50 நபர்கள் இம் முகாம்களில் பங்கேற்கின்றனர். இத்தகவலை மருத்துவ பணியாளர்கள் ஒலிபெருக்கி மூலம் தெரிவித்து வருகின்றனர். குப்பை அகற்றும் வாகனங்களில் ஒலிபெருக்கி பொறுத்தப்பட்டு இம்முகாம்கள் நடைபெற உள்ளதை தெரிவிக்க வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

**மர பராமரிப்பு தொடர்பாக**:

சென்னை மாநகரத்தை பசுமை சோலையாக மாற்றும் நோக்கில் மரங்களை நட வேண்டும் என பணிகள் நிலைக்குழு தலைவர் திரு.நே. சிற்றரசு அவர்கள் தெரிவித்திருந்தார். ஆனால், புதிதாக மரங்களை நடுவதற்கு பதிலாக, ஏற்கனவே உள்ள மரங்களை பாதுகாப்பதே முக்கியம். அனைத்து வார்டுகளிலும் உள்ள மரங்களை கணக்கெடுத்து, ஒவ்வொரு வார்டிலும் எத்தனை மரங்கள், என்னென்ன வகை மரங்கள் உள்ளன என்பதை பதிவு செய்ய வேண்டும்.

அசோகர் சாலை ஓரங்களில் மரங்களை நட்டார் என பாட புத்தகங்களில் நாம் படித்திருக்கின்றோம். நெடுஞ்சாலைகளில் ஒவ்வொரு மரத்திற்கும் எண் அளித்துள்ளனர். மண்டலம் 8-இல் கடந்த ஆண்டு 1000 மரங்கள் இருந்தன. ஆனால், இந்த ஆண்டு 200 மரங்கள் காணவில்லை. அவை எங்கு சென்றன என்பது தெரியாத நிலை உள்ளது. ஒவ்வொரு மண்டலத்திலும் அரசமரம், புளியமரம், வேப்பமரம் போன்ற மரங்கள் எவ்வளவு உள்ளன என்பதை கணக்கெடுத்து, ஆண்டுதோறும் நடப்படும் மரக்கன்றுகளின் பராமரிப்பை உறுதி செய்ய வேண்டும்.

பல ஆயிரம் கோடி ரூபாய் செலவில் மரக்கன்றுகள் நடப்படுகின்றன. ஆனால், அவை எங்கு உள்ளன, எப்படி வளர்கின்றன என்பது தெரியவில்லை. எனவே, வரும் காலங்களில் மரங்கள் பராமரிப்புக்காக தனியாக ஒரு பொறுப்பாளரை நியமித்து, முறையான கண்காணிப்பு மேற்கொள்ள வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

**பெருநகர சென்னை மாநகராட்சி கட்டிட பராமரிப்பு தொடர்பாக:**

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் பல கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. புதிதாக கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. ஆனால், அக் கட்டிடங்களில் பராமரிப்பு பணி நடைபெறுவது கிடையாது. ரூ.50 இலட்சம், ரூ.60 இலட்சம் செலவில் கட்டப்பட்ட நியாய விலை கடைகள் உள்ளிட்ட கட்டிடங்கள், பராமரிப்பின்றி பாழாகி வருகின்றன.

இந்தக் கட்டிடங்களை வார்டு வாரியாக அல்லது மண்டலம் வாரியாக இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை வர்ணம் பூசி பராமரிக்க வேண்டும். நம்முடைய வரி பணத்தில் கட்டப்படும் கட்டிடங்களை வருடந்தோறும் பராமரித்தால் தான் அவை நீண்ட காலம் நிலைத்திருக்கும். எனவே, இந்த பராமரிப்பு நடவடிக்கையை நடைமுறைப்படுத்த வேண்டும் என பணிவுடன் கேட்டு கொள்கிறேன்.

38வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.கே. கண்ணன், மாமன்ற உறுப்பினர் அவர்கள் பேசியது போல், கேபிள் ஒயர்கள் தொடர்பாக இன்டர்நெட் சேவை வழங்குநர்கள் மற்றும் உரிமையாளர்களை அழைத்து, ஒரே சர்வர் அமைத்து, அனைவரும் அதில் இணைந்து பயன் பெறும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பாரத பிரதமர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஆகியோர் வருகை தரும் நிகழ்வுகளில், அனைத்து வீடியோ கேமிராக்களையும் நிகழ்விடத்திற்கு அனுமதிப்பதில்லை. ஒரே நபரால் படம் பிடிக்கப்பட்ட காட்சிகள் மட்டுமே பதிவு செய்யப்படும். அந்தப் பதிவு செய்யப்பட்ட காட்சிகள் (footage) அனைத்து தொலைக்காட்சி சேனல்களுக்கும் வழங்கப்பட்டு, அவற்றின் மூலம் ஒளிபரப்பும் ஏற்பாடு செய்யப்படுகிறது. இதே நடைமுறையை இந்நிகழ்விலும் பின்பற்ற வேண்டும்.

இன்றைய சென்னை மாநகரில் பெரும்பாலான சாலைகளிலும் கேபிள் ஒயர்கள் பரவலாக காணப்படுகின்றன. இந்தக் கேபிள் ஒயர்கள் அகற்றப்பட்டாலே சாலைகள் அழகும் , ஒழுங்கும் வாய்ந்தவையாக மாறும்.

மாண்புமிகு மேயர் அவர்கள் வாரத்திற்கு ஒருமுறை கேபிள் ஒயர்கள் அகற்றும் பணி மேற்கொள்வதாக தெரிவித்துள்ளார்கள். 104வது வார்டில் இதற்காக தனிப்பட்ட App ஒன்றை உருவாக்கி, அனைத்து கேபிள் ஒப்பந்ததாரர்களையும் அழைத்து மாதத்திற்கு ஒருமுறை கூட்டம் நடத்தி வருகிறேன். இருந்தாலும் இதற்கான தீர்வு இன்னும் கிடைக்கவில்லை.

எனவே, மாண்புமிகு மேயர் மற்றும் ஆணையர் அவர்கள், தமிழ்நாடு அரசிடம் இது தொடர்பாக தெரிவித்து, அனைத்து கேபிள் உரிமையாளர்களையும் ஒருங்கிணைத்து, நிரந்தர தீர்வு காண வேண்டும். இதன் மூலம், சென்னை மேலும் புதுமையான, மேலும் அழகான தெருக்களை கொண்ட நகரமாக மாறும்.

**மெரினா கடற்கரை – ரோப் கார் திட்டம்:**

சென்னையின் அடையாளமாக மெரினா கடற்கரையில் நேப்பியர் பாலம் முதல் கலங்கரை விளக்கம் வரை ரோப் கார் அமைப்பதற்கான கோரிக்கையை கடந்த நான்கு ஆண்டுகளாக விடுத்து வருகிறேன். அதன் தற்போதைய நிலை குறித்து மாண்புமிகு மேயர் அல்லது ஆணையர் அவர்கள் தெரிவித்தால் மகிழ்ச்சி அடைவேன்.

**ஆணையர்**

Feasibility Report அறிக்கை பெறப்பட்டுள்ளன. அடுத்த கட்ட நடவடிக்கைக்கு முன்னேற்றப்படும்.

**திரு.டி.வி. செம்மொழி**

சாலை வெட்டு அனுமதி கடந்த இரண்டு மாதங்களாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால், புதியதாக வீடுகள் கட்டியவர்கள் கழிவுநீர் இணைப்பை பெற முடியாமல் உள்ளனர். இதன் விளைவாக, அவர்கள் அந்த வீட்டில் குடியேற முடியாமல் தவித்து வருகின்றனர். வெறும் 10 முதல் 15 அடி வரை மட்டுமே சாலை வெட்ட வேண்டிய நிலை காணப்படுகிறது. மண்டலத்திலேயே

இவ்வாறு புதியதாக கட்டப்பட்ட வீடுகள் பத்து மட்டுமே இருக்கும். எனவே, தாங்கள் நேரில் வருகை தந்து, வெட்ட வேண்டிய தூரத்தை கணக்கிட்டு, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுகிறோம். இது பொதுமக்களின் நேரடி கோரிக்கையாகும்.

**ஆணையர்**

சாலை வெட்டு பணி மேற்கொண்ட இடத்தில் உள்ள மண் மழைக்காலத்தில் சகதியாகி சாலை முழுவதும் பரவுவதால், சாலை வெட்டு மேற்கொண்ட இடத்தில் சாலை சீரமைப்பு பணியினை மேற்கொள்ள இயலாது. எனவே, மழைக்காலத்தில் சாலை வெட்டும் பணிக்கு அனுமதி அளிப்பதில்லை.

**மாண்புமிகு மேயர்**

இவ்வாறான சில பணிகளுக்கு அனுமதி வழங்கினால், தொடர்ந்து பிற பணிகளுக்கும் அனுமதி வழங்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். இது நடைமுறையில் மிகவும் சிரமமானதாக இருக்கும். இருந்தாலும், நீங்கள் குறிப்பிட்டுள்ளதால், அதற்கான சாத்திய கூறுகள் என்ன என்பதை பரிசீலித்து, தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. டி.வி. செம்மொழி**

பழைய திருமங்கலம் – ஆயிரங்காலத்து ஊரில் இதுவரை பட்டா வழங்கப்படவில்லை. ஒரு தெருவில் 20 வீடுகள் இருந்தால், அதில் 5 வீடுகளுக்கு மட்டுமே பட்டா உள்ளது. மீதமுள்ள 15 வீடுகளுக்கு பட்டா கிடைக்கவில்லை. இதற்காக நாங்களும் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் ஆகியோர்களிடம் தொடர்ந்து பேசி வருகிறோம். “அடிமேல் அடி வைத்தால் அம்மியும் நகரும்” என்பது போல், தொடர்ந்து முயற்சி செய்து வருகிறேன் என்பதற்காகவே இதை மீண்டும் பதிவு செய்து கொண்டிருக்கின்றேன்.

பேச வாய்ப்பளித்தமைக்காக மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், ஆணையர் அவர்களுக்கும், ஆளுங்கட்சி தலைவர் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

சத்திய சாய் நகர் பகுதியில் சாலை அமைத்து தரப்படும் என்கிற நம்பிக்கையோடு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மேயர்**

கண்டிப்பாக சத்திய சாய் நகர் பகுதியில் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்து கொள்கிறேன்.

மாநகராட்சி சார்பில் மரங்களுக்கு பச்சை மற்றும் வெள்ளை நிறத்தில் வர்ணம் பூசும் பணி முன்னதாக மேற்கொள்ளப்பட்டது. இடையில் அந்தப் பணி நிறுத்தப்பட்டது. தற்போது மீண்டும் அந்தப் பணி தொடங்கப்பட்டு, மரங்களுக்கு எண்கள் அளிக்கப்படும் என தெரிவித்து கொள்கிறேன். நன்றி.

**திரு. டி.வி. செம்மொழி:**

நன்றி.

**மாண்புமிகு மேயர்**

அடுத்து மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி. ஜெ.கயல்விழி அவர்கள், வார்டு எண்.179.

**திருமதி. ஜெ. கயல்விழி**

அனைவருக்கும் வணக்கம். இந்த மாமன்றத்தில், 179-ஆவது வார்டு பொதுமக்களின் சார்பாக, அவர்களின் தேவைகள் மற்றும் பிரச்சனைகளை முன் வைத்து தீர்வு காணும் வாய்ப்பினை அளித்தமைக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர், மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், மரியாதைக்குரிய ஆணையர், பேரன்பின் உருவாக விளங்கும் ஆளுங்கட்சி தலைவர், நிலைக்குழுத் தலைவர்கள், வார்டுகுழு தலைவர்கள், சக மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர்கள், ரிப்பன் மாளிகை

வளாகத்தில் பணியாற்றும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள், கழக உடன்பிறப்புகள், 179-ஆவது வார்டு பொதுமக்கள், பத்திரிக்கை மற்றும் ஊடகவியலாளர் நண்பர்கள் அனைவருக்கும் என் உளமார்ந்த வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு, கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, சுற்றுச்சூழல், விவசாயம், தொழில், கட்டுமானம் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் பல்வேறு முன்னேற்ற திட்டங்களை செயல்படுத்தி, இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாக திகழ்வதற்கான வழிகாட்டியாக விளங்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மக்களுக்கு பணியாற்றுவதில் நான் பெருமிதம் கொள்கிறேன்.

179-ஆவது வார்டில் நீண்ட காலமாக நிலவிய பிரச்சனைகள், பொதுமக்களின் கோரிக்கைகள் மற்றும் தேவைகள், மாண்புமிகு தலைமைத்துவத்தின் கீழ் தீர்வு காணப்பட்டுள்ளன. இதற்காக உங்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன். மேலும், நிறைவேற்றப்பட்ட பணிகளுடன் சேர்த்து, இன்னும் நிறைவேற்ற வேண்டிய பணிகளுக்காக இந்த மாமன்றம் ஒரு சிறப்பு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என அன்புடன் கேட்டு கொள்கிறேன்.

கழிவுநீர் பிரச்சனை 179-ஆவது வார்டில் மிகப் பெரிய சவாலாக இருந்து வந்தது. சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட கழிவுநீர் குழாய்கள், மக்கள் தொகை அதிகரிப்பால் அடிக்கடி பழுதடைந்து, பொது சுகாதாரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தி வந்தன. திருவான்மியூர், இலட்சுமிபுரம் மற்றும் அதனை சுற்றியுள்ள 35-க்கும் மேற்பட்ட தெருக்களில் வசிக்கும் 12,000 பொதுமக்கள் பயன் பெறும் வகையில், கழிவுநீர் உந்து நிலையம் (Pumping Station) அமைக்க நிலம் ஒதுக்கீடு செய்ய உதவிய பெருநகர சென்னை மாநகராட்சிக்கும், திட்டத்தை தயாரித்து நிதி ஒதுக்கீடு செய்து பணி ஆணை வழங்கிய சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்களுக்கும், இத் திட்டத்திற்கு உறுதுணையாக இருந்த

மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் திரு கே.என். நேரு அவர்களுக்கும் மற்றும் அனைத்து துறை சார்ந்த அதிகாரிகளுக்கும் என் மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

இந்தத் திட்டம் மூன்று மாத காலத்திற்குள் விரைவாக நிறைவு பெற்று மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும். கடந்த தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், மழைக்காலம் முடிவுற்றவுடன் பணியை தொடங்குமாறு கேட்டு கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தை மக்களுக்கு கொண்டு வர பெரும் பங்களிப்பு செய்த 13வது வார்டுகுழு தலைவர் திரு. ரா. துரைராஜ் அவர்களுக்கும், மாண்புமிகு வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜே.எம்.எச். ஹசன் மௌலானா அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடற்கரை ஒழுங்குமுறை மேலாண்மை ஆணைய சட்டம் 1991 மற்றும் 2011-ன் அடிப்படையில், கடற்கரையில் வசிக்கும் பூர்வகுடி மீனவ மக்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் நோக்கில் கணக்கெடுப்பு செய்து, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள மாநில அரசுக்கும் யூனியன் பிரதேசங்களுக்கும் அதிகாரமும் அறிவுரையும் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்பு இந்த மன்றத்தில் நான் எடுத்துரைத்த வேண்டுகோளின் அடிப்படையில் நமது திராவிட மாடல் ஆட்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக கடற்கரை ஒழுங்குமுறை ஆணையின்படி பசுமை நடைபாதை அமைக்க தமிழ்நாடு கடற்கரை ஒழுங்குமுறை ஆணையம் மற்றும் சென்னை மாவட்ட கடற்கரை ஒழுங்குமுறை ஆணையத்தின் அனுமதி பெற விண்ணப்ப ஏற்பாடுகளை செய்த மாநகராட்சி அதிகாரிகளுக்கு கடலோரத்தில் வாழும் திருவான்மியூர் குப்பம் மற்றும் ஓடைகுப்பம் மீனவ மக்களின் சார்பாக எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன். ஏனெனில், இது அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகும். அடிப்படை கட்டமைப்பு வசதிகளின்றி வாழ்ந்து வரும் அவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் வகையில், இந்தத்

திட்டம் அமையும். எனவே, இந்தத் திட்டத்தை விரைந்து நிறைவு செய்து மக்களுக்கு பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு தங்களை அன்புடன் கேட்டு கொள்கிறேன்.

179-ஆவது வார்டில், சுடுகாடு மற்றும் இடுகாடு என பயன்படுத்தப்பட்டு வரும் சர்வே எண் 170/5-இல் உள்ள நிலம், நீண்ட காலமாக அப்பகுதி மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்தாலும், ஏதோ காரணத்தால் அது மாநகராட்சியின் பட்டியலில் விடுபட்டுள்ளன. இதற்கான அனைத்து வருவாய் பதிவுகளும் (Revenue Records) முறையாக வேளச்சேரி தாசில்தார் அலுவலகத்தில் இருந்து பெறப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. எனவே, மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், மரியாதைக்குரிய ஆணையர் ஆகியோர் சிறப்பு கவனம் செலுத்தி, அந்த மயானத்தை முறையாக வரைமுறைப்படுத்தி தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

179-ஆவது வார்டின் திடீர் நகர் பகுதியில், கடந்த 50 ஆண்டுகளாக முறையான கழிவுநீர், குடிநீர் வசதிகள், தெரு விளக்குகள் மற்றும் நடைபாதைகள் இல்லாமல் மக்கள் வாழ்ந்து வந்தனர். ஆனால், நமது திராவிட நாயகன் தளபதியார் தலைமையிலான ஆட்சியில், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சரும் எங்கள் பாசமிகு அண்ணனுமான திரு. மா. சுப்பிரமணியன் அவர்களின் ஆசியுடனும், 13-ஆவது வார்டுகுழு தலைவர் பேரன்பிற்குரிய அண்ணன் திரு. ரா. துரைராஜ் அவர்களின் பேராதரவுடனும், பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியாற்றும் மண்டல அலுவலர், செயற் பொறியாளர், உதவி செயற் பொறியாளர், உதவி பொறியாளர், மின் துறை உதவி பொறியாளர், சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் கோட்ட பொறியாளர், பகுதி பொறியாளர் ஆகியோர் ஒத்துழைப்புடன் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்கள் வரும் மாத இறுதிக்குள் நிறைவு பெறவுள்ளன. அதனை தொடர்ந்து, திறப்பு விழாவும் நடைபெறவுள்ளது. இதற்காக உழைத்த அனைத்து அதிகாரிகளுக்கும்,

இந்த மன்றத்தின் வாயிலாக என் உளமார்ந்த நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்து கொள்கிறேன்.

சுமார் 60 ஆண்டுகளாக ஆக்கிரமிப்பில் இருந்த கலாஷேத்ரா வண்டிப்பாதை சாலை, இம்மன்றத்தின் முயற்சியால் மீட்கப்பட்டு, தற்போது அங்கு தார் சாலை அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. இதன் மூலம் பள்ளி, கல்லூரி, பேருந்து நிலையம், மருத்துவமனை போன்ற முக்கிய இடங்களுக்கு செல்லும் தூரம் குறைந்து, மக்கள் சிரமமின்றி மகிழ்ச்சியுடன் பயணித்து வருகின்றனர்.

இந்நிலையில், கலாஷேத்ரா நிர்வாகம் மாற்று பாதை அமைத்து தருவதாக நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்துள்ளது. அந்த வழக்கின் அடிப்படையில், திருவான்மியூர் குப்பம் மற்றும் கலாஷேத்ரா தாங்கல் பாட்டை சாலைக்கு மாற்று பாதை வழங்குவது தொடர்பாக, கோட்டாட்சியர், கிண்டி அலுவலகத்தில் கலாஷேத்ரா நிர்வாகிகள், திருவான்மியூர் குப்பம் பொதுமக்கள், பஞ்சாயத்து நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர், செயற் பொறியாளர், உதவி செயற் பொறியாளர், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் வருவாய் துறை தாசில்தார், வேளச்சேரி சரகம் ஆகியோருடன் கூட்டு கலந்தாய்வு நடைபெற்றது.

அந்தச் சந்திப்பில், திருவான்மியூர் குப்பம் மக்களால், மாற்று பாதை வழங்கப்பட்டால் அவர்கள் அதிக தூரம் பயணிக்க வேண்டியிருக்கும் என்றும், அவசர காலங்களில் மருத்துவமனைக்கு செல்வதற்கும், மாணவ, மாணவியர்கள் பள்ளி, கல்லூரி, பேருந்து நிலையம் ஆகியவற்றை அடைவதற்கும் சிரமம் ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. எனவே, தற்போது பயன்பாட்டில் உள்ள சாலையே பொதுமக்களுக்கு ஏற்றதாக இருப்பதால், மாற்று பாதை தேவையில்லை என கோட்டாட்சியர், வருவாய் துறை, கிண்டி அவர்களிடமும் மற்றும் மாநகராட்சி ஆணையரிடமும் மனு சமர்ப்பிக்கப்பட்டது. இதற்கான புகைப்பட ஆதாரங்களுடனான கடிதத்தினை மாண்புமிகு மேயர் மற்றும் மதிப்பிற்குரிய துணை மேயர் ஆகியோரின் பார்வைக்கு சமர்ப்பிக்கிறேன்.

மாற்று பாதையை மக்கள் விரும்பாத காரணத்தினால், ஏற்கனவே உள்ள சாலையே போதுமானது என்பது அப்பகுதி மக்களின் ஒருமித்த விருப்பமாகும்.

எனவே, மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், மரியாதைக்குரிய ஆணையர், நிலைக்குழு தலைவர்கள், வார்டுகுழு தலைவர்கள் மற்றும் சக மாமன்ற உறுப்பினர்கள் அனைவரின் ஒத்துழைப்புடன், சிறப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதன் மூலம், நமது திராவிட மாடல் ஆட்சியில், சாமானிய மக்களுக்கும் சமநீதி கிடைக்க வழிவகை செய்யுமாறு அன்புடன் கேட்டு கொள்கிறேன். பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மேயர்**

மன்ற உறுப்பினர் அவர்கள் சுடுகாடு தொடர்பாக முன் வைத்திருந்த கோரிக்கையை பொறுத்தவரை, ஆணையர் அவர்கள் அடுத்த மன்றக் கூட்டத்தில் அதற்கான பொருள் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். அதே போல், கலாஷேத்ரா தொடர்பாக முன் வைக்கப்பட்ட கோரிக்கையும் ஆணையர் அவர்களின் கவனத்தில் உள்ளது. விரைவில் முடிவுக்கு கொண்டு வரப்படும் என தெரிவித்து கொள்கிறேன்.

**திருமதி ஜெ. கயல்விழி**

நன்றி.

**திரு. சிவராஜசேகரன் (குறுக்கீடு)**

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, ஆளுங்கட்சி தலைவர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே மற்றும் சக மாமன்ற உறுப்பினர்களே உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

கடந்த ஜூலை மாதம் 30ஆம் தேதி நடைபெற்ற மன்ற கூட்டத்தில், மன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒருங்கிணைந்த குழுவாக ஒரு புகைப்படம்

எடுத்திட வேண்டும் என நான் முன் வைத்த வேண்டுகோளை ஏற்று, இன்று இந்த சிறப்பான ஏற்பாட்டை செய்தமைக்கு உங்களுக்கு பெரும் நன்றி.

ஒரு குழு புகைப்படம் என்பதை சாதாரண நிகழ்வாக கருத முடியாது. இது நாடாளுமன்ற வரலாற்றில் தொடர்ச்சியாக பின்பற்றப்படும் ஒரு மரபாகும்.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

இது சட்டமன்ற வரலாற்றிலும் காணப்படும் மரபாகும்.

**திரு. சிவராஜசேகரன்**

சட்டமன்ற வரலாற்றில் இது ஒரு முக்கிய மரபாக இருந்தாலும், பல நேரங்களில் கொள்கை மாறுபாடுகள் மற்றும் அரசியல் சூழ்நிலைகள் காரணமாக, இத்தகைய புகைப்படங்கள் எடுக்கப்படாமல் போன நிகழ்வுகள் உள்ளன.

ஆனால் இன்று, பல முரண்பாடுகள் மற்றும் எதிர் கருத்துக்களோடு ஆவேசமாக உரையாடும் இந்த மன்றத்தில், அந்த முரண்பாடுகளை தாண்டி, ஒற்றுமையை பிரதிபலிக்கும் புகைப்படம் மூலம் சமநிலையை உருவாக்கிய இந்த சிறப்பான நிகழ்வை ஏற்பாடு செய்த மாண்புமிகு மேயர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

**மாண்புமிகு மேயர்**

அடுத்து, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

மாண்புமிகு மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, ஆளுங்கட்சி தலைவர் மற்றும் நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, மாமன்ற உறுப்பினர்களே, ஊடக துறை மற்றும் பத்திரிகை துறை சார்ந்த நண்பர்களே, மாநகராட்சி மற்றும் அனைத்து துறைகளின் அலுவலர்களே—அனைவருக்கும் என் மனமார்ந்த வணக்கங்கள்.

வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள், உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை கூட்டங்களை நடத்துவதோடு மட்டுமல்லாமல், மழையையும் பொருட்படுத்தாமல் நேரடியாக களத்திற்கு சென்று, அரசும் மாநகராட்சியும் மேற்கொள்ளும்

பணிகளை ஆய்வு செய்து, உடனுக்குடன் உத்தரவுகளை பிறப்பித்து பணியாற்றி வருகிறார்.

அடையாறு ஆறு கடலில் கலக்கும் பகுதிகளை இரு முறை நேரில் சென்று ஆய்வு செய்து, மழைநீர் தங்கு தடையின்றி கடலுக்கு செல்லும் வகையில் போர்க்கால அடிப்படையில் தூர்வாரும் பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார். அவருடைய இந்த செயல்பாடுகளுக்கு, இம்மாமன்றத்தின் சார்பில் நன்றியும், வணக்கத்தையும் தெரிவித்து கொள்கிறேன்.

அதே போல், 1996ஆம் ஆண்டு வணக்கத்திற்குரிய மேயராக பொறுப்பேற்ற மாண்புமிகு தளபதி அவர்கள், பெருமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் சென்று ஆய்வு செய்து செயல்பட்டதை போலவே, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தற்போது மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரடியாக சென்று, சென்னையின் மழைநீர் வழித்தடங்களை முழுமையாக ஆய்வு செய்துள்ளார். இவ்வாறு நேரடி ஆய்வில் ஈடுபடுவதால், அங்கு நடைபெறும் பணிகள் தாமதமின்றி விரைவாக நடைபெற வழிவகை ஏற்பட்டுள்ளது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டிடத்தில் அமைந்த கட்டுப்பாட்டு மையத்திற்கு அதிகாலையிலேயே நேரில் வந்து, மழை தொடர்பான பொதுமக்கள் புகார்கள் மற்றும் சமூக ஊடகங்களில் எழும் குறைகளை உடனுக்குடன் தீர்க்க நடவடிக்கை எடுக்க உத்தரவிடும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியும், வணக்கத்தையும் தெரிவித்து கொள்கிறேன்.

மழைக்காலங்களில் மக்கள் சேவையில் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதை வழிகாட்டி, ஆலோசனை வழங்கி வருகிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஆகியோர்களுக்கு இம்மன்றத்தின் சார்பில் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

எதிர்வரும் மழைக்காலத்தில், நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டு, பொதுமக்களை பாதுகாத்து, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு பெருமை சேர்க்கும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஆகியோர்களுக்கு பெருமை சேர்க்கும் வகையில் பணியில் ஈடுபடுவோம் என உறுதியுடன் கூறி, நன்றி கூறி அமைகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மேயர்**

அடுத்து, நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்கள்.

11வது வார்டுகுழு தலைவர் திரு. வே. ராஜன் அவர்களின் கோரிக்கையை ஏற்று இன்றைக்கு கூடுதலாக 72 ஆவது பொருளாக மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியிலிருந்து பாப்காட் வாகனம் கொள்முதல் செய்யலாம் என்கிற பொருளும் சேர்க்கப்படுகிறது என தெரிவித்து கொள்கிறேன். **(கைதட்டல்)**

**திருமதி.உமா ஆனந்தன்**

மாண்புமிகு மேயர் அவர்களே, எனது கருத்தினை இங்கு தெரியப்படுத்த விரும்புகிறேன். மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் Lake View சாலைக்கு சுதந்திர போராட்ட வீரர் திரு. எம்.சி. சுப்பிரமணியம் அவர்களின் பெயரை சூட்ட வேண்டும் என வார்டு குழு கூட்டத்தில் கோரிக்கையினை முன் வைத்தேன். என்னுடைய கோரிக்கையினை அலுவலகத்திற்கு அனுப்பி உள்ளதாக எனக்கு கடிதம் வந்தது.

அதனை தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து, எனது கோரிக்கை கடிதத்தினையும் அவரிடம் வழங்கினேன். மேலும், இன்றைய தினம் GST சாலையில் நாம் அனைவரும் SUV-களில் விரைவாக செல்லும் தேசிய நெடுஞ்சாலையின் ஒரு பகுதிக்கு Thiru. Atal Bihari Vajpayee அவர்களின் பெயரினை சூட்ட வேண்டும் எனவும் எழுத்து மூலம் கோரிக்கையினை அளித்துள்ளேன்.

அதே போன்று, வார்டு - 134-இல் அமைந்துள்ள அயோத்தியா மண்டபம் சார்ந்த தெருவிற்கு, 98 வயதான திரு. லால் கிருஷ்ண அத்வானி அவர்களின் பெயரை சூட்ட வேண்டும் எனவும், இம் மூன்று கோரிக்கைகள் குறித்தும் நான் நேரில் சென்று தெரிவித்துள்ளேன்.

எனது கோரிக்கைகள் கடந்த மூன்று ஆண்டுகளாக நிறைவேற்றப்படாமல் நிலுவையில் உள்ளன. ஏன் இவ்வளவு காலதாமதமாகின்றன? எனவே, எனது கோரிக்கைகளை கருணையுடன் பரிசீலித்து, உரிய உத்தரவுகளை வழங்குமாறு கேட்டு கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

**திரு. வி. வி. கிரிதரன்**

மாண்புமிகு மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, ஆளுங்கட்சி தலைவர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, மாமன்ற உறுப்பினர்களே, மாநகராட்சி மற்றும் அனைத்து துறை சார்ந்த அலுவலர்களே — அனைவருக்கும் எனது வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

கடந்த 17.10.2025 அன்று NMR தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்பட்டு, அதற்கான அரசாணை எண்.609 வெளியிடப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 14 ஆண்டுகளாக, இந்தக் கோரிக்கையை முதல் கூட்டம் முதலே தொடர்ந்து நான் முன் வைத்து வருகிறேன். இந்தக் கோரிக்கையினை நிறைவேற்றி தந்த தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு, இம்மன்றத்தில் எனது நன்றியை தெரிவித்து கொள்கிறேன். நன்றி. வணக்கம். **(கைதட்டல்)**

**மாண்புமிகு மேயர்**

குழு புகைப்படம் எடுப்பதற்காக, அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அம்மா கலையரங்கிற்கு வருகை தருமாறு கேட்டு கொள்கிறேன், நன்றி.

அடுத்து, நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்கள்.

**க.து.ந.க.எண்.பி1 / 2666 / 2025**

**தீர்மான எண்: 1081/2025** **பொருள் எண்.01**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் - 3, பகுதி - 7 மற்றும் 8, கோட்டம்-26 & 30 ல் பல்வேறு பணிகள் மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-3, பகுதி-7 மற்றும் 8, கோட்டம்-26 & 30 ல் கீழ்கண்டுள்ள பல்வேறு பணிகளுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மண்டல அலுவலர்-3 அவர்களின் 22.09.2025 நாளிட்ட நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. இப்பணிகள் மேற்கொள்வதற்கு நிலைக்குழு (பணிகள்)வின் ஒப்புதல் பெறவேண்டியுள்ளது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 30 | தணிகாசலம் நகர் F பிளாக் 6வது தெருவில் புதிய அங்கன்வாடி மையம் அமைத்தல் | 39.00 |
| 2 | 30 | மயான பூமி சாலையில் 16வது நாள் காரிய கூடம் அமைத்தல் | 29.00 |
| 3 | 30 | பி.ஆர்.எச் சாலை (விநாயகபுரம் பேருந்து நிலையம் அருகில்) அங்கன்வாடி மையம் (Center No. 33603150320) அமைத்தல் | 39.00 |
| 4 | 26 | அலெக்ஸ் நகர் சி காலனியில் பல்நோக்கு கட்டிடம் அமைத்தல் | 55.00 |
| 5 | 26 | கிருஷ்ணா நகர் விரிவில் (மாமன்ற உறுப்பினர் அலுவலகம் பின்புறம்) பெண்கள் உடற்பயிற்சி கூடம் அமைக்கும் பணி | 72.00 |
| 6 | 26 | தெலுங்கு காலனியில் அங்கன்வாடி மையம் அமைத்தல் | 39.00 |
| | | மொத்தம் | 273.00 |

எனவே,

1. மேற்குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.2,73,00,000.00 (ரூபாய் இரண்டு கோடியே எழுபத்து மூன்று இலட்சம் மட்டும்) நிர்வாக அனுமதியும்,
2. மேற்குறிப்பிட்ட பணியினை பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் மேற்கொள்ளவும்,
3. கட்டிடத் துறையின் மூலமாக இப்பணியினை மேற்கொள்ள ஒப்பம் கோரவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.577/2025, நாள். 24.10.2025 -ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது".

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**க.து.ந.க.எண்.பி1/2303/2302/2304/2025**

**தீர்மான எண்: 1082/2025** **பொருள் எண்.02**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் - 04, வார்டு - 37, மகாகவி பாரதி நகர் 14வது கிழக்கு குறுக்கு தெருவில் ஆரம்ப சுகாதார நிலையம் (1st Floor) மற்றும் இதர மேம்படுத்தும் பணி, வார்டு - 39, செரியன் நகர் 4வது தெருவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதலாக முதல் தளம் கட்டும் பணி மற்றும் வார்டு - 45, இளங்கோ நகர், Dr. அம்பேத்கர் கல்லூரி சாலையில் கட்டப்பட்டு வரும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதலாக முதல் தளம் கட்டும் பணிகளுக்காக திருத்திய நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | 1. மண்டலம் - 04, வார்டு - 37, மகாகவி பாரதி நகர் 14வது கிழக்கு குறுக்கு தெருவில் ஆரம்ப சுகாதார நிலையம் (1st Floor) மற்றும் இதர மேம்படுத்தும் பணி.<br>2. மண்டலம் - 04, வார்டு - 39, செரியன் நகர் 4வது தெருவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதலாக முதல் தளம் கட்டும் பணி.<br>3. மண்டலம் - 04, வார்டு - 45, இளங்கோ நகர், Dr. அம்பேத்கர் கல்லூரி சாலையில் கட்டப்பட்டு வரும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதலாக முதல் தளம் கட்டும் பணி. |
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | 1. ஆணையாளர் அவர்களின் அனுமதி நாள்: 20.08.2025, 24.06.2025.<br>2. மன்ற தீர்மானம் எண்: 957/2025, நாள்: 26.08.2025. |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம் - 04. |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2024-2025 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |

| | | |
|---|---|---|
| 5 | மதிப்பீட்டின் தொகை | |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 2,37,92,075.07 |
| | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 42,82,573.51 |
| | (இ) த.நா.க.தொ. ந.வா. 1% | ரூ. 2,37,920.75 |
| | (ஈ) தரக்கட்டுப்பாடு 1% | ரூ. 2,37,920.75 |
| | (உ) மின்சார கட்டணம் | ரூ. 90,000.00 |
| | (ஊ) எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 4,59,509.90 |
| | மொத்தம் (Rounded Off) | ரூ. 2,91,00,000.00 |
| 6 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள் | 1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் 28.08.2025.<br>2. தினகரன் 27.08.2025.<br>3. தி இந்து 27.08.2025. |
| 7 | ஒப்பப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் | 15.09.2025 |
| 8 | நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண் | Health Department Buildings<br>( 20 - 28 - 00 / 412 - 400 - 301 ) |
| 9 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15/30 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? | ஆம் |
| 10 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | இரண்டு (e-Tender) ஒப்பப்படிவங்கள் இணையதளத்தின் மூலம் பெறப்பட்டுள்ளது |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு 16.09.2025 அன்று இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டது. அதன் விவரம் பின் வருமாறு :

| வ எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திருவாளர்கள் | பணியின் அலுவலக மதிப்பு 2024-2025 (ரூ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ) | 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்பிடுகையில் |
|---|---|---|---|---|
| 1 | K S K Engineers | 2,37,92,075.07 | 2,54,33,728.25 | (+) 6.90 % அதிகம் |
| 2 | N Vivek Constructions | 2,37,92,075.07 | 2,61,71,282.58 | (+) 10.00 % அதிகம் |

இவ்வொப்பத்தில் திருவாளர். *K S K Engineers*., அவர்கள் குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் ஆவார். இவ்வொப்பந்ததாரரிடம் மின்னணு மூலம் விலைக்குறைப்பு கோரப்பட்டதில் L1 ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து ஒப்ப புள்ளியினை அளித்துள்ளார். விவரம் பின்வருமாறு

| வ. எண் | மின்னணு விலைக்குறைப்பு அளித்த விவரம் | L1 ஒப்பந்ததாரர் 2024-2025ஆம் ஆண்டு SOR-ன்படி அளித்துள்ள ஒப்பத்தொகை மற்றும் ஒப்பப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1 | முதற்கட்ட விலை குறைப்பு<br>நாள் . 17.09.2025 | ரூ. 2,52,19,599.57 (+) 6.00 % அதிகம் |
வருவதாகவும், இத்திட்டப்பகுதி நிலமானது மயான வகைப்பாடாக கொண்டு இருந்தாலும் தற்போது மயானமாக இல்லாமல் குடியிருப்பு பயன்பாட்டில் இருந்து வருவதால் இந்நிலத்தினை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆட்சேபனையினை தெரிவிப்பதற்கு 13-வது மண்டல சுகாதார நல அலுவலரின் குறிப்புரை பெற்று மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் மண்டலம்-13, வார்டு – 174, சென்னை மாவட்டம், வேளச்சேரி கிராமம் மற்றும் வட்டம், பிளாக் எண்.23, புல எண்.9-ல் அடங்கியுள்ள 45 ஏர் 92.0 சதுர மீட்டர், சர்கார் புறம்போக்கு, மயான வகைப்பாடு கொண்டுள்ள நிலத்தை கே.ஆர்.இராமசாமி நகர் திட்டப்பகுதிக்காக தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆட்சேபனையினை தெரிவிப்பதற்கு சுகாதாரத்துறையின் குறிப்புரையினை உடன் அனுப்பி வைக்குமாறு இவ்வலுவலக 29.09.2020, 04.11.2020, 19.12.2020, 15.12.2021, 21.06.2022, 03.08.2022 (ம) 11.08.2025 நாளிட்ட கடிதங்கள் மூலம் 13-வது மண்டல சுகாதார நல அலுவலர் அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

துணை ஆட்சியர்/நி.ம.உ.து, தெற்கு வட்டார அலுவலகம் அவர்களின் 11.09.2025 நாளிட்ட கடிதத்தில், சென்னை மாவட்டம் , வேளச்சேரி வட்டம் மற்றும் வேளச்சேரி கிராமம், பிளாக் எண்.23, புல எண்.9-ல் அடங்கியுள்ள 45 ஏர்ஸ் 92.0 சதுர மீட்டர் நிலத்தை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் வழங்க கோரியது குறித்து கள ஆய்வு மற்றும் ஆட்சேபனையின்மை அறிக்கையும் கோரப்பட்டுள்ளது என்றும், இது குறித்து துணை ஆட்சியர்/நி.ம.உ (தெற்கு), வட்டாட்சியர்/நி.ம.உ (தெற்கு), பதிவு பெற்ற நில அளவையர், உதவி பொறியாளர்/கோ-174 மற்றும் வருவாய் துறை அலுவலர்கள் ஆகியோர் முன்னிலையில் 25.08.2025 அன்று கூட்டுப்புலத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றும்,

வருவாய் ஆவணங்களில் :

| மாவட்டம் | வட்டம் | கிராமம் | பிளாக் எண் | புல எண் | பழைய புல எண் | விஸ்தீரணம் (ஹெக்.ஏர்ஸ்) | வகைபாடு | உரிமையாளர் | உபயோகம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சென்னை | வேளச்சேரி | வேளச்சேரி | 23 | 9 | 12 | 1.45.92.00 | ச.புறம் | சென்னை மாநகராட்சி | சுடுகாடு |

தற்போது புலத்தில் சென்னை மாவட்டம், வேளச்சேரி வட்டம் மற்றும் கிராமம், பிளாக் எண்.23, புல எண்.9 ஆனது மொத்த பரப்பில் 99 ஏர்ஸ் 98.3 சதுர மீட்டர் நிலத்தில் மயானம் மற்றும் குப்பை கொட்டும் கிடங்குகளாக இயங்கி வருகிறது என்றும், இதை சுற்றி குடியிருப்புகள் அமைந்துள்ள 45 ஏர்ஸ் 93.5 சதுர மீட்டர் நிலத்தை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் வழங்க பரிந்துரை செய்து அனுப்பப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, சென்னை மாவட்டம், வேளச்சேரி வட்டம் மற்றும் கிராமம், பிளாக் எண்.23, புல எண். 9, பழைய புல எண்.12, மொத்த பரப்பில் 99 ஏர்ஸ் 98.3 சதுர மீட்டர் நிலத்தில் மயான மற்றும் குப்பை கொட்டும் கிடங்குளாக இயங்கி வருகிறது இதை சுற்றி அமைந்துள்ள குடியிருப்புகள் 45 ஏர்ஸ் 93.5 சதுர மீட்டர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தினை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் பெயரில் நில உரிமை மாற்றம் செய்ய பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆட்சேபனையின்மையினை சென்னை மாவட்ட ஆட்சியருக்கு தெரிவிப்பதற்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"27.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.509/2025, நாள்.27.10.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

******

**வதுநக.எண்.ஜி1/1490/2021**

**தீர்மான எண்: 1110/2025** **பொருள் எண்.30**

**பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய் துறை- சட்ட திருத்தம் - தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தம் 2022) - தமிழ்நாடு சட்டம் 25/2024 (Tamil Nadu Urban Local Bodies (Second Amendment) Act, 2024) - சொத்துவரி தொடர்பான சட்டபிரிவுகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது - சட்ட திருத்தம் மன்றத்தின் தகவலுக்காக**

அரசால் அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கும் ஒருங்கிணைந்த சட்டமாக தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 (திருத்தம் சட்டம் 2022 ) வெளியிடப்பட்டது. இச்சட்டம் 13.04.2023 முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.

அரசால், மேற்படி சட்டத்தில் உள்ள சில பிரிவுகளுக்கு சட்ட திருத்தம் (Tamil Nadu Urban Local Bodies (Second Amendment) Act, 2024, Act No.25 of 2024) மேற்கொள்ளப்பட்டது- இதில் சொத்துவரி தொடர்பான சில பிரிவுகளுக்கும் {*பிரிவு 84 (1) மற்றும் பிரிவு 84 (4)*} சட்ட திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, எண்.223, 05.07.2024 தேதியிட்ட அரசிதழ் வாயிலாக அறிவிப்பு வெளியிடப்பட்டது.

எண். 5, 06.01.2025 தேதியிட்ட அரசிதழில், தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தில் (Tamil Nadu Urban Local Bodies (Second Amendment) Act, 2024, (Tamil Nadu Act 25 of 2024)), பிரிவு எண். 84 உட்பிரிவு(1)க்கு மேற்கொண்ட திருத்தம் மற்றும் கூடுதலாக சேர்க்கப்பட்ட உட்பிரிவு (4) ஆகியவை 06.01.2025 முதல் நடைமுறைக்கு வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்ட பிரிவு 84 (1)ல் மேற்கொள்ளப்பட்ட சட்ட திருத்தம் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது (கலம்-2ல் உள்ளவாறு) :-

| முந்தை சட்ட பிரிவு 84 (1) | சட்ட பிரிவு 84 (1)க்கு தற்போது மேற்கொள்ளப்பட்ட சட்ட திருத்தம் |
|---|---|
| (கலம் -1) | (கலம் -2) |
| Five per cent of the net property tax payable by an assessee, subject to a maximum of five thousand rupees shall be granted as an incentive, who has paid the property tax within thirty days from the date of commencement of the half-year | “Five per cent of the net property tax payable by an assessee, subject to a maximum of five thousand rupees shall be granted as an incentive, who has paid the property tax within one month from the date of commencement of the half-year” |

2) தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் பிரிவு 84-ல் கூடுதலாக சேர்க்கப்பட்ட உட்பிரிவு (4) ல் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது (கலம்-1ல் உள்ளவாறு) :

| |
|---|
| சட்ட பிரிவு 84 உட்பிரிவு (3)க்கு அடுத்து கூடுதலாக சேர்க்கப்பட்ட உட்பிரிவு (4)<br><br>(அதாவது சட்டபிரிவு 84 (4)) |
| (கலம் -1) |
| "Nothing contained in this section shall apply to the properties owned by the Central and State Governments, public sector undertakings or statutory bodies owned or controlled by the Central and State Governments." |

அதனடிப்படையில், தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 பிரிவு 84 (1)ன்படி, இனிவரும் காலங்களில், இரண்டாம் அரையாண்டுக்கான ஊக்கத் தொகை ஒவ்வொரு அரையாண்டும் அக்டோபர் 1ஆம் தேதி முதல் அக்டோபர் 31ஆம் தேதி வரை வழங்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 பிரிவு 84ல் கூடுதலாக சேர்க்கப்பட்ட உட்பிரிவு (4)ன்படி, அரசு (மத்திய, மாநில, பொதுத்துறை உட்பட....) கட்டிடங்களுக்கு, ஊக்கத் தொகை சலுகை மற்றும் தனிவட்டி விதிப்பு ஆகியவை தவிர்க்கப்பட வேண்டும்.

எனவே, எண். 5, 06.01.2025 தேதியிட்ட அரசிதழ் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998ல் ((Tamil Nadu Urban Local Bodies (Second Amendment) Act, 2024, (Tamil Nadu Act 25 of 2024)), சட்ட பிரிவு 84, உட்பிரிவு (1)க்கு வழங்கப்பட்ட திருத்தம் மற்றும் கூடுதலாக சேர்க்கப்பட்ட உட்பிரிவு (4), முதலியவை நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பார்வைக்காகவும், தகவலுக்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"27.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.510/2025, நாள்.27.10.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/1275A/Addl. O&M/2023**

**தீர்மான எண்: 1111/2025** **பொருள் எண்.31**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - சென்னை பெருநகர வளர்ச்சி குழும (CMDA) நிதியின் கீழ் 51 எண்ணிக்கையிலான சக்கர தடை (Skid Steer Loader) உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது - CMDA நிதியில் மீதமுள்ள சேமிப்பு நிதியில் கூடுதலாக 9 எண்ணிக்கையிலான சக்கர தடை (Skid Steer Loader) உபகரணங்கள் திருவாளர்கள். Gamzen Infrastructure Pvt. Ltd., நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டது – 9 எண்ணிக்கையிலான சக்கர தடை (Skid Steer Loader) உபகரணங்களுக்கு 3 ஆண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது - தற்போது 51 எண்ணிக்கையிலான உபகரணங்களுக்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ளும் திருவாளர்கள். Gamzen Infrastructure Pvt. Ltd., நிறுவனத்தார் மூலம் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்ப விதிகள் Chapter-IV, Rule-14 (9) of Tamil Nadu Tender Transparency Act-2000ன்படி 51 உபகரணங்களுக்கான 3 ஆண்டு கால இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பிற்கான மொத்த ஒப்பத் தொகையில் 25% மிகாமல் (17.64%) கூடுதலாக 9 உபகரணங்களுக்கான 3 ஆண்டு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியினை பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர் நோக்கி ஆணையர் அவர்களின் ஆணை பெற்று பணி ஆணை வழங்கி கூடுதல் பணி மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் பயன்பாட்டிற்காக *51* எண்ணிக்கையிலான சக்கர தடை *(Skid Steer Loader)* உபகரணங்கள் மூன்று ஆண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புடன் கூடிய சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திடமிருந்து *(CMDA)* பெறப்பட்ட நிதியில்

மேற்கொள்ள அரசின் நிர்வாக அனுமதி பெற்று ஒப்பம் கோரி கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் *(CMDA)* நிதியில் மீதமுள்ள சேமிப்பு நிதியில் தற்போது கொள்முதல் செய்யப்பட்ட *51* எண்ணிக்கையிலான சக்கர தடை *(Skid Steer Loader)* உபகரணங்களின் விலையினை அடிப்படையாக கொண்டு கூடுதலாக *9* எண்ணிக்கையிலான சக்கர தடை *(Skid Steer Loader)* உபகரணங்கள் ரூ.*1,91,29,509/-* செலவீனத்தில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ள நிலையில் இவ்வுபகரணங்களுக்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.

புதியதாக கூடுதலாக கொள்முதல் செய்யப்பட்ட *9* எண்ணிக்கையிலான சக்கர தடை *(Skid Steer Loader)* உபகரணங்களின் விவரம் பின்வருமாறு:

**அட்டவணை - *I***

| Sl. No. | Registration No. | Engine No. | Chassis No. | Remarks |
|---|---|---|---|---|
| 1 | TN04 BF 2023 | G9SEELNMNL2400026 | D4BBS004177 | |
| 2 | TN04 BF 2099 | G9SEELNMNL2400027 | D4BBS004184 | |
| 3 | TN04 BF 2054 | G9SEELNMNL2400028 | D4BBS004185 | |
| 4 | TN04 BF 2064 | G9SEELNMNL2400029 | D4BBS004186 | |
| 5 | TN04 BF 2298 | G9SEELNMNL2400030 | D4BBS002093 | |
| 6 | TN04 BF 2280 | G9SEELNMNL2400031 | D4BBS002094 | |
| 7 | TN04 BF 2230 | G9SEELNMNL2400032 | D4BBS002095 | |
| 8 | TN04 BF 2234 | G9SEELNMNL2400033 | D4BBS002096 | |
| 9 | TN04 BF 2242 | G9SEELNMNL2400034 | D4BBS002097 | |

இவ்வுபகரணமானது, அதிநவீன தொழில்நுட்பத்துடன் செயல்படுவதால், இந்த வகை உபகரணங்களை இயக்குவதற்கும் மற்றும் பராமரிப்பதற்கும் போதிய தொழில்நுட்ப விவரங்கள் அறிந்த இயக்குநர்கள் மற்றும் பழுதாளர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் இல்லாத காரணத்தினால், இவ்வுபகரணங்களின் மூன்று வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியினை இவ்வுபகரண தயாரிப்பாளர் மூலம் மேற்கொள்ளலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

*51* எண்ணிக்கையிலான சக்கர தடை *(Skid Steer Loader)* உபகரணங்களின் *3* ஆண்டு கால இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொண்டு வரும் திருவாளர்கள். *Gamzen Infrastructure Pvt. Ltd.,* நிறுவனத்தார் மூலம் தற்போது கூடுதலாக கொள்முதல் செய்யப்பட்ட *9* எண்ணிக்கையிலான சக்கர தடை *(Skid Steer Loader)* உபகரணங்களின் *3* ஆண்டு கால இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் மொத்த தொகை கீழ்காணும் அட்டவணையில் தெரிவித்துள்ளதன் அடிப்படையில் ரூ.*3,08,72,791/-* ஆகும். இச்செலவீனத் தொகையில் மன்றத்தின் பின்னேற்பு அனுமதியினை எதிர் நோக்கி பணி ஆணை வழங்கி கூடுதல் பணி மேற்கொள்ள ஆணையர் அவர்களின் *10.08.2025* நாளிட்ட ஆணை பெறப்பட்டுள்ளது.

**அட்டவணை - *II***

Operation:

| Sl. No. | Description | No of Days | Amount per Unit Incl. GST@18% per day | Amount per Unit Incl. GST@ 18% for 365 days | Total Amount For 9 Nos. of Bobcat Inclu. GST@18% |
|---|---|---|---|---|---|
| 1 | Operation Cost per Day (8 Hours Shift) for 1st year | 365 | 1,201.24 | 4,38,452.60 | 39,46,073.40 |
| 2 | Operation Cost per Day (8 Hours Shift) for 2nd year | 365 | 1,262.60 | 4,60,849/- | 41,47,641/- |
| 3 | Operation Cost per Day (8 Hours Shift) for 3rd year | 365 | 1,323.96 | 4,83,245.40 | 43,49,208.60 |
| Total Amount for Operation for 9 Nos of Skid Steer Loaders for a period of 3 years (Inclu. GST@18%) (A) | | | | | 1,24,42,923/- |

**அட்டவணை - *III***

| Comprehensive Maintenance: | | | | | |
|---|---|---|---|---|---|
| Sl. No. | Description | No of Days | Amount per Unit Incl. GST@18% per day | Amount per Unit Incl. GST@ 18% for 365 days | Total Amount For 9 Nos. of Bobcat Inclu. GST@18% |
| 1 | Comprehensive Maintenance Cost per Day for 1st year | 365 | 1,693.89 | 6,18,269.85 | 55,64,428.65 |
| 2 | Comprehensive Maintenance Cost per Day for 2nd year | 365 | 1,865.58 | 6,80,936.70 | 61,28,430.30 |
| 3 | Comprehensive Maintenance Cost per Day for 3rd year | 365 | 2,050.84 | 7,48,556.60 | 67,37,009.40 |
| Total Amount for Comprehensive Maintenance for 9 Nos. of Skid Steer Loaders for a period of 3 years (Inclu. GST@18%) (B) | | | | | 1,84,29,868.35 |
| Total Amount for Operation and Comprehensive Maintenance for 9 Nos. of Skid Steer Loader for a period of 3 Years (Inclu. GST @ 18%) (A + B) | | | | | 3,08,72,791.35 Say 3,08,72,791/- |

எனவே, மேற்கண்டுள்ள அட்டவணையின்படி 51 உபகரணங்களுக்கு ஒப்பம் கோரி 3 ஆண்டு கால இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பிற்காக இறுதி செய்யப்பட்ட ஒப்ப விலைப்புள்ளிகளின் அடிப்படையில் கூடுதலாக கொள்முதல் செய்யப்பட்ட 9 எண்ணிக்கையிலான சக்கர தடை (Skid Steer Loader) உபகரணங்களுக்கு 3 வருட இயக்குதல் பணிக்கு ரூ.1,24,42,923/-ம் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பிற்கு ரூ.1,84,29,868/- என மொத்த தொகையாக ரூ.3,08,72,791/- ஆகும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இத்தொகையானது 51 உபகரணங்களுக்கு 3 ஆண்டு கால இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு மொத்த தொகையான ரூ.17,49,45,818/-ல் 17.64% ஆக உள்ளது. இந்த சதவீதம் 25%க்கு குறைவாக உள்ளதால் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்ப விதிகள் *Chapter-IV, Rule-14 (9) of Tamil Nadu Tender Transparency Act-2000*ன்படி திருவாளர்கள். Gamzen Infrastructure Pvt. Ltd., நிறுவனத்தார் மூலம் 9 எண்ணிக்கையிலான கூடுதல் சக்கரத்தடை உபகரணங்களை 3 வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான தொகை ரூ.3,08,72,791/- (Inclu.GST) செலவீனத்தில் பணி மேற்கொள்ளலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

9 எண்ணிக்கையிலான கூடுதல் சக்கர தடை (Skid Steer Loader) உபகரணங்கள் 3 ஆண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை (தலைமையகம்) கணக்கு குறியீட்டு எண். 40-41-10 மற்றும் கணக்கு தலைப்பு எண். 230 – 800 – 300 என்ற தலைப்பில் அந்தந்த நிதி ஆண்டில் கூடுதல் நிதி பெற்று மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. புதியதாக கூடுதலாக கொள்முதல் செய்யப்பட்ட பின்வரும் அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ள 9 எண்ணிக்கையிலான சக்கர தடை (Skid Steer Loader) உபகரணங்களுக்கு மூன்று ஆண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள ஏற்கனவே ஒப்பம் கோரி கொள்முதல் செய்யப்பட்ட 51 எண்ணிக்கையிலான சக்கர தடை (Skid Steer Loader) உபகரணங்களின் 3 வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொண்டு வரும் திருவாளர்கள். Gamzen Infrastructure Pvt. Ltd., நிறுவனத்தார் மூலம் 3 ஆண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு ஒப்ப தொகை விவரங்கள் அடிப்படையில் ரூ.3,08,72,791/- மதிப்பீடானது 51 உபகரணங்களுக்கான 3 ஆண்டு கால இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான மொத்த ஒப்ப தொகை ரூ.17,49,45,818/-ல் 25%க்கு மிகாமல் 17.64% குறைவாக உள்ளதால் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்ப விதிகள் Chapter-IV, Rule-14 (9) of Tamil Nadu Tender Transparency Act-2000ன்படி இம்மதிப்பீட்டில் இப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் பின்னேற்பு அனுமதியினை எதிர் நோக்கி ஆணையர் அவர்களின் ஆணை பெற்று பணி ஆணை வழங்கி பணி மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

| Sl. No. | Registration No. | Engine No. | Chassis No. | Remarks |
|---|---|---|---|---|
| 1 | TN04 BF 2023 | G9SEELNMNL2400026 | D4BBS004177 | |
| 2 | TN04 BF 2099 | G9SEELNMNL2400027 | D4BBS004184 | |
| 3 | TN04 BF 2054 | G9SEELNMNL2400028 | D4BBS004185 | |
| 4 | TN04 BF 2064 | G9SEELNMNL2400029 | D4BBS004186 | |
| 5 | TN04 BF 2298 | G9SEELNMNL2400030 | D4BBS002093 | |
| 6 | TN04 BF 2280 | G9SEELNMNL2400031 | D4BBS002094 | |
| 7 | TN04 BF 2230 | G9SEELNMNL2400032 | D4BBS002095 | |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | TN04 BF 2234 | G9SEELNMNL2400033 | D4BBS002096 | |
| 9 | TN04 BF 2242 | G9SEELNMNL2400034 | D4BBS002097 | |

2. கூடுதலாக கொள்முதல் செய்யப்பட்ட *9* எண்ணிக்கையிலான சக்கர தடை உபகரணங்களுக்கு திருவாளர்கள். *Gamzen Infrastructure Pvt. Ltd.,* நிறுவனத்தாரின் *3* வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கு ஏற்கனவே ஒப்பம் கோரி இறுதி செய்யப்பட்ட கீழ்கண்ட விலைப்புள்ளிகளின் அடிப்படையில் பணி ஆணை வழங்கி பணி மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

Operation:

| SL. NO. | DESCRIPTION | NO OF DAYS | AMOUNT PER UNIT INCL. GST@18% PER DAY | AMOUNT PER UNIT INCL. GST@ 18% FOR 365 DAYS | TOTAL AMOUNT FOR 9 NOS. OF BOBCAT INCLU. GST@18% |
|---|---|---|---|---|---|
| 1 | OPERATION COST PER DAY(8 HOURS SHIFT) FOR 1ST YEAR | 365 | 1,201.24 | 4,38,452.60 | 39,46,073.40 |
| 2 | OPERATION COST PER DAY(8 HOURS SHIFT) FOR 2ND YEAR | 365 | 1,262.60 | 4,60,849/- | 41,47,641/- |
| 3 | OPERATION COST PER DAY(8 HOURS SHIFT) FOR 3RD YEAR | 365 | 1,323.96 | 4,83,245.40 | 43,49,208.60 |
| TOTAL AMOUNT FOR OPERATION FOR 9 NOS OF SKID STEER LOADERS FOR A PERIOD OF 3 YEARS (INCLU. GST@18%) (A) | | | | | 1,24,42,923/- |

| Comprehensive Maintenance: | | | | | |
|---|---|---|---|---|---|
| Sl. No. | Description | No of Days | Amount per Unit Incl. GST@18% per day | Amount per Unit Incl. GST@ 18% for 365 days | Total Amount For 9 Nos. of Bobcat Inclu. GST@18% |
| 1 | Comprehensive Maintenance Cost per Day for 1st year | 365 | 1,693.89 | 6,18,269.85 | 55,64,428.65 |
| 2 | Comprehensive Maintenance Cost per Day for 2nd year | 365 | 1,865.58 | 6,80,936.70 | 61,28,430.30 |
| 3 | Comprehensive Maintenance Cost per Day for 3rd year | 365 | 2,050.84 | 7,48,556.60 | 67,37,009.40 |

| | |
|---|---|
| Total Amount for Comprehensive Maintenance for 9 Nos. of Skid Steer Loaders for a period of 3 years (Inclu. GST@18%) (B) | 1,84,29,868.35 |
| Total Amount for Operation and Comprehensive Maintenance for 9 Nos. of Skid Steer Loader for a period of 3 Years (Inclu. GST @ 18%)<br><br>(A + B) | 3,08,72,791.35<br>Say<br>3,08,72,791/- |

3. *9* எண்ணிக்கையிலான கூடுதல் சக்கர தடை *(Skid Steer Loader)* உபகரணங்களுக்கு மூன்று ஆண்டு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான ஒப்பத் தொகை ரூ.*3,08,72,791/-*ல் *2%* தொகை ரூ.*6,17,500/-* மற்றும் கூடுதல் பாதுகாப்பு தொகை ரூ*6,17,500/-* என மொத்தம் ரூ.*12,35,000/-* யினை பாதுகாப்புத் தொகையாக பெற்றுக் கொண்டு உடன்படிக்கை மேற்கொள்ளவும்,
4. *9* எண்ணிக்கையிலான சக்கர தடை *(Skid Steer Loader)* உபகரணங்கள் *3* ஆண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை (தலைமையகம்) கணக்கு குறியீட்டு எண். *40-41-10* மற்றும் கணக்கு தலைப்பு எண். *230 – 800 – 300* என்ற தலைப்பில் அந்தந்த நிதி ஆண்டில் கூடுதல் நிதி பெற்று மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகறிது.

"23.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.165/2025, நாள்.23.10.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"27.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.511/2025, நாள்.27.10.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**

**********

<u>வ. அ.(வ).வ.செ.வா.ப.ந.க.எண்.பிசி / 362 / 25</u>

**தீர்மான எண்: 1112/2025** **பொருள் எண்.32**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - வடக்கு வட்டாரம் - வட சென்னை வாகன பணிமனையில் இயங்கும் டீசல் பங்கிற்கு 2025-26 ஆம் ஆண்டிற்கு இரண்டாம் தவணை - டீசல் கொள்முதல் செய்ய - இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டது - தேவைக்கேற்ப எரிபொருள் கொள்முதல் செய்ய மன்றத்தின் நிர்வாக அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, மன்றத்தீர்மானம் எண்.180/78, நாள். 26.02.78-ன்படி, சென்னை மாநகராட்சி உபயோகத்திற்கு தேவைப்படும் டீசல், இதர எரிப்பொருட்கள் ஒப்பம் கோருவதிலிருந்து விலக்கு அளித்து, இந்திய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து 1978-79 ஆம் ஆண்டிலிருந்து விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளது. அன்றைய கால கட்டத்தில், தென்சென்னை மற்றும் வடசென்னையில் உள்ள மண்டல வாகன இயக்கூர்தி நிலையம் (1 முதல் 10 வரை) அமைக்கப்பட்ட பின்னர், இந்திய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனங்களால் டீசல் சேமிப்பு அறைகள், மண்டல வாகன நிலையங்களில் நிறுவப்பட்டன. சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்ட பின் 2013 முதல் தென் சென்னை, வடசென்னை மற்றும் மத்திய சென்னை என பிரிக்கப்பட்டன. பெருநகர சென்னை மாநகராட்சியாக உருவெடுத்தப்பிறகு, வடக்கு வட்டாரமாக மண்டலம்-1 முதல் 5 வரை பிரித்து அளிக்கப்பட்டது.

வடக்கு வட்டாரம், வட சென்னை வாகன பணிமனை கீழ் இயங்கிவரும் மண்டலம்- 1 முதல் 5 வரை உள்ள லாரி நிலையத்தில் அசோக்லைலேண்ட், சுவராஜ் மஸ்தா. டாடா, எய்ச்சர், டிராக்டர், சிறியவகை முன்பளு தூக்கிகள், முன்பளு தூக்கிகள், மின்துறை வாகனங்கள், பொகிலைன்கள், புல்டோசர்கள், கனரக காம்பேக்டர்கள், இலகுரக காம்பேக்டரகள் , இலகு ரக இயந்திர பெருக்கிகள் போன்ற வாகனங்கள் 217 எண்ணிக்கைக்கு மேல் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. மேலும் மின்வெட்டின் காரணமாக மண்டலங்களில் உள்ள சென்னை மாநகராட்சி மருத்துவமனைகள் மற்றும் மண்டல அலுவலகங்களில் இயங்கும் ஜெனரேட்டர் ஆகியவற்றிற்கும் எரிபொருள் வழங்கப்பட்டு வருகிறது. மழைக்காலங்களில் தண்ணீர் இரைப்பதற்காக ராட்சத மோட்டார்களுக்கும் டீசல் வழங்கப்படுகிறது. மேலும் வடக்கு வட்டாரம், வட சென்னை வாகன பணிமனையின் கீழ் இயங்கி வரும், மண்டலம்-1, 2 மற்றும் 5. மண்டலங்களுக்கு உட்பட்ட புகைபரப்பும், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள்,

மற்றும் சிறப்பு பிரத்யேக வாகனங்களுக்கு தேவைப்படும் எரிபொருள் (டீசல்) வட சென்னை வாகன பணிமனையில் இயங்கும் டீசல் பங்க் மூலம் நிரப்பப்பட்டு வருகின்றது. அதன் விவரம் பின்வருமாறு

| நிறுவனத்தின் பெயர் | சேமிப்பு தொட்டியுள்ள இடம் | டீசல் விநியோகிக்கப்படும் மண்டலம் |
|---|---|---|
| இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் | வடசென்னைவாகனபணினை எண்.61, பேசின் பிரிட்ஜ் சாலை, பேசின் பிரிட்ஜ், சென்னை – 6000 021 | மண்டலம் 1, 2 மற்றும் 5 லாரி நிலைய வாகனங்கள், மற்றும் அம்மண்டலங்களுக்கு உட்பட்ட புகைபரப்பும் வாகனம், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், மற்றும் சிறப்பு பிரத்யேக வாகனங்களுக்கும் |

மன்றத் தீர்மான எண் 168/2025, நாள்.06.02.2025 ன்படி வட சென்னை வாகன பணிமனையில் இயங்கும் டீசல் பங்க் மூலம் கொள்முதல் செய்ய 2025-26 ஆம் ஆண்டிற்கு நிர்வாக அனுமதி ஆணையின்படி வடக்கு வட்டாரம் வடசென்னை வாகன பணிமனைக்கு உட்பட்ட மண்டலம் 1, 2 மற்றும் 5 வரையுள்ள பகுதிக்கு உட்பட்ட புகை பரப்பும், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு டீசல் விநியோகம் செய்ய இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து முதல் தவணையாக 1080 கிலோ லிட்டர் டீசல் கொள்முதல் செய்ய ரூ.9,97,54,200/ (ரூபாய் ஒன்பது கோடியே தொண்ணூற்று ஏழு இலட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து இருநூறு மட்டும்) ஆணை பெறப்பட்டது.

அதன்படி தற்போது வரை, வடக்கு வட்டாரம் வட சென்னை வாகன பணிமனை டீசல் பங்கிற்கு வாங்கிய டீசல் பெறப்பட்ட விவரங்கள் பின்வருமாறு

| 2025-26 | தொகை (ரூ) | கிலோ லிட்டர் |
|---|---|---|
| பெறப்பட்ட நிர்வாக அனுமதி ஆணை | 9,97,54,200/- | 1080 |
| செப்டம்பர் 25 வரை கொள்முதல் செய்யப்பட்டது | 7,09,86,512/- | 768 |
| மீதம் இருப்பு | 2,87,67,688/- | 312 |

மேலே குறிப்பிட்ட அட்டவணையின்படி, இருப்பு மொத்தம் டீசல் 312 KL கொள்முதல் செய்ய ரூ.2,87,67,688/- மட்டுமே உள்ளது. இவை வரும் 30.11.2025 வரையுள்ள நாட்களுக்கு பயன்படுத்தப்பட உள்ளது. எனவே, வடக்கு வட்டாரம் வட சென்னை வாகன பணிமனையில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு 2025-26 ஆம் ஆண்டிற்கு இரண்டாம் தவணையாக டீசல் கொள்முதல் செய்யப்படவேண்டும். அதன் விவரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| ஒரு மாதத்திற்கு வட சென்னை வாகன பணிமனையில் இயங்கும் டீசல் பங்கிற்கு சராசரியாக தேவைப்படும் அளவு | 120 KL |
| 7 மாதத்திற்கு தேவைப்படும் அளவு (A) ( செப்டம்பர் 2025 முதல் மார்ச் 2026 வரை) | 840 KL |
| முதல் தவணையில் மீதம் இருக்கும் டீசல் அளவு (B) | 312 KL |
| இரண்டாம் தவணையாக தேவைப்படும் டீசல் அளவு (A - B) | 528 KL |

பெருநகர சென்னன மாநகராட்சி, வடக்கு வட்டாரம் வட சென்னை வாகன பணிமனையில் இயங்கும் எரிபொருள் கிடங்கை பராமரிக்கும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடம் மட்டுமே கொள்முதல் செய்யப்படுவதால், டீசல் எரிபொருட்களின் விலை விகிதத்தை தெரிவிக்குமாறு இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தை கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்நிறுவனத்தினர் அளித்த விலைப்புள்ளிகள் கீழே தொகுத்து சமர்ப்பிக்கப்படுகிறது.

| நிறுவனம் | பொருள் விவரம் | 1 Litre க்கான தொகை (அனைத்து வரிகள் உட்பட) | மார்ச் 2026 வரை மொத்த தேவை கிலோ லிட்டர் (2025-2026) ஆம் ஆண்டிற்கு |
|---|---|---|---|
| இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் | டீசல் | ரூ.92.36 (நாள் 12.09.2025) கோ.எண்.பிசி/362/2025 | 528 கிலோ லிட்டர் |
| மொத்தம் தொகை (அனைத்து வரிகள் உட்பட) | 528 கி.லி. x ரூ.92360 = ரூ 4,87,66,080/- (ரூபாய் நான்கு கோடியே எண்பத்தேழு இலட்சத்து அறுபத்தாராயிரத்து எண்பது மட்டும்) | | |

மேற்கண்ட விலைப்புள்ளிகள், மத்திய அரசின் ஆயில் நிறுவனங்கள் அவ்வப்போது அறிவிக்கும் விலை உயர்வுக்கு உட்பட்டது என்றும், கொள்முதல் செய்வதற்கான விற்பனை தொகையை முன்பணமாக காசோலை செலுத்த வேண்டும் எனவும், மேற்கண்ட நிறுவனம் நிபந்தனை தெரிவித்துள்ளது. இந்நிறுவனம் மத்திய அரசு நிறுவனம் என்பதால், மத்திய அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலைப்புள்ளிகளின்படி மேற்கூறிய பொருட்களை வழங்கி வருவதால், இந்த விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்ளலாம்.

மேலும், வட சென்னை வாகன பணிமனையில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு 2025-2026 ஆம் ஆண்டிற்கு இரண்டாம் தவணை டீசல் கொள்முதல் செய்ய தோரயமாக, 528 கிலோ லிட்டர் டீசலை பெறுவதற்கு மொத்த ரூ.4,87,66,080 /- (ரூபாய் நான்கு கோடியே எண்பத்தேழு இலட்சத்து அறுபத்தாராயிரத்து எண்பது மட்டும்) தேவைப்படுகின்றது. இச்செலவினம் 2025-26 ஆம் ஆண்டிற்கு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், வடக்கு வட்டாரம் - கணக்கு எண்.: 230-20-03-06 – எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் செலவு செய்யப்படும். மேலும், இந்நிறுவனம் இந்திய அரசின் நிறுவனம் என்பதால் பிணை வைப்புத்தொகை மற்றும் பாதுகாப்பு தொகை செலுத்துவதில் இருந்தும், உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, வட சென்னை வாகன பணிமனையில் இயங்கும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் எரி பொருள் கிடங்கு மூலம் தேவையான எரிபொருள், மேற்கண்ட மத்திய அரசு நிறுவனங்களிடமிருந்து அவர்கள் அளித்த விலைப்புள்ளிகளின் படி, அல்லது வாங்கும் காலத்தில் அப்போதைய சந்தை விலைக்கு வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

டீசல் கொள்முதல் செய்ய, 2001-02 ஆம் ஆண்டிற்கு மன்றத்தீர்மான எண்.92 / 2000, நாள்.28.02.2000 அனுமதியின்படி, அரசின் பின் ஏற்பினை பெறுவதற்கு அனுப்பப்பட்ட கோப்பின் மீது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (மா.ந.1) துறை அளித்த அரசு ஆணை நிலை எண்.102, நாள்.07.08.2000, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஆகிய மூன்று நிறுவனங்களும் மத்திய அரசின் நிறுவனமாக இருக்கும் வரை, ஒவ்வொரு ஆண்டும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசல் மற்றும் பெட்ரோல் இனி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ள அனுமதி அளித்து நிரந்திர ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசு ஆணையினை அமுல்படுத்திட மன்றத்தீர்மான எண்.486/01, நாள்.18.09.2001.-ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் ஆணையரின் ஆணை பெற்று டீசல், பெட்ரோல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. அதன்படி, நடப்பு நிதியாண்டில் 2025-26 ஆம்

ஆண்டிற்கு, வட சென்னை வாகன பணிமனையில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு தேவைப்படும் டீசல் கொள்முதல் செய்திட மன்றத்தின் அனுமதி பெறப்படவேண்டும்.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, வடக்கு வட்டாரம், வட சென்னை வாகன பணிமனை கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட மண்டலம் – 1, 2 மற்றும் 5 லாரி நிலைய வாகனங்கள் மற்றும் மண்டலங்களுக்கு உட்பட்ட புகைபரப்பும் வாகனம், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், மற்றும் சிறப்பு பிரத்யேக வாகனங்களுக்கு தேவைப்படும் எரி பொருள் (டீசல்) வட சென்னை வாகன பணிமனையில் இயங்கும் டீசல் பங்க் மூலம் நிரப்பப்பட அனுமதி வேண்டியும்,
2. வட சென்னை வாகன பணிமனையில் இயங்கும் டீசல் பங்க்கிற்கு மார்ச் *2026* வரை தேவையான 528 கிலோ லிட்டர் டீசலை கொள்முதல் செய்வதற்கு தேவையான மொத்த தொகை ரூ. 4,87,66,080 /- (ரூபாய் நான்கு கோடியே எண்பத்தேழு இலட்சத்து அறுபத்தாராயிரத்து எண்பது மட்டும்) செலவீனத்தில் அல்லது கொள்முதல் செய்யும் போது அமுலில் உள்ள விலைக்கு திருவாளர்கள். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து தேவைகேற்ப கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி வேண்டியும்,
3. வட சென்னை வாகன பணிமனையில் இயங்கும் டீசல் பங்க்கிற்கு தேவையான எரிபொருளை தேவைக்கேற்ப அவ்வப்பொழுது கண்காணிப்பு பொறியாளர் (வடக்கு) அவர்களின் ஆணை பெற்று இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கு RTGS மூலம் முன்பணமாக செலுத்தி டீசல் கொள்முதல் செய்ய அனுமதி வேண்டியும்,
4. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் இந்திய அரசு நிறுவனங்கள் என்பதால், அவர்களுக்கு பிணை வைப்பு தொகை கட்டுவதிலிருந்து, பாதுகாப்பு தொகை செலுத்துவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்,
5. இந்திய அரசு நிறுவனங்கள் கோரியபடி, தேவையான முன்பணத்தை தேவைக்கேற்ப அவ்வப்போது RTGS மூலமாக அளிக்கவும்,
6. இதற்கான செலவினத்தை 2025-26 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், வடக்கு வட்டாரம் - கணக்கு எண்: 230-20-03-06- எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் செலவு செய்யவும்,
7. ஒவ்வொரு ஆண்டும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசலை, இனி சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ளலாம் என அரசு நிரந்தர ஆணை அளித்துள்ளதால், அரசின் பின்னேற்பு இன்றி கொள்முதல்செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.171/2025, நாள்.23.10.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“27.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.514/2025, நாள்.27.10.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**பொ.து.கா.ந.ம.எண்.அ2/0762/2025**

**தீர்மான எண்: 1113/2025** **பொருள் எண்.33**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரம் - கால்நடை மருத்துவத்துறை - செல்லப்பிராணிகள் வளர்ப்பினை முறைபடுத்துதல், உரிமம் பெறுதல், கட்டாயமாக்குதல் - உரிமம் பெறாதவர்களுக்கு அபராதம் விதிக்க மன்றத்தின் அனுமதி.**

நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் *1998*, விதிகள் *2023*, பிரிவு *292*ன் படி பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குள் உள்ள செல்லப்பிராணிகளின் உரிமையாளர்கள் செல்லப்பிராணிகள் வளர்ப்பதற்கான உரிமம் பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் செல்லப்பிராணிகள் வளர்ப்பினை முறைப்படுத்த கடந்த *2023* ஆகஸ்ட் மாதம் முதல் பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளம் வாயிலாக உரிமம் பெறும் முறை நடைமுறையில் உள்ளது.

இந்நிலையில் செல்லப்பிராணிக்களுக்கான உரிமம் பெறும் நடைமுறையை மேலும் விரைவுபடுத்தவும், இதன்மூலம் செல்லப்பிராணிகளின் உரிமையாளர்கள் எளிதாக தங்கள் செல்லப்பிராணிகளுக்கான உரிமத்தை பெற்றுக் கொள்வதற்காகவும் மேம்படுத்தப்பட்ட இணையதள சேவை (ஆன்லைன் போர்டல்) மாண்புமிகு மேயர் அவர்களால் *03.10.2025* அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

செல்லப்பிராணி உரிமம் பெற அதன் உரிமையாளர்கள் தங்கள் விவரங்களை பதிவு செய்து தாங்கள் வளர்க்கும் செல்லப்பிராணியின் புகைப்படம் உள்ளிட்ட பிற விவரங்களை பதிவேற்றம் செய்து ரூ.50/- கட்டணம் செலுத்த வேண்டும். வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி *(Anti Rabies Vaccination)* செலுத்தப்பட்ட சான்றிதழ் மற்றும் மைக்ரோசிப் செலுத்தப்பட்ட விவரம் ஆகியவற்றை பதிவுபெற்ற கால்நடை மருத்துவர்கள் மூலம் பதிவேற்றம் செய்ய வேண்டும். இந்த தகவல்கள் மண்டல கால்நடை மருத்துவ அலுவலர்களால் சரிபார்க்கப்பட்ட பிறகு செல்லப்பிராணி உரிமையாளர்களுக்கு உரிமம் வழங்கப்பட்டு வருகிறது.

செல்லப்பிராணிகளுக்கு ஆண்டுதோறும் வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி *(Anti Rabies Vaccination)* செலுத்தப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தவும், செல்லப்பிராணிகள் உரிமையாளர்களால் கைவிடப்படுவதை *(Pet Abandonment)* தடுக்கவும் அனைத்து செல்லப்பிராணிகளுக்கும் மைக்ரோ சிப்பிங் செலுத்துவது மன்றத்தின் ஆணையின்படி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இவற்றில் செல்லப்பிராணிகளின் உரிமையாளரின் பெயர், முகவரி, வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி செலுத்தப்பட்ட சான்றிதழ் உள்ளிட்ட தரவுகள் பதிவு செய்யப்படும்.

மேற்கண்ட மைக்ரோ சிப்பிங் பொருத்தும் பணி மற்றும் வெறிநாய்க்கடிநோய் தடுப்பூசி *(Anti Rabies Vaccination)* செலுத்துவது பெருநகர சென்னை மாநகராட்சி கட்டுபாட்டில் இயங்கும் கீழ்கண்ட *6* செல்லப்பிராணிகள் சிகிச்சை மையங்களில் *08.10.2025* அன்று முதல் இலவசமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1. திரு.வி.க. நகர் செல்லப்பிராணிகள் சிகிச்சை மையம், மண்டலம்-*6*
2. புளியந்தோப்பு செல்லப்பிராணிகள் சிகிச்சை மையம், மண்டலம்-*6*
3. லாயிட்ஸ்காலனி செல்லப்பிராணிகள் சிகிச்சை மையம், மண்டலம்-*9*
4. நுங்கம்பாக்கம் செல்லப்பிராணிகள் சிகிச்சை மையம், மண்டலம்-*9*
5. கண்ணம்மாப்பேட்டை செல்லப்பிராணிகள் சிகிச்சை மையம், மண்டலம்-*10*
6. மீனம்பாக்கம் செல்லப்பிராணிகள் சிகிச்சை மையம், மண்டலம்-*12*

<u>**செல்லப்பிராணி உரிமம் பெறுவதற்கான நிபந்தனைகள் மற்றும் உரிமையாளர்களின் பொறுப்புகள்:**</u>

1. கட்டுப்படுத்தப்பட்ட இனப்பெருக்கம், தடுப்பூசி, கருத்தடை மற்றும் உரிமம் ஆகியவற்றிற்கு செல்லப்பிராணியின் உரிமையாளர் பொறுப்பு ஏற்க வேண்டும்.
2. பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குள் உள்ள எந்தவொரு சாலை/தெரு/சாக்கடையிலும் தனது நாய்/செல்லப்பிராணியை கழிவு ஏற்படுத்த எந்த உரிமையாளரோ அல்லது நாயின் பொறுப்பாளரோ அனுமதிக்கக் கூடாது. ஏதேனும் நாய் சாலை/தெரு/சாக்கடையில் கழிவு ஏற்படுத்துவது கண்டறியப்பட்டால், அக்கழிவை சுத்தம் செய்து முறையாக அப்புறப்படுத்துவது சம்பந்தப்பட்ட உரிமையாளரின் கடமையாகும்.
3. தங்கள் செல்லப்பிராணிகளை மற்றவர்களுக்கு தொந்தரவு அல்லது பொது சுகாதார ஆபத்தை ஏற்படுத்தாமல் வைத்திருக்க வேண்டும்.
4. செல்லப் பிராணிகளை பொது இடங்களுக்கு அழைத்துச் செல்லும் போது நாய்களை வீடுகள், தெருக்கள், பூங்காக்கள் மற்றும் மக்கள் கூடும் பொது இடங்களில் அழைத்துச் செல்லும் போது கழுத்துப் பட்டையுடன் சங்கிலி இல்லாமல் கொண்டு செல்வதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். பொது இடங்களில் முகமூடி இல்லாமல் திரிய விடுதல் அல்லது அழைத்துச் செல்வதை தவிர்க்க வேண்டும்.

மேற்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு செல்லப்பிராணிகளுக்கு உரிமம் பெற ஒரு மாத கால அவகாசம் செல்லப்பிராணி உரிமையாளர்களுக்கு வழங்க வேண்டியுள்ளது. இக்காலக்கட்டத்திற்கு பிறகும் உரிமம் பெறாத செல்லப்பிராணிகள் உரிமையாளர்கள் மீது உரிய அபராதம் விதிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதனை செயல்படுத்த 24.11.2025 அன்று முதல் மாநகராட்சி பணியாளர்கள் மூலம் வீடுதோறும் கள ஆய்வு மேற்கொண்டு உரிமம் பெறாத செல்லப்பிராணிகள் உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்க திட்டமிடப்பட்டுள்ளது

இந்த நடவடிக்கைகள் மூலம் வெறிநாய்க்கடிநோய் பாதிப்பிலிருந்து பொது மக்கள் பாதுகாக்கப்பட்டு செல்லப்பிராணிகளின் வளர்ப்பு முறைபடுத்தப்படும்.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வளர்க்கப்படும் செல்லப்பிராணிகளான நாய்கள் மற்றும் பூனைகளுக்கு உரிமம் பெறுவதை கட்டாயமாக்கவும்,
2. 24.11.2025 அன்று முதல் உரிமம் பெறாத செல்லப்பிராணி உரிமையாளர்களுக்கு ரூ.5,000/- வீதம் அபராதம் விதிக்கவும்,

3. மேற்கண்ட பணியினை மாநகராட்சி பணியாளர்கள் மூலம் வீடுதோறும் கள ஆய்வு மேற்கொண்டு உரிமம் பெறாத செல்லப்பிராணிகள் உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்கவும்,
4. பூங்காக்கள், நடைபாதைகள் மற்றும் பொதுமக்கள் அடிக்கடி கூடும் பிற பகுதிகள் உள்ளிட்ட பொது இடங்களில் நாய்களுக்கு கழுத்துப்பட்டை இன்றி அழைத்து வரும் உரிமையாளர்கள் மீது ரூ.500/- வீதம் அபராதம் விதிக்கவும்,
5. மேற்கண்ட அபராதத்தை கோட்ட சுகாதார ஆய்வாளர் மற்றும் துப்புரவு ஆய்வாளர் அவர்கள் மூலம் வசூலிக்கவும்,
6. இது குறித்து செல்லப்பிராணிகளின் உரிமையாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த செய்திக்குறிப்பை வெளியிடுவதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.172/2025, நாள்.23.10.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"27.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.515/2025, நாள்.27.10.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**பொ.சு.து.கா.ம.பி.ந.க.எண்.அ2/0111/2025**

**தீர்மான எண்: 1114/2025** **பொருள் எண்.34**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத் துறை - கால்நடை மருத்துவப்பிரிவு - 2,00,000 எண்ணிக்கையில் நாய்களுக்கான மைக்ரோசிப் மற்றும் 80 ஸ்டிக் வகை RFID ரீடர்களை கொள்முதல் செய்தல் - செல்லப்பிராணி மற்றும் நாய்கள் குறித்த முழுமையான பதிவுகளை மேலாண்மை செய்வதற்கான மென்பொருள் பயன்பாட்டை வடிவமைத்து செயல்படுத்தவும், 5 ஆண்டுகள் பராமரிக்கவும் - மின்னனு ஒப்பம் கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளி அளித்த M/s. Exhilar Innovative Solutions Private Limited நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கியதற்கு பின்னேற்பு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் செல்ல பிராணிகள் வளர்ப்பினை முறைப்படுத்தும் வகையில் அவற்றின் உரிமையாளர்களுக்கு உரிமம் *(Pet License)* வழங்கப்பட்டு வருகிறது. கடந்த *2023* ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரை பெருநகர சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டில் இயங்கும் செல்லப் பிராணிகள் சிகிச்சை மையங்களுக்கு உரிமையாளர்கள் தங்கள் செல்லப்பிராணிகளை நேரில் அழைத்து வந்து வெறிநாய்க்கடி நோய்தடுப்பூசி *(Anti Rabies Vaccine)* இலவசமாகப் செலுத்தப்பட்டபிறகு உரிமம் பெற்று வந்தனர். இந்நடைமுறையின் வாயிலாக உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்த எண்ணிக்கையில் இருந்தது. ஆகையால் இச்செயல்முறையை எளிதாக்க இணையவழி முறையினை அறிமுகப்படுத்தப்பட்டு கடந்த *2023* ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் செல்லப்பிராணிகளுக்கு உரிமம் பெற இணையவழியில் விண்ணப்பிக்கும் வசதியினை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் உரிமையாளர்கள் இணையவழியில் செல்லப்பிராணி உரிமத்திற்கு *(Pet License)* விண்ணப்பிக்கும் போது செல்லப்பிராணியின் அடிப்படை விவரங்களையும், வெறிநாய்க்கடி நோய்தடுப்பூசி செலுத்தப்பட்டதற்கான சான்றிதழையும் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். இத்தகவல்கள் மண்டல கால்நடை மருத்துவர்களால் சரிபார்க்கப்பட்ட பிறகு, செல்லப்பிராணி உரிமையாளர்கள் ரூ.*50/-* கட்டணம் செலுத்திய பின்னர் உரிமம் ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் வழங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது வரை *9,579* செல்லப்பிராணி உரிமையாளர்களுக்கு உரிமங்கள் இணைய வழியில் வழங்கப்பட்டுள்ளது. எனினும் பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் வளர்க்கப்படும் செல்லப்பிராணிகளின் எண்ணிக்கை குறித்த முழுமையான விவரங்கள் அறியப்படவில்லை.

சமீப காலமாக, பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் கைவிடப்படும் *(Abandoning)* வளர்ப்பு நாய்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக பல புகார்கள் தமிழ்நாடு விலங்குகள் நல வாரியத்திடம் பெறப்பட்டு வருகிறது. இது தொடர்பாக ஆணையர் அவர்களின் தலைமையில் தமிழ்நாடு விலங்குகள் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் அனைத்து செல்லப்பிராணிகளுக்கும் மைக்ரோசிப் பொருத்துவதை கட்டாயமாக்கவும், மைக்ரோசிப் பொருத்தப்பட்ட செல்லப்பிராணிகளுக்கு மட்டும் உரிமம் வழங்கவும் அறிவுறுத்தபட்டது.

அதனை தொடர்ந்து செல்லப்பிராணிகளுக்கு மைக்ரோசிப் பொருத்துதலை கட்டாயமாக்கவும், இதற்கென பிரத்யேகமாக ஒரு மென்பொருள் உருவாக்கப்பட்டு அதில் செல்லப்பிராணிகள் மற்றும் அதன் உரிமையாளர்களின் விவரங்கள் உள்ளீடு செய்ய மன்றத் தீர்மானம் எண்.*103/2025*, நாள்.*30.01.2025*-ன்படி மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே, மைக்ரோசிப் பொருத்தப்பட்ட செல்லப்பிராணிகள் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டால், அவற்றை இதற்கென வடிவமைக்கப்பட்டுள்ள ரீடர் மூலம் பரிசோதிக்கப்பட்டு உரிமையாளரின் விவரங்களைக் கண்டறிய இயலும்.

இத்திட்டத்திற்கான தொழில்நுட்பத் தேர்வு, ஒப்ப ஆவணங்கள் தயாரிப்பு, ஏல மதிப்பீடு மற்றும் திட்டத்தை தகுதிவாய்ந்த ஏலதாரருக்கு வழங்குவதில் நிபுணத்துவத்தை வழங்க ஒரு திறமையான பரிவர்த்தனை ஆலோசனை நிறுவனத்தை *(Transactional Advisory Agency)* ஈடுபடுத்த கூடுதல் ஆணையர்(சுகாதாரம்) அவர்களின், *28-02-2025* நாளிட்ட ஆணை பெறப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட முகமை கீழ் குறிப்பிட்டவைகளுக்கு பொறுப்பானவர்கள் ஆவார்.

1. மைக்ரோசிப்பிங், தரவு மேலாண்மை மற்றும் மொபைல் பயன்பாடுகளுக்கு பொருத்தமான தொழில்நுட்ப தீர்வுகளை அடையாளம் காணுதல்.
2. ஒப்ப ஆவணங்களைத் தயாரித்தல் - சட்ட மற்றும் தொழில்நுட்பத் தேவைகளுக்கு உட்பட்டு உருவாக்குதல்.
3. ஒப்ப செயல்முறை மேலாண்மை – ஒப்பம் வழங்குதல், ஒப்பந்ததாரர்களின் ஐயப்பாடுகளை நிவர்த்தி செய்தல் மற்றும் ஒப்பம் சமர்ப்பிப்பு செயல்முறையை நிர்வகித்தல்.
4. தொழில்நுட்ப மற்றும் நிதி மதிப்பீடு - வரையறுக்கப்பட்ட தகுதி அளவுகோல்களின் அடிப்படையில் ஒப்பந்ததாரர்களை மதிப்பீடு செய்தல்.

5. ஒப்பம் வழங்கல் மற்றும் ஒப்பந்தம் இறுதி செய்தல் - மிகவும் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களை தேர்ந்தெடுப்பதை உறுதி செய்தல் மற்றும் ஒப்பந்தத்தை செயல்படுத்துவதை எளிதாக்குதல்.

இதைத் தொடர்ந்து, மேற்கண்ட பணிக்கான பரிவர்த்தனை ஆலோசனை நிறுவனமாக *(Transactional Advisory Agency)* தமிழ்நாடு தொழில்துறை மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை அமைப்பு லிமிடெட் *(ITCOT* லிமிடெட்*)* நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட திட்டத்தை செயல்படுத்த *2,00,000* எண்ணிக்கையில் மைக்ரோசிப், *80* எண்ணிக்கையில் ஸ்டிக் வகை *RFID* ரீடர்களை கொள்முதல் செய்யப்பட வேண்டியுள்ளது. *M/s IGEN* என்ற நிறுவனத்திடம் பெறப்பட்ட விலைப்பட்டியலின்படி இதற்கென ஆகும் தோராய செலவீன தொகையாக ரூ.*4,53,12,000/-* (ஜிஎஸ்டி உட்பட*)* என்று கணக்கிடப்பட்டுள்ளது.

*2,00,000* எண்ணிக்கையிலான செல்லப்பிராணிகள் மற்றும் நாய்களுக்கான பிரத்யேக மென்பொருள் உருவாக்குதல், விரிவான தளத்தை வடிவமைத்தல், செயல்படுத்துதல், இயக்குதல் மற்றும் பராமரித்தல், தரவுகளை மேலாண்மை செய்தல், நாய் பிடிப்பவர்களுக்கான மொபைல் செயலியை உருவாக்குதல், செல்லப்பிராணிகளுக்கான உரிமம் வழங்கும் போர்டல் உருவாக்குதல், பராமரிப்பு மற்றும் மேலாண்மை ஆகியவற்றிற்கு பணி மதிப்பாக ரூ.*48,17,999/-* *(*ஜிஎஸ்டி சேர்த்து*)* கணக்கிடப்பட்டுள்ளது மற்றும் ஆண்டிற்கு பணி மதிப்பில் *8%* என வருடாந்திர பராமரிப்பு கட்டணமாக கணக்கிடப்பட்டுள்ளது. ஆக மொத்தம் இதற்காக தோராய செலவாக ரூ.*67,45,200/-* *(*வேலை மதிப்புக்கான ஜிஎஸ்டி மற்றும் *5* ஆண்டுகளுக்கு வருடாந்திர பராமரிப்பு கட்டணங்கள் உட்பட*)* என கணக்கிடப்பட்டுள்ளது.

*2,00,000* எண்ணிக்கையில் மைக்ரோசிப், மற்றும் *80* எண்ணிக்கையில் ஸ்டிக் வகை *RFID* ரீடர்களை மின்னணு ஒப்பம் கோரி கொள்முதல் செய்யவும், *2,00,000* எண்ணிக்கையிலான செல்லப்பிராணிகள் மற்றும் நாய்களுக்கான பிரத்யேக மென்பொருள் உருவாக்குதல், விரிவான தளத்தை வடிவமைத்தல், செயல்படுத்துதல், இயக்குதல் மற்றும் பராமரித்தல், தரவுகளை மேலாண்மை செய்தல், நாய் பிடிப்பவர்களுக்கான மொபைல் செயலியை உருவாக்குதல், செல்லப்பிராணிகளுக்கான உரிமம் வழங்கும் போர்டல் உருவாக்குதல், பராமரிப்பு மற்றும் மேலாண்மை ஆகிய சேவைகளை வழங்கும் நிறுவனத்தை மின்னணு ஒப்பம் கோரி தேர்வு செய்யவும், மேற்கூறிய பணிகளைச் செயல்படுத்துவதற்கு தேவைப்படும் தோராய மதிப்பீடு தொகையான ரூ.*5,20,57,2,00/-*க்கு (ஜிஎஸ்டி மற்றும் பிற வரிகள் உட்பட*)* நிர்வாக அனுமதியை வழங்கவும் இதற்கான செலவினத்தை பிரிவு குறியீடு எண். *40-43-02* கணக்கு குறியீடு எண்.*230-20-07-00 (Purchase- other Medical and Hospital Expenses)* என்ற கணக்கு தலைப்பில் மேற்கொள்ள ஆணையரின் *22.04.2025* நாளிட்ட நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது,

ஆணையரின் ஒப்புதலை தொடர்ந்து 2,00,000 எண்ணிக்கையில் மைக்ரோசிப் மற்றும் 80 எண்ணிக்கையில் ஸ்டிக் வகை RFID ரீடர்களை மின்னணு ஒப்பம் கோரி கொள்முதல் செய்யவும், 2,00,000 எண்ணிக்கையிலான செல்லப்பிராணிகள் மற்றும் நாய்களுக்கான பிரத்யேக மென்பொருள் உருவாக்குதல், விரிவான தளத்தை வடிவமைத்தல், செயல்படுத்துதல், இயக்குதல் மற்றும் பராமரித்தல், தரவுகளை மேலாண்மை செய்தல், நாய் பிடிப்பவர்களுக்கான மொபைல் செயலியை உருவாக்குதல், செல்லப்பிராணிகளுக்கான உரிமம் வழங்கும் போர்டல் உருவாக்குதல், பராமரிப்பு மற்றும் மேலாண்மை ஆகிய சேவைகளை வழங்கும் நிறுவனத்தை மின்னணு ஒப்பம் கோரி தேர்வு செய்யவும், மேற்கூறிய பணிகளைச் செயல்படுத்துவதற்கு தேவைப்படும் தோராய மதிப்பீடு தொகையான ரூ.5,20,57,200/-க்கு (ஜிஎஸ்டி மற்றும் பிற வரிகள் உட்பட) நிர்வாக அனுமதியை வழங்கவும் இதற்கான செலவினத்தை பிரிவு குறியீடு எண். 40-43-02 கணக்கு குறியீடு எண். 230-20-07-00 (Purchase- other Medical and Hospital Expenses) என்ற கணக்கு தலைப்பில் மேற்கொள்ளவும் நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத் தீர்மான எண் 533/2025-ன்படி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மன்றத் தீர்மான எண் 533/2025-ன்படி, செல்லப்பிராணிகளுக்கு மைக்ரோசிப் பொருத்துதலை கட்டாயமாக்கவும், இதற்கென பிரத்யேகமாக ஒரு மென்பொருள் உருவாக்கப்பட்டு அதில் செல்லப்பிராணிகள் மற்றும் அதன் உரிமையாளர்களின் விவரங்கள் உள்ளீடு செய்யவும் மன்றத்தில் ஆணை பெறப்பட்டதை தொடர்ந்து 2,00,000 எண்ணிக்கையில் நாய்களுக்கான மைக்ரோசிப் மற்றும் 80 ஸ்டிக் வகை RFID ரீடர்களை கொள்முதல் செய்யவும், செல்லப்பிராணி மற்றும் நாய்கள் குறித்த முழுமையான பதிவுகளை மேலாண்மை செய்வதற்கும், மென்பொருள் பயன்பாட்டை வடிவமைத்து செயல்படுத்தவும், 5 ஆண்டுகள் பராமரிக்கவும் 05.05.2025 அன்று மின்னணு ஒப்பம் கோரி சில நிர்வாக காரணங்களால் ஒப்பம் நீட்டிப்பு செய்யப்பட்டு 10.06.2025 அன்று ஒப்பம் திறக்கப்பட்டது. அதில் கீழ்கண்ட ஒரு ஒப்பந்ததாரர் மட்டும் கலந்து கொண்டு ஒப்பம் அளித்துள்ளார் என ஒப்பம் ஏற்கும் குழுவினால் அறியப்பட்டு, கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) அவர்களின், 15.7.2025 நாளிட்ட ஆணையின்படி இவ் ஒப்பம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்தாரரின் பெயர் |
|---|---|
| 1. | EXHILAR INNOVATIVE SOLUTIONS PRIVATE LIMITED. |

மேற்காணும் ஒப்பந்ததாரரின் தொழிற்நுட்ப ஒப்பத்தினை *ITCOT* என்ற நிறுவனத்தால் ஆய்வு செய்யப்பட்டதில் *EXHILAR INNOVATIVE SOLUTIONS PRIVATE LIMITED* என்ற ஒப்பந்ததாரரல் ஒப்பத்தில் கோரப்பட்ட அனைத்து ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) அவர்களின், *15.7.2025* நாளிட்ட ஆணையின்படி, இவ் ஒப்பத்தினை ஒப்பந்த கூர்ந்தாய்வு குழுவினால் சரிபார்க்கப்பட்டு ஏற்கப்பட்டுள்ளது. இந்த தொழில் நுட்ப ஒப்பத்தினை இறுதி செய்து இக்குழுவினால் ஏற்கப்பட்டு இரண்டாவது கட்டமான நிதி ஒப்பத்தினை *(Financial Bid)* திறந்திட இக்குழுவினால் பரிசீலிக்கப்பட்டு நிதி ஒப்பம் *31/07/2025* அன்று திறக்கப்பட்டதில் கீழ்கண்டவாறு *EXHILAR INNOVATIVE SOLUTIONS PRIVATE LIMITED* என்ற நிறுவனம் ஒப்பத்தொகை அளித்துள்ளது,

| SHEET NAME | SL. NO | BIDDER NAME | AMOUNT | BID RANK |
|---|---|---|---|---|
| BOQ1 | 1 | EXHILAR INNOVATIVE SOLUTIONS PRIVATE LIMITED (BID ID 1342014) | 5,19,99,999.00 | L1 |

*Exhilar Innovative Solutions Private Limited* என்ற நிறுவனம் இவ்வலுவலகம் கோரியுள்ளபடி கீழ்கண்டவாறு விலைக்குறைப்பு செய்துள்ளது,

| SHEET NAME | SL.NO | BIDDER NAME | AMOUNT | BID RANK |
|---|---|---|---|---|
| BOQ1 | 1 | EXHILAR INNOVATIVE SOLUTIONS PRIVATE LIMITED (BID ID 1342014) | 5,19,74,999.00 | L1 |

மேற்காணும் *EXHILAR INNOVATIVE SOLUTIONS PRIVATE LIMITED* என்ற நிறுவனத்தால் வழங்கப்பட்ட விலைப்புள்ளி மற்றும் மேற்காணும் நிதி ஒப்பம் ஓப்பந்த கூர்ந்தாய்வு கூட்டத்தில் உள்ள கூடுதல் ஆணையர் (சுகாதாரம்), மாநகர நல அலுவலர், நிதி ஆலோசகர், தலைமை பொறியாளர் (பொ), மாவட்ட வருவாய் அலுவலர் (அம்மா உணவகம்), மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம் மற்றும் உடமைத்துறை) ஆகியோரால் ஒப்புதல் அளிக்கப்பட்டது,

எனவே,

1. 2,00,000 எண்ணிக்கையில் மைக்ரோசிப், மற்றும் 80 எண்ணிக்கையில் ஸ்டிக் வகை RFID ரீடர்களை மின்னணு கொள்முதல் செய்யவும், 2,00,000 எண்ணிக்கையிலான செல்லப்பிராணிகள் மற்றும் நாய்களுக்கான பிரத்யேக மென்பொருள் உருவாக்குதல், விரிவான தளத்தை வடிவமைத்தல், செயல்படுத்துதல், இயக்குதல் மற்றும் பராமரித்தல், தரவுகளை மேலாண்மை செய்தல், நாய் பிடிப்பவர்களுக்கான மொபைல் செயலியை உருவாக்குதல், செல்லப்பிராணிகளுக்கான உரிமம் வழங்கும் போர்டல் உருவாக்குதல், பராமரிப்பு மற்றும் மேலாண்மை ஆகிய அனைத்து சேவைகள் மற்றும் பொருட்களை வழங்கிட EXHILAR INNOVATIVE SOLUTIONS PRIVATE LIMITED என்ற நிறுவனத்திற்கு ரூ, 5,19,74,999.00 (ஐந்து கோடியே பத்தொன்பது இலட்சத்து எழுபத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது மட்டும்) என்ற தொகைக்கு பல கட்ட நிபந்தனையுடன் (அனைத்து சேவைகளையும் குறிப்பிட்டு) பணி ஆணை வழங்கியமைக்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,
2. பணியாணை வழங்கியவுடன் EXHILAR INNOVATIVE SOLUTIONS PRIVATE LIMITED என்ற நிறுவனத்துடன் ரூ.5,19,74,999.00 (G.S.T உட்பட) (ரூபாய் ஐந்து கோடியே பத்தொன்பது இலட்சத்து எழுபத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது மட்டும்) என்ற தொகைக்கு பல கட்ட நிபந்தனைகளை மற்றும் அனைத்து சேவைகளையும் குறிப்பிட்டு ஆணையர் பெருநகர மாநகராட்சி அளவில் உடன்படிக்கை ஏற்படுத்திக்கொள்ளவும்,
3. பணியாணை வழங்கியவுடன் ரூ.10,39,500க்கான (ரூபாய் பத்து இலட்சத்து முப்பத்து ஒன்பதாயிரத்து ஐந்நூறு மட்டும்) பிணை வைப்புத்தொகையினை ஆணையர் பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் பெயரில் EXHILAR INNOVATIVE SOLUTIONS PRIVATE LIMITED என்ற நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளவும்,
4. மேற்கூறிய பணிகளைச் செயல்படுத்துவதற்கு தேவைப்படும் செலவினத் தொகையான ரூ.5,19,74,999.00 ஐ (ரூபாய் ஐந்து கோடியே பத்தொன்பது இலட்சத்து எழுபத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது மட்டும்) பிரிவு குறியீடு எண்.40-43-02 கணக்கு குறியீடு எண்.230-20-07-00 (Purchase - other Medical and Hospital Expenses) என்ற கணக்கு தலைப்பில் நிதியை பெறவும்,

எனவே, மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.166/2025, நாள்.23.10.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"27.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.512/2025, நாள்.27.10.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**

**********

<u>தி.க.மே.து.ந.க.எண். A7/5194/2025-1</u>

**தீர்மான எண்: 1115/2025** **பொருள் எண்.35**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மை துறை - தூய்மை கழிவு சேகரிப்பு இயக்கம் 2.0 (Thooimai Mission 2.0) - கழிவு பொருட்களை தூய்மை இயக்க இணையத்தில் பதிவு செய்துள்ள தொகுப்பாளர்களுக்கு (Aggregators) நேரடியாக விற்பனை செய்வதற்கு மன்றத்தின் அனுமதி.</u>**

அரசாணை (நிலை) எண்.*13*, சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை, நாள்.*02.04.2025*-ன்படி, பெருகிவரும் மக்கள் தொகை, விரைவான நகரமயமாக்கல் மற்றும் மாறிவரும் வாழ்க்கை முறை காரணமாக திடக்கழிவு மேலாண்மை ஒரு முக்கியமான சவாலாக இருப்பதால் திடக்கழிவுகளை சேகரமாகும் இடத்திலேயே பிரித்தெடுத்தல், திடக்கழிவுகளை செயலாக்குவதற்கான திறனை மேம்படுத்துதல், வட்ட பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடுகள் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில் மாநிலம் முழுவதும் நிலையான திடக்கழிவு மேலாண்மை

நடைமுறைகளை செயல்படுத்துவதற்கு ஒரு புத்துருவாக்க அணுகுமுறையினை செயல்படுத்துவது அவசியம் என்பதால் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் தமிழ்நாடு அரசால் தூய்மை கழிவு சேகரிப்பு இயக்கம் (Thooimai Mission) ஆரம்பிக்கப்பட்டது.

தூய்மை கழிவு சேகரிப்பு இயக்கம் 05.06.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்டது. ரிப்பன் மாளிகை மற்றும் 15 மண்டலங்களிலும் தணிக்கை நடைப்பயணம் மேற்கொள்ளப்பட்டு நெகிழிக் கழிவுகள், காகிதக் கழிவுகள், கண்ணாடி பொருட்கள், இரும்பு, அலுமினியம், ஸ்டீல், மின்னணு கழிவுகள், மரக் கழிவுகள் போன்ற பல்வகையிலான கழிவு பொருட்கள் சேகரிக்கப்பட்டு, தனித்தனியாக பிரித்தெடுக்கப்பட்டு அந்தந்த துறைகள் / மண்டலங்களுக்கு இதற்கென்று ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களில் சேமித்து வைக்கப்பட்டது. இப்பணிகளை ஒருங்கிணைக்கவும் மற்றும் கண்காணிக்கவும் அந்தந்த மண்டலங்கள் / தலைமையிடத்தில் இதற்கென ஒருங்கிணைப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டு தூய்மை இயக்கத்திற்கான பணிகள் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இவ்வியக்கத்தின் மூலம் சேகரமாகும் கழிவுகளின் விலையினை நிர்ணயிக்க ஒரு தொழில்நுட்ப குழு அமைக்கப்பட்டு, தூய்மை கழிவு சேகரிப்பு இயக்கம்-1ல் சுமார் 125 டன் அளவிலான பல்வகையிலான கழிவுகள் தொழில்நுட்ப குழுவின் மூலம் ரூ-39,87,201/- என விலை நிர்ணயம் செய்யப்பட்டு, e-Auction மூலம் 4 தொகுப்புகளாக ரூ-35,11,201/- மதிப்பில் MSTC நிறுவனம் மூலம் விற்பனை செய்யப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, தூய்மை கழிவு சேகரிப்பு இயக்கம் 2.0 (Thooimai Mission 2.0) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் 19.09.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. தூய்மை கழிவு சேகரிப்பு இயக்கம் 2.0 (Thooimai Mission 2.0) தொடக்கமாக தலைமையிடம் மற்றும் மண்டலங்களில் பல்வகையிலான கழிவுகள் தோராயமாக 35 டன் அளவில் தற்போது வரையில் சேகரிக்கப்பட்டுள்ளது.

தூய்மை கழிவு சேகரிப்பு இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து தூய்மை தமிழ்நாடு நிறுவனம் (Clean Tamil Nadu Company Limited) மூலம் நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் (SOP) வழங்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வியக்கத்தின் மூலம் சேகரிக்கப்படும் கழிவுகளை விற்பனை செய்வதற்கும் பல்வகையிலான பொருட்களுக்கு கீழ்கண்டுள்ளவாறு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை-1**

| Plastic (Soft) | | | |
|---|---|---|---|
| S.No | Name of the item | Proposed Rate (per kg) | |
| | | Rural | Urban |
| 1 | Polythene Bags | 10 | 20 |
| 2 | Milk Pouch | 8 | 8 |
| 3 | Oil Pouch, Food Packet, Tetra Pack- (Biscuits, Chips) | 2 | 2 |
| 4 | Cement Bags, Rice Bags etc., | 2 | 2 |
| Plastic (Plastic Hard) | | | |
| S.No | Name of the item | Proposed Rate (per kg) | |
| | | Rural | Urban |
| 1 | Plastic (Harpic, Water Bottle, PET, Broken Plastic Chairs, Toys, Watch & Clock etc...) | 10 | 10 |
| Glass (Unbroken) | | | |
| S.No | Name of the item | Proposed Rate (per kg) | |
| | | Rural | Urban |
| 1 | Glass bottles | 4 | 4 |
| Paper (Mixed) | | | |
| S.No | Name of the item | Proposed Rate (per kg) | |
| | | Rural | Urban |
| 1 | Newspaper(Tamil) | 5 | 5 |
| 2 | Newspaper(English) | 8 | 8 |
| 3 | UsedA4sheets,oldbooks | 15 | 15 |
| | | | |

| Wood Furniture | | | |
|---|---|---|---|
| S.No | Name of the item | Proposed Rate (per kg) | |
| | | Rural | Urban |
| 1 | Broken wooden furniture (non-reusable) | 5 | 5 |
| Cardboard | | | |
| S.No | Name of the item | Proposed Rate (per kg) | |
| | | Rural | Urban |
| 1 | Card board, carton box | 8 | 10 |
| Metals | | | |
| S.No | Name of the item | Proposed Rate (per kg) | |
| | | Rural | Urban |
| 1 | Stainless steel (old vessels) | 30 | 30 |
| 2 | Iron scrap (Cycle, Push Cart etc.,) | 20 | 20 |
| 3 | Aluminum scrap | 45 | 45 |
| 4 | Copper (AC tubes,Wires etc.,) | 300 | 300 |
| 5 | Brass (Taps, utensils etc.,) | 150 | 150 |
| Other | | | |
| S.No | Name of the item | Proposed Rate (per kg) | |
| | | Rural | Urban |
| 1 | Waste gunny bags (Jute bags) | 12 | 15 |
| E-WASTE | | | |
| SI.NO | E-WASTE | Rate Per Piece (Rural) | Rate Per Piece (Urban) |
| 1 | CRT Television (Box Tv) | 75 | 100 |
| 2 | Refrigerator | 500 | 800 |
| 3 | Washing Machine | 300 | 600 |

| | | | |
|---|---|---|---|
| 4 | Microwave Oven | 150 | 400 |
| 5 | Mixer Grinder | 50 | 150 |
| 6 | Ceiling Fan | 50 | 150 |
| 7 | Table Fan | 50 | 150 |
| 8 | Laptop | 250 | 500 |
| 9 | CPU | 200 | 400 |
| 10 | Mouse | 10 | 15 |
| 11 | Keyboard | 18 | 24 |
| 12 | Lcd Monitor, Wall Mounted Tv | 20 | 25 |
| 13 | Printer | 55 | 70 |
| 14 | Photo stat Machine | 250 | 350 |
| 15 | Iron Box | 20 | 60 |
| 16 | Motors | 50 | 100 |
| 17 | Cell Phones | 40 | 80 |
| 18 | Telephones | 10 | 15 |
| 19 | Radio | 20 | 50 |
| 20 | Electric Cable (Copper Wired Cable) | 200/Kg | 300/Kg |
| 21 | Modem & Charger | 20 | 40 |
| 22 | Air Conditioners | 500 | 1500 |
| 23 | Inverter | 60 | 80 |
| 24 | Paper Shredder | 130 | 150 |
| 25 | Hard Drives | 20 | 60 |

மேற்கண்டவாறு சேகரமாகும் கழிவுகளை *MSTC* நிறுவனம் மூலம் *e-Auction* முறையில் விற்பனை செய்வதில் காலதாமதம் ஏற்படுவதாலும், இக்கழிவுகளை சேகரித்து வைப்பதற்கான இடப்பற்றாக்குறை மற்றும் இக்கழிவுகளை நீண்ட நாட்கள் தேக்கி வைப்பதன் மூலம் ஏற்படும் சுகாதார பிரச்சனைகளை கருத்தில் கொண்டு, ஆணையர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளவாறு தூய்மை கழிவு

சேகரிப்பு இயக்கம் *2.0 (Thooimai Mission 2.0)* மூலம் சேகரமாகும் பல்வகையிலான கழிவுகளை தூய்மை இயக்க இணையத்தில் பதிவு செய்துள்ள தொகுப்பாளர்களுக்கு *(Aggregators)* நேரடியாக விற்பனை செய்யலாம் என கருதப்படுகிறது.

எனவே, தூய்மை கழிவு சேகரிப்பு இயக்கம் *2.0 (Thooimai Mission 2.0)* மூலம் சேகரமாகும் பல்வகையிலான கழிவுகளை விற்பனை செய்வதற்கு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே,

1. தூய்மை கழிவு சேகரிப்பு இயக்கம் 2.0 (Thooimai Mission 2.0) மூலம் சேகரமாகும் பல்வகையிலான கழிவுகளை தூய்மை தமிழ்நாடு நிறுவனத்தால் (CTCL) நிர்ணயம் செய்யப்பட்ட அட்டவணை-1ல் உள்ள விலையின்படி விற்பனை செய்வதற்கும்,
2. தூய்மை கழிவு சேகரிப்பு இயக்கம் 2.0 (Thooimai Mission 2.0) மூலம் சேகரமாகும் பல்வகையிலான கழிவுகளை தூய்மை இயக்க இணையத்தில் பதிவு செய்துள்ள தொகுப்பாளர்களுக்கு (Aggregators) நேரடியாக விற்பனை செய்வதற்கும்,
3. தலைமையிடம், வடக்கு வட்டாரம், மத்திய வட்டாரம் மற்றும் தெற்கு வட்டாரத்தில் சேகரமாகும் பல்வகையிலான கழிவுகளை அவ்வப்போது விற்பனை செய்வதற்கு அந்தந்த வட்டாரம்/தலைமையிடம் மூலம் நடவடிக்கை மேற்கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.173/2025, நாள்.23.10.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"27.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.522/2025, நாள்.27.10.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

******

**தி.க.மே.ந.க.எண்.அ7/5705/2025**

**தீர்மான எண்: 1116/2025** **பொருள் எண்.36**

**பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மை துறை - திடக்கழிவுகளை ஒப்பந்ததாரர் மூலம் சேகரித்தல் (தெருக்கள் சுத்தம் செய்யும் நடவடிக்கை உட்பட) தோட்டக்கலை கழிவுகளை சேகரித்தல் மற்றும் அபாயகரமான கழிவுகளை கொண்டு செல்லுதல் பணிகளுக்கு மண்டலம் 1, 2, 3 மற்றும் 7 (தொகுப்பு 1), மண்டலம் 11, 12, 14 மற்றும் 15 (தொகுப்பு 2), மண்டலம் 9, 10 மற்றும் 13 (தொகுப்பு 5) மற்றும் மண்டலங்கள் 5 மற்றும் 6 (தொகுப்பு 6) - பொருந்தக்கூடிய ஊதிய தர நிர்ணயம் மற்றும் பராமரிப்பு ஊழியர்களிடையே ஊதிய திருத்தம் குறித்து மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை துறையின் ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ளப்படும் தூய்மை பணிகளுக்கான மண்டலங்கள் எண்.1, 2, 3 மற்றும் 7 (தொகுப்பு 1) பணிகளை மேற்கொள்ளும் திருவாளர்கள் *Chennai Enviro Solution Private Limited* மற்றும் மண்டலங்கள் எண்.11, 12, 14 மற்றும் 15 (தொகுப்பு 2) மேற்கொள்ளும் திருவாளர்கள் *Sumeet Urban Services (Chennai) II Private Limited* மற்றும் மண்டலங்கள் எண். 9, 10 மற்றும் 13 (தொகுப்பு-5) மேற்கொள்ளும் திருவாளர்கள் *Sumeet Urban Services (Chennai) V Private Limited*, மூலம் ஒப்பந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்தொகுப்பில் உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி ஒப்பந்ததாரரிடம் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியத்தைத் ஒவ்வொரு வருடமும் மாவட்ட ஆட்சியர் விகித ஊதியத்தின்படி வழங்கப்பட்டு வருகிறது. மேலும் உடன்படிக்கை விதிகளின்படி இதுநாள் வரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஒவ்வொரு வருடமும் வெளியிடப்படும் ஊதியத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது.

திடக்கழிவுகளை சேகரித்தல் மற்றும் கொண்டு சேர்த்தல் பணிக்கான (தொகுப்பு-6, மண்டலங்கள் 5 & 6) பணி ஆணை கடிதம் திருவாளர்கள் *Delhi MSW Solution Private Limited* நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. இந்த ஒப்பந்தம் *SPV Chennai Enviro Solution Package 6 Private Limited* நிறுவனத்துடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும் சமீபத்திய வேலைநிறுத்ததில் ஈடுபட்ட *NULM* மற்றும் சுய உதவி குழு தூய்மை பணியாளர்கள் இந்நிறுவனத்தின் மூலம் தூய்மை பணிகளுக்காக ஈர்க்கப்பட்டது. *Chennai Enviro Solution Package 6 Private Limited* ஒப்பந்ததாரர் முந்தைய ஊதியம் ரூ.753/- குறைந்தபட்சம் பராமரிக்கப்பட வேண்டும், தற்போதைய திருத்திய ஊதியம் ஒரு நாளைக்கு ரூ.761/-

திருத்தப்பட்ட அறிவிப்பின்படி வழங்க வேண்டும் என மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த உத்தரவுகளுக்கு இணங்க, திருவாளர்கள் Delhi MSW Solution Private Limited ஒப்பந்ததாரர் பணியில் சேர்ந்த அனைத்து சுய உதவிக் குழு தூய்மை தொழிலாளர்களுக்கும் ஒரு நாளைக்கு Rs.761/- செலுத்த உத்தரவிடப்பட்டது மற்றும் ஆகஸ்ட் மாத சம்பளம் ஒப்பந்ததாரர் மூலம் தூய்மை பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

G.O. (2D) எண்.62, நாள்.11.10.2017-ன்படி தமிழ்நாடு அரசின் தொழிலாளர் நலம் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையால் வெளியிடப்பட்ட தொழிலாளர் ஆணையர் ஊதிய விகிதப்படி எந்தவொரு உள்ளாட்சி அதிகாரத்தின் கீழ் பணிபுரியும் ஊழியர்களுக்கான குறைந்தபட்ச ஊதியம் குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948 இன் விதிகளின் கீழ் திருத்தப்பட்டது. துப்புரவுத் பணியாளர்களுக்கு வழங்கப்படும் குறைந்தபட்ச ஊதிய விகிதம் Rs.761/- (அடிப்படை ஊதியம்.: ரூ.500 + அகவிலைப்படி ரூ. 261) மற்றும் ஓட்டுநருக்கு வழங்கப்பட வேண்டிய குறைந்தபட்ச ஊதிய விகிதங்கள் ரூ.799/- (அடிப்படை ரூ.538/- + அகவிலைப்படி ரூ.261/-) ஆகும்.

தற்போதுள்ள ஊதிய முறைக்கான மாவட்ட ஆட்சியர் விகித ஊதியங்களை தொகுப்பு 1, 2 மற்றும் 5 இன் ஒப்பந்ததாரர்களால் பின்பற்றப்படுகிறது

| தொழிலாளர்கள் வகை | தொழிலாளர்கள் எண்ணிக்கை | | | மொத்தம் | மாவட்ட ஆட்சியர் ஊதிய விகிதம் (2025 – 2026) |
|---|---|---|---|---|---|
| | தொகுப்பு 5 (மண்டலம் 9, 10 மற்றும் 13) | தொகுப்பு 2 (மண்டலம் 11, 12, 14 மற்றும் 15) | தொகுப்பு 1 (மண்டலம் 1, 2, 3 மற்றும் 7) | | |
| HELPER | 453 | 273 | 202 | 928 | 565.00 |
| SWEEPER | 2683 | 2451 | 1642 | 6776 | 565.00 |
| DRIVER | 234 | 148 | 98 | 480 | 637.00 |
| E-RICKSHAW DRIVERS | 2330 | 1222 | 685 | 4237 | 640.00 |
| மொத்தம் | 5700 | 4094 | 2627 | 12421 | |

மாவட்ட ஆட்சியர் அலுவலக அறிவிப்புகளின் அடிப்படையில் திருத்தப்பட்ட ஊதியங்களைத் தேர்ந்தெடுத்ததன் காரணமாக வெவ்வேறு தொகுப்புகளில் ஊதிய ஏற்றத்தாழ்வுகள் குறித்து திருவாளர்கள் *Sumeet Urban Service Private Limited* கவலை தெரிவித்ததுடன், மண்டலம் 5 மற்றும் 6 (தொகுப்பு 6) மண்டலங்களில் ஊதிய உயர்வுகள் காரணமாக ஏற்படும் விளைவுகள் குறித்த சில முக்கியமான குறிப்புகளை திருவாளர்கள் *Sumeet Urban Service Private Limited* ஊதிய திருத்தம் குறித்து 11.09.2025 நாளிட்ட மின்னஞ்சல் மூலம் எடுத்துரைத்துள்ளது. திருவாளர்கள் *Chennai Enviro Solution Private Limited* தொகுப்பு 1 இன் ஒப்பந்ததாரர், மாவட்ட ஆட்சியர் நிர்ணயித்த விகிதத்தின்படி தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்குவதாகவும், இதனால் தொழிலாளர்கள் மத்தியில் அமைதியின்மை ஏற்படுவதாகவும் கூறியுள்ளார்கள்.

மேற்கண்டவையின்படி, 1, 2 மற்றும் 5 தொகுப்புகளுக்கான மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களின்படி திருத்தப்பட்ட ஊதியங்களைப் பின்பற்றும் பட்சத்தில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு கூடுதல் செலவினங்களான ஒரு வருடத்திற்கு ரூ.150.57 கோடி சேர்த்து தற்போதுள்ள செலவினங்களுடன் ஒரு வருடத்திற்கு ரூ. 1030.97 கோடி என கணக்கிடப்பட்டுள்ளது.

<u>ஆரம்ப வருடாந்திர விலைப்புள்ளி *(Initial Annual Quote)*</u>

| | |
|---|---|
| மண்டலம் 1, 2, 3 மற்றும் 7 (தொகுப்பு 1) | ரூ.160,94 கோடி |
| மண்டலம் 11, 12, 14 மற்றும் 15 (தொகுப்பு 2) | ரூ.229.43 கோடி |
| மண்டலம் 9, 10 மற்றும் 13 (தொகுப்பு 5) | ரூ.364.60 கோடி |
| மண்டலம் 5 மற்றும் 6 (தொகுப்பு 6) | ரூ.276.00 கோடி |
| மொத்தம் | ரூ.1030.97 கோடி |

<u>ஒரு ஆண்டிற்கு கூடுதல் செலவினம்</u>

| விவரங்கள் | தொகுப்பு 5 (மண்டலம் 9,10 மற்றும் 13) | தொகுப்பு 2 (மண்டலம் 11, 12, 14 மற்றும் 15) | தொகுப்பு 1 (மண்டலம் 1, 2, 3 மற்றும் 7) |
|---|---|---|---|
| தற்போதுள்ள மாவட்ட ஆட்சியர் அவர்களின் விகிதத்தின்படி மாதாந்திர செலவினம் (ரூ.565/- மற்றும் ரூ.640/-) | ரூ.30,84,02,634/- | ரூ.19,41,03,510/- | ரூ.13,60,39,327/- |
| மாண்புமிகு உயர்நீதி மன்ற ஆணை மற்றும் அரசாணையின்படி விலை விகிதம் திருத்தம் செய்யப்பட்ட மாதாந்திர செலவினம் (ரூ.761/- மற்றும் ரூ.799/-) | ரூ.36,76,78,905/- | ரூ.23,28,01,122/- | ரூ.16,35,74,188/- |
| மாதாந்திர கூடுதல் செலவினம் (ADDITIONAL COST OF MONTHLY IMPACT) | ரூ.5,92,76,271/- | ரூ.3,86,97,612/- | ரூ.2,75,34,861/- |
| | **ரூ.12,55,08,744/-** | | |
| வருடாந்திர கூடுதல் செலவினம் (ADDITIONAL COST OF ANNUAL IMPACT) | ரூ.71,13,15,252/- | ரூ.46,43,71,344/- | ரூ.33,04,18,332/- |
| | **ரூ.150,61,04,928/-** | | |

ஒவ்வொரு தொகுப்பின் ஒரே வித தூய்மை பணிகள் மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு வெவ்வேறு ஊதிய விகிதங்களில் பின்பற்றுவதால் ஏற்படும் பிரச்சினைகளை உடனடியாக தீர்வு செய்யப்பட வேண்டிய நிலை உள்ளது.

எனவே, G.O (2D) எண்.62, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1) துறையால் வெளியிடப்பட்டதின்படி தொழிலாளர் ஆணையரால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியத்தைப் பின்பற்றி தூய்மை பணியாளர்களுக்கு ஒரு நாளைக்கு ரூ.761/- மற்றும் டிரைவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் ரூ.799/-னை 01.10.2025 முதல் செயல்படுத்தலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது..'

எனவே,

1. G.O (2D) எண். 62, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1) துறையால் வெளியிடப்பட்ட தொழிலாளர் ஆணையரால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியத்தைப் பின்பற்றி தூய்மை பணியாளர்களுக்கு ஒரு நாளைக்கு ஊதியம் ரூ.761/- மற்றம் BoV மற்றும் வாகன ஓட்டுநர்களுக்கு ஒரு நாளைக்கு ஊதியம் ரூ. 799/- 01.10.2025 முதல் செயல்படுத்துவதற்கும்,
2. ஒப்பந்த விதிகளில் மாவட்ட ஆட்சியரின் ஊதிய விகிதத்திலிருந்து தொழிலாளர் நலம் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையால் வெளியிடப்பட்ட தொழிலாளர் ஆணைய ஊதிய விகிதத்தின்படி வழங்கவும்,
3. தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையால் வெளியிடப்பட்ட தொழிலாளர் ஆணைய ஊதிய விகிதத்தின்படி திருத்திய ஊதியத்தினை வழங்குவதற்கு தமிழக அரசின் அனுமதி பெறுவதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் வழியாக கடிதம் அனுப்பி ஒப்புதல் பெறுவதற்கும்,
4. அரசின் ஆணையை எதிர்நோக்கி 01.10.2025 முதல் மேற்கூறிய திருத்திய ஊதிய விகிதத்தில் மண்டலங்கள் எண். 1, 2, 3 மற்றும் 7 (தொகுப்பு 1) பணிகளை மேற்கொள்ளும் திருவாளர்கள் Chennai Enviro Solution Private Limited மற்றும் மண்டலங்கள் எண். 11, 12, 14 மற்றும் 15 (தொகுப்பு 2) மேற்கொள்ளும் திருவாளர்கள் Sumeet Urban Services (Chennai) II Private Limited மற்றும் மண்டலங்கள் எண் 9, 10 மற்றும் 13 (தொகுப்பு-5) மேற்கொள்ளும் திருவாளர்கள் Sumeet Urban Services (Chennai) V Private Limitedல் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கும், BoV மற்றும் வாகன ஓட்டுநர்களுக்கு வழங்குவதற்கும்,
5. தன்னியலான பொறியாளர்கள் (Independent Engineer) திருத்திய ஊதிய நிர்ணயத்தின்படி அதற்கேற்ப Intial Annual Quote மறு சீரமைக்க (Rebasing) அனுமதியும்,
6. மேற்கூறிய செலவினத்தை பெருநகர சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.174/2025, நாள்.23.10.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"27.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.523/2025, நாள்.27.10.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

மநீவதுநகஎண்.பி3/2169-30/2025

**தீர்மான எண்: 1117/2025** **பொருள் எண்.37**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மழைநீர் வடிகால் துறை - மண்டலம்-13, கோட்டம்-176ல் AGS காலனி 7வது குறுக்கு தெரு, VOC நகர் 3வது பிரதான சாலை, பத்மாவதி நகர் பிரதான சாலை, ஸ்ரீனிவாசா நகர் 2வது தெரு AGS காலனி 9வது குறுக்கு தெரு (பகுதி) மற்றும் ஸ்ரீனிவாசா நகர் 1வது தெரு ஆகிய இடங்களில் உள்ள பழைய மழைநீர் வடிகால்வாய் இடித்துவிட்டு, புதிய மழைநீர் வாடிகால்வாய் கட்டும் பணிக்கு திருவாளர் M/s.KMR Projects pvt Ltd அவர்களுக்கு ஒப்பு பணி ஏற்பு கடிதம் வழங்க அனுமதி.**

ஆணையர் அவர்களது ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13, கோட்டம்-176-ல் AGS காலனி 7வது குறுக்கு தெரு, VOC நகர் 3வது பிரதான சாலை, பத்மாவதி நகர் பிரதான சாலை, ஸ்ரீனிவாசா நகர் 2வது தெரு, AGS காலனி 9வது குறுக்கு தெரு (பகுதி) மற்றும் ஸ்ரீனிவாசா நகர் 1வது தெரு ஆகிய இடங்களில் உள்ள பழைய மழைநீர் வடிகால்வாய் இடித்துவிட்டு, புதிய

மழைநீர் வாடிகால்வாய் கட்டும் பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5,60,00,000/-க்கு நிர்வாக அனுமதி அளித்து வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணியினை செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளி 17.07.2025 அன்று கோரப்பட்டு இவ்வொப்பந்தப்புள்ளி 18.05.2025 அன்று ஆங்கில செய்தித்தாளான "நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் " தமிழ் செய்தித்தாளான "தமிழ் முரசு " மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் ஒப்ப அறிவிப்பு 24.07.2025 அன்று வெளியிடப்பட்டது.

இதனை தொடர்ந்து மின்னணு ஒப்பம் திறப்பு நாளான 06.08.2025 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பம் திறக்கப்பட்டன. இவ்வொப்பத்தில் நான்கு ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்டனர். இதற்கான தொழில்நுட்ப ஆவணங்களை பரிசீலிக்கப்பட்டதில் ஒரு ஒப்பந்ததாரர் தகுதி வாய்ந்தவராக தேர்வு செய்யப்பட்டார். அதன் விவரம் பின்வருமாறு.

**அட்டவணை-I**

| வ. எண் | பெயர் திரு./திருவாளர் | பணியின் அலுவலக மதிப்பு (Incl 18% GST) | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | M/s. Narayanan Construction | 5,34,13,891.80/- | தொழில் நுட்ப ஆவணங்களின் அடிப்படையில் தகுதி பெறவில்லை |
| 2 | M/s.KMR projects Pvt.Ltd. | | தொழில் நுட்ப ஆவணங்களின் அடிப்படையில் தகுதியுடையவர்கள் |
| 3 | M/s.MSV Constructions | | தொழில் நுட்ப ஆவணங்களின் அடிப்படையில் தகுதி பெறவில்லை |
| 4 | M/s. NPR Constructons | | தொழில் நுட்ப ஆவணங்களின் அடிப்படையில் தகுதி பெறவில்லை |

இதன் தொடர்ச்சியாக, இப்பணிகளுக்கு தொழில் நுட்ப ஆவணத்தில் தகுதி பெற்ற ஒப்பந்ததாரரின் நிதி ஆவணங்கள் 22.08.2025 அன்று திறக்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு

**அட்டவணை-II**

| வ-எண் | ஒப்பத்தில் கலந்துகொண்ட ஒப்பந்ததாரர் பெயர்கள் திரு/திருவாளர்கள் | பணியின் அலுவலக தொகை 2024-25 ஆம் ஆண்டு அலுவலகவிலை விவரப்பட்டியல் படி (18 % GST சேர்த்து) ரூ | ஒப்பந்ததாரர் அளித்த தொகை (18 % GST சேர்த்து) ரூ | ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் 2024-25 ஆண்டு அலுவலக விலைப் பட்டியலின்படி |
|---|---|---|---|---|
| 1 | M/s.KMR projects Pvt.Ltd. | 5,34,13,891.79/- | 6,40,96,670,16/- | (+)20.00% |

மேற்கண்ட பணிக்கு விலை ஒப்பீட்டு அறிக்கையின்படி குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான *KMR projects Pvt.Ltd* அவர்கள் அலுவலக விலையைவிட (+) 20.00% கூடுதலாக அளித்துள்ளார்.

மேலும், குறைந்த ஒப்பப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். *M/s.KMR projects Pvt.Ltd* அவர்களிடம் 22.08.2025 அன்று விலைக் குறைப்பு செய்ய கடிதம் அளிக்கப்பட்டது, அதன்படி *M/s. KMR projects Pvt.Ltd* அவர்கள் (+) 3.99% விழுக்காட்டிற்கு விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார். அதன் அடிப்படையில் *M/s.KMR projects Pvt.Ltd* அவர்கள் அளித்துள்ள ஒப்பத்தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

**அட்டவணை-III**

| வ-எண் | குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் பெயர் திரு/திருவாளர்கள் | பணியின் அலுவலக தொகை 2024-25 ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியல் படி (18% GST சேர்த்து) ரூ | 1வது விலைக் குறைப்புக்கு பின் ஒப்பந்ததாரர் அளித்த ஒப்பத் தொகை (18 % GST சேர்த்து) | 1வது விலைக்குறைப்புக்கு பின் ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம்2024-25 ஆண்டு அலுவலக விலை விவரப் பட்டியல்படி |
|---|---|---|---|---|
| 1 | KMR projects Pvt. Ltd | 5,34,13,891.79/- | 5,55,45,106. 80 | (+) 3.99% |

மேற்குறிப்பிட்டுள்ள ஒப்ப சதவீதம் ஏற்க பரிந்துரை வேண்டி இப்பணிக்கான ஒப்பந்த புள்ளிகள் விவர அறிக்கை *22.08.2025* அன்று துணை ஆணையர் (பணிகள்) அவர்களின் தலைமையிலான ஒப்பம் ஆய்வுக் குழுவிடம் *(Tender Scrutiny Committee)* சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

எனவே,

1. மண்டலம்-13, கோட்டம்-176-ல் AGS காலனி 7வது குறுக்கு தெரு, VOC நகர் 3வது பிரதான சாலை, பத்மாவதி நகர் பிரதான சாலை, ஸ்ரீனிவாசா நகர் 2வது தெரு AGS காலனி 9வது குறுக்கு தெரு (பகுதி) மற்றும் ஸ்ரீனிவாசா நகர் 1வது தெரு ஆகிய இடங்களில் உள்ள பழைய மழைநீர் வடிகால்வாய் இடித்துவிட்டு, புதிய மழைநீர் வாடிகால்வாய் கட்டும் பணிக்காக குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர். M/s.KMR projects Pvt.Ltd அவர்களுக்கு ஒப்பத் தொகை ரூ. 5,55,45,106.08/- (Including GST 18%) (ரூபாய் ஐந்து கோடியே ஐம்பத்தைந்து இலட்சத்து நாற்பத்தைந்தாயிரத்து நூற்று ஆறு மற்றும் எட்டு பைசா மட்டும்) என்ற மதிப்பிற்கு 2024-25 ஆம் ஆண்டின் அலுவலக விலைபட்டியல்படி (+)3.99% கூடுதல் விழுக்காட்டில் ஒப்பம் ஒப்புதல் மற்றும் பணி ஏற்பு கடிதம் வழங்க அனுமதியும்,

2. மேற்காணும் பணிகளுக்குண்டான செலவினங்களை பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதி கணக்கு குறியீடு எண்.412-401-100 (Storm Water Drain Culvert) என்ற தலைப்பில் பட்டி தீர்வு செய்யவும். நிதி நிர்வாக பிரிவின் மூலம் இதற்கான நிதியினை ஒதுக்கீடு செய்வதற்கு அனுமதியும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“24.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.593/2025, நாள்.24.10.2025 -ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

“27.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.518/2025, நாள்.27.10.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

<u>ம.நீ.வ.து.ந.எண்.அ3/3558/2025</u>

**தீர்மான எண்: 1118/2025** **பொருள் எண்.38**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி – மழைநீர் வடிகால் துறை - பெருநகர சென்னை மாநகராட்சிக்கு எதிராக வழங்கப்பட்ட நடுவர் மன்ற தீர்ப்பினை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் பிரிவு 34ன் கீழ். வழக்கு எண். O.P.No.518/2016 & O.P.No.666/2018படி மேல்முறையீடு செய்யப்பட்டது - வழக்கு நிலுவையில் உள்ளது - சுமூக தீர்வு காண (Settlement) ஒப்பந்ததாரரிடமிருந்து கோரிக்கை மனு பெறப்பட்டது - ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது – தொகை இறுதி செய்யப்பட்டது - ஒப்பந்ததாரருக்கு தொகையை வழங்க அனுமதி.</u>**

*JNNURM* திட்டத்தின் கீழ் மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய்கள், ரெட்டிக்குப்பம் கால்வாய் ஆகியவற்றிற்கு வேலி அமைத்தல் மற்றும் கான்கிரீட் லைனிங் வழங்குதல், மேம்பாட்டு பணிகள் மற்றும் மாம்பலம் மற்றும் நந்தனம் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழைநீர் வடிகால்வாய் கட்டுவது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்வதற்கு *S.W.D.C.* எண்.*B4/2184/2009, dt.05.05.2010*ன்படி ஆர்.கிருஷ்ணமூர்த்தி & கோ ஒப்பந்ததாரருக்கு பணியாணை வழங்கப்பட்டது.' இப்பணி நடைபெறும் பொழுது, உயர் அதிகாரிகள் ஆய்விற்கு பிறகு பல்வேறு ஒப்பந்தத்தில் இல்லாத பணிகள், மற்றும் கூடுதல் பணிகள் நடைபெற்றதால், அப்பணிகளை அதே ஒப்பந்ததாரரை கொண்டு செய்ய ஆணை பெறப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இதனால் கூடுதல் பணித்தொகை மாற்றம் கீழ்கண்டவாறு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| ஒப்ப ஏற்பு தொகை *(Work Value)* | 100,60,77,292/- |
| துணை ஒப்பந்த தொகை *(Supplementary Agreement Value)* | 24,93,00,329/- |
| மொத்த ஒப்பந்த தொகை | 125,53,77,621/- |

இப்பணியினை செயல்படுத்தும்பொழுது, ஒப்பந்ததாரர் கட்டுமான பொருட்களின் விலை உயர்வால் ஏற்பட்ட பிரச்சினைகள், பணியிடத்தில் உள்ள நடைமுறை சிக்கல்கள் மற்றும் இடையூறுகள்

குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி (GCC) ஆணையர் மற்றும் கண்காணிப்பு பொறியாளர் (ம.நீ.வ.து) ஆகியோரிடம் கடிதம் அளித்தார். எனவே, இப்பிரச்சனைகளை களையும் பொருட்டு, இரண்டு முறை நடுவர் (Adjudicator) அவர்களுக்கு பரிந்துரைக்கப்பட்டது. இந்நடுவர், ஆர்.கிருஷ்ணமூர்த்தி & கோ (ஒப்பந்ததாரர்)க்கு ஆதரவாக பரிந்துரைத்ததால். இப்பரிந்துரைகளை ஆணையர் அவர்களின் ஆணைப்படி நடுவர் மன்ற தீர்ப்பாயம் (Arbitration Tribunal)க்கு பரிந்துரைக்கப்பட்டது. திரு.கே.டி.ஆர்காட், நடுவர், தலைமையில் டாக்டர் பேராசிரியர் டி.திருநாவுக்கரசு, இணை நடுவர் மற்றும் ஸ்ரீ.ஏ.ஜெகநாதன், இணை நடுவர் ஆகியோர் அடங்கிய நடுவர் மன்ற தீர்ப்பாயம் அமைக்கப்பட்டது. இப்பொருளை ஆராய்ந்து நடுவர் மன்றத் தீர்ப்பாயம் 07.04.2016 அன்று இறுதி தீர்ப்பு வழங்கியது. அதற்கு முன்பு இந்த நடுவர் மன்ற தீர்ப்பாயம் 23.09.2013 அன்று பிறப்பித்த இடைக்கால உத்தரவில் ஒப்பந்ததாரருக்கு 18.03.2014 அன்று பல்வேறு வேறுபாடுகளில், Price Variation Costக்கான (PVC) தொகையை உடனடியாக ரூ.11.61 கோடி தொகை மட்டும் பெருநகர சென்னை மாநகராட்சியால் வழங்க உத்தரவிடப்பட்டு வழங்கப்பட்டது. இவ்வொப்பந்த பணி தொடர்பாக பல்வேறு வேறுபாடுகள் காரணமாக திரு.கே.டி.ஆர்காட், தலைமையில் நடுவர், டாக்டர் பேராசிரியர் டி.திருநாவுக்கரசு, இணை நடுவர் மற்றும் ஸ்ரீ.M.கிருஷ்ணமூர்த்தி, இணை நடுவர் ஆகியோர் அடங்கிய இரண்டாவது நடுவர் மன்ற தீர்ப்பாயம் அமைக்கப்பட்டது. இப்பொருளை ஆராய்ந்து நடுவர் மன்ற தீர்ப்பாயம் 12.04.2018 அன்று தீர்ப்பு வழங்கியது. இந்த இரண்டு நடுவர் மன்ற தீப்பாயத்தின் உத்தரவு ஒப்பந்ததாரருக்கு சாதகமாக பெருநகர சென்னை மாநகரட்சி கூடுதலாக பட்டி தீர்வு செய்ய உத்தரவிடப்பட்டது.

அதன் விவரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| நடுவர் மன்ற தீர்ப்பாயம் (Arbitration Award-I), நாள்.07.04.2016ன் தொகை | ரூ.29,49,49,468/- (+) 01.03.2016 முதல் 16% வட்டி |
| நடுவர் மன்ற தீர்ப்பாயம் (Arbitration Award-II), நாள்.12.04.2018ன் தொகை | ரூ.22,80,46,191/-(+) 07,04.2018 முதல் 16% வட்டி |
| மொத்தம் தொகை | ரூ.52,29,95,659/- (+)வட்டி |

மேலும், இந்த நடுவர் மன்ற தீர்ப்பாயம் மேற்சொன்ன இரண்டு தீர்ப்புகளில் குறிப்பிட்டுள்ள தொகைக்கு தீர்ப்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து மொத்த தொகையினை ஒப்பந்ததாரருக்கு செலுத்தும் வரை 16% வட்டி வழங்கப்படவேண்டும் என்று 07.04.2016 மற்றும் 12.04.2018 ஆகிய தேதிகளில் உத்தரவிடப்பட்டது. இவ்நடுவர் தீர்ப்பாயத்தின் உத்தரவுகளை எதிர்த்து, பெருநகர சென்னை மாநகராட்சி

*Arbitration Act* பிரிவு எண்.34ன் கீழ் மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண். O.P. No.518/2016 & O.P. No.666/2018 என்ற வழக்குகளாக மேல்முறையீடு செய்யப்பட்டது. இவ்விரு வழக்குகளும் ஒரே வழக்காக மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தால் விசாரிக்கப்பட்டு தற்போது இவ்வழக்கு நிலுவையில் உள்ளது. இச்சமயத்தில், ஒப்பந்ததாரர் திரு.ஆர்.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 07.05.2025 அன்று கண்காணிப்பு பொறியாளர் (ம.நீ.வ.து) அவர்களிடம் இப்பொருள் குறித்து சுமூகமாக தீர்த்து கொள்வதாகவும் அதற்கான சுமூக தீர்வு தொகையினையும் விவரமாக குறிப்பிட்டு கடிதம் அளித்தார். இத்தகவல் மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தில் 11.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது. மேலும் இக்கடிதத்தில், ஒப்பந்தாரர் திரு.ஆர்.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இப்பணியினை 15.09.2015 அன்று முடித்து விட்டதால் தனக்கு வழங்க வேண்டிய இறுதி பட்டி தொகையான ரூ.1,75,80,439/- மற்றும் நிறுத்தி வைப்பு தொகையான ரூ.7,21,52,138/- ஆக மொத்தம் இவ்விரண்டு தொகைகையும் சேர்த்து ரூ.8,97,32,577/-த்தினை பணிமுடித்த நாள் முதல் இந்நாள் வரை 12% வட்டியுடன் வழங்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் மற்ற இனங்களில் வட்டியினை தள்ளுபடி செய்ய ஒப்புக் கொண்டு கடிதம் அளித்துள்ளார். ஒப்பந்ததாரர் அளித்த சுமூக தீர்வு தொகையின் முழு விவரம் பின்வருமாறு.

முதல் நடுவர் தீர்பாயத்தின் விவரம் (First Arbitration Award 2016)

| வ.எண் | தலைப்பு | கோரப்பட்ட தொகை (Rs.) | நடுவர் தீர்ப்பாயத்தால் முடிவு செய்யப்பட்ட தொகை (Rs.) | ஒப்பந்ததாரரால் 07.05.2025 அன்று முன்மொழியப்பட்ட இறுதி தீர்வு தொகை (Rs.) |
|---|---|---|---|---|
| 1 | Compensation for extended stay | 11,49,25,001 | 10,44,77,040 (Adopting Hudson formula at 15% of contract price as overheads) | 3,48,25,680 (Adopting 5% of contract price as overheads) |
| 2 | Balance piling | 6,03,41,203 | (a)Piling – 1,46,44,905 | Willing to for go |
| | | | (b)Empty Boring 2,73,56,670 | 2,43,09,864 |
| | | | (c)Concreting – 35,22,400 | 35,22,400 |
| | | | (d)Steel – 34,64,328 | 34,64,328 |

| | | | | |
|---|---|---|---|---|
| | Total | | 4,89,88,303<br>+1,63,84,822<br>------------------<br>11,43,61,428 | 3,12,96,592 |
| 3 | Balance Precast Rates | 4,03,37,635 | 1,52,57,375 + 45,77,212 (Int.) | 1,52,57,375 |
| 4 | Sludge Removal | 4,18,36,959 | 15,36,680 + 3,54,618 (Int.) | 11,82,062 |
| 5 | PVC payment for NT items | 4,96,58,255 | 4,03,87,437 + 1,83,29,086 (Int.) | 2,48,29,127<br>(50% of claim) |
| 6 | Balance Shoring | 1,83,82,890 | 1,83,82,890 | Nil |
| 7 | Balance Barricading charges | 26,83,554 | 26,83,554 | Nil |
| 8 | Bank Charges Reimbursement | 18,45,069 | 18,45,069 | Nil |
| 9 | PVC payment for BOQ items | 2,21,00,000 | 2,21,00,000 | Nil |
| Total | | 33,00,10,556 | 29,49,49,468 | 10,73,90,836 |

இரண்டாவது நடுவர் தீர்பாயத்தின் விவரம் *(Second Arbitration Award 2018)*

| வ.எண் | தலைப்பு | கோரப்பட்ட தொகை *(Rs.)* | நடுவர் தீர்ப்பாயத்தால் முடிவு செய்யப்பட்ட தொகை *(Rs.)* | ஒப்பந்ததாரரால் *07.05.2025* அன்று முன்மொழியப்பட்ட இறுதி தீர்வு தொகை *(Rs.)* |
|---|---|---|---|---|
| 1 | Compensation for Prolongation | 19,86,19,549 | 10,18,00,000 (Adopting Hudson formula at 15% of contract price as overheads) | 3,39,33,333<br>(Adopting 5% of contract price as overheads) |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 (a) | PVC for NT Items deducted in 48th Part Bill | 4,80,73,807 | 3,05,40,992+ 1,17,27,744 (Int.) | 2,40,36,903 (50% of Award) |
| 2 (b) | PVC payment for items up to 2015 3rd quarter | 2,43,21,521 | 1,75,32,815 + 67,88,706 (Int.) | Nil |
| 2 (b) | Payment for shoring and stuttering | 1,94,83,306 | 1,30,23,600+ 64,59,706 | Nil |
| 2 (c) | Payment for canal | 2,37,98,015 | 1,58,65,343+ 55,84,600 | Nil |
| 2 (d) | Payment for drains | 72,20,000 | 29,23,351+ 10,29,020 | Nil |
| 6 | Under utilisation of equipment | 6,98,16,891 | 48,60,000+ 7,77,600 | Nil |
| 7 | Bank Charges Reimbursement | 77,59,746 | 44,62,409 + 26,70,305 | Nil |
| 8 | Arbitration cost | 20,00,000 | 20,00,000 | Nil |
| | Total | 35,78,92,835 | 22,80,46,191 | 5,79,70,236 |

நடுவர் மன்ற தீர்பாயத்தின் உத்தரவின்படி வழங்கப்பட வேண்டிய மொத்த தொகைக்கு 12.04.2025 அன்றைய தேதியின்படி வட்டியுடன் சேர்த்து ரூ.120,31,34,627/- வழங்கப்பட வேண்டியுள்ளது என ஒப்பந்ததாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இக்கடிதத்தின்படி, ஒப்பந்ததாரரால் ஒப்புக்கொள்ளப்பட்ட மொத்த தொகை ரூ.16,53,61,072/- ஆகும். இது தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சியின் வழக்கறிஞரிடமிருந்து 11.06.2025 அன்று பெறப்பட்ட சட்ட கருத்துருவில் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது,

"Though, GCC may have good case on merits, I cannot contemplate the outcome and guarantee the result. If the order goes against GCC, the liability will be a great burden for GCC.

Taking the overall picture set out above, please negotiate with the contractor for a lumpsum amount between 3 and 5 crore as a term of settlement towards full and final settlement of the awards and the amount should be fixed without interest."

மேலும் ஒப்பந்ததாரர் மீண்டும் 30.06.2025 நாளிட்ட கடிதத்தில், இறுதி பட்டி தொகையான ரூ.1,75,80,439/- மற்றும் நிறுத்தி வைப்பு தொகையான ரூ.7,21,52,138/- ஆக மொத்தம் இவ்விரண்டு தொகையும் சேர்தது ரூ.8,97,32,577/-த்தினை பணிமுடித்த நாள் முதல் இந்நாள் வரை 12% வட்டியுடன் வழங்கும்படி கண்காணிப்பு பொறியாளர் (ம.நீ.வ.து) அவர்களை கேட்டுக் கொண்டார்.

இந்நிலையில், 31.07.2025 அன்று துணை ஆணையர் (பணிகள்)அவர்கள் தலைமையில் கண்காணிப்பு பொறியாளர் (ம.நீ.வ.து), முது நிலை சட்ட அலுவலர், ஒப்பந்ததாரர், மாநகராட்சியின் வழக்கறிஞர் மற்றும் ஒப்பந்ததாரர் தரப்பு வழக்கறிஞர் ஆகியோருடன் இப்பொருள் குறித்து விவாதம் நடைபெற்றது. இதில் ஒப்பந்ததாரர் தரப்பு ரூ.34,74,66,592/- இறுதி தொகையாக வழங்கும்படி கேட்டு கொண்டதற்கு, துணை ஆணையர் (பணிகள்) அவர்களால் மேலும் விலைகுறைப்பு செய்யும்படி அறிவுறுத்தப்பட்டது.

அதன் விவரம் பின் வருமாறு.

| வ.எண் | தலைப்பு | கோரிய தொகை |
|---|---|---|
| 1 | நடுவர் மன்ற தீர்ப்பாய உத்தரவு - 1ற்கு பதிலாக பெற்று கொள்ள சம்மதித்த தொகை | ரூ.10,73,90,836 |
| 2 | நடுவர் மன்ற தீர்ப்பாய உத்தரவு - 2ற்கு பதிலாக பெற்று கொள்ள சம்மதித்த தொகை | ரூ.5,79,70,236 |
| 3 | இறுதி பட்டி தொகை | ரூ.1,75,80,439/- |
| 4 | நிறுத்தி வைப்புத் தொகை | ரூ.7,21,52,138/- |
| 5 | இறுதி பட்டி தொகை மற்றும் நிறுத்தி வைப்புத் தொகைக்கான வட்டி (10.06.2025 வரை) | ரூ.9,23,72,943/- |
| | **மொத்தம்** | **ரூ.34,74,66,592/-** |

31.07.2025 அன்று நடைபெற்ற கூட்டத்தில் அறிவுறுத்தியபடி, ஒப்பந்தாரர் திரு.ஆர்.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ரூ.34,74,66,592/- தொகைக்கு பதிலாக மேலும் விலைகுறைப்பு செய்து ரூ.25,00,00,000/- தொகையினை வழங்குமாறு 05.08.2025 அன்று கண்காணிப்பு பொறியாளர் (ம.நீ.வ.து) அவர்களிடம் கடிதம் அளித்தார்.

இதன் தொடர்சியாக, துணை ஆணையர் (பணிகள்) அவர்கள் தலைமையில் கண்காணிப்பு பொறியாளர் (ம.நீ.வ.து) மற்றும் ஒப்பந்ததாரர், முதுநிலை சட்ட அலுவலர் ஆகியோருடன் 20.08.2025 அன்று இரண்டாவது *Negotiation* கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஒப்பந்ததாரர் ரூ.19,90,00,000/- இறுதி தொகையாக பெற்று கொள்வதற்கு சம்மதம் தெரிவித்து 21.08.2025 அன்று அதற்கான இசைவு கடிதம் அளித்தார். இத்தொகையினை ஒப்பந்ததாரருக்கு மாண்புமிகு உயர்நீதி மன்றத்தில் சமரச குறிப்பு (*Memo of Compromise*) தாக்கல் செய்யப்பட்டு, அதன்பின் மாண்புமிகு உயர்நீதிமன்றம் சார்பாக உத்தரவு பெறப்பட்ட நாளிலிருந்து ஆறு மாத காலத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியால் இறுதி செய்யப்பட்ட தொகை ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படும் என முடிவெடுக்கப்பட்டது.

மேலும், இத்தொகையினை செலுத்துவதில் ஏதேனும் காலதாமதம் ஏற்படும் பட்சத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி விதிமுறைகளுக்குட்பட்டு வட்டியினை வழங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இறுதியாக, 17.09.2025 ஆணையர் அவர்கள் தலைமையில், துணை ஆணையர் (பணிகள்), கண்காணிப்பு பொறியாளர் (ம.நீ.வ.து), முதுநிலை சட்ட அலுவலர் மற்றும் ஒப்பந்ததாரர் ஆகியோருடன் நடைபெற்ற கூட்டத்தில் இப்பொருள் தொடர்பாக விரிவாக விவாதிக்கப்பட்டு துணை ஆணையர் (பணிகள்) அவர்களின் தலைமையில் முடிவு செய்யப்பட்ட ஏற்கனவே ஒப்பந்ததாரருக்கு பெருநகர சென்னை மாநகராட்சியால் பிடித்தம் செய்யப்பட்ட நிறுத்தி வைப்புத் தொகை ரூ.7,21,52,138/- மற்றும் இறுதி பட்டி தொகை ரூ.1,75,80.439 போக மீதி 10,92,67,423/- தொகையை இழப்பீட்டு தொகை ஆகவும், மொத்த தொகையான ரூ.19,90,00,000/- தொகையினை வழங்க போதிய முகாந்திரம் இருப்பதால் இதனை ஒப்புக்கொள்ளலாம் என இறுதி முடிவு செய்யப்பட்டது.

மேலும், முதுநிலை சட்ட அலுவலர் அவர்கள் இப்பொருள் குறித்து மன்றத்தின் ஒப்புதல் பெறுவற்கு ஏதுவாக, மாண்புமிகு உயர்நீதி மன்றத்தில் கால அவகாசம் பெறவும் அறிவுறுத்தப்பட்டது.

எனவே, இப்பணியானது 2015-ல் முடிக்கப்பட்டு இதுவரை இறுதி செய்யப்படாமல் வழக்கு நிலுவையில் உள்ளதால், அப்பணி நடைபெற்ற இடங்களில் இதர மேம்பாடுகள் செய்வது காலதாமதமானது

இவ்வழக்கு ஒப்பந்ததாரருக்கு சாதகமாகும் பட்சத்தில், கூடுதல் நிதி இழப்பீடு பெரு நகர சென்னை மாநகராட்சிக்கு ஏற்படும்.

இவ்வழக்கினை முடிவுக்கு கொண்டுவரும் பட்சத்தில் நிலுவையிலுள்ள பல்வேறு தணிக்கை தடைகள் *(Pending Audit Paras)* சரி செய்யப்படும்.

ஏற்கனவே ஒப்பந்ததாரரால் முடிக்கப்பட்ட பணிக்கான நிறுத்தி வைப்பு தொகை மற்றும் இறுதி பட்டி தொகை ரூ.*8,97,32,577/-* பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ளது. மேலும் அதற்கான வட்டி தொகை சுமார் ரூ.*71,86,00,000/-* கோடியாக உள்ளது. ஆனால் அசல் தொகையுடன் கூடுதலாக ரூ.*10,92,67,423/-* மட்டுமே பெருநகர சென்னை மாநகராட்சியால் செலுத்த வேண்டியுள்ளது.

இந்த வழக்குகளை முடிவுக்கு கொண்டு வர ஒப்பந்ததாரருக்கு நிலுவையிலுள்ள தொகைக்கு வட்டி தொகையான சுமார் ரூ.*71.86* கோடியினை விட்டுவிட ஒப்பந்ததாரர் சம்மதித்துள்ளார்.

இப்பணியில் பணியாற்றிய பொறியாளர்கள் பலர் ஓய்வு பெற்றுவிட்டதால் மேற்கொண்டு கூடுதல் விவரங்கள் பெறப்பட்டு வழக்கினை முடிவுக்கு கொண்டு வருவது சற்று சிரமமாக உள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள காரணங்களால் இந்த சமரச குறிப்பு *(Memo of Compromise)* ஒப்பந்தாரரும் / பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் இடையே பெரிதாக எந்த வித நிதி இழப்பும் இல்லை என்பதால் ஒப்பந்ததாரர் இறுதியாக ஒப்புக்கொண்ட தொகையினை வழங்கலாம் என கருதப்படுகிறது.

எனவே,

1. இப்பணியின் மீதுள்ள வழக்கினை முடிவுக்கு கொண்டுவர ஆணையர் தலைமையில் நடந்த கூட்டத்தின் முன்பு ஒப்பந்ததாரரால் ஒப்புக்கொண்ட full and final settlement ஆன இறுதி தொகை ரூ.19,90,00,000/-த்தினை ஒப்பந்ததாரருக்கு பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் வழங்கலாம் என ஒப்பந்ததாரர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி இடையே சமரச குறிப்பினை (Memo of Compromise) மாண்புமிகு உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்வதற்கு அனுமதியும்,

2. பெருநகர சென்னை மாநகராட்சி, மழைநீர் வடிகால் துறைக்கு மூலதன நிதியில் 412-401-100 என்ற கணக்கு தலைப்பின் கீழ் ரூ.19,90,00,000/-ஐ, நிதி மேலாண்மை பிரிவின் மூலம் ஒதுக்கீடு செய்வதற்கு அனுமதியும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.596/2025, நாள்.24.10.2025 -ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"27.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.519/2025, நாள்.27.10.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

<u>சி.தி.து.ந.க.எண்.பி1/0944/2025</u>

**தீர்மான எண்: 1119/2025** **பொருள் எண்.39**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - சிறப்புத் திட்டங்கள் துறை - உலக வங்கி சென்னை நகர கூட்டு திட்டம் I – ரேஸ்கோர்ஸ் உட்புற பகுதிக்குள் (எம்ஆர்சி கேட் - பேருந்து நிறுத்தம் முதல் ஏபிடி வாகன பழுது பார்க்கும் மையம் வரை) தற்போதுள்ள சுற்று சுவரை இடித்து விட்டு சாலையை விரிவுப்படுத்துதல் பணிக்கான திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி.</u>**

சென்னை நகர கூட்டு (*CCP*) திட்டமானது, உலக வங்கியுடன் இணைந்து நீர், நகர்ப்புற இயக்கம், நகர்ப்புற சேவைகள் (சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை) மற்றும் நிதி ஆகிய கருப்பொருள்களில் கவனம் செலுத்துகிறது. பெருநகர சென்னை மாநகராட்சி மேற்படி திட்டத்தில் பங்கு பெற்று வருகின்றது.

முழுமையான தெருக்கள்

இத்திட்டத்தின் முதல் கட்டத்தின் கீழ், அதாவது, நிலையான நகர்ப்புற சேவைகள் திட்டத்தில் (SUSP), 2021-2026க்கு உட்பட்ட ஐந்தாண்டு திட்ட காலத்தில் சென்னை முழுவதும் 11.6 கி.மீ நீளத்திற்கு பாதசாரிகளுக்கு ஏற்ற பல பயன்பாட்டு சாலைகளில் முழுமையான சாலைகளாக அமைப்பதே இலக்காகும்.

கிண்டியில் உள்ள ரேஸ்கோர்ஸ் சாலை, SUSP திட்டத்தின் முன்னோடி திட்டமாக எடுக்கப்பட்டு கிண்டி பாலம் சந்திப்பு முதல் சக்கரபாணி தெரு சந்திப்பு வரையில் சுமார் 900 மீட்டர் நீளத்திற்கு மேம்பாட்டுக்கான பணிகள் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளிகள் கோரி நடைபெற்று வருகின்றது.

தற்போது உள்ள ரேஸ்கோர்ஸ் சாலையில் கிண்டி ரேஸ்கோர்ஸ் நுழைவு வாயிலிலிருந்து ABT நான்கு சக்கர வாகன சேவை நிலையம் வரையிலான சுமார் 250 மீட்டர் நீளம் மிகவும் குறுகிய சாலையாகும். இப்பகுதியில் அடிக்கடி விபத்து ஏற்படும் நிலையும் உள்ளது. அது மட்டும் அல்லாமல் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதால் இதை விரிவுபடுத்த கோரி பொது மக்கள் மற்றும் மன்ற உறுப்பினர் அவர்களிடம் இருந்து கோரிக்கை பெறப்பட்டுள்ளது. எனவே, இதற்கு ஒரு நிரந்தரமான தீர்வாக இச்சாலையை அகலப்படுத்துவதற்கான சாத்திய கூறுகள் கண்டறியப்பட்டு அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

30.06.2025 அன்று நடைபெற்ற மன்ற கூட்டத்தில், மண்டலம்-13ன் மாமன்ற உறுப்பினரும் மற்றும் மண்டல குழுத் தலைவர் அவர்களால் ரேஸ்கோர்ஸ் சாலையை அகலப்படுத்துவதற்காக இந்தப் பகுதியில் சுமார் 2,500 சதுர மீட்டர் அரசு நிலத்தை (250 மீட்டர் நீளம் மற்றும் 10 மீட்டர் அகலம்) கையகப்படுத்த முன்மொழிந்தனர். மேலும், முன்மொழியப்பட்ட அகலப்படுத்தும் பகுதிக்குள் தற்போது அமைந்துள்ள மின்மாற்றியை இடமாற்றம் செய்ய தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்துடன் (TANGEDCO) ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

மேலும், ஆணையரின் அறிவுறுத்தலின்படி, 21.06.2025 அன்று துணை ஆணையர் (பணிகள்), மண்டலக் குழுத் தலைவர்-13, கண்காணிப்புப் பொறியாளர், சிறப்புத் திட்டங்கள் மற்றும் மண்டலம்-13 அதிகாரிகளால் இச்சாலைகள ஆய்வு செய்யப்பட்டது.

30.06.2025 தேதியிட்ட மன்ற தீர்மானம் எண். 789/2025ல், கிண்டி ரேஸ்கோர்ஸில் உள்ள அரசு நிலத்தில் உள்ள சுவரை இடித்து புனரமைக்க மாமன்றத்தின் ஒப்புதல் ஏற்கனவே பெறப்பட்டுள்ளது.

கிண்டி ரேஸ்கோர்ஸ் பகுதியை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் துணை ஆணையர் (பணிகள்) அவர்களால், ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்போது இச்சாலையை அகலப்படுத்தும் திட்டம் குறித்து தெரிவிக்கப்பட்டு, இத்திட்டம் தற்போது நிலவும் போக்குவரத்து

சவால்களை திறம்பட தீர்க்கும் என்பதால், அகலப்படுத்தும் பணியைத் தொடர தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

மேற்குறிப்பிட்டுள்ள அரசு நிலத்தை அதாவது கிண்டி ரேஸ்கோர்ஸுக்குள் உள்ள உட்புற நிலப் பகுதியை கையகப்படுத்தவும், நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மாற்றவும் மாவட்ட வருவாய் அதிகாரியிடம் (நிலம் மற்றும் உடமை துறை) அவர்களிடம் கோப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது:

1. ரேஸ்கோர்ஸ் உட்பகுதிக்குள் சாலையை விரிவுபடுத்துதல்.
2. தற்போதுள்ள சுற்று சுவரை அகற்றி புதிய சுற்று சுவரைக் கட்டுதல் பணி (MRC கேட் - பேருந்து நிறுத்தம் முதல் ABT மையம் வரை, வார்டு 172, மண்டலம் -13)

செலவு மதிப்பீட்டின் சுருக்கம் கீழே உள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளது

| Sl.No. | Description | Amount (Rs.) |
|---|---|---|
| 1 | Work Value - Civil Works | 4,17,39,969.14 |
| 2 | Goods & Service Tax 18% | 75,13,194.44 |
| 3 | Provision for price Adjustment Clauses 10% | 41,73,996.91 |
| 4 | GST for price adjustment | 7,51,319.44 |
| 5 | Tamil Nadu Manual Labour Welfare Fund 1.0% | 4,17,399.69 |
| 6 | Project Management Consultancy (PMC) charges 2% | 8,34,799.38 |
| 7 | GST for PMC charges 18.0% | 1,50,263.89 |
| 8 | Superior Supervision charges 10% | 41,73,996.91 |
| 9 | Quality Control 1.0% | 4,17,399.69 |
| 10 | TNEB (Lumpsum amt as directed by TNEB agreed upon by GCC) | 75,00,000.00 |
| 11 | Contingencies 2.50% | 10,27,660.49 |
| Total Amount (Rs.) | | 6,87,00,000.00 |

ரேஸ்கோர்ஸ் சாலையை அகலப்படுத்துவதற்கு பழைய சுற்று சுவரை அகற்றி, ஒரு புதிய சுற்று சுவரை அமைக்கும் பணிக்கு மின்னணு ஒப்பம் கோருவதற்கு அனுமதி வேண்டப்படுகிறது. எனவே,

1. ரேஸ்கோர்ஸ் உட்புற பகுதியில் (எம்ஆர்சி கேட் - பேருந்து நிறுத்தம் முதல் ஏ.பி.டி. சர்வீஸ் ஸ்டேசன் வரை) தற்போதுள்ள சுற்றுசுவரை இடித்து, ரேஸ்கோர்ஸ் சாலையை அகலபடுத்தி புதிய சுற்று சுவர் கட்டுவதற்கு சுமார் ரூ.6.87 கோடி திட்ட மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு அனுமதியும்,
2. மேற்கண்ட செலவினங்களை பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளவும்,
3. ரேஸ்கோர்ஸ் உட்புற பகுதியில் எம்ஆர்சி கேட் முதல் ஏ.பி.டி. சர்வீஸ் ஸ்டேசன் வரை தற்போதுள்ள சுற்று சுவரை இடித்து ரேஸ்கோர்ஸ் சாலையை அகலப்படுத்தி புதிய சுற்று சுவர் கட்டுவதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மின்னணு ஒப்பம் கோருவதற்கும்,
4. கிண்டி ரேஸ் கோர்ஸ் சாலையில் உள்ள அரசின் நிலமான குதிரை பந்தய மைதானத்தின் உள்ளே தற்போது அமைய உள்ள சாலை விரிவாக்கத்திற்கு அரசின் பின்னேற்பு அனுமதியை எதிர் நோக்கி பணிகள் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“24.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.599/2025, நாள்.24.10.2025 -ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“27.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.525/2025, நாள்.27.10.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**சி.தி.து.ந.க.எண்.பி1/0866/2022**

**தீர்மான எண்: 1120/2025** **பொருள் எண்.40**

**பெருநகர சென்னை மாநகராட்சி - சிறப்பு திட்டங்கள் துறை - உலக வங்கி சென்னை நகர கூட்டாண்மை திட்டம் (பகுதி – I) – Complete StreetProject– கோட்டம்-111, மண்டலம்-IX-ல் உள்ள காதர் நவாஸ் கான் (Kadhar Nawaz Khan) சாலையில் Pedestrain Plaza கட்டுமானப் பணிகள் -M/s. JS and Sons நிறுவனத்துக்கு ஒப்பம் வழங்கப்பட்டது - திருத்தியமைக்கபட்ட ஒப்பம் விலைப்பட்டியலுக்கு உட்பட்டு கூடுதல் பணிகள் மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி.**

பெருநகரசென்னை மாநகராட்சி, சிறப்பு திட்டங்கள் துறையின் மூலம், உலக வங்கியின் “சென்னை நகர கூட்டாண்மை திட்டத்தின்” கீழ் *“Chennai Complete Streets”* திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

இந்த திட்டத்தில், கோட்டம்-*111*, மண்டலம்-*IX*-ல் உள்ள காதர் நவாஸ் கான் *(Kadhar Nawaz Khan)* சாலை, பணி செயல்முறை ஆணையின் அடிப்படையில், *M/s. J S & Sons* நிறுவனத்திற்கு *Kadhar Nawaz Khan* சாலையில் *“Pedestrian Plaza* கட்டுமானப் பணிகள் மேற்கொள்ள *20.07.2023* அன்று ஒப்புதல் கடிதம் வழங்கப்பட்டது. வடகிழக்கு பருவமழை மற்றும் *Greater Chennai Traffic Police (GCTP)* அவர்கள் அனுமதி பெற்றதையடுத்து, மேற்கண்ட இடத்தில் *15.12.2023* அன்று பணிகள் தொடங்கப்பட்டது. முதலில் திட்டமிட்டபடி, உத்தமர் காந்தி சாலையிலிருந்து மாதிரி பள்ளி சாலை வரையிலான *650* மீட்டர் நீள சாலையை மேம்படுத்தி செய்வதாக இருந்தது. நிலத்தடி மற்றும் நிலத்தின் மேற்பரப்பில் உள்ள அனைத்து பணிகளும் *18* மாதங்களுக்குள், அதாவது *14.06.2025* அன்றுடன் நிறைவடைய திட்டமிடப்பட்டிருந்தது. பணி தொடங்கிய பிறகு, பின்வரும் முக்கிய மாற்றங்கள் குறித்து திட்ட பணி மேற்கொள்ளப்பட்டன, கீழ்கண்டவாறு:

a. *0* மீட்டர் முதல் *70* மீட்டர் வரை உள்ள பகுதியில் சென்னை மெட்ரோ ரயில்நிலைய மேம்பாட்டு பணிகள், சென்னை மெட்ரோ ரயில் லிமிடெட் *(CMRL)* மூலம் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படுகிறது.

b. அப்பகுதி மக்கள் மற்றும் *Stakeholder*-ன் கருத்து அடிப்படையில் *Chainage* எண் *570* மீட்டரில் இருந்து *650* மீட்டர் வரையிலான, சாலையின் அகலம் குறைவாக இருப்பதால், மேற்குறிப்பிட்ட இடத்தில் பணி மேற்கொள்ளாததால் அப்பகுதி நீக்கப்பட்டுள்ளது.

திட்டத்தின் முன்னேற்றம் பின்வருமாறு உள்ளது:

| SI.No | Component | Sub Component | Work progress status | |
|---|---|---|---|---|
| | | | Western side (LHS) | Eastern side (RHS) |
| 1 | CMWSSB | Rider sewer line (DWC 250mm dia) | 450m/570m<br>(Completed) | 550m/550m<br>(Completed) |
| | | Rider water line (DI Pipe 150mm dia) | 570m/570m<br>(Completed) | 550m/550m<br>(Completed) |
| 2 | TNEB | TNEB Main cable line (200m dia) | 570m/570m<br>(Completed) | 550m/550m<br>(Completed) |
| 3 | GCC | 7-way duct pipe | 570m/570m<br>(Completed) | 550m/550m<br>(Completed) |
| | | Storm water side drain work (250mm dia) | 270m/300m<br>(Completed) | 180m/180m<br>(Hume pipe) |
| | | TNEB HDPE Pipe laid house hold EB connection (110mm dia) | 570m/570m<br>(Completed) | 550m/550m<br>((Completed) |
| | | Individual house hold sewer & water line connection | 37Nos./37Nos.<br>(Completed) | 36Nos./36Nos.<br>(Completed) |
| | | Hydrostatic pressure test for water line work | 570m/570m<br>(Completed) | 550m/550m<br>(Completed) |
| | | Pedestrian plaza footpath granite work | 440m/570m<br>(Ch.70 to 220m and Ch.570 to 350 m) | 550m/550m<br>(Ch.70 to 440m and 550 to 440m) |
| | | Cobble stone work carriage way | 430m/500m (In Progress)<br>Ch. 70m to 250m / 550 to 300 m | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | Footpath kerb-stone fixing work | 500m/570m (In Progress) | 550m/550m (In Progress) |
| | | PedestrianPlazaPCC laying work | In progress | Completed |

அனைத்து நிலத்தடி பணிகள் (*TANGEDCO* மற்றும் *CMWSSB* க்கான குழாய்கள் உட்பட) நிறைவுசெய்யப்பட்டுள்ள நிலையில், *Pedestrain Plaza* முழுமையடைய கீழ்வரும் முக்கிய பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.:

- பாதசாரி நடைபாதை வசதிகள் – இடப்பக்கம் – சுமார் 70 மீ.நீங்கலாக
- *TANGEDCO Transformer* மற்றும் *Pillar Boxes* இருபுறமும் மாற்றி அமைத்தல்.
- *Cobble Stone* அமைத்தல் – (சுமார் 70 மீ நீங்கலாக.)
- தெரு உபகரணங்கள் பொருத்துதல் (உட்காரும் இருக்கைகள், விளக்குகள் உள்ளிட்டவை.
- இறுதி பணி முடித்தல் மற்றும் சுத்தம் செய்தல்.

*CMWSSB*, *TANGEDCO* மற்றும் *CMRL Phase-II* ஆகியவற்றின் பணிகள் மூலம் ஏற்பட்ட தாமதங்கள் மற்றும் *M/s. JS and Sons* ஆகிய நிறுவனத்துடன் உள்ள ஒப்பந்தம், பொதுசாசன விதிகள் பிரிவு 42 – இழப்பீட்டு நிகழ்வுகள் (*Compensation Events*) ஏற்படும்படியும், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் அனுமதியுடன், 30.10.2025 நாளிட்ட வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இது சம்மந்தமாக 2025, ஜூலை 11 அன்று பயனாளிகள்/குடியிருப்புவாசிகள் மற்றும் வணிகர்களுடன் நடைபெற்ற பங்குதாரர் கூட்டத்தில் (புகைப்படங்கள் இணைக்கப்பட்டுள்ளது), *Kadhar Nawaz Khan* சாலையுடன் சேர்த்து அதனை அணுகும் சாலைகளும் புதுப்பிக்கப்பட்ட நடைபாதைகள், விளக்குகள் மற்றும் வடிவமைப்பு கூறுகள் கொண்டு மேம்படுத்தப்பட வேண்டும் எனக் கோரப்பட்டது. இந்த விவரம் கள ஆய்வின்போது துணை ஆணையர் (பணிகள்) அவர்களுக்கு முன்வைக்கப்பட்டபோது, மேற்கண்ட மாற்றங்களை மேற்கொள்ள அனுமதி அளித்தார்கள். மேலும், *Pedestrain Plaza*-வில் நவீன கியாஸ்க்குகளை அமைத்து, புதுமையான பொருளாதார வணிகர்களை செயல்படுத்தும் வகையில் முன்மொழியப்பட்டுள்ளது.

எனவே, கூடுதல் திட்ட கூறுகள் *Kadhar Nawaz Khan* சாலையில், நவீனப்படுத்தப்பட்ட விற்பனை கியாஸ்க்குகள் (12 எண்ணிக்கை) அமைத்தல் மற்றும் அணுகும் / அருகிலுள்ள சாலைகளின் மேம்பாடு செய்தல். இதில் *PCC*, வேட்-மிக்ஸ், கர்ப் வால்கள், கிரானைட் கற்கள், *BT* தார்சாலை அமைத்தல்,

*SS* சங்கிலியுடன் கூடிய போலார்ட்ஸ், *recessed FrameFRP* கதவுகள், மத்திய நடுச்சுவர் மேடையமைப்பு, புதிய வடிவம் கொண்ட தெரு மின்விளக்குகள் மற்றும் மின்கம்பிகள் உள்ளடங்கும். மேலும், அணுகும் சாலைகளின் சந்திப்புகளில் *Cobble Stone* பயன்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது. முன்மொழியப்பட்ட அருகிலுள்ள சாலைகள் விவரம் பின்வருமாறு:

| S.No | Street Name | Length (on each side) |
|---|---|---|
| 1 | Rutland Gate 2nd Street | 100 M |
| 2 | Rutland Gate 5th Street | 185 M |
| 3 | Rutland Gate 6th Street | 120 M |
| 4 | Wallace Garden 2nd Street | 25 M - (one side only) |

கூடுதல் திட்ட கூறுகள்தோராய மதிப்பீடு பின்வருமாறு மதிக்கப்படுகிறது:

| S.No | Key Additional Component | Approx Qty | Approx. Estimated Cost (Rs.) |
|---|---|---|---|
| 1 | Footpath Work | 950 m | 99,36,866.00 |
| 2 | BT Road Work | 600 m | 48,18,400.00 |
| 3 | Central Median | 16 m | 5,10,188.00 |
| 4 | SS Chain for Bollards | 300 kgs | 3,44,492.00 |
| 5 | FRP Door for Recessed Frame (Footpath) | 75 nos | 9,36,133.00 |
| 6 | Artisanal Street Lighting | 75 nos | 35,65,875.00 |
| 7 | Modernised vending KIOSKs | 12 Nos | 2,02,88,136.00 |
| | Total Additional Cost | | 4,04,00,090.00 |
| | GST (18%) | | 72,72,016.20 |

கூடுதல் திட்ட கூறுகள் மேற்கொள்ளுமாறு முன்மொழியப்பட்ட. மேலும் ஒப்பந்த மதிப்பின் *25%* வரையிலான தமிழக ஒப்ப விதிமுறைகளுக்குட்பட்ட அனுமதிக்கக்கூடிய வரம்புக்குள் இருந்து, பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியிலிருந்து நிதியளிக்கப்பட வேண்டும். சுமார் ரூ. *1,80,00,000/- (GST* உட்பட*)* அளவில் கூடுதல் திட்ட பகுதிகளை பிறகு திட்டத்தில் உருவான சேமிப்புகளிலிருந்து

| S.No | Particulars | Amount (Rs.) incl 18% GST |
|---|---|---|
| A | Total Cost for Additional Scope of Work for KadharNawazKhan Pedestrian Plaza | Rs. 4,76,72,000 |
| B | Estimated Savings Available within the Project after dropping of Chainages (0-70 m & 570 – 650 m – both LHS and RHS) | Rs. 1,80,00,000 |
| | Funds Required for completion of additional scope of work (A-B) | Rs. 2,96,72,000 |

ஆணையர் அவர்களின் *06.08.2025* நாளிட்ட ஒப்புதல் இப்பணிக்காக பெறப்பட்டு இப்பணிகள் செயல்பாட்டில் உள்ளன.

எனவே,

1. மண்டலம்-IX கோட்டம் - 111, காதர் நவாஸ் கான் (Kadhar Nawaz Khan) சாலையில் Pedestrain Plaza கட்டுமான பணிகளின் மாற்றங்கள் அதாவது திட்ட கூறுகள் மாற்றங்கள் முன்மொழியப்பட்ட அருகிலுள்ள சாலைகள் / அணுகும் சாலைகளின் மறுசீரமைப்பு மற்றும் Pedestrain Plaza நவீனப்படுத்தப்பட்ட விற்பனை கியாஸ்க்குகளை நிறுவியதற்கும்,
2. மிகுதியான கூடுதல் திட்ட கூறுகள் மேம்படுத்தப்பட்ட திருத்தப்பட்ட நிர்வாக அனுமதி ரூ. 2,96,72,000/- வரை வழங்கவும், இத்தொகை ஒப்ப தொகை ரூ. 14,84,60,675/- (GST உட்பட – 18%) என்ற ஒப்பந்த மதிப்பின் 20% க்குள் ஆகும்.
3. மேலே குறிப்பிட்ட பணிக்காக, GCC இன் மூலதன நிதியின் செயல்பாடு குறியீடு எண் 412-10-14-01 க்கு உட்பட்டு பயன்படுத்துதல்.
4. ஒப்பந்தக்காரர் M/s. JS and Sons நிறுவனத்திற்கு பணிப்பரப்பின் மாற்ற கடிதத்தை வெளியிட்டு, ஒப்பந்தத்தின் மற்ற அனைத்து நிபந்தனைகள் நிலைத்திருக்கும் என குறிப்பிடுவதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.607/2025, நாள்.24.10.2025 -ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“27.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 529/2025, நாள்.27.10.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது.”**

**********

<u>க.து.ந.க.எண்.பி1/2109/2025</u>

**தீர்மான எண்: 1121/2025** **பொருள் எண்.41**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் - 04, வார்டு - 48, வெங்கட கிருஷ்ணன் தெருவில் உள்ள வணிகவளாக (தரை தளம் மற்றும் முதல் தளம்) புதிய கட்டடம் கட்டும் பணிக்காக திருத்திய நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.</u>**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம்-04, வார்டு-48, வெங்கட கிருஷ்ணன் தெருவில் உள்ள வணிகவளாக (தரை தளம் மற்றும் முதல் தளம்) புதிய கட்டடம் கட்டும் பணி |
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | 1. ஆணையாளர் அவர்களின் அனுமதி நாள் : 07.08.2025.<br>2. மன்ற தீர்மானம் எண் : 990 / 2025, நாள் : 26.08.2025. |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம் - 04. |

| | | |
|---|---|---|
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2024-2025 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 5 | மதிப்பீட்டின் தொகை | |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 3,78,67,773.97 |
| | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 68,16,199.31 |
| | (இ) த.நா.க.தொ. ந.வா. 1% | ரூ. 3,78,677.63 |
| | (ஈ) எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 9,37,348.98 |
| | மொத்தம் (Rounded Off) | ரூ. 4,60,00,000.00 |
| 6 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள் | 1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் *28.08.2025.*<br>2. தினகரன் *27.08.2025.*<br>3. தி இந்து *27.08.2025.* |
| 7 | ஒப்பப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் | 15.09.2025 |
| 8 | நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண் | Shopping Complex<br>( 20 - 28 - 00 / 412 - 400 - 601 ) |
| 9 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15/30 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? | ஆம் |
| 10 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | இரண்டு *(e-Tender)* ஒப்பப்படிவங்கள் இணையதளத்தின் மூலம் பெறப்பட்டுள்ளது. |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு *16.09.2025* அன்று இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டது. அதன் விவரம் பின் வருமாறு

| வ எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திருவாளர்கள் | பணியின் அலுவலக மதிப்பு 2024-2025 (ரூ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ) | 2024-2025 ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்பிடுகையில் |
|---|---|---|---|---|
| 1 | K S K Engineers | 3,78,67,773.97 | 4,06,35,908.25 | (+) 7.31 % அதிகம் |
| 2 | N Vivek Constructions | 3,78,67,773.97 | 4,16,54,551.37 | (+) 10.00 % அதிகம் |

இவ்வொப்பத்தில் திருவாளர். K S K Engineers., அவர்கள் குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் ஆவார். இவ்வொப்பந்ததாரரிடம் மின்னணு மூலம் விலைக்குறைப்பு கோரப்பட்டதில் L1 ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து ஒப்ப புள்ளியினை அளித்துள்ளார். விவரம் பின்வருமாறு :

| வ. எண் | மின்னணு விலைக்குறைப்பு அளித்த விவரம் | L1 ஒப்பந்ததாரர் 2024-2025ஆம் ஆண்டு SOR-ன்படி அளித்துள்ள ஒப்பத்தொகை மற்றும் ஒப்பப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1 | முதற்கட்ட விலை குறைப்பு நாள். 17.09.2025 | ரூ. 4,03,29,179.28 (+) 6.50 % அதிகம் |
| 2 | இரண்டாம் கட்ட விலை குறைப்பு நாள் 18.09.2025 | ரூ. 3,97,57,375.89 (+) 4.99 % அதிகம் |

இதன்படி, மண்டலம் - 04, வார்டு - 48, வெங்கட கிருஷ்ணன் தெருவில் உள்ள வணிகவளாக (தரை தளம் மற்றும் முதல் தளம்) புதிய கட்டடம் கட்டும் பணிக்காக 2024-2025 ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+)4.99% அதிகம், ஒப்பத் தொகை ரூ.3,97,57,375.89 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.71,56,327.66ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.4,69,13,704.00- க்கு ஒப்பம் வழங்கப்பட வேண்டும்.

இப்பணிகளுக்கு 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி கோரப்பட்ட ஒப்பப்புள்ளிக்கு செலவீனத்தொகை கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| வ. எண். | மதிப்பீட்டின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூபாய்) (A) | தற்போதைய மதிப்பீட்டுக்கு கூடுதல் தொகை விவரம் (+)4.99% சேர்த்து (ரூபாய்) (B) |
|---|---|---|---|
| 1 | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 3,78,67,773.97 | ரூ. 3,97,57,375.89 |
| 2 | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 68,16,199.31 | ரூ. 71,56,327.66 |
| 3 | (இ) த.நா.க.தொ. ந.வா. 1% | ரூ. 3,78,677.63 | ரூ. 3,78,677.63 |
| 4 | (ஈ) எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 9,37,348.98 | ரூ. 9,37,348.98 |
| | மொத்தம் (Rounded Off) | ரூ. 4,60,00,000.00 | ரூ. 4,82,29,730.00 |
| | | கூடுதல் தொகை (B- A) | ரூ. 22,29,730.00 |

**மேலும், இவ்வொப்பத்திற்கு பணி மதிப்புத்தொகையை விட (+)4.99%, 2024-25ஆம் ஆண்டின் விலை விகிதத்தின்படி அதிக ஒப்பப்புள்ளி அளித்துள்ளதால் மொத்த செலவீனத்தொகை ரூ.4,82,29,730.00-க்கு திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டியுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.**

எனவே,

1. **இப்பணிக்கான திருத்திய மதிப்பீட்டு தொகையான ரூ.4,82,29,730.00-க்கு நிர்வாக அனுமதியும்,**
2. **மேற்கண்ட பணிக்காக 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+)4.99% அதிகம், ஒப்பத் தொகை ரூ.3,97,57,375.89 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.71,56,327.66ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.4,69,13,704.00-க்கு (ரூபாய் நான்கு கோடியே அறுபத்து ஒன்பது இலட்சத்து பதிமூன்றாயிரத்து எழுநூற்று நான்கு மட்டும்) ஒப்பத்தினை L1 ஒப்பந்ததாரர் திருவாளர். K S K Engineers., அவர்களுக்கு ஒப்பம் வழங்கவும்,**
3. **இப்பணிக்கான செலவீனத்தினை கணக்கு குறியீட்டு எண்:Shopping Complex (20-28-00/412-400-601 ) நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளவும்,**

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மூலமாக நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் அனுமதி வேண்டியும் இனம்-1ற்கு மட்டும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.594/2025, நாள்.24.10.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது ".

"27.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.520/2025, நாள்.27.10.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

*********

<u>க.து.ந.க.எண். பி1 / 2804 / 2025</u>

**தீர்மான எண்: 1122/2025** **பொருள் எண்.42**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் - 04, வார்டு - 35, முத்தமிழ் நகரில் மார்க்கெட் (தரைத்தளம்) கட்டும் பணிக்கு 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.</u>**

மண்டலம் - *04*, வார்டு - *35*, முத்தமிழ் நகரில் மார்க்கெட் (தரைத்தளம்) கட்டும் பணியினை மேற்கொள்ள வேண்டி மண்டலம் - *04*-ன் மூலம் மதிப்பீடுகள் ***2024-2025*** ஆம் ஆண்டின் விலைப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்டுள்ளது.

விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம் - 04, வார்டு - 35, முத்தமிழ் நகரில் மார்க்கெட் (தரைத்தளம்) கட்டும் பணி. |
| 2 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம் - 04. |
| 3 | <u>மதிப்பீட்டின் தொகை விவரம்</u> | |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 3,90,46,449.12 |
| | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 70,28,360.84 |
| | (இ) த.நா.க.தொ. ந.வா. 1% | ரூ. 3,90,464.49 |
| | (ஈ) தரக்கட்டுப்பாடு 1% | ரூ. 3,90,464.49 |
| | (உ) எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 4,44,261.06 |
| | மொத்தம் (Rounded Off) | ரூ. 4,73,00,000.00 |
| 4 | நிதியின் தன்மை | Miscellaneous (20-28-00 / 412 - 403 - 000) |

| | | |
|---|---|---|
| 5 | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ. 4,73,00,000.00 |

மேற்குறிப்பிட்டுள்ள மண்டலம் - 04, வார்டு - 35, முத்தமிழ் நகரில் மார்க்கெட் (தரைத்தளம்) கட்டும் பணியினை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இம்மதிப்பீடுகளின் செலவினத்தை Miscellaneous (20 - 28 - 00 / 412 - 403 - 000) நிதியில் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதற்கான நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு கட்டடத்துறை மூலமாக ஒப்பம் கோரப்பட வேண்டும்.

எனவே,

1. மண்டலம் - 04, வார்டு -35, முத்தமிழ் நகரில் மார்க்கெட் (தரைத்தளம்) கட்டும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ.4,73,00,000/- (ரூபாய் நான்கு கோடியே எழுபத்து மூன்று இலட்சம் மட்டும்) திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும்,
2. மேற்கண்டுள்ள பணிக்கு ஏற்படும் செலவீனத்தினை Miscellaneous (20-28-00/ 412-403-000)-ல் நிதி ஒதுக்கீடு அளிக்கவும்,
3. மேற்கண்டுள்ள பணிக்கு கட்டடத்துறை மூலம் ஒப்பம் கோரவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மூலமாக நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

“24.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.599/2025, நாள்.24.10.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது".

“27.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.526/2025, நாள்.27.10.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.”

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**
**********

**க.து.ந.க.எண். பி1/2761/2025**

**தீர்மான எண்: 1123/2025** **பொருள் எண்.43**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் – 06, கோட்டம் – 72, புளியந்தோப்பு டாக்டர் அம்பேத்கர் கல்லூரி சாலையில் அமைந்துள்ள இறைச்சி கூடத்திற்கு Providing Pathways & Effluent Treatment Plant அமைக்கும் பணிக்கான திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–06, கோட்டம்–72 புளியந்தோப்பு டாக்டர் அம்பேத்கர் கல்லூரி சாலையில் அமைந்துள்ள இறைச்சி கூடத்திற்கு Providing Pathways & Effluent Treatment Plant அமைக்கும் பணியினை மேற்கொள்ள வேண்டி மண்டலம்-6ன் மூலம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு கட்டடத்துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. விவரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | பணியின் பெயர் | மண்டலம் – 06, கோட்டம் – 72 புளியந்தோப்பு டாக்டர் அம்பேத்கர் கல்லூரி சாலையில் அமைந்துள்ள இறைச்சி கூடத்திற்கு Providing Pathways & Effluent Treatment Plant அமைக்கும் பணி. |
| 2. | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம் – 06 சுகாதாரத் துறை |
| 3. | மதிப்பீட்டின் தொகை விவரம் | |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 7,68,26,625.00 |
| | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ 1,38,28,793.00 |
| | (இ) த.நா.க.தொ. ந.வா. 1% | ரூ, 7,68,266.00 |

| | | |
|---|---|---|
| | (ஈ) எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 19,76,316.00 |
| | மொத்தம் | ரூ. 9,34,00,000.00 |
| 4. | நிதியின் தன்மை | பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதி |
| 5. | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ. 9,34,00,000.00 |

மேற்குறிப்பிட்டுள்ள விவரங்களின்படி மண்டலம் –06, கோட்டம் – 72 புளியந்தோப்பு டாக்டர் அம்பேத்கர் கல்லூரி சாலையில் அமைந்துள்ள இறைச்சி கூடத்திற்கு Providing Pathways & Effluent Treatment Plant அமைக்கும் பணியினை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இம்மதிப்பீடுகளின் செலவினத்தை பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஏற்கனவே ரூ.45.00 கோடி மதிப்பீட்டில் இறைச்சி கூடம் அமைக்கும் பணிக்கு வட சென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் பணிகள் மண்டலம்-6ன் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தற்பொழுது அதில் Effluent Treatment Plant மற்றும் pathways அமைக்கும் பணிகள் மேற்கொள்ள வேண்டி திட்ட மதிப்பீடு மண்டலம்-6ன் மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1. மண்டலம்–06, கோட்டம்–72 புளியந்தோப்பு டாக்டர் அம்பேத்கர் கல்லூரி சாலையில் அமைந்துள்ள இறைச்சி கூடத்திற்கு Providing Pathways & Effluent Treatment Plant (ETP) அமைக்கும் பணியினை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீடு ரூ.9,34,00,000.00க்கு நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. இப்பணிக்கு ஏற்படும் செலவினத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் மேற்கொள்ளவும்,
3. மேற்கண்டுள்ள பணிக்கு கட்டடத்துறை மூலம் ஒப்பம் கோரவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“24.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.601/2025, நாள்.24.10.2025 -ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“27.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.527/2025, நாள்.27.10.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

க.து.ந.க.எண்.பி1/2434/2025

**தீர்மான எண்: 1124/2025** **பொருள் எண்.44**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் - 06, வார்டு - 69, முத்து குமாரப்பசாமி சாலையில் புதியதாக அமைக்கப்பட உள்ள சமுதாய நலக்கூடத்தில் Provision of 11 nos of 11TR, 1 no of 8.5TR Centralised Airconditioner, 4 nos of Lifts, Two numbers of LTCT, Supply and Other Electrical Accessories அமைக்கும் பணிக்காக திருவாளர். Vivek Vijay and Company., அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம் - 06, வார்டு - 69, முத்து குமாரப்பசாமி சாலையில் புதியதாக அமைக்கப்பட உள்ள சமுதாய நலக்கூடத்தில் Provision of 11 nos of 11TR, 1 no of 8.5TR Centralised Airconditioner, 4 nos of Lifts, Two numbers of LTCT, Supply and Other Electrical Accessories அமைக்கும் பணி. |

| | | |
|---|---|---|
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | 1. ஆணையாளர் அவர்களின் அனுமதி நாள் : 01.07.2025.<br>2. மன்ற தீர்மானம் எண் : 852 / 2025, நாள் : 30.07.2025. |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம் - 06. |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2024-2025 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 5 | <u>மதிப்பீட்டின் தொகை</u> | |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 4,60,00,417.72 |
| | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 75,14,362.39 |
| | (இ) சரக்கு மற்றும் சேவை வரி 28% | ரூ. 11,91,108.80 |
| | (ஈ) த.நா.க.தொ. ந.வா. 1% | ரூ. 4,60,004.18 |
| | (உ) தரக்கட்டப்பாடு 1% | ரூ. 4,60,004.18 |
| | (ஊ) மின் இணைப்பு கட்டணம் | ரூ. 27,00,000.00 |
| | (எ) எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 11,50,102.73 |
| | மொத்தம் (Rounded Off) | ரூ. 5,94,76,000.00 |
| 6 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள் | 1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் 04.09.2025.<br>2. தினமலர் 05.09.2025.<br>3. தி இந்தியன் எக்ஸ்பிரஸ் 05.09.2025. |
| 7 | ஒப்பப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் | 22.09.2025 |

| | | |
|---|---|---|
| 8 | நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண் | Community Centre<br>( 20 - 28 - 00 / 412 - 400 - 603 ) |
| 9 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15/30 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? | ஆம் |
| 10 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | இரண்டு (e-Tender) ஒப்பப்படிவங்கள் இணையதளத்தின் மூலம் பெறப்பட்டுள்ளது |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு 23.09.2025 அன்று இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டன. அதன் விவரம் பின் வருமாறு :

| வ எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திருவாளர்கள் | பணியின் அலுவலக மதிப்பு 2024-2025 (ரூ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ) | 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்பிடுகையில் |
|---|---|---|---|---|
| 1 | Vivek Vijay and Company | 4,60,00,417.72 | 4,97,95,452.18 | (+) 8.25% அதிகம் |
| 2 | Gajalakshmi Construction | 4,60,00,417.72 | 5,09,45,462.62 | (+) 10.75% அதிகம் |

இவ்வொப்பத்தில் திருவாளர். Vivek Vijay and Company., அவர்கள் குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் ஆவார். இவ்வொப்பந்ததாரரிடம் மின்னணு மூலம் விலைக்குறைப்பு கோரப்பட்டதில் L1 ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து ஒப்ப புள்ளியினை அளித்துள்ளார். விவரம் பின்வருமாறு

| வ. எண் | மின்னணு விலைக்குறைப்பு அளித்த விவரம் | L1 ஒப்பந்ததாரர் 2024-2025ஆம் ஆண்டு SOR-ன்படி அளித்துள்ள ஒப்பத்தொகை மற்றும் ஒப்பப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1 | முதற் கட்ட விலை குறைப்பு<br>நாள் 26.09.2025 | ரூ. 4,82,95,838.56 (+) 4.99 % அதிகம் |

| | | |
|---|---|---|
| 2 | இரண்டாம் கட்ட விலை குறைப்பு<br><br>நாள் 27.09.2025 | ரூ. 4,82,82,038.44 (+) 4.96 % அதிகம் |

இதன்படி, மண்டலம் - 06, வார்டு - 69, முத்து குமாரப்பசாமி சாலையில் புதியதாக அமைக்கப்பட உள்ள சமுதாய நலக்கூடத்தில் Provision of 11 nos of 11TR, 1 no of 8.5TR Centralised Airconditioner, 4 nos of Lifts, Two numbers of LTCT, Supply and Other Electrical Accessories அமைக்கும் பணிக்காக 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+)4.96% அதிகம், ஒப்பத் தொகை ரூ.4,82,82,038.44 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.86,90,766.91ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.5,69,72,805.00-க்கு ஒப்பம் வழங்கப்பட வேண்டும்.

இப்பணிகளுக்கு 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி கோரப்பட்ட ஒப்பப்புள்ளிக்கு செலவீனத்தொகை கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது

| வ. எண். | மதிப்பீட்டின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூபாய்) (A) | தற்போதைய மதிப்பீட்டுக்கு கூடுதல் தொகை விவரம் (+) 4.96% சேர்த்து (ரூபாய்) (B) |
|---|---|---|---|
| 1 | (அ) கட்டுமான பணி செலவு | ரூ.4,60,00,417.72 | ரூ. 4,82,82,038.44 |
| 2 | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 87,05,471.19 | ---- |
| 3 | (இ)சரக்கு மற்றும் சேவை வரி 18% | ----- | ரூ. 86,90,766.91 |
| 4 | (ஈ) த.நா.க.தொ. ந.வா. 1% | ரூ. 4,60,004.18 | ரூ. 4,60,004.18 |
| 5 | (உ) தரக்கட்டப்பாடு 1% | ரூ. 4,60,004.18 | ரூ. 4,60,004.18 |
| 6 | (ஊ) மின் இணைப்பு கட்டணம் | ரூ. 27,00,000.00 | ரூ. 27,00,000.00 |
| 7 | (எ) எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 11,50,102.73 | ரூ. 11,50,102.73 |
| | மொத்தம் (Rounded Off) | ரூ.5,94,76,000.00 | ரூ. 6,17,42,916.00 |
| | | கூடுதல் தொகை (B- A) | ரூ. 22,66,916.00 |

மேலும், இவ்வொப்பத்திற்கு பணி மதிப்புத்தொகையை விட (+)4.96%, 2024-25ஆம் ஆண்டின் விலை விகிதத்தின்படி அதிக ஒப்பப்புள்ளி அளித்துள்ளதால் மொத்த செலவீனத்தொகை ரூ.6,17,42,916.00-க்கு திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டியுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. இப்பணிக்கான திருத்திய மதிப்பீட்டு தொகையான ரூ.6,17,42,916.00-க்கு நிர்வாக அனுமதியும்,
2. மேற்கண்ட பணிக்காக 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+)4.96% அதிகம், ஒப்பத் தொகை ரூ.4,82,82,038.44 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.86,90,766.91ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.5,69,72,805.00-க்கு (ரூபாய் ஐந்து கோடியே அறுபத்து ஒன்பது இலட்சத்து எழுபத்து இரண்டாயிரத்து எண்ணூற்று ஐந்து மட்டும்) ஒப்பத்தினை L1 ஒப்பந்ததாரர் திருவாளர். Vivek Vijay and Company., அவர்களுக்கு ஒப்பம் வழங்கவும்,
3. இப்பணிக்கான செலவீனத்தினை கணக்கு குறியீட்டு எண் : Community Centre (20-28-00 / 412 - 400 - 603 ) நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“24.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.604/2025, நாள்.24.10.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“27.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.528/2025, நாள்.27.10.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம். ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**க.து.ந.க.எண்.பி1/2081/2025**

**தீர்மான எண்: 1125/2025** **பொருள் எண்.45**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் - 06, வார்டு - 71, எண் : 45, ஜமாலியா, பெரம்பூர் பிரதான சாலை (தெற்கு)யில் புதியதாக வணிகவளாக மேம்பாட்டு கட்டடம் கட்டும் பணிக்காக திருவாளர். Thomas Iyadurai Infrastructure Pvt Ltd., அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம் - 06, வார்டு - 71, எண் : 45, ஜமாலியா, பெரம்பூர் பிரதான சாலை (தெற்கு)யில் புதியதாக வணிகவளாக மேம்பாட்டு கட்டடம் கட்டும் பணி. |
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | 1. ஆணையாளர் அவர்களின் அனுமதி நாள் : 02.08.2025.<br>2. மன்ற தீர்மானம் எண் : 978/2025, நாள் : 26.08.2025 |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம் - 06. |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2024-2025 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி. |
| 5 | மதிப்பீட்டின் தொகை | |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 7,84,53,350.94 |
| | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 1,41,21,603.17 |
| | (இ) த.நா.க.தொ. ந.வா. 1% | ரூ. 7,84,533.51 |
| | (ஈ) தரக்கட்டுப்பாடு 1% | ரூ. 7,84,533.51 |
| | (உ) ஆலோசனை கட்டணம் 2.50% | ரூ. 19,61,333.77 |

| | | |
|---|---|---|
| | (ஊ) எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 2,94,645.10 |
| | மொத்தம் (Rounded Off) | ரூ. 9,64,00,000.00 |
| 6 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள் | 1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் 28.08.2025.<br>2. தினகரன் 27.08.2025.<br>3. தி இந்து 27.08.2025. |
| 7 | ஒப்பப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் | 15.09.2025 |
| 8 | நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண் | Shopping Complex<br>(20 - 28 - 00 / 412 - 400 - 601) |
| 9 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15/30 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? | ஆம் |
| 10 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | ஒன்று (e-Tender) ஒப்பப்படிவம் இணையதளத்தின் மூலம் பெறப்பட்டுள்ளது. |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு 16.09.2025 அன்று ஒரு ஒப்பம் பெறப்பட்டது. அதன் விவரம் பின் வருமாறு

| வ எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திருவாளர்கள் | பணியின் அலுவலக மதிப்பு 2024-2025 (ரூ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ) | 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்பிடுகையில் |
|---|---|---|---|---|
| 1 | Thomas Iyadurai Infrastructure Pvt Ltd | 7,84,53,350.94 | 8,12,69,826.24 | (+) 3.59 % அதிகம் |

இவ்வொப்பத்தில் திருவாளர். Thomas Iyadurai Infrastructure Pvt Ltd., அவர்கள் குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் ஆவார். இவ்வொப்பந்ததாரரிடம் மின்னணு மூலம் விலைக்குறைப்பு கோரப்பட்டதில் L1 ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து ஒப்ப புள்ளியினை அளித்துள்ளார். விவரம் பின்வருமாறு:

| வ. எண் | மின்னணு விலைக்குறைப்பு அளித்த விவரம் | L1 ஒப்பந்ததாரர் 2024-2025ஆம் ஆண்டு SOR-ன்படி அளித்துள்ள ஒப்பத்தொகை மற்றும் ஒப்பப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1 | முதற்கட்ட விலை குறைப்பு<br>நாள் 17.09.2025 | ரூ. 8,12,69,826.24 (+) 3.59 % அதிகம் |
| 2 | இரண்டாம் கட்ட விலை குறைப்பு<br>நாள் 18.09.2025 | ரூ. 8,12,69,826.24 (+) 3.59 % அதிகம் |

இதன்படி, மண்டலம் - 06, வார்டு - 71, எண் : 45, ஜமாலியா, பெரம்பூர் பிரதான சாலை (தெற்கு)யில் புதியதாக வணிகவளாக மேம்பாட்டு கட்டடம் கட்டும் பணிக்காக 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+) 3.59 % அதிகம், ஒப்பத் தொகை ரூ.8,12,69,826.24 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.1,46,28,568.72ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.9,58,98,395.00-க்கு ஒப்பம் வழங்கப்பட வேண்டும்.

இப்பணிகளுக்கு 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி கோரப்பட்ட ஒப்பப்புள்ளிக்கு செலவீனத்தொகை கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது

| வ. எண். | மதிப்பீட்டின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூபாய்) (A) | தற்போதைய மதிப்பீட்டுக்கு கூடுதல் தொகை விவரம் (+) 3.59 % சேர்த்து (ரூபாய்) (B) |
|---|---|---|---|
| 1 | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 7,84,53,350.94 | ரூ. 8,12,69,826.24 |
| 2 | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 1,41,21,603.17 | ரூ. 1,46,28,568.72 |
| 3 | (இ) த.நா.க.தொ. ந.வா. 1% | ரூ. 7,84,533.51 | ரூ. 7,84,533.51 |
| 4 | (ஈ) தரக்கட்டுப்பாடு 1% | ரூ. 7,84,533.51 | ரூ. 7,84,533.51 |
| 5 | (உ) ஆலோசனை கட்டணம் 2.50% | ரூ. 19,61,333.77 | ரூ. 19,61,333.77 |
| 6 | (ஊ) எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 2,94,645.10 | ரூ. 2,94,645.10 |
| | மொத்தம் (Rounded Off) | ரூ. 9,64,00,000.00 | ரூ. 9,97,23,441.00 |
| | | கூடுதல் தொகை (B- A) | ரூ. 33,23,441.00 |

மேலும், இவ்வொப்பத்திற்கு பணி மதிப்புத்தொகையை விட (+)3.59%, 2024-25 ஆம் ஆண்டின் விலை விகிதத்தின்படி அதிக ஒப்பப்புள்ளி அளித்துள்ளதால் மொத்த செலவீனத்தொகை ரூ.9,97,23,441.00-க்கு திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டியுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. இப்பணிக்கான திருத்திய மதிப்பீட்டு தொகையான ரூ.9,97,23,441.00-க்கு நிர்வாக அனுமதியும்,
2. மேற்கண்ட பணிக்காக 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+)3.59% அதிகம், ஒப்பத் தொகை ரூ.8,12,69,826.24 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.1,46,28,568.72ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.9,58,98,395.00-க்கு (ரூபாய் ஒன்பது கோடியே ஐம்பத்து எட்டு இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து முந்நூற்று தொண்ணூற்று ஐந்து மட்டும்) ஒப்பத்தினை L1 ஒப்பந்ததாரர் திருவாளர். Thomas Iyadurai Infrastructure Pvt Ltd., அவர்களுக்கு ஒப்பம் வழங்கவும்,

3. இப்பணிக்கான செலவீனத்தினை கணக்கு குறியீட்டு எண் : Shopping Complex (20 -28 -00 / 412-400-601) நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.597/2025, நாள்.24.10.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"27.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.521/2025, நாள்.27.10.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**TVKNGR/151/2025-ADMIN(ENGINEERING)-E1**

**தீர்மான எண்: 1126/2025** **பொருள் எண்.46**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-6, பகுதி-17, கோட்டம்-75, Secretariat Colony 9th Street, Ak Samy Nagar 1st Street, Secretariat Colony 7th Street, Secretariat Colony 3rd Street, Secretariat Colony 2nd Street ஆகிய தெருக்களில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

| | | |
|---|---|---|
| 1 | பணியின்பெயர் | மண்டலம்-6, பகுதி-17, கோட்டம்75, Secretariat Colony 9th Street, Ak Samy Nagar 1st Street, Secretariat Colony 7th Street, Secretariat Colony 3rd Street, Secretariat Colony 2nd Street ஆகிய தெருக்களில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி. |
| 2 | பரிந்துரை செய்தவரின் விவரம் | --------------- |
| 3 | எந்தத்துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம்-6 |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2024-25 ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்படி |
| 5 | மதிப்பீட்டின் தொகை | ரூ.2,77,00,000.00 |
| (அ) | கட்டுமான பணி செலவு | ரூ.2,22,85,866.44 |
| (ஆ) | சரக்கு மற்றும் சேவைவரி 18% | ரூ. 40,11,455.96 |
| (இ) | தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நலவாரியம் 1% | ரூ. 2,22,858.66 |
| (ஈ) | தரக்கட்டுப்பாட்டு செலவு1% | ரூ. 2,22,858.66 |

| | | |
|---|---|---|
| (உ) | Shfting of Service 2% | ரூ. 4,45,717.33 |
| (ஊ) | மற்ற எதிர்பாரா செலவு | ரூ. 5,11,242.95 |
| | மொத்தம் | ரூ.2,77,00,000.00 |
| 6 | வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா | ஆம் |
| 7 | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | புதியபணி |
| 8 | நிதியின்தன்மை/ ஒதுக்கீடு<br>செய்யப்பட்டுள்ள நிதி/கணக்குகுறியீட்டு எண் | -------------- |
| 9 | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு<br>தேவைப்படும் நிதி | ரூ.2,77,00,000.00 |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-17, கோட்டம்-75, Secretariat Colony 9th Street, Ak Samy Nagar 1st Street, Secretariat Colony 7th Street, Secretariat Colony 3rd Street, Secretariat Colony 2nd Street ஆகிய தெருக்களில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிக்காக ரூ.2,77,00,000/-க்கு (ரூபாய் இரண்டு கோடியே எழுபத்தி ஏழு இலட்சம் மட்டும்) 2024-25 ஆம் ஆண்டின் விலையின்படி தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாகஅனுமதியும்,
2. மேற்கண்ட பணிக்கு கணக்கு எண். 20-21-07/412-10-15-00 GRANT - NUHM – HEALTH BUILDING என்ற தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு பரிந்துரை செய்யவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

“24.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.602/2025, நாள். 24.10.2025 -ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**பொ.து.ந.க.எண்.ஈ3 / 27808 / 2025**

**தீர்மான எண்: 1127/2025** **பொருள் எண்.47**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - அயற்பணியில் பணியேற்ற அலுவலர்களின் விவரம் மன்றத்தின் தகவல் மற்றும் பதிவிற்கு.**

அரசாணை (வாலாயம்) எண்.2316, பொது (சிறப்பு-அ), நாள்.29.09.2025 மற்றும் அரசாணை (வாலாயம்) எண்.219, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.இ1) துறை நாள். 22.09.2025 ஆகிய அரசாணைகளின்படி, கீழ்காணும் அலுவலர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி அயற்பணியில் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | பெயர் மற்றும் பதவி | செயல்முறை ஆணை எண். மற்றும் நாள். | அயற்பணியில் சேர்ந்த நாள். |
|---|---|---|---|
| 1. | திருமதி.க.கற்பகம், இ.ஆ.ப.,<br>இணை ஆணையர் (கல்வி)<br>பெருநகர சென்னை மாநகராட்சி | அரசாணை (வாலாயம்) எண்.<br>2316, பொது (சிறப்பு-அ),<br>நாள். 29.09.2025 | 03.10.2025<br>மு.ப. |

| | | | |
|---|---|---|---|
| 2. | திரு.சீ.செந்தில் குமரன்,<br><br>இணை இயக்குநர் / உதவி ஆணையர், முதுநிலை (மண்டலம்)<br><br>மண்டல அலுவலகம்-13<br><br>பெருநகர சென்னை மாநகராட்சி | அரசாணை (வாலாயம்) எண்.219, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.இ1) துறை, நாள்.22.09.2025. | 29.09.2025<br><br>மு.ப. |

"இதனை நியமனக்குழு பதிவு செய்து,

மன்றத்தின் தகவல் மற்றும் பதிவிற்கு சமர்ப்பிக்கின்றது".

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**<u>ம.அ.4.ந.க.எண்.பி3 / 2342 / 2025</u>**

**தீர்மான எண்: 1128/2025** **பொருள் எண்.48**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 4, வார்டு – 44, உதயகுமார் தெருவில் அமைந்துள்ள ICDS கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–4, பகுதி–11, வார்டு–44, உதயகுமார் தெருவில் அமைந்துள்ள சிதலமடைந்த நிலையில் உள்ள ICDS கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | மண்டலம் – 4 | வார்டு எண். 44 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | உதயகுமார் தெருவில் உள்ள பழுதடைந்த ICDS கட்டிடம். |
| 2 | கட்டிடம் எப்போது கட்டப்பட்டது | 2000 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. |
| 3 | கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | தரைத்தளம் 66.50 ச.மீ. |
| 4 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ. 2,32,987.45/- |
| 5 | கட்டிடம் இடிப்பதற்கு காரணம் | மிகவும் பழுதடைந்து பயனற்ற நிலையில் உள்ளது. |
| 6 | கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | புதிதாக ICDS கட்டிடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 7 | கட்டிடம் இடிப்பதற்கு பரிந்துரை செய்தது | செயற்பொறியாளர்-4 |
| 8 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண்.(ம) நாள்: | எண்.42 நாள்:16.09.2025 |

மேலே, குறிப்பிட்டுள்ள மண்டலம்–4, பகுதி–11, வார்டு–44, உதயகுமார் தெருவில் அமைந்துள்ள சிதலமடைந்த நிலையில் உள்ள உபயோகமற்ற ICDS கட்டிடம் மிகவும் பழுதடைந்து உடையும் தருவாயில் உள்ளது. அக்கட்டிடத்தை இடித்து விட்டு அவ்விடத்தில் அப்பகுதி பொது மக்கள் பயன் பெறும் வகையில் ICDS கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, இக்கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு(பணிகள்)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 24.10.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.10.2025 அன்று தீர்மான எண்.616/2025ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

****

ம.அ.12நக.எண்.இ1/5583-30/2025

**தீர்மான எண்: 1129/2025** **பொருள் எண்.49**

**பெருநகர சென்னை மாநகராட்சி-மண்டலம்-12, வார்டு-162 எல்லை முத்தம்மன் கோவில் தெருவில் உள்ள பல்நோக்கு மைய கட்டிடத்தை (ரேஷன் கடை மற்றும் கழிவறை கட்டிடம்) இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 12, பகுதி-35 வார்டு-162 ல் எல்லை முத்தம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பல்நோக்கு மையக்கட்டிடம் (ரேஷன் கடை மற்றும் கழிவறை கட்டிடம்) 2010 ஆம் ஆண்டு ஆலந்தூர் நகராட்சியால் கட்டப்பட்டதாக தெரியவருகிறது. தற்போது பழுதடைந்த நிலையில் உள்ள அக்கட்டிடத்தை இடித்து அகற்ற கோரி மாமன்ற உறுப்பினர் வார்டு- 162 அவர்கள் 08.09.2025 நாளிட்ட கடிதம் வழங்கியுள்ளார். அதன் அடிப்படையில் மன்றத்தின் அனுமதி பெற 162 வது மாமன்ற உறுப்பினர் அவர்களின்08.09.2025 நாளிட்ட கடிதம் பெறப்பட்டுள்ளது.

மேலும் இடித்து அகற்றப்பட வேண்டிய பழுதடைந்த நிலையில் உள்ள எல்லை முத்தம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பல்நோக்கு மையக்கட்டிடத்தின் (ரேஷன் கடை மற்றும் கழிவறை கட்டிடம்) விவரங்கள் கீழ்க்கண்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| வார்டு எண். | 162 |
| இடம் | எல்லை முத்தம்மன் கோயில் தெரு |
| கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு | 2010ஆம் ஆண்டு |
| கட்டிடத்தின் பரப்பளவு | 23.45 ச.மீ |
| கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் மொத்த பரப்பளவு | 271.65 ச.மீ |
| தற்போதைய கட்டிடத்தின்புத்தக மதிப்பு | ரூ.191525.79 |

| | |
|---|---|
| தற்போது கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா | பழுதடைந்த நிலையில் உள்ளது. |
| கட்டிடம் இடித்த பின் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது | உடற்பயிற்சி கூடம் |
| கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | பழுதடைந்த நிலையில் உள்ளது |
| வார்டு குழு தீர்மான எண். | 1262 |

எனவே, மண்டலம்-12, பகுதி-35, வார்டு-162ல் எல்லை முத்தம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள பல்நோக்கு மையக் கட்டிடத்தை (ரேஷன் கடை மற்றும் கழிவறை கட்டிடம்) இடித்து அகற்ற, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 24.10.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.10.2025 அன்று தீர்மான எண்.617/2025ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**இ.பொ.து.தெ.செ.வா.ப.ந.க.எண். S1/250/2025**

**தீர்மான எண்: 1130/2025** **பொருள் எண்.50**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - தென்சென்னை வாகன பணிமனை - மண்டலம் – 11, 12, 13, 14, 15 மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகம் மற்றும் இதர பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்கள் ஆகியவற்றிற்கு ஜனவரி 2026 முதல் டிசம்பர் 2026 வரை தேவைப்படுகின்ற டீசல் கொள்முதல் செய்தல் - கொள்முதல் செய்யும் சமயத்தில் குறைவான விலைக்கேற்ப - திருவாளர் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து கொள்முதல் செய்ய மன்றத்தின் அனுமதி.**

இயந்திர பொறியியல் துறையில் தென்சென்னை வட்டாரத்திற்குட்பட்ட மண்டலம்-11 முதல் 15 வரை உள்ள பகுதிகளில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் துப்புரவு பணி அல்லாத இதர பணிகளுக்காகவும் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பை சமன் செய்யும் பணிகளுக்காகவும் 100 எண்ணிக்கையிலான பல்வேறு வகையான கனரக/இலகுரக, டிப்பர் லாரிகள், தண்ணீர் லாரிகள், லோடர்கள், எஸ்கவேட்டர்கள், உபகரணங்கள், சிறப்பு உபகரணங்கள், மற்றும் இதர வாகனங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட 100 வாகனங்களுக்கு தேவையான எரிபொருள் டீசல் தெற்கு வட்டாரத்தில் மண்டலம்-13 லாரி நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள டீசல் வழங்கும் நிலையம் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் இவை தவிர, தெற்கு வட்டார அலுவலக அதிகாரிகள் மற்றும் மண்டலம் -11 முதல் 15 வரை பணிபுரியும் அதிகாரிகளுக்கான ஆய்வு வாகனங்கள், கொசு மருந்து புகை பரப்பும் இயந்திரங்கள், அலுவலக மற்றும் மருத்துவமனை பயன்பாட்டிற்காக பராமரிக்கப்படும் ஜெனரேட்டர்கள் மற்றும் மழைக்காலங்களில் நீர் இறைக்கும் பம்புகள் ஆகியவற்றிற்கு தேவையான டீசல் மண்டலம் 13-ல் அமைக்கப்பட்டுள்ள எரிபொருள் (டீசல்) வழங்கும் நிலையம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

டீசல் கொள்முதல் செய்ய, 2001 - 2002 ஆம் ஆண்டிற்கு மன்றத்தீர்மான எண்:92/2000 நாள்.28.02.2000- ன்படி, அரசின் பின்னேற்பினை பெறுவதற்கு அனுப்பப்பட்ட கோப்பின் மீது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் ( மா.ந.1 ) துறை அளித்த அரசு ஆணை நிலை எண். 102, நாள்.07.08.2000ல் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஆகிய மூன்று நிறுவனங்களும் மத்திய அரசின் நிறுவனமாக இருக்கும் வரை, ஒவ்வொரு ஆண்டும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான

டீசல் மற்றும் பெட்ரோல் இனி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ள அனுமதி அளித்து நிரந்தர ஆணை வெளியிட்டுள்ளது.

அரசு ஆணையினை அமல்படுத்திட மன்றத்தீர்மான எண்.486/01, நாள்.18.09.2001-ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் மன்றத்தின் அனுமதி பெற்று டீசல், மற்றும் பெட்ரோல் கொள்முதலை மத்திய அரசு ஆயில் நிறுவனங்களிடமிருந்து மொத்த கொள்முதல் விலைக்கு *(Bulk Consumer Price)* கொள்முதல் செய்யபட்டது. இந்நிலையில் கடந்த 2022 ஆம் ஆண்டு மத்திய அரசு ஆயில் நிறுவனங்கள் மொத்த கொள்முதல் விலையை *(Bulk Consumer Price)* சில்லறை விற்பனை விலையை *(Retail Price)* விட அதிகப்படுத்தியதால், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஏற்படும் நிதி இழப்பை தவிர்க்க மத்திய அரசு ஆயில் நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சில்லறை விற்பனை விலைக்கு டீசல், மற்றும் பெட்ரோல் கொள்முதல் செய்ய ஆணை பெறப்பட்டது.

மன்றத் தீர்மான எண்.121, 30.05.2022 நாளிட்ட பின்னேற்பு அனுமதியின்படி மத்திய அரசு ஆயில் நிறுவனத்தார் நிர்ணயிக்கும் எரிபொருள் மொத்த கொள்முதல் விலை, *(Bulk Consumer Price)*, சில்லறை விற்பனை விலையைக் *(Retail Price)* காட்டிலும் அதிகமாக இருக்கும் வரை மத்திய அரசு ஆயில் நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சில்லறை விற்பனை விலைக்கு கொள்முதல் செய்ய ஆணை பெறப்பட்டுள்ளது.

மன்றத் தீர்மான எண்.564/2024, நாள்.31.12.2024-ன்படி, மண்டலம் 11 முதல் 15 லாரி நிலையங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்கும் மற்றும் இதர துறை பயன்பாட்டிற்கும் ஜனவரி 2025 முதல் டிசம்பர் 2025 வரை 12 மாத காலத்திற்கு 1051 KL கொள்முதல் செய்ய ரூ.9,66,70,980/-க்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு டீசல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. அதன்படி தற்போது வரை 768 KL டீசல் கொள்முதல் செய்யப்பட்டு, ரூ.7.06 கோடி வரை, நிர்வாக அனுமதியில் பயன்படுத்தப்பட்டு மீதம் ரூ.2.60 கோடி பின்வரும் மாதங்களுக்கு (அக்டோபர், நவம்பர், டிசம்பர்) டீசல் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதியில் மீதம் உள்ளது.

மேலே கூறப்பட்டுள்ள, நிர்வாக அனுமதி டிசம்பர் 2025 வரை பெறப்பட்டுள்ளதால், மேற்கொண்டு ஜனவரி 2026 முதல் அக்டோபர் 2026 வரையிலான 10 மாதங்களுக்கு மண்டலம் 13 லாரி நிலைய எரிபொருள் வழங்கும் நிலையத்திற்கு தெற்கு வட்டாரத்திற்குட்பட்ட மண்டலம் 11 முதல் 15 வரையிலான வாகனங்களுக்கு தேவையான டீசல் கொள்முதல் செய்ய மன்றத்தின் நிர்வாக அனுமதி பெற வேண்டியுள்ளது.

கடந்த ஆண்டு செப்டம்பர் *2024* முதல் ஆகஸ்ட் *2025* வரையிலான *12* மாதத்திற்கு, தென்சென்னை வட்டாரத்திற்கு உட்பட்ட மண்டலம் *11* முதல் *15* வரையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கும் மற்றும் இதர பயன்பாட்டிற்காக பராமரிக்கப்படுகின்ற பல்வேறு வாகனங்களுக்கும், ஆய்வு வாகனங்களுக்கும் மற்றும் கொசு ஒழிப்பு மருந்து புகை பரப்பும் பணிக்கும் வழங்கப்பட்ட மொத்த டீசல் எரிபொருள் அளவின்படி நாளொன்றிற்கு தோராயமாக ***3000*** லிட்டர் டீசல் எரிபொருள் தேவைப்படும் என கணக்கிடப்பட்டுள்ளது.

மேலும், மண்டலம் *13* லாரி நிலையத்தில் டீசல் சேமிப்பு தொட்டி நிறுவிய இந்திய அரசு நிறுவனமான திருவாளர். பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்தார் மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளரை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு டீசல் எரிபொருள் வழங்குவதற்கு தற்போதைய விலை விகிதத்தை தெரிவிக்குமாறு அவர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. இந்நிறுவனங்கள் அளித்த விலைப்புள்ளியின் விபரங்கள் பின்வருமாறு:

| பொருள் விவரம் | நிறுவனம் | *1 KL* க்கான தொகை *(15/09/2025* நிலவரப்படி*)*ரூபாய் |
|---|---|---|
| டீசல் | திருவாளர். பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் வழங்கியுள்ள விற்பனை விலை *(Bulk Consumer Price)* | **ரூ**- *91984.94* விற்பனை (அனைத்து வரிகள் உட்பட*) = Rs. 91.985/- (per Ltr)* |
| | தற்போது மத்திய அரசு ஆயில் நிறுவனம் நிர்ணயித்துள்ள சில்லறை விற்பனை விலை *(Retail Price)* | ரூ.*92,400* விற்பனை (அனைத்து வரிகள் உட்பட*)= Rs. 92.40/-(per Ltr)* |

மேற்கண்ட அட்டவணையின்படி குறைந்த விலைப்புள்ளியான *M/s. BPCL* நிறுவனத்தாரின் நேரடி கொள்முதல் விலையான *(Bulk consumer price) /* மொத்த விற்பனை விலை ஒரு லிட்டருக்கு ரூ.*91.985* அடிப்படையாக கொண்டு நாளொன்றிற்கு தோராயமாக *3000* வீதம் ஜனவரி *2026* முதல் அக்டோபர் *2026* வரையிலான *10* மாத காலத்திற்கு *(304* நாட்களுக்கு*)* டீசல் எரிபொருள் கொள்முதல் செய்வதற்கான செலவீனம் மொத்தம் ரூ.*8,38,90,320/-* ஆகும் என கீழ்கண்டவாறு கணக்கிடப்படுகிறது.

| எரிபொருள் விவரம் | 1 KL க்கான தொகை (15.09.2025 நிலவரப்படி) ரூபாய் | நாளொன்றிற்கு தேவைப்படும் டீசல் அளவு | ஜனவரி 2026 முதல் அக்டோபர் 2026 வரையிலான 10 மாத காலத்திற்கு (304 நாட்களுக்கு) தேவைப்படுகின்ற டீசல் அளவு | ஜனவரி 2026 முதல் அக்டோபர் 2026 வரையிலான 10 மாத காலத்திற்கு (304 நாட்கள்) டீசல் கொள்முதல் செய்வதற்கான மொத்த தொகை |
|---|---|---|---|---|
| டீசல் (HSD) | ரூ.91.985/- விற்பனை (அனைத்து வரிகள் உட்பட) | **3000** LTS | **912** KL<br>(**304 DAYS X 3000** LTS) | (**912** KL X RS.**91,985**)<br>ரூ.**8,38,90,320/-** |

மேற்கண்ட விலைப்புள்ளிகள், மத்திய அரசின் ஆயில் நிறுவனங்கள் அவ்வப்போது அறிவிக்கும் விலை உயர்வுக்கு உட்பட்டது என்றும், கொள்முதல் செய்வதற்கான விற்பனை தொகையை முன்பணமாக செலுத்த வேண்டும் எனவும், திருவாளர் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்தார் மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர் நிபந்தனை தெரிவித்துள்ளார்கள். இந்நிறுவனம் மத்திய அரசு நிறுவனம் என்பதால், மத்திய அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலைப்புள்ளிகளின்படி டீசல் வழங்கி வருவதால், கொள்முதல் செய்யும் நாளில் அமலில் உள்ள விலைப்புள்ளியை ஏற்கலாம் என கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, ஜனவரி 2026 முதல் அக்டோபர் 2026 வரையிலான 10 மாதங்களுக்கு (304 நாட்களுக்கு), தெற்கு வட்டாரத்திற்குட்பட்ட மண்டலங்களில் பராமரிக்கப்படும் வாகனங்களுக்கும் மற்றும் இதர பயன்பாட்டிற்காகவும் தேவையின் அடிப்படையில் டீசல் எரிபொருள் மண்டலம் 13 லாரி நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள டீசல் வழங்கும் நிலையம் மூலம் வழங்க தோராயமாக கணக்கிடப்பட்ட 912 கிலோ லிட்டர் டீசல் எரிபொருளை (தோராயமாக) மொத்த தொகையான ரூ.8,38,90,320/- (ரூபாய் எட்டு கோடியே முப்பது எட்டு இலட்சத்து தொண்ணூறு ஆயிரத்து முந்நூற்று இருபது மட்டும்) செலவினத்தில் தேவைக்கேற்ப கொள்முதல் செய்யும் நாளில் அமலில் உள்ள மொத்த கொள்முதல் விலை சில்லறை விற்பனையை காட்டிலும் குறைவாக இருக்கும் வரை மத்திய அரசு ஆயில் நிறுவனமான திருவாளர். பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து நேரடியாக மொத்த கொள்முதல் விலைக்கும் *(Bulk Consumer Price)* மற்றும் மொத்த கொள்முதல் விலை, சில்லறை விலையினை காட்டிலும்

அதிகமாகும் போது திருவாளர் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் பரிந்துரைக்கும் அங்கீகரிக்கப்பட்ட முகவரிடமிருந்து சில்லறை விற்பனை விலைக்கும் *(Retail Price)* கொள்முதல் செய்யலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், மத்திய அரசு நிறுவனமான திருவாளர். பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும் அவர்கள் பரிந்துரைக்கும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்துக்கு பிணை வைப்புத்தொகை மற்றும் பாதுகாப்பு தொகை செலுத்துவதில் இருந்தும், உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இதற்கான செலவினத்தினை இயந்திரபொறியியல் துறை வட்டார அலுவலகம் தெற்கு பிரிவு குறியீட்டு எண் 40-*41-05* மற்றும் கணக்கு குறியீட்டு எண்: *230-20-03-06* எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட கணக்கு தலைப்பின் கீழ் *2025-2026* மற்றும் *2026-2027* ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. தெற்கு வட்டாரத்திற்கு உட்பட்ட மண்டலம்-11, 12, 13, 14, 15ல் பராமரிக்கப்படும் வாகனங்கள் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் இயங்கும் உபகரணங்களுக்கும், சிறப்பு உபகரணங்களுக்கும் தெற்கு வட்டார ஆய்வு வாகனங்களுக்கும், கொசு ஒழிப்பு புகை பரப்பும் இயந்திரங்களுக்கும் மற்றும் இதர பயன்பாட்டிற்கும் தேவையின் அடிப்படையில் மண்டலம் 13 லாரி நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள டீசல் வழங்கும் நிலையம் மூலம் ஜனவரி 2026 முதல் அக்டோபர் 2026 வரையிலான மாதங்களுக்கு 912 கிலோலிட்டர் டீசல் எரிபொருளை மொத்த தொகையான ரூ.8,38,90,320/- (ரூபாய் எட்டு கோடியே முப்பது எட்டு இலட்சத்து தொண்ணூறு ஆயிரத்து முந்நூற்று இருபது மட்டும்) மிகாமல் கொள்முதல் செய்யும்போது அமலில் உள்ள மொத்த கொள்முதல் விலை சில்லறை விற்பனையை காட்டிலும் குறைவாக இருக்கும் வரை மத்திய அரசின் ஆயில் நிறுவனமான திருவாளர். பாரத் பெட்ரோலியம் கார்பரேஷன் நிறுவனத்திடமிருந்து *(M/S.BPCL)* நேரடியாக மொத்த கொள்முதல் விற்பனை விலைக்கும் *(B*ulk Consumer *Price)* மற்றும் மொத்த கொள்முதல் விலை சில்லறை விலையினை காட்டிலும் அதிகமாகும் போது திருவாளர். பாரத் பெட்ரோலியம் கார்பரேஷன் நிறுவனம் பரிந்துரைக்கும் முகவரிடமிருந்து சில்லறை விற்பனை விலைக்கும் *(R*etail *Price)* கொள்முதல் செய்ய மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டியும்,

2. மத்திய அரசு நிறுவனமான திருவாளர். பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர் கோரிய படி ஜனவரி 2026 முதல் அக்டோபர் 2026 வரையிலான 10 மாத காலத்திற்கு (304 நாட்களுக்கு) அவ்வப்போது ஏற்படும் தேவையின் அடிப்படையில் டீசல் கொள்முதல் செய்ய உள்ள எரிபொருள் அளவிற்கு உரிய தொகையினை முன்பணமாக வழங்கிடவும்,

3. மண்டலம்-13 லாரி நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள டீசல் வழங்கும் நிலையத்திற்கு அவ்வப்பொழுது தேவைப்படுகின்ற டீசல் எரிபொருளை மொத்த தொகையான ரூ.8,38,90,320/-(ரூபாய் எட்டு கோடியே முப்பது எட்டு இலட்சத்து தொண்ணூறு ஆயிரத்து முந்நூற்று இருபது மட்டும்)க்கு மிகாமல் மேற்பார்வை பொறியாளர் (தெற்கு) அவர்களின் ஆணை பெற்று, திருவாளர் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர் நிறுவனத்திற்கு RTGS மூலம் முன்பணமாக செலுத்தி கொள்முதல் செய்ய அனுமதி வேண்டியும்,

4. மேற்கண்ட செலவினத்தினை இயந்திரபொறியியல் துறை வட்டார அலுவலகம் தெற்கு பிரிவு குறியீட்டு எண்.40-41-05 மற்றும் கணக்கு குறியீட்டு எண்: 230-20-03-06 எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட கணக்கு தலைப்பின் கீழ் 2025-2026 மற்றும் 2026-2027 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், மேற்கொள்ளவும்,

5. திருவாளர். பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்தார் மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திற்கு பிணை வைப்பு தொகை, பாதுகாப்பு தொகை செலுத்துவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கவும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.177/2025, நாள்.23.10.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“27.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.536/2025, நாள்.27.10.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

<u>வ.து.ந.க.எண்.ஆர்1/03712/2025</u>

**தீர்மான எண்: 1131/2025** **பொருள் எண்.51**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய் துறை - வணிக வளாகங்களின் பிரச்சனைகளை தீர்க்க வழிகாட்டு குழு மற்றும் மண்டல துணைக் குழுக்கள் அமைக்க அரசாணை பெறப்பட்டது - அரசாணை விவரம் மன்றத்தின் தகவல் மற்றும் பதிவிற்கு.</u>**

அரசாணை (நிலை)எண்.*103*, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ-*2*) துறை, நாள். *16.06.2025* -ல் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கடைகள் மற்றும் வணிக வளாகங்களில் வாடகை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை தீர்ப்பதற்கு கீழ்கண்டவாறு நெறி முறைகளை வகுத்து அரசு ஆணையிட்டுள்ளது.

*7 (i)* பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கடைகள், வணிக வளாகங்கள் மற்றும் சந்தைகள் ஆகிய பொது வணிகப் பயன்பாட்டு சொத்துக்கள் அமைந்துள்ள இடங்களில் மேற்கொள்ளப்படும் பொது சுகாதாரப் பணிகள் மற்றும் பராமரிப்பு பணிகளை தனியார் ஒப்பந்ததாரர் மூலம் குத்தகை / உரிமதாரர்களின் பங்களிப்புடன் உரிய வழிகாட்டுதல்களை பின்பற்றி செயல்படுத்தலாம்

*(ii).* பெருநகர சென்னை மாநகராட்சி குத்தகை / உரிமதாரர்களிடம் செய்து கொள்ளப்படும் வாடகை ஒப்பந்த பத்திரங்களை உரிமதாரர்களின் செலவில் இணைய வழியில் *(Online) The Tamil Nadu Regulation of Rights and Responsibilities of Landlords and Tenancy Act, 2017 )* (தமிழ்நாடு சட்டம் *42/2017)* கீழ் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மேற்கொள்வது போன்று எளிய முறையில் பதிவு செய்யும் நடைமுறையை செயல்படுத்தலாம். மேலும், *2024-25* ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டு

தொடரும் குத்தகை இனங்களின் குத்தகை / உரிமதாரர்களின் வாடகை ஒப்பந்த பத்திரங்களையும் விடுதலின்றி பதிவு செய்யலாம்.

(iii). பொதுப்பணித்துறை விலை விகிதப்படி வாடகை நிர்ணயம் செய்யும் பொழுது கட்டிடத்தின் தளத்தினை அடிப்படையாகக் கொண்டு தரை தளத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட மதிப்பிலிருந்து 10% முதல் தளத்திற்கும், இரண்டாவது தளத்திற்கு 15% மற்றும் 3-வது தளம் மற்றும் அதற்கு மேல் உள்ள தளங்களுக்கு 25% வரை என ஒவ்வொரு தளத்திற்கும் ஏற்ற முறையில் உரிய விகிதாசார அடிப்படையில் வாடகை மதிப்பினை குறைத்து நிர்ணயித்து ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையினை மேற்கொள்ளலாம்.

(iv) கட்டிடத்தின் அமைவிடத்தினை பொறுத்து, அதாவது முகப்பு பகுதியை தவிர மையப்பகுதி, நேரடியாக அணுக முடியாத கடைசியில் உள்ள பகுதி மற்றும் பொதுக் கழிப்பறைக்கு அருகில் உள்ள இனங்களுக்கு பொதுப்பணித்துறை விலை விகிதப்படி நிர்ணயிக்கப்பட்ட வாடகை மதிப்பு தொகையிலிருந்து 10% முதல் 20% வரை குறைவு செய்து மதிப்பு நிர்ணயம் செய்யலாம்.

(v). பெருநகர சென்னை மாநகராட்சியால் நிர்ணயிக்கப்படும் குறைந்தபட்ச குத்தகை / உரிமத் தொகையை விட 100 சதவிகிதத்திற்கும் கூடுதலாக குத்தகை / உரிம இனங்களுக்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரும் நிலையில், 151% முதல் 250% வரை கோரப்படும் நேர்வுகளில், வைப்புத் தொகையை 2 மடங்காகவும், 250% முதல் 350% வரை கோரப்படும் நேர்வுகளில் 3 மடங்காகவும். ஒவ்வொரு கூடுதல் 100 சதவிகிதத்திற்கும் ஒரு மடங்கு வைப்புத் தொகை உயர்த்தி கூடுதல் வைப்புத் தொகை நிர்ணயம் செய்யப்படலாம். அனைத்து குத்தகை இனங்களுக்கும் பெறப்படும் வைப்புத் தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ஆகியவற்றிற்கு 50 சதவிகிதத்திற்கும் மிகாமல் உள்ள தொகைக்கு சொத்து மதிப்பு சான்றிதழ் (Property Solvency Certificate) பெறுவதற்கு பதில், வங்கி உத்திரவாதச் சான்றிதழ் (Bank Guarantee Certificate) பெறபடலாம்.

(vi). குத்தகை இனங்களில் குத்தகைக்காலம் முடிய உள்ள ஆண்டின் கடைசி ஆறு மாத காலத்திற்குள் அதாவது 3 ஆண்டு உரிம இனங்களுக்கு 2½ ஆண்டிலும், 6 ஆண்டு குத்தகை இனங்களுக்கு 5½ ஆண்டிலும், 9 ஆண்டு குத்தகை இனங்களுக்கு 8½ ஆண்டிலும், வாடகை மறு நிர்ணயக்குழு குத்தகைதாரர்களோடு ஆலோசனை நடத்தி மறு நிர்ணயம் செய்யப்படும் தொகையினை ஏற்கனவே அனுபோகத்தில் உள்ள குத்தகைதாரர் / உரிமதாரர் ஏற்றுக் கொள்ளும் நிலையில் உரிமத்தினை புதுப்பித்து உத்தரவு வழங்க வேண்டும். சம்மத கடிதம் வழங்கப்படாத நிலையில் இவ்வினங்களுக்கு புது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையினை 6 மாத காலத்திற்குள் முடிக்கும் வகையில் மேற்கொண்டு உரிய காலத்தில் உரிமம் / குத்தகை ஒப்படைக்க வேண்டும்.

*(vii).* தொடர்ந்து பலமுறை ஏலம் நடத்தியும் (குறைந்தது *4* முறைக்கு மேல் மின்னணு – ஏலம் *(E-Auction)* நடத்தப்பட்டிருக்க வேண்டும்) நிர்ணயம் செய்த தொகைக்கு யாரும் ஏலம் கோரப்படாத குத்தகை / உரிம இனங்களில் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டு ஏலம் கோரப்பட்ட தொகையிலிருந்து *10%* தொகை குறைத்து மறு ஏலம் கோரலாம். அதற்கு மேல் குறைக்கப்பட வேண்டிய சூழல் உள்ள நிலையில், உரிய காரணங்களை தெரிவித்து மாநகராட்சி ஆணையரின் அனுமதி பெற்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

*(viii).* ஒன்பது ஆண்டு குத்தகை இனங்களில் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை *15%* உயர்வு செய்வதற்கு பதிலாக ஒவ்வொரு ஆண்டும் சீராக *5%* என உயர்வு செய்து குத்தகை தொகையினை வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

*(ix).* புதிய வணிகப் பயன்பாட்டுக் கட்டிடங்கள் மற்றும் குத்தகை காலம் முடிவுற்ற பின்னர் வாடகை மறுநிர்ணயம் செய்யும் இனங்களுக்கு பொதுப்பணித்துறை விலை விகிதம் மற்றும் அங்காடி மதிப்பு அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யும் பொழுது பொதுப்பணித் துறை மதிப்பானது அங்காடி மதிப்பை *(Market Rate)* விட *25* சதவிகிதத்திற்கும் கூடுதலாக உள்ள நிலையில், அங்காடி மதிப்பினையும், *25* சதவிகிதத்திற்கும் குறைவாக உள்ள நிலையில் இவற்றில் எது அதிகமோ அதனையும் நிர்ணயம் செய்து ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையினை மேற்கொள்ளலாம்.

*(x).* பயன்பாட்டிலுள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான கட்டிடங்களை இடித்து புதிதாக கட்டிடங்கள் கட்டி ஏற்கனவே உள்ள குத்தகைதாரர் / உரிமதாரர்களுக்கு ஒப்படைக்கும் நிலையில், அவர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் *(Memorandum of Understanding)* செய்து அதே வளாகத்தில் உள்ள கடைகளை பொது ஏலத்தில் ஒப்படைப்பு செய்யும் இனங்களின் மொத்த கடைகளின் சராசரி வாடகை மதிப்பினை *( Average value of open tender)* வாடகையாக நிர்ணயம் செய்து குலுக்கல் முறையில் வெளிப்படைத்தன்மையுடன் ஒப்படைப்பு செய்யலாம். இவ்வாறு ஒப்படைப்பு செய்யும் நிலையில் ஏற்கனவே அனுபோகத்தில் உள்ள குத்தகைதாரருக்கு கீழ்கண்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் நிலையில் அவர்களுக்கு ஒப்படைப்பு செய்யலாம்.

**(அ)** இருமுறையாவது ஏலம் புதுப்பிக்கப்பட்டு *18* ஆண்டுகளுக்கு மேலான அனுபோகத்தில் உள்ள குத்தகைதாரர்/உரிமதாரர் அல்லது குத்தகைதாரர்/உரிமதாரர்களின் வாரிசுதாரர்.

**(ஆ)** உள்வாடகை/ஆக்கிரமிப்புதாரர் அல்லாதவர்.

*(இ)* பிற வளர்ச்சித் திட்டப்பணிகளுக்காக கடைகள் இடமாற்றம் செய்யப்படும் நிலையில் குத்தகைதாரர்களுக்கும் மேற்கூறிய தகுதியின் அடிப்படையில் கடைகள் / சொத்துக்கள் ஒப்படைக்கலாம்.

*(ஈ)* இணைந்து தொழில் நடத்தும் *(joint venture)* குத்தகைதாரர்கள் (ஏல பதிவேட்டின் படி அவர்கள் பெயர் பதிவு செய்திருக்கும் நிலையில் மட்டும்)

*(xi).* தற்போது *9* ஆண்டுகள் நிறைவடைந்து வாடகை மறு நிர்ணயம் செய்யபட்டுள்ள கடைகளில் *5* மடங்கிற்கு மேல் வாடகை உயர்வு செய்யப்பட்டுள்ள இனங்களில் பெருமளவு தொகை செலுத்தப்படாமல் வழக்குகள் தொடரப்பட்டு மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதை தவிர்க்க இனங்கள் வாரியாக கண்டறிந்து தீர்வு காணும் வகையில் மண்டல அளவில் துணைக் குழுக்கள் அமைக்கலாம்.

*(xii).* பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையகத்தில் வழிகாட்டுதல் குழு மற்றும் மண்டல அளவில் மண்டல துணைக் குழுக்கள் தொடர்ந்து செயல்படலாம் என்றும், மேலும் மண்டல துணைக்குழுவில் தலா ஒரு வணிகர் சங்க மாவட்ட நிர்வாகியை அலுவல் சாரா உறுப்பினராக சேர்த்துக் கொள்ளலாம்.

*(xiii).* மண்டல துணைக் குழுக்களில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளை பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்றத்தில் பொருள் வைத்து ஒப்புதல் பெற்று முடிவு செய்யலாம்..

*(xiv).* மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனை / நெறிமுறைகளுக்கு மாறாக மாநகராட்சியில் ஏதேனும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டிய நிலையில் ஆணையாளரின் அனுமதி பெற்ற பின்னரே அவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன் மூலம் குத்தகை / வாடகை இனங்கள் தொடர்பான குறைகள் மற்றும் வேறுபாடுகளை வழிகாட்டுதல் குழு மற்றும் மண்டல துணைக் குழுக்கள் அளவிலேயே தீர்வு காணவும், அவ்வாறு தீர்வு காண இயலாத இனங்களில் “ மாநில வழி காட்டுதல் குழு“விற்கு தீர்வு காண பரிந்துரை செய்து அனுப்பப்பட வேண்டும்,.

*8.* பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள கடைகள், வணிக வளாகங்கள் தொடர்பான பிரச்சனைகளை களைவதற்கு அனைத்து மண்டலங்களிலும் பின்வருமாறு மண்டல துணை குழுக்களை அமைக்கவும், தலைமை அலுவலகத்தில் ஒரு “வழிகாட்டுதல் குழு” *(Steering Committee)* அமைக்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.

**(அ) வழிகாட்டுதல் குழு (Steering Committee)**

| வ.எண். | குழுவின் உறுப்பினர்கள் | பதவியின் பெயர் |
|---|---|---|
| 1 | தலைவர் | துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) |
| 2 | கூட்டுநர் | முதுநிலை வருவாய் அலுவலர் (வணிக வளாகங்கள்) |
| 3 | உறுப்பினர்கள் | நகர வருவாய் அலுவலர்<br>நிதி ஆலோசகர்<br>மேற்பார்வை பொறியாளர் ( கட்டிடங்கள்)<br>மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம் மற்றும் உடமைத்துறை) |

**(ஆ) மண்டல துணைக் குழுக்கள்**

| வ.எண். | குழுவின் உறுப்பினர்கள் | பதவியின் பெயர் |
|---|---|---|
| 1 | தலைவர் | சம்பந்தப்பட்ட மண்டலத்தின் மண்டல அலுவலர் |
| 2 | கூட்டுநர் | மண்டலத்தின் முதுநிலை வருவாய் அலுவலர் |
| 3 | உறுப்பினர்கள் | மண்டல செயற் பொறியாளர்<br>மண்டல கணக்கு அலுவலர்<br>சம்பந்தப்பட்ட வார்டின் உதவி செயற் பொறியாளர்<br>சம்பந்தப்பட்ட வார்டின் உரிமம் ஆய்வாளர் |

மேற்குறிப்பிட்ட அரசாணையின் விவரம், நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

“27.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.532/2025, நாள்.27.10.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது. ”

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**வதுந.க.எண்.எஸ்யூஎஸ்வி/1008-37/2025**

**தீர்மான எண்: 1132/2025** **பொருள் எண்.52**

**பெருநகர சென்னை மாநகராட்சி – வருவாய் துறை - நகர விற்பனைக் குழு - சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதாரப் பாதுகாப்பு மற்றும் சாலையோர வியாபாரத்தினை ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம், 2014, திட்டம் & விதிகள் 2015-ன்படி ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு நகர விற்பனைக் குழு அமைக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது – அரசாணை மன்றத்தின் தகவலுக்காக.**

சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதாரப் பாதுகாப்பு மற்றும் சாலையோர வியாபாரத்தினை ஒழுங்கு முறைப்படுத்துதல்) சட்டம், 2014, திட்டம் & விதிகள் 2015ன்படி வழங்கப்பட்ட அரசாணை (4D) எண்.23, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந-2) துறை, நாள் 16.05.2025னைத் தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு நகர விற்பனைக் குழு அமைக்க மன்றத் தீர்மானம் எண்.641/2025, நாள் 28.05.2025ன்படி ஒவ்வொரு மண்டலத்திலும் சாலையோர வியாபாரிகளிலிருந்து ஆறு உறுப்பினர்களைத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேலும், ஆணையாளரின் பரிந்துரையின்படி ஒவ்வொரு மண்டலத்திற்கும் நான்கு நியமன உறுப்பினர்களை தேர்வு செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டதில் ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு நகர விற்பனைக் குழு அமைக்கப்பட்டு 07.10.2025 நாளிட்ட அரசாணை (4D) எண்.46, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்

*(MC.2)* துறையால் வழங்கப்பட்டு ஆணையர் அவர்களின் 7.10.2025 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணையின்படி, பின்வரும் அமைப்பின்படி ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு நகர விற்பனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | தலைவர் / உறுப்பினர் | விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | தலைவர் (CHAIRPERSON) | சம்மந்தப்பட்ட வட்டார துணை ஆணையர் (REGIONAL DEPUTY COMMISSIONER CONCERNED) | 1 |
| 2 | உள்ளாட்சி அமைப்பின் நல அலுவலர் (A MEDICAL OFFICER OF THE LOCAL AUTHORITY) | மண்டல நல அலுவலர் ZONAL HEALTH OFFICER | 1 |
| 3 | போக்குவரத்து காவல் உட்பட்ட காவல் துறை அதிகாரிகள் POLICE OFFICERS INCLUDING POLICE IN-CHARGE OF TRAFFIC | காவல் துறை உதவி ஆணையர் (சட்டம் & ஒழுங்கு), காவல் துறை உதவி ஆணையர் (போக்குவரத்து) ASSISTANT COMMISSIONER OF POLICE (LAW & ORDER) ASSISTANT COMMISSIONER OF POLICE (TRAFFIC) | 2 |
| 4 | உள்ளாட்சி அமைப்பிலிருந்து ஒரு அதிகாரி AN OFFICER FROM THE LOCAL AUTHORITY CONCERNED | மண்டல செயற்பொறியாளர் (முதுநிலை) ZONAL EXECUTIVE ENGINEER (SENIOR) | 1 |
| 5 | சாலையோர வியாபாரிகளின் பிரதிநிதிகள் REPRESENTATIVES OF STREET VENDORS | விதி 12 & 13-ன்படி தேர்தல் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் AS PER RULES 12 & 13 OF THE RULES, 2015 TO BE ELECTED THROUGH ELECTION. | 6 |
| 6 | வியாபாரிகள் சங்கத்தின் பிரதிநிதி | விதி 11 (3)-ன்படி தேர்தல் மூலம் | |

<table>
<tr><td></td><td>REPRESENTATIVES OF TRADERS ASSOCIATION</td><td rowspan="3">தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் நீங்கலாக ஆணையாளரால் பரிந்துரை செய்யப்பட வேண்டும்.<br><br>AS PER RULE 11 (3) OF THE TAMIL NADU STREET VENDORS (PROTECTION OF LIVELIHOOD AND REGULATION OF STREET VENDING) RULES, 2015, "THE MEMBERS OF THE TOWN VENDING COMMITTEE, EXCEPT THE MEMBERS ELECTED FROM THE STREET VENDORS SHALL BE NOMINATED BY THE COMMISSIONER OF CORPORATION OF CHENNAI."</td><td>1</td></tr>
<tr><td>7</td><td>அரசு சாரா அமைப்பு மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்பின் பிரதிநிதிகள்<br><br>REPRESENTATIVES OF NON-GOVERNMENTAL AND COMMUNITY BASED ORGAN IZATIONS</td><td>2</td></tr>
<tr><td>8</td><td>குடியிருப்போர் நல சங்கத்தின் பிரதிநிதி<br><br>REPRESENTATIVES OF RESIDENT WELFARE ASSOCIATION</td><td>1</td></tr>
</table>

அரசாணை *(4D)* எண்.*46*, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் *(MC.2)* துறை, நாள்.*07.10.2025*-ன்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் மேற்கண்ட அமைப்பின்படி ஒவ்வொரு மண்டலத்திலும் ஒரு நகர விற்பனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது என்ற தகவல் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

"27.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.533/2025, நாள்.27.10.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது. "

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**ம.அ.5வது.ந.க.எண்.ஆர்1 /1755/2024**

**தீர்மான எண்: 1133/2025** **பொருள் எண்.53**

**பெருநகர சென்னை மாநகராட்சி - குத்தகை வாடகை - மண்டலம்-5, வார்டு-57, புதிய பல்நோக்கு கட்டிடம் - எண்.284, வால்டாக்ஸ் சாலை, சென்னை-79 – முதல் தளத்தினை மாத வாடகையின் அடிப்படையில் அன்னை தயாளு அம்மாள் டிரஸ்ட் தொண்டு நிறுவனத்திற்கு இட ஒதுக்கீடு செய்தது - தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகளின்படி மாத வாடகை நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி.**

அன்னை தயாளு அம்மாள் டிரஸ்டின் தலைவரது 10.07.2025 தேதியிட்ட கடிதத்தில், சென்னை-600 079, சௌகார்பேட்டை, வால்டாக்ஸ் சாலை, எண்.284-ல் புதிதாக கட்டப்பட்ட கட்டிடத்தின் 1வது தளத்தினை வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பொது மக்கள் மற்றும் ஏழை, எளிய மாணவ, மாணவியர்களுக்கு இலவச கணினி மற்றும் தையல் பயிற்சி வகுப்பு நடத்த மாத வாடகை அடிப்படையில் 3 ஆண்டு காலத்திற்கு வழங்குமாறு கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் மேற்படி தயாளு அம்மாள் டிரஸ்ட்டு நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்வதற்கு மண்டலம்-5ன் சார்பாக வாடகை நிர்ணயம் செய்ய குழு அமைக்கப்பட்டு கள ஆய்வு மேற்கொண்டு மாத வாடகையாக ரூ-7500/- நிர்ணயம் செய்து மண்டலம்-5ன் வார்டுக்குழு மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலம் மன்றத் தீர்மானம் 30.07.2024 அன்று பெறப்பட்டுள்ளது.

எண்.284, வால்டாக்ஸ் சாலை, சௌகார்பேட்டை, சென்னை-79. என்ற முகவரியில் மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்களின் 2023-24ஆம் ஆண்டுக்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்டுள்ள புதிய பல்நோக்கு கட்டிடத்தின் முதல் தளத்திற்கு சதுர அடி ஏதும் குறிப்பிடப்படாமல் மாத வாடகையாக ரூ.7500/- நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால், தற்போதைய தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்ட விதிகள் 2023, உட்பிரிவு 316ன்படி, மாத வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டியுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் விதிகள், 2023, விதி எண்.316 (6)ல், *The auction floor price shall be fixed as below :-*

| | |
|---|---|
| *Building - commercial other than shopping complexes or public markets* | *Commercial Annual Rental Value as decided for Property Tax assessments.* |

அதன்படி, மண்டலம்-5, பகுதி-13, வார்டு.57க்கு உட்பட்ட, சென்னை-600 079, சௌகார்பேட்டை, வால்டாக்ஸ் சாலை, எண்.284 என்ற முகவரியில் உள்ள கட்டிடம் துறைமுகம் சட்டமன்ற உறுப்பினரது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்டுள்ள பல்நோக்கு கட்டிடத்தின் 1வது தளம் சுமார் 1248 சதுர அடி பரப்பளவு கொண்ட இடத்திற்கு பின்வருமாறு வாடகை நிர்ணயம் செய்யப்படவேண்டும்.

<u>வாடகை கணக்கீட்டுத் தாள்</u>

<u>முதல் தளத்தில் கட்டிடத்தின் பரப்பளவு - 1248 சதுர அடி.</u>

<u>மாத வாடகை நிர்ணய சூத்திரம் *(Formula for Monthly rent fixation)*</u>

$$\frac{\text{பரப்பளவு } X \text{ தெருக்களுக்கான அடிப்படை கட்டணம் } X\ 10.92}{12}$$

$$= \frac{1248 \ X\ 11.25\ X\ 10.92}{12} = \frac{1,53,316.80}{12}$$

= 12776.40 (Rounded off = Rs.12,780/-)

மாத வாடகை ரூ. 12,780/-

மேலே குறிப்பிட்டுள்ள முதல் தளத்திலுள்ள சுமார் 1248 சதுர அடிக்குண்டான மாத வாடகை ரூ.12,780/- + 2300 (18% சரக்கு மற்றும் சேவை வரி – அவ்வப்பொழுது மாற்றத்திற்கு உட்பட்டது) ஆக மொத்தம் ரூ.15,080 ஆகும். இதற்கான 1 வருடத்திற்கான முன்பணம் ரூ.1,53,360/- முன்பணத் தொகையினை வரைவோலையாக ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி என்ற பெயரில் வழங்கப்படவேண்டும்.

எனவே, ஏற்கனவே பெறப்பட்டுள்ள மன்றத் தீர்மான எண்.245, நாள். 30.07.2024ல் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, பகுதி-13, வார்டு-57க்குட்பட்ட, சென்னை-600 079, சௌகார்பேட்டை,

வால்டாக்ஸ் சாலை, எண்.284 என்ற முகவரியில் உள்ள துறைமுகம் சட்டமன்ற உறுப்பினரின் 2023-24ஆம் நிதி ஆண்டுக்கான தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட கட்டிடத்தில் சுமார் 1248 சதுர அடி கொண்ட முதல் தளத்தில் உள்ள பல்நோக்கு கட்டிடத்திற்கு சதுர அடி குறிப்பிடாமல் மாத வாடகை ரூ.7500/- என நிர்ணயம் செய்யப்பட்டதை தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் விதிகள் 2023, விதி எண்.316 (6)ன்படி, மாத குத்தகை வாடகை ரூ.12780/- + 2300 (18% சரக்கு மற்றும் சேவை வரி) ஆக மொத்தம் ரூ.15,080 (ரூபாய் பதினைந்தாயிரத்து எண்பது மட்டும்) மாற்றியமைத்திட, மண்டலம்.5 வார்டு குழுவின் தீர்மானத்தை எதிர்நோக்கி, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"27.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.534/2025, நாள்.27.10.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. "

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ1/2023/2025**

**தீர்மான எண்: 1134/2025** **பொருள் எண்.54**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை -- திரு. த. வேலு, சட்டமன்ற உறுப்பினர், மயிலாப்பூர் தொகுதி அவர்கள் மந்தவெளிப்பாக்கத்தில் உள்ள கிழக்கு வட்டச் சாலைக்கு (East Circular Road) "சீர்காழி கோவிந்தராஜன் சாலை" என பெயரிட கோரியது - மன்றத்தீர்மானம் நிறைவேற்றிட அரசின் அனுமதி பெறப்பட்டுள்ளது - மன்றத்தின் அனுமதி வேண்டுவது.**

திரு. த. வேலு, சட்டமன்ற உறுப்பினர், மயிலாப்பூர் தொகுதி அவர்கள் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கு 30.07.2025 நாளிட்டு அளித்துள்ள மனுவில், மயிலாப்பூர் தொகுதியில் தமிழ் மரபு இசை, திரை இசை மற்றும் நாட்டிய மரபு தழைத்தெழச் செய்த முன்னோடிகளில் ஒருவரும் சிறந்த

வெண்கலக்குரல் வளமிக்க தமிழ்பாடகர் சங்கீத சேவகர் 'பத்மஸ்ரீ சேவகர் சீர்காழி கோவிந்தராஜன்' அவர்களின் நினைவாக மற்றும் தமிழக அரசு சார்பில் அவரது பணிக்கு உரிய தமிழிசை சேவைக்கு அவர் வசித்து வந்த பகுதியான மந்தவெளிப்பாக்கத்தில் உள்ள கிழக்கு வட்டச் சாலைக்கு *(East Circular Road)* **“சீர்காழி கோவிந்தராஜன் சாலை”** என்று பெயரிட பரிந்துரைக்குமாறும் மேலும், இந்த பெயரிடும் முயற்சி ஒரு வரலாற்றுச் செயலாகவும் தமிழ் இசைத்துறையின் பெருமையாகவும் விளங்கும் என கேட்டுக்கொண்டுள்ளார்.

அரசாணை (நிலை) எண்.*98*, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (மா.ந.*6*) துறை, நாள்.*11.07.2022*-ன் வழிமுறைகளை பின்பற்றி மேற்படி இடத்தினை புலத்தணிக்கை மேற்கொண்டு விரிவான அறிக்கையினை உடன் இத்துறைக்கு அனுப்புமாறு உதவி ஆணையர், மண்டலம்-*9* அவர்களுக்கு இவ்வலுவலக *22.09.2025* நாளிட்ட கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

உதவி ஆணையர், மண்டலம்-*9* அவர்களின் *22.09.2025* நாளிட்ட கடிதத்தில், சட்டமன்ற உறுப்பினர் மயிலாப்பூர் தொகுதி அவர்களின் கோரிக்கைக்கிணங்க கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் புலமானது கள ஆய்வு செய்யப்பட்டது என்றும் மந்தவெளிப்பாக்கத்தில் உள்ள கிழக்கு வட்ட சாலைக்கு *(East Circular Road)* **“சீர்காழி கோவிந்தராஜன் சாலை”** என்று பெயரிட பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-*9*, வார்டு-*126*ல் அவர் வசித்து வந்த பகுதியான மந்தவெளிப்பாக்கத்தில் உள்ள கிழக்கு வட்ட சாலைக்கு *(East Circular Road)* **“சீர்காழி கோவிந்தராஜன் சாலை”** என பெயரிட மாமன்றத்தின் தீர்மானம் நிறைவேற்றிட, அரசின் அனுமதி வேண்டி அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களுக்கு இவ்வலுவலக *27.09.2025* நாளிட்ட கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அரசு முதன்மைச்செயலாளர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை அவர்களின் *14.10.2025* நாளிட்ட கடிதத்தில், மண்டலம்-*9*, வார்டு-*126*ல் அவர் வசித்து வந்த பகுதியான மந்தவெளிப்பாக்கத்தில் உள்ள கிழக்கு வட்ட சாலைக்கு *(East Circular Road)* **“சீர்காழி கோவிந்தராஜன் சாலை”** என பெயர் மாற்றம் செய்தல் குறித்த தீர்மானத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்றத்தின் முன் ஒப்புதலுக்கு வைத்திட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்-*9*, வார்டு-*126*ல் அவர் வசித்து வந்த பகுதியான மந்தவெளிப்பாக்கத்தில் உள்ள கிழக்கு வட்ட சாலைக்கு (East Circular Road) **“சீர்காழி கோவிந்தராஜன் சாலை”** என பெயர் மாற்றம்

செய்வதற்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"27.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.535/2025, நாள்.27.10.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. "

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ9/1129/2025**

**தீர்மான எண்: 1135/2025** **பொருள் எண்.55**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம்-8, பகுதி – 22, கோட்டம் – 102, செனாய் நகரில் (அம்மா அரங்கம் பின்புறம்) அகில இந்திய குடிமைப்பணி தேர்வு பயிற்சி மையம் அமைக்க தேர்வு செய்யப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான அமைந்தகரை வட்டம், பிளாக் எண். 14-ல் T.S No.5/15க்குட்பட்ட 4189 சதுர மீட்டர் நிலத்தினை நிலக்கிரயமின்றி நில மாற்றம் செய்யவும், பிளாக் எண். 15-ல் T.S No. 1 க்குட்பட்ட 2770 சதுர மீட்டர் நிலத்தினை வழங்க தடையின்மை சான்று வழங்கவும் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது - திருத்தமாக கூடுதல் நிலம் பிளாக் எண்.14, நகரபுல எண். 5/15 மற்றும் பிளாக் எண்.15, நகரபுல எண். 1/0, 2/0, 16/0-ல் பயிற்சி மையம் அமைத்திட மனித வள மேலாண்மைத் துறைக்கு நில உரிமை மாற்றம் செய்ய (ம) தடையின்மை சான்று வழங்க மன்றத்தின் அனுமதி.**

அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் ***15.05.2025*** நாளிட்ட நேர்முக கடிதத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவிப்பு எண். *TNLAN0.34* நாள். *24.04.2025*-ன் படி பெரியகூடல் நகரத்தில் பிளாக் எண். *14*-ல் *TS No. 5/15* மற்றும் பிளாக் எண். *15*-ல் *TS No. 1* செனாய் நகர் அம்மா அரங்கம், பின்புறம் அமைந்துள்ள இடத்தில் குடிமைப்பணி தேர்வுக்குத் தயாராகக்கூடிய மாணவர்களுக்கு

சென்னை செனாய் நகரில் பயிற்சி மையத்தை நிறுவ மனிதவள மேலாண்மைத் துறைக்கு நில மாற்றம் செய்ய ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மாவட்ட வருவாய் அலுவலர் (பொ), நிலம் மற்றும் உடைமைத்துறை அவர்களிடமிருந்து வரப்பெற்ற தொலைபேசி வழிச்செய்தியின் அடிப்படையில் மேற்கண்ட புலமானது *16.05.2025* அன்று துணை ஆட்சியர் (நிமஉது), தனி வட்டாட்சியர் (நிமஉது), மற்றும் உரிமம் பெற்ற நில அளவர் ஆகியோரால் புலத்தணிக்கையில் மேற்கண்ட பெரியகூடல் நகரத்தில் *BlockNo. 14, TS.No.5/15*-ல் பெருநகர சென்னை மாநகராட்சியின், மின்சார வாகனங்கள் மின்னூட்ட நிலையம். பழுதடைந்த வாகனங்கள் மற்றும் பயன்பாட்டில் அல்லாத கட்டிடங்கள் உள்ளன என்றும், *BlockNo. 15. TSNo.1*-ல் காலியிடமாகவும் பெருநகர சென்னை மாநகராட்சியின் பழுதடைந்த வாகனங்கள் நிறுத்தி வைக்கும் இடமாகவும் உள்ளது என்றும், இப்பொருள் சம்மந்தமாக மண்டல அலுவலர், மண்டலம்-*8* அவர்களிடமிருந்து உரிய முன்மொழிவுகள் பெற்று இதன் மீது மேல் நடவடிக்கை தொடரலாம் என்றும் அறிக்கை வரப்பெற்றுள்ளது.

மாவட்ட வருவாய் அலுவலர்/மண்டல அலுவலர், மண்டலம் – *8* அவர்களின் *17.05.2025* நாளிட்ட கடிதத்தில், பெரியகூடல் கிராமம், பிளாக் எண். *14, T.S.No.5/15 &* பிளாக் எண்.*15, T.S.No. 1* ல் கொண்ட நிலத்தில் சிதலமடைந்த வாகனங்களுக்கான நிறுத்துமிடமாகவும் மற்றும் மின்சார வாகனங்கள் மின்னூட்ட நிலையமாக பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், கள ஆய்வில் பயன்படுத்தப்படாத கட்டிடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது என்றும், இது குறித்து ஆலோசித்து, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-*08*-ல் உள்ள மேற்கூறிய நிலத்தை குறிப்பிட்ட நோக்கத்திற்காக மாற்றுவதற்கு தேவையான நிர்வாக நடவடிக்கைகளைத் தொடங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி, பெருநகர சென்னை மாநகராட்சி சொந்தமான இடத்தினை மனிதவள மேலாண்மைத் துறைக்கு நிலக்கிரயமின்றி நில மாற்றம் செய்யவும் சர்க்கார் புறம்போக்கு நிலத்தை வழங்க பெருநகர சென்னை மாநகராட்சியின் தடையின்மைச் சான்று வழங்கவும், மன்றத்தீர்மான எண்.*659/2025, 28.05.2025* – ஆம் நாளிட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் *2025-2026*-ஆம் ஆண்டிற்கான அறிவிப்பு எண். *34*, நாள்.*24.04.2025*-ன்படி, மண்டலம் – *8*, பகுதி – *22*, வார்டு -*102*, செனாய் நகரில் (அம்மா அரங்கம், பின்புறம்) அமைந்துள்ள இடத்தில் குடிமைப்பணி தேர்வுக்குத் தயாராகக்கூடிய மாணவர்களுக்கு பயிற்சி மையத்தை நிறுவ, சென்னை மாவட்டம், அமைந்தகரை வட்டம், பெரியகூடல் நகரம், பிளாக் எண். *14*-ல், *TS No. 5/15*, ரயத்துவாரி வகைப்பாடு கொண்ட *4,189* சதுர மீட்டர் பரப்பளவுள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தினை மனிதவள மேலாண்மைத் துறைக்கு நிலக்கிரயமின்றி நில மாற்றம் செய்யவும், அமைந்தகரை நகரம், பிளாக் எண். *15* (புல்லா ரெட்டி அவின்யு), *TS No. 1*, சார்க்கார் புறம்போக்கு வகைப்பாடு

கொண்ட 2,770 சதுர மீட்டர் பரப்பளவுள்ள நிலத்தினை மனிதவள மேலாண்மைத் துறைக்கு வழங்க பெருநகர சென்னை மாநகராட்சியின் தடையின்மை சான்று வழங்க மன்றத்தீர்மானம் பெறப்பட்டு, இவ்வலுவலக 09.06.2025 நாளிட்ட கடிதம் மூலம் மனிதவள மேலாண்மைத் துறையின், அரசு முதன்மை செயலாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

அரசு துணைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் 01.07.2025 நாளிட்ட கடிதத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் நீர் வழங்கல் துறை அறிவிப்பு 2025-26 மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் (TNLA எண்.34, தேதி. 24.04.2025) சென்னை செனாய் நகரில் உள்ள நிலத்தை சிவில் சர்வீசஸ் பயிற்சி மையத்தை நிறுவுவதற்காக மாற்றுவதற்கான கோரிக்கையை விடுத்துள்ளதாகவும், அரசு கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, மேற்கூறிய அறிவிப்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கை அறிக்கையை அரசுக்கு உடனடியாக அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மண்டலம் – 8, பகுதி – 22, வார்டு-102, செனாய் நகரில் (அம்மா அரங்கம், பின்புறம்) அமைந்துள்ள இடத்தில் குடிமைப்பணி தேர்வுக்குத் தயாராகக்கூடிய மாணவர்களுக்கு பயிற்சி மையத்தை நிறுவ, சென்னை மாவட்டம், அமைந்தகரை வட்டம், பெரியகூடல் நகரம், பிளாக் எண். 14-ல், TS No. 5/15, ரயத்துவாரி வகைப்பாடு கொண்ட 4,189 சதுர மீட்டர் பரப்பளவுள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தினை மனிதவள மேலாண்மைத் துறைக்கு நிலக்கிரயமின்றி நில மாற்றம் செய்யவும், அமைந்தகரை நகரம், பிளாக் எண். 15 (புல்லா ரெட்டி அவின்யு), TS No. 1, சார்க்கார் புறம்போக்கு வகைப்பாடு கொண்ட 2,770 சதுர மீட்டர் பரப்பளவுள்ள நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சியின் மன்றத்தீர்மான எண். 659/2025, நாள்.28.05.2025-ல் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு அதன் நகலினை அரசு முதன்மை செயலாளர், மனிதவள மேலாண்மைத் துறைக்கு 09.06.2025- நாளிட்ட கடிதம் மூலம் அனுப்பப்பட்டுள்ளது என்ற விவரத்தினை இவ்வலுவலக 18.07.2025 நாளிட்ட கடிதம் மூலம் அரசு துணைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

அரசுச் செயலாளர், மனித வள மேலாண்மைத் (பயிற்சி-1) துறை அவர்களின் 22.09.2025 நாளிட்ட நேர்முகக் கடிதத்தில், மத்திய சென்னை கோட்ட வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் பரிந்துரை செய்தவாறு ஏற்கனவே, சென்னை பெருநகர மாநகராட்சி மன்றத் தீர்மான எண்.659/2025, நாள்.28.05.2025-இன் திருத்தமாக, வருவாய் துறை உட்பிரிவு ஆவணத்தின்படி (கீழே அட்டவணையில் உள்ளபடி) சென்னை மாவட்டம், அமைந்தகரை வட்டம், பெரியகூடல் நகரம், பிளாக் எண்.14-ல் T.S.No.5/15, ரயத்துவாரி வகைப்பாடு கொண்ட 4,716 சதுர மீட்டர் பரப்பளவுள்ள நிலம், பிளாக் எண்.15-ல், T.S.No.1/0, ரயத்துவாரி வகைப்பாடு கொண்ட 2,860 சதுர மீட்டர் பரப்பளவுள்ள நிலம் மற்றும் பிளாக் எண்.15-ல்

*T.S.No.16/0*, ரயத்துவாரி வகைப்பாடு கொண்ட *623* சதுர மீட்டர் பரப்பளவுள்ள நிலம் ஆகிய பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்களை அகில இந்திய குடிமைப் பணி தேர்வு பயிற்சி மையம் கட்டுவதற்கு மனிதவள மேலாண்மைத் துறைக்கு நிலக்கிரயமின்றி நில மாற்றம் செய்யவும், அமைந்தகரை நகராம், பிளாக் எண்.*15*, *T.S.No.2/0*, சார்க்கார் புறம்போக்கு வகைப்பாடு கொண்ட *728* சதுர மீட்டர் பரப்பளவுள்ள சாலை வகைப்பாடுக் கொண்ட நிலத்தினை மனித வள மேலாண்மைத் துறைக்கு வழங்க பெருநகர சென்னை மாநகராட்சியின் தடையின்மைச் சான்றினை *(N.O.C)* மன்றத்தீர்மானத்தின் மூலம் பெற்று வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

| நகரம் | பிளாக் எண் | நகர புல எண் | வகைபாடு | மொத்த பரப்பு | நில உரிமை மாற்ற பரப்பு |
|---|---|---|---|---|---|
| பெரிய கூடல் | 14 | 5/15 | ர.மனை | 0.47.16.0 | 0.47.16.0 |
| பெரிய கூடல் | 15 | 1/0 | ர.மனை | 0.72.25.0 | 0.28.60.0 |
| பெரிய கூடல் | 15 | 2/0 | ச.புற | 0.47.50.0 | 0.07.28.0 |
| பெரிய கூடல் | 15 | 16/0 | ர.மனை | 045.52.0 | 0.06.23.0 |
| நில உரிமை மாற்ற மொத்த பரப்பு | | | | | 0.89.27.0 |

மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிலத்தினை மனித வள மேலாண்மைத் துறைக்கு வழங்க பெருநகர சென்னை மாநகராட்சியின் நில உரிமை மாற்றம் செய்யவும் மற்றும் தடையின்மை சான்று வழங்கிட கூட்டுப் புலத்தணிக்கை மேற்கொண்டு நிலத்தின் புல வரைபடத்துடன் கூடிய விரிவான அறிக்கையினை இத்துறைக்கு அனுப்பிவைக்குமாறு *23.09.2025* நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் உதவி ஆணையர், மண்டலம் - *8* மற்றும் துணை ஆட்சியர்/நி.ம.உ.து (மத்தியம்) அவர்களை கேட்டுக்கொள்ளப்பட்டது.

துணை ஆட்சியர்(வ)/நி.ம.உ.து, மத்திய வட்டார அலுவலகம் அவர்களின் *06.10.2025* நாளிட்ட கடிதத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் நிலம் மற்றும் உடைமைத்துறை அவர்களிடமிருந்து வரப்பெற்ற தொலைப்பேசி வழிச்செய்தியின் அடிப்படையில் மேற்கண்ட புலமானது *23.09.2025* அன்று துணை ஆட்சியர் (நி.ம.உ.து), தனிவட்டாட்சியர் (நி.ம.உ.து) மற்றும் உரிமம் பெற்ற நில அளவர்கள் ஆகியோர்களுடன் கூட்டு புலத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட புலத்தின் வருவாய் ஆவணங்களில் பின்வருமாறு தாக்கலாகியுள்ளது என்றும்,

| மாவட்டம் | சென்னை | சென்னை | சென்னை | சென்னை |
|---|---|---|---|---|
| வட்டம் | அமைந்தகரை | அமைந்தகரை | அமைந்தகரை | அமைந்தகரை |
| நகரம் | பெரியகூடல் | பெரியகூடல் | பெரியகூடல் | பெரியகூடல் |
| பிளாக் எண் | 14 | 15 | 15 | 15 |
| நகர புல எண் | 5/15 | 1 | 2 | 16 |
| வகைபாடு | ரயத்துவாரி மனை | ரயத்துவாரி மனை | சர்க்கார் புறம்போக்கு | ரயத்துவாரி மனை |
| மொத்த பரப்பளவு | 4716 சதுர மீட்டர் | 7225 சதுர மீட்டர் | 4750 சதுர மீட்டர் | 4552 சதுர மீட்டர் |
| கோரப்படும் பரப்பளவு | 4716 சதுர மீட்டர் | 2860 சதுர மீட்டர் | 728 சதுர மீட்டர் | 623 |
| அடங்கல் | கார்ப்பரேஷன் ஆப் சென்னை | கார்ப்பரேஷன் ஆப் சென்னை | ------- | சென்னை மாநகராட்சி |
| பயன்பாடு | கட்டிடம் | காலி மனை | ரோடு | காலியிடம் |

**<u>நான்கு பக்க எல்லைகள்</u>**

| நகரம் | பிளாக் எண் | நகர புல எண் | வடக்கு | கிழக்கு | தெற்கு | மேற்கு |
|---|---|---|---|---|---|---|
| பெரியகூடல் | 14 | 5/15 | TS NO.5/1 IN BLOCK NO.14 | TS NO. 1 IN BLOCK NO.15 | TS NO.5/16, 5/23, 5/14, 5/17 IN BLOCK NO.14 | TS NO. 5/1 IN BLOCK NO.14 |
| பெரியகூடல் | 15 | 1 | TS NO. 5/1, 4 IN BLOCK NO.14 | TS NO. 2 IN BLOCK NO.15 | TS NO. 1PT IN BLOCK NO.15 | TS NO. 5/15 IN BLOCK NO.14 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பெரியகூடல் | 15 | 2 | TS NO.1, IN BLOCK NO.15 | TS NO. 2PT IN BLOCK NO.15 | TS NO. 16 IN BLOCK NO.15 | TS NO. 2PT IN BLOCK NO.15 |
| பெரியகூடல் | 15 | 16 | TS NO. 2, IN BLOCK NO.15 | TS NO.16PT IN BLOCK NO.15 | TS NO. 16PT IN BLOCK NO.15 | TS NO.2PT IN BLOCK NO.15 |

மேற்கண்ட புலத்தினை கள ஆய்வு செய்ததில் *BlockNo. 14,TS.No.5/15*-ல் பெருநகர சென்னை மாநகராட்சியின், மின்சார வாகனங்கள் மின்னூட்ட நிலையம், பழுதடைந்த வாகனங்கள் மற்றும் பயன்பாட்டில் அல்லாத கட்டிடங்களும் உள்ளதாகவும், மேலும் *BlockNo. 15, TSNo.1*-ல் தென் மேற்கில் *420* சதுர மீட்டர் பரப்பளவில் *Anna Nagar A Block Ladies Association* கட்டிடமும், வடக்கு பகுதியில் *628* சதுர மீட்டர் பரப்பளவில் தெருவிளக்குகளான மின் இயக்கப்பெட்டியும், வடகிழக்கு பகுதியில் சுமார் *236* சதுர மீட்டர் பரப்பளவில் கோவிலின் பகுதியும், சுமார் *150* சதுர மீட்டரில் அம்மா அரங்க கட்டிட பகுதியும் மீதமுள்ள சுமார் *4185* சதுர மீட்டர் பரப்பளவு காலியிடமாகவும் அதில் பெருநகர சென்னை மாநகராட்சியின் பழுதடைந்த வாகனங்கள் நிறுத்தி வைக்கும் இடமாகவும் உள்ளது என்றும், *BlockNo. 15, TS.No.2*-ல் தெற்கு பகுதியில் சுமார் *588* சதுர மீட்டர் பரப்பளவில் *Anna Nagar A Block Ladies Association* அலுவலக கட்டிட பகுதியும், வடகிழக்கு பகுதியில் சுமார் *155* சதுர மீட்டர் பரப்பளவில் கோவிலின் பகுதியும், *794* சதுர மீட்டர் அம்மா அரங்க கட்டிட பகுதியும் மீதமுள்ள சுமார் *1011* சதுர மீட்டர் பரப்பளவு காலியிடமாகவும் வழிபாதையாகவும் உள்ளது என்றும், *BlockNo.15. TS.No.16*-ல் தெற்கு பகுதியில் சுமார் *701* சதுர மீட்டர் பரப்பளவில் சட்ட மன்ற உறுப்பினர் அலுவலக கட்டிட பகுதியும், *2180* சதுர மீட்டர் அம்மா அரங்க கட்டிட பகுதியும் மீதமுள்ள *1193* சதுர மீட்டர் பரப்பளவு காலியிடமாகவும் உள்ளது என்றும்,

மேற்காணும் புலத்தினை மனிதவள மேலாண்மைத் துறைக்கு நில மாற்றம் செய்ய மண்டல அலுவலர் கருத்துருவின் படி நடவடிக்கை தொடரலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதுநிலை உதவி ஆணையர், மண்டலம்-*8* அவர்களின் *23.09.2025* நாளிட்ட குறிப்பில், மத்திய சென்னை கோட்ட வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் கடிதத்தில் பரிந்துரை செய்தவாறு ஏற்கனவே சென்னை பெருநகர மாநகராட்சி மன்றத் தீர்மான எண்.*659/2025*, நாள்.*28.05.2025*-இன் திருத்தமாக வருவாய் துறை உட்பிரிவு ஆவணத்தின்படி (கீழே அட்டவணையில் உள்ளபடி) சென்னை மாவட்டம், அமைந்தகரை வட்டம், பெரியகூடல் நகரம், பிளாக் எண். *14*-ல். *TS No. 5/5*, ரயத்துவாரி வகைப்பாடு கொண்ட *4,716* சதுர மீட்டர் பரப்பளவுள்ள நிலம், பிளாக் எண். *15* –ல் *TS No. 1* ரயத்துவாரி வகைப்பாடு கொண்ட *2860* சதுர மீட்டர் பரப்பளவுள்ள நிலம், மற்றும் பிளாக் எண். *15*-ல். *T.S.No. 16* ரயத்துவாரி வகைப்பாடு கொண்ட *623* சதுர மீட்டர் பரப்பளவுள்ள நிலம் ஆகிய பெருநகர சென்னை மாநகராட்சிக்கு

சொந்தமான நிலங்களை அகில இந்திய குடிமைப் பணி தேர்வு பயிற்சி மையம் கட்டுவதற்கு மனிதவள மேலாண்மைத் துறைக்கு நிலக்கிரயமின்றி நில மாற்றம் செய்யவும், அமைந்தகரை நகரம், பிளாக் எண். 15, T.S.No.2 சார்க்கார் புறம்போக்கு வகைப்பாடு கொண்ட 728 சதுர மீட்டர் பரப்பளவுள்ள சாலை வகைப்பாடுக் கொண்ட நிலத்தினை மனித வள மேலாண்மைத் துறைக்கு நில உரிமை மாற்றம் செய்ய தடையின்மை சான்று வழங்க மன்றத்தின் அனுமதி பெற்று வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, சென்னை மாவட்டம், அமைந்தகரை வட்டம், பெரியகூடல் நகரம், பிளாக் எண்.14-ல் T.S.No.5/15, ரயத்துவாரி வகைப்பாடு கொண்ட 4,716 சதுர மீட்டர் பரப்பளவுள்ள நிலம், பிளாக் எண்.15-ல், T.S.No.1/0, ரயத்துவாரி வகைப்பாடு கொண்ட 2,860 சதுர மீட்டர் பரப்பளவுள்ள நிலம் மற்றும் பிளாக் எண்.15-ல் T.S.No.16/0, ரயத்துவாரி வகைப்பாடு கொண்ட 623 சதுர மீட்டர் பரப்பளவுள்ள நிலம் ஆகிய பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்களை அகில இந்திய குடிமைப் பணி தேர்வு பயிற்சி மையம் கட்டுவதற்கு மனிதவள மேலாண்மைத் துறைக்கு நிலக்கிரயமின்றி நில மாற்றம் செய்யவும், அமைந்தகரை நகரம், பிளாக் எண்.15, T.S.No.2/0, சார்க்கார் புறம்போக்கு வகைப்பாடு கொண்ட 728 சதுர மீட்டர் பரப்பளவுள்ள சாலை வகைப்பாடுக் கொண்ட நிலத்தினை மனிதவள மேலாண்மைத் துறைக்கு வழங்க பெருநகர சென்னை மாநகராட்சியின் தடையின்மை சான்றினை வழங்க, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 27.10.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.10.2025 அன்று தீர்மான எண்.540/2025ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**தி.க.மே.து.ந.க.எண்.அ7/5111/2025**

**தீர்மான எண்: 1136/2025** **பொருள் எண்.56**

**பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மைத் துறை - பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்களுக்கு மூன்றாண்டு காலத்திற்கு காலை உணவு, மதிய உணவு மற்றும் இரவு உணவு வழங்குவதற்கான கேட்டரிங் ஏஜென்சியைத் தேர்ந்தெடுக்கும் பணிக்கு குறைந்த ஒப்பப்புள்ளி அளித்த திருவாளர்கள். Food Swing Enterprises அவர்களுக்கு பணி ஆணை வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி.**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் தலைமைச் செயலகத்தில் 14.08.2025 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டம் முடிந்த பிறகு மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்புகளில் ஒன்றான பின்வரும் அறிவிப்பின் மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

> "தூய்மைப் பணியாளர்கள் தங்களது பணியை அதிகாலையில் மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலையில், காலை உணவு சமைப்பதற்கும், அதை பணிபுரியும் இடத்திற்கு கொண்டு வந்து அருந்துவதற்கும் பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இப்பிரச்சனைகளுக்கு தீர்வாக நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு காலை உணவு அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளால் இலவசமாக வழங்கப்படும். இத்திட்டம் முதற்கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சியில் செயல்படுத்தப்பட்டு, படிப்படியாக மற்ற நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் விரிவுபடுத்தப்படும்"

பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மைப்பணியில் ஈடுபடும் தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு வழங்க உடன் நடவடிக்கை எடுக்கவும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அளிக்கும் 6வது மாநில நிதி ஆணைய மானிய நிதியிலிருந்து மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்துவதற்கான செலவினத்தை மேற்கொள்ளவும் அரசு முதன்மை செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின், 29.08.2025 நாளிட்ட கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன்படி பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்களுக்கு மூன்றாண்டு காலத்திற்கு காலை உணவு, மதிய உணவு மற்றும் இரவு உணவு வழங்குவதற்கான கேட்டரிங் ஏஜென்சியைத் தேர்ந்தெடுக்கும் பணிக்கு ஒப்பம் கோருவதற்கு முன்மொழியப்பட்டது.

மேற்கண்டவையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள் விவரம் பின்வருமாறு:

| தூய்மை பணியாளர்களின் விவரம் | எண்ணிக்கை |
|---|---|
| நிரந்தர தூய்மை பணியாளர்கள் | 3628 |
| *NMR* தூய்மை பணியாளர்கள் | 415 |
| சுய உதவி குழு தூய்மை பணியாளர்கள் *(SHG)* | 2946 |
| தனியருக்கு வழங்கப்பட்ட உர்பேசர் நிறுவனம் தூய்மை பணியாளர்கள் | 8901 |
| தனியருக்கு வழங்கப்பட்ட ராம்கி நிறுவனம் தூய்மை பணியாளர்கள் | 5346 |
| நிரந்தர மலேரியா தொழிலாளர்கள் | 1113 |
| சுய உதவி குழு மலேரியா தொழிலாளர்கள் *(SHG)* | 2446 |
| தனியருக்கு வழங்கப்பட்ட *TNUHDB* தூய்மை பணியாளர்கள் | 1104 |
| தனியருக்கு வழங்கப்பட்ட மயான பூமி தூய்மை பணியாளர்கள் | 575 |
| டாக்டர் ஆர்.எஸ்.பி. கழிப்பறை தொழிலாளர்கள் | 645 |
| நிரந்தர பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதான தொழிலாளர்கள் | 420 |
| தனியருக்கு வழங்கப்பட்ட பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதான தொழிலாளர்கள் | 1916 |
| மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை | 29,455 |

<u>திட்டத்தின் நோக்கம் :</u>

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட வடக்கு, மத்திய மற்றும் தெற்கு வட்டார பகுதிகளில் மொத்தம் 29,455 பணியாளர்களுக்கு நியமிக்கப்பட்ட இடங்களில் உணவு (காலை உணவு, மதிய உணவு மற்றும் இரவு உணவு) வழங்குவதற்கு காலை உணவு, மதிய உணவு மற்றும் இரவு உணவின் தேவைகள் கீழ்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது:

| ஷிப்ட் | ஷிப்ட் நேரம் | உணவு சேவை | சேவை நேரம் | உணவு எண்ணிக்கை | உணவு பகிரும் இடங்கள் |
|---|---|---|---|---|---|
| A-ஷிப்ட் | 6 AM - 2 PM | மதிய உணவு | மதியம் 1.30 முதல் 2.30 வரை | 22,886 | 285 |
| B-ஷிப்ட் | 2 PM - 10 PM | இரவு உணவு | இரவு 9.30 முதல் 10.30 வரை | 1,410 | 61 |
| C-ஷிப்ட் | 10 PM - 6 AM | காலை உணவு | காலை 5.30 முதல் 6.30 வரை | 5,159 | 166 |

(1) ஒவ்வொரு ஷிப்டுக்கும் மண்டல வாரியாக துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கை மற்றும் உணவு பரிமாறும் இடங்களின் எண்ணிக்கையின்படி மேலே குறிப்பிடப்பட்ட சேவை நேரத்திற்குள் உணவு அளிக்கப்பட வேண்டும்.

(2) அனைத்து உணவுகளும் FSSAI- சான்றளிக்கப்பட்ட சமையலறைகளில் மட்டுமே தயாரிக்கப்பட வேண்டும். இது சட்டப்பூர்வ உணவு பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் தேவைகளுக்கு இணங்குவதை உறுதி செய்கிறது.

(3) மேலும், சமையலறைகள், மூலப்பொருட்கள், பொருட்கள் மற்றும் பயன்படுத்தப்படும் நுகர்பொருட்கள், வழங்கப்படும் உணவின் தரம் மற்றும் பரிமாறப்படும் உணவின் அளவு ஆகியவற்றை அவ்வப்போது தணிக்கை செய்ய பெருநகர சென்னை மாநகராட்சி ஒரு திட்ட மேலாண்மை ஆலோசகரை (PMC) நியமிக்கும். மேலும், தேர்ந்தெடுக்கப்படும் கேட்டரிங் ஏஜென்சி நியமிக்கப்பட்ட இடங்களில் தொழிலாளர்களுக்கு உணவு தயாரித்தல், டிபன் கேரியர்கள் மூலம் பேக்கிங் (Packing) செய்தல் மற்றும் விநியோகித்தல் ஆகியவற்றிற்கு பொறுப்பாவார்கள்.

(4) உணவு போக்குவரத்து மற்றும் விநியோகத்திற்காகப் பயன்படுத்தப்படும் அனைத்து வாகனங்களும் தினசரி அடிப்படையில் நன்கு கழுவி, கிருமி நீக்கம் செய்யப்பட்டு, சுத்திகரிக்கப்பட வேண்டும். வாகனங்கள் எல்லா நேரங்களிலும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பராமரிக்கப்படுவதையும், மாசுபாடு அபாயங்கள் இல்லாமல் இருப்பதையும், பொருந்தக்கூடிய FSSAI மற்றும் சட்டப்பூர்வ விதிமுறைகளுக்கு இணங்க பாதுகாப்பான உணவுப் போக்குவரத்திற்கு ஏற்றதாக இருப்பதையும் உறுதி செய்வது தேர்ந்தெடுக்கப்படும் கேட்டரிங் ஏஜென்சி பொறுப்பாகும்.

(5) தேர்ந்தெடுக்கப்பட்ட கேட்டரிங் ஏஜென்சி தேவையான அனைத்து சட்டப்பூர்வ ஒப்புதல்கள் மற்றும் உரிமங்களைப் பெறுவதற்கும், செயல்பாடுகளைத் தொடங்குவதற்கு முன்பு அத்தகைய சமையலறைகளுக்கு செல்லுபடியாகும் FSSAI சான்றிதழைப் பெற்று இருக்க வேண்டும்.

(6) நியமிக்கப்பட்ட இடங்களில் ஆர்டர் செய்யப்பட்ட அளவு உணவுகள் கொடுக்கப்பட்டவுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட கேட்டரிங் ஏஜென்சி கொடுக்கப்பட்டதற்கான ஒப்புதலைப் பெற வேண்டும் / விநியோகத்திற்கான சான்றாக பரிந்துரைக்கப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சியின் மொபைல் பயன்பாட்டில் விவரங்களை பதிவேற்ற வேண்டும்

**நிதி செலவின விவரங்கள்:**

வெளிசந்தையில் முன்னணி கேட்டரிங் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டபடி, குறிப்பிட்ட விநியோக புள்ளிகளில் போக்குவரத்து மற்றும் டிபன் கேரியரில் விநியோகம் உட்பட உணவுக்கான செலவு (குறிப்பிடத்தக்க சேவைகளின்படி), பின்வருமாறு:

| உணவு சேவை | உணவின் விலை | உணவின் விலை GST உட்பட |
|---|---|---|
| காலை உணவு | RS.45/- + GST | RS.47.25P |
| மதிய உணவு | RS.55/- + GST | RS.57.75P |
| இரவு உணவு | RS.40/- + GST | RS.42.00P |

**வருடாந்திர மதிப்பீட்டு செலவு:**

| ஷிப்ட் | உணவு சேவை | ஒரு நாள் உணவிற்கான எண்ணிக்கை | ஒரு உணவுக்கான விலை விகிதம் (போக்குவரத்து, சேவை கட்டணம் மற்றும் GST உட்பட) | ஒரு வருடத்திற்கு | மொத்த மதிப்பீட்டு செலவினம் (போக்குவரத்து, சேவை கட்டணம் மற்றும் GST உட்பட) |
|---|---|---|---|---|---|
| A-ஷிப்ட் | மதிய உணவு | 22,886 | 57.75 | 365 | 48,24,08,273 |
| B-ஷிப்ட் | இரவு உணவு | 1,410 | 42.00 | 365 | 2,16,15,300 |
| C-ஷிப்ட் | காலை உணவு | 5,159 | 47.25 | 365 | 8,89,73,404 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | முதல் வருடம் (A) | | 59,29,96,977 |
| | | | இரண்டாவது வருடம் (B) | 5% ஏற்ற இறக்க செலவினம் (ESCALATION) | 62,26,46,825 |
| | | | மூன்றாவது வருடம் (C) | 5% ஏற்ற இறக்க செலவினம் (ESCALATION) | 65,37,79,167 |
| | | மூன்று வருடத்திற்கான மொத்த செலவினம் | | | 186,94,22,969 |

**பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு, மதிய உணவு மற்றும் இரவு உணவு வழங்குவதற்காக கேட்டரிங் நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான ஒப்பந்தக் காலம் இந்தத் திட்டத்திற்கு மூன்று (3) ஆண்டுகள் ஆகும்.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்களுக்கு மூன்றாண்டு காலத்திற்கு காலை உணவு, மதிய உணவு மற்றும் இரவு உணவு வழங்குவதற்கான கேட்டரிங் நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்கும் பணிக்கு ரூ.186,94,22,969/- மன்றத்தின் பின்னேற்பு அனுமதி எதிர்நோக்கி அரசின் நிர்வாக அனுமதி பெறுவதற்கும் மற்றும் இப்பணியினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அளிக்கும் 6வது மாநில நிதி ஆணைய மானிய நிதியிலிருந்து பெறுவதற்கும் ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று அரசு முதன்மை செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு நிர்வாக அனுமதி பெற 08.09.2025 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

**பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்களுக்கு மூன்றாண்டு காலத்திற்கு காலை உணவு, மதிய உணவு மற்றும் இரவு உணவு வழங்குவதற்கான கேட்டரிங் நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்கும் பணிக்கு தமிழக அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி குறுகிய கால ஒப்பங்கள் கோருவதற்கு ஆணையர் அவர்களின் 10.09.2025 நாளிட்ட அனுமதி பெறப்பட்டது.**

இதன்படி, இப்பணியின் விவரம் கீழ்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1 | பணியின் விவரம் | : | பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்களுக்கு மூன்றாண்டு காலத்திற்கு காலை உணவு, மதிய உணவு மற்றும் இரவு உணவு வழங்குவதற்கான கேட்டரிங் நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்கும் பணி. |
| 2 | ஒரு வருடத்திற்கான மதிப்பீட்டு தொகை | : | ரூ.59,29,96,977/- |
| 3 | மூன்று வருடத்திற்கான மதிப்பீட்டு தொகை | : | ரூ.186,94,22,969/- |
| 4 | எந்தெந்த செய்தித்தாள்களில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள் | : | பெருநகர சென்னை மாநகராட்சி செய்தி மலர், *11.09.2025* மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர், *11.09.2025 NEW INDIAN EXPRESS* (ஆங்கிலம்), நாள். *11.09.2025* தினத்தந்தி (தமிழ்), நாள்.*11.09.2025* |
| 5 | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் | : | *29.09.2025* நேரம் மாலை *3.00* மணி |
| 6 | ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்ட நாள் | : | *30.09.2025* நேரம் மாலை *3.00* மணி |
| 7 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | : | நான்கு ஒப்பங்கள் |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு, மின்னணு ஒப்பம் *(e-tender)* மூலமாக இரண்டு ஒப்பங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. தொழில்நுட்ப ஆவணங்கள் *(Technical Bid) 30.09.2025* அன்று திறக்கப்பட்டு ஒப்ப முன்தகுதி நிபந்தனைகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் திருவாளர்கள் *Food Swing Enterprises* மற்றும் திருவாளர்கள் *Foodsutra Art of Spices Private Limited* இரண்டு தொழில்நுட்ப ஆவணங்களும் தகுதிபெற்று நிதி ஆவணத் திறப்பிற்கு *(Financial Bid)* அனுமதிக்கப்பட்டது.

மேலும், ஒப்ப முன்தகுதி நிபந்தனைகள் பூர்த்தி செய்துள்ள திருவாளர்கள்.*Food Swing Enterprises* மற்றும் திருவாளர்கள். *Foodsutra Art of Spices Private Limited* இவர்களின் விலைப்புள்ளி ஒப்பங்கள் *(Financial Bid) 09.10.2025* அன்று திறக்கப்பட்டதில், இரு நிறுவனங்களும் அளித்துள்ள ஒப்பத்தொகை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளனர்.

| வரிசை எண் | உணவு விவரங்கள் | எண்ணிக்கை | நாட்கள் | திருவாளர்கள் *Food Swing Enterprises* | | திருவாளர்கள் *Foodsutra Art of Spices Private Limited* | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஒப்ப விலை (வரிகள் உட்பட) | மொத்த தொகை (வரிகள் உட்பட) | ஒப்ப விலை (வரிகள் உட்பட) | மொத்த தொகை (வரிகள் உட்பட) |
| | | | | (ரூ. பை) | | (ரூ. பை) | |
| 1 | காலை உணவு | 5,159 | 365 | 52.00 | 9,79,17,820.00 | 53.00 | 9,98,00,855.00 |
| 2 | மதிய உணவு | 22,886 | 365 | 53.50 | 44,69,06,365.00 | 54.00 | 45,10,83,060.00 |
| 3 | இரவு உணவு | 1,410 | 365 | 52.75 | 2,71,47,787.50 | 53.00 | 2,72,76,450.00 |
| ஒரு வருடத்திற்கான ஒப்ப தொகை | | | | | 57,19,71,972.50 | | 57,81,60,365.00 |
| 5% இரண்டாம் வருட ஏற்ற இறக்க செலவினம் *(escalation)* | | | | | 60,05,70,571.13 | | 60,70,68,383.25 |
| 5% மூன்றாம் வருட ஏற்ற இறக்க செலவினம் *(escalation)* | | | | | 63,05,99,099.68 | | 63,74,21,802.41 |
| மூன்று வருடங்களுக்கான மொத்த தொகை | | | | | 180,31,41,643.31 | | 182,26,50,550.66 |
| ஒப்ப விழுக்காடு | | | | | (-) 3.54% குறைவு | | (-) 2.50% குறைவு |

மேற்கண்ட ஒப்பந்ததாரர்களில் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள்.Food Swing Enterprises ஒரு வருட காலத்திற்கு அளித்துள்ள ஒப்ப தொகை ரூ.57,19,71,972.50பை ஆகும். இத்தொகை ஒரு வருட காலத்திற்கான அலுவலக மதிப்பீட்டு தொகையான ரூ.59,29,96,977/- யை விட (-) 3.54% குறைவு ஆகும்.

ஒப்பந்ததாரரிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டதில், 14.10.2025 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்கு பின் ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி விலையின் விவரம் கீழ்வருமாறு

| வரிசை எண் | உணவு விவரங்கள் | எண்ணிக்கை | நாட்கள் | திருவாளர்கள் Food Swing Enterprises | |
|---|---|---|---|---|---|
| | | | | ஒப்ப விலை (வரிகள் உட்பட) | மொத்த தொகை (வரிகள் உட்பட) |
| | | | | (ரூ. பை) | |
| 1 | காலை உணவு | 5,159 | 365 | 52.00 | 9,79,17,820.00 |
| 2 | மதிய உணவு | 22,886 | 365 | 53.50 | 44,69,06,365.00 |
| 3 | இரவு உணவு | 1,410 | 365 | 52.50 | 2,70,19,125.00 |
| ஒரு வருடத்திற்கான ஒப்ப தொகை | | | | | 57,18,43,310.00 |
| 5% இரண்டாம் வருட ஏற்ற இறக்க செலவினம் (escalation) | | | | | 60,04,35,475.50 |
| 5% மூன்றாம் வருட ஏற்ற இறக்க செலவினம் (escalation) ‘ | | | | | 63,04,57,249.28 |
| மூன்று வருடங்களுக்கான மொத்த தொகை | | | | | 180,27,36,034.78 |
| ஒப்ப விழுக்காடு | | | | | (-) 3.57% குறைவு |

மேலே குறிப்பிட்டுள்ளவாறு, 15.10.2025 அன்று ஒப்ப ஆய்வு குழு (*Tender Scrutiny Committee*) கூர்ந்தாய்வு செய்து பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்களுக்கு மூன்றாண்டு காலத்திற்கு காலை உணவு, மதிய உணவு மற்றும் இரவு உணவு வழங்குவதற்கான கேட்டரிங் நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்கும் பணிக்கு விலைக்குறைப்பிற்கு பிறகு பெறப்பட்ட தொகையான ஒரு வருட காலத்திற்கான ஒப்ப தொகை ரூ57,18,43,310/- (ரூபாய் ஐம்பத்து ஏழு கோடியே பதினெட்டு இலட்சத்து நாற்பத்தி மூன்றாயிரத்து முந்நூற்று பத்து மட்டும்) ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள்.*Food Swing Enterprises* அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்துள்ளது.

எனவே,

(1) பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்களுக்கு மூன்றாண்டு காலத்திற்கு காலை உணவு, மதிய உணவு மற்றும் இரவு உணவு வழங்குவதற்கான கேட்டரிங் நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்கும் பணிக்கு கணக்கீடு செய்யப்பட்ட ரூ.186,94,22,969/-க்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி எதிர்நோக்கி அரசின் நிர்வாக அனுமதி பெற கடிதம் அனுப்பப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதியும்,

(2) பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்களுக்கு மூன்றாண்டு காலத்திற்கு காலை உணவு, மதிய உணவு மற்றும் இரவு உணவு வழங்குவதற்கான கேட்டரிங் நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்கும் பணிக்கு திருவாளர்கள்.Food Swing Enterprises ஒரு வருட காலத்திற்கு அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.57,18,43,310/- (ரூபாய் ஐம்பத்து ஏழு கோடியே பதினெட்டு இலட்சத்து நாற்பத்தி மூன்றாயிரத்து முந்நூற்று பத்து மட்டும்) மற்றும் 5% இரண்டாம் வருட மற்றும் மூன்றாம் வருட ஏற்ற இறக்க செலவினம் (*escalation*) விலையுடன் சேர்த்து மொத்த தொகை ரூ.180,27,36,035/-க்கு ஏற்று பணி ஆணை வழங்குவதற்கும்,

(3) மேற்கண்ட பணிக்கான செலவினத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அளிக்கும் 6வது மாநில நிதி ஆணைய மானிய நிதியிலிருந்து பெறுவதற்கான அனுமதியும் வேண்டியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “23.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.178/2025, நாள்.23.10.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

"27.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.537/2025, நாள்.27.10.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

<u>சு.து.ந.க.எண்.பி2/457/2024</u>

**தீர்மான எண்: 1137/2025** **பொருள் எண்.57**

<u>**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - பொது சுகாதாரத்துறை மற்றும் மருத்துவசேவைகள் துறைக்கு தேவையான 136 எண்ணிக்கையிலான கணினி பதிவாளர்கள் M/s.Janishree Corporate Services Pvt Limited நிறுவனத்தின் மூலம் 26.07.2024 முதல் 25.07.2025 வரை ஒரு வருட காலத்திற்கு பணியமர்த்தப்பட்டுள்ளனர் - தற்போது தேவைப்படும் 143 கணினி பதிவாளர்களை மின்னனு ஒப்பம் கோரி ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது - மின்னனு ஒப்பம் கோரப்பட்டது - ஆவணங்கள் அடிப்படையில் ஒப்பம் இறுதி செய்யப்படாத நிலையில் மேற்கண்ட நிறுவனத்திற்கு பணியாணையினை 26.07.2025 முதல் 25.09.2025 வரையிலான இரண்டு மாத காலத்திற்கு பணி நீடிப்பு செய்தமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**</u>

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையின் கீழ் 15 மண்டல சுகாதார அலுவலகங்கள், 15 மண்டல மருத்துவ அலுவலகங்கள், நகர்ப்புற சமுதாய நல மையங்கள் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், தொற்று நோய் மருத்துவமனை, பொது சுகாதாரத்துறைத் தலைமையிடம், ஏழு பெரிய அரசு மருத்துவமனைகள் பூச்சித்தடுப்புப்பிரிவு, குடிநீர் பகுப்பாய்வு கூடங்கள் மற்றும் அம்மா

உணவகம் ஆகிய பிரிவுகளில் கணினி பதிவாளர்கள் தேவையின் அடிப்படையில் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இவர்கள் மூலம் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. அரசு தனியார் மருத்துவமனைகளில் தொற்று நோய்கள் குறித்த விவரங்கள் சேகரிக்கும் பணிகள் மேற்கொள்ளுதல்,
2. தினம் மற்றும் வாராந்திர அறிக்கைகள் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளுதல்,
3. அன்றாடம் பொதுமக்களிடமிருந்து ஆன்லைன் மூலம் பெறுகின்ற குறைகள் குறித்த புகார்கள் சேகரித்தல் மற்றும் அதற்கு பதில் அளித்தல்,
4. பொது சுகாதாரத்துறைத் தலைமையிடம், பூச்சித்தடுப்புப்பிரிவு, குடிநீர் பகுப்பாய்வு கூடங்கள் மற்றும் அம்மா உணவகம் ஆகிய பிரிவுகளில் அலுவலகப் பணிகளை கணினியில் மேற்கொள்ளுதல்,
5. சமுதாய நல மையங்கள் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் கணினி பதிவுகளை மேற்கொள்ளுதல்,
6. பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 சுகாதார அலுவலகங்களில் மற்றும் ஏழு பெரிய மருத்துவமனைகளில் நிகழும் பிறப்பு மற்றும் இறப்பு விவரங்கள் கணினியில் பதிவு செய்தல், சான்றிதழ்கள் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்குதல்,

போன்ற பணிகளுக்கென, ஆணையர் அவர்களின், 21.02.2024 மற்றும் 26.07.2024 நாளிட்ட ஆணைகளின்படி, அட்டவணை 3ல் தெரிவிக்கப்பட்டவாறு பொது சுகாதாரத்துறை மற்றும் மருத்துவசேவைகள் துறைக்கு தேவையான 136 எண்ணிக்கையிலான கணினி பதிவாளர்கள் M/s.Janishree Corporate Services Pvt Limited நிறுவனத்தின் மூலம் 26.07.2024 முதல் 25.07.2025 வரை ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**அட்டவணை எண்.1**

| வஎண் | பொதுசுகாதாரத்துறையில் கணினி பதிவாளர்கள் பணியமர்த்தப்பட்ட விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மண்டலம் 1 முதல் 15 வரை (மண்டல நல அலுவலர்கள் அலுவலக பணிகளுக்கு ) | 15 |
| 2 | பொதுசுகாதார தலைமையிடத்திற்கு | 9 |
| 3 | தொற்றுநோய் மருத்துவமனை | 1 |
| 4 | பூச்சித்தடுப்புப்பிரிவு (தலைமையிடம்) | 1 |
| 5 | அம்மா உணவகம் (தலைமையிடம்) | 4 |
| 6 | குடிநீர் பகுப்பாய்வு கூடம் | 3 |

| | | |
|---|---|---|
| 7 | கூடுதல் மாநகர நல அலுவலர் அலுவலகம் (வடக்கு வட்டாரம்) | 1 |
| 8 | கூடுதல் மாநகர நல அலுவலர் அலுவலகம் (மத்திய வட்டாரம்) | 1 |
| 9 | கூடுதல் மாநகர நல அலுவலர் அலுவலகம் (தெற்கு வட்டாரம்) | 1 |
| 10 | நல கல்வி அலுவலர் அலுவலகம் | 1 |
| 11 | மத்திய மருந்து பண்டக சாலை | 1 |
| 12 | மண்டலம் *1* முதல் *15* வரை (பிறப்பு இறப்பு பதிவு செய்தல் மற்றும் சான்று வழங்குதல்) | 15 |
| 13 | பிறப்பு இறப்பு பதிவு-தலைமையிடம் | 1 |
| 14 | *RSRM* மருத்துவமனை (மண்டலம்-*5*) | 2 |
| 15 | தாய்சேய் நல மருத்துவமனை(மண்டலம்-*5*) | 2 |
| 16 | கீழ்ப்பாக்கம் மருத்துவகல்லூரி மருத்துவமனை (மண்டலம்-*8*) | 2 |
| 17 | கஸ்தூரிபா காந்தி மருத்துவமனை (மண்டலம்-*9*) | 2 |
| 18 | ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை (மண்டலம்-*5*) | 2 |
| 19 | ஸ்டேன்லி அரசு மருத்துவமனை (மண்டலம்-*5*) | 2 |
| 20 | ராயபேட்டை அரசு மருத்துவமனை (மண்டலம்-*9*) | 1 |
| 21 | ஈவேரா சாலை பரிசோதனை கூடம்(மண்டலம்-*8*) | 1 |
| 22 | நுங்கம்பாக்கம் பரிசோதனை கூடம்(மண்டலம்-*9*) | 1 |
| 23 | *1* முதல் *15* மண்டலங்களில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் (*140 UPHC*) | 140 |
| 24 | பொதுசுகாதாரத்துறை தலைமையிடம் (*NUHM*) | 1 |
| | மொத்தம் | 210 |

இதற்கு முந்தைய ஒப்பத்தில் *133* நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மட்டும் கணினி பதிவாளர்கள் அளிக்கப்பட்டு வந்தது. *7*ல் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. தற்போது *140* நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பொதுசுகாதாரத்துறையின் மூலமே பணிகள் நடைபெற்று வருகின்றன. எனவே *140* நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் கணினி பதிவாளர்கள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

<u>அட்டவணை எண்.2</u>

| வ. எண் | மருத்துவ சேவைகள் துறையில் கணினி பதிவாளர்கள் தேவைப்படும் இடங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மண்டலம் 1 முதல் 15 வரை (மண்டல மருத்துவ அலுவலர்கள் அலுவலக பணிகளுக்கு) | 15 |
| 2 | மண்டலம் 1 முதல் 15 வரை உள்ள நகர்ப்புற சமுதாய நல மையங்கள் | 15 |
| 3 | மருத்துவ சேவைகள் துறை தலைமையிடம் (NUHM) | 1 |
| | மொத்தம் | 31 |

எனவே, அட்டவணை *1* மற்றும் *2*ல் தெரிவிக்கப்பட்டவாறு பொதுசுகாதாரத்துறைக்கு *203* கணினி பதிவாளர்களும், மருத்துவ சேவைகள் துறைக்கு *31* கணினி பதிவாளர்களும் தேவைப்படுகின்றனர். இதில் *98* கணினி பதிவாளர்கள் பணியிடங்கள் தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் அளிக்கப்பட்டுள்ளன.

<u>அட்டவணை எண்.3</u>

| | மொத்தம் தேவைப்படும் கணினி பதிவாளர்கள் | தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் அளிக்கப்படும் கணினி பதிவாளர்கள் | மீதம் தேவைப்படும் கணினி பதிவாளர்கள் |
|---|---|---|---|
| பொதுசுகாதாரத்துறை | 210 | 83 | 127 |
| மருத்துவ சேவைகள் துறை | 31 | 15 | 16 |
| | 241 | 98 | 143 |

தற்போதுள்ள ஒப்பந்த காலமானது *25.07.2025* அன்று முடிவடையும் நிலையில், பொதுசுகாதாரத்துறை மற்றும் மருத்துவசேவைகள் துறைக்கு தேவைப்படும் *143* கணினி பதிவாளர்களை ஓராண்டு காலத்திற்கு ஒப்பம் கோரி பணியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

<u>அட்டவணை-4</u>

| Sl.No | Category of Staff | Qualification |
|---|---|---|
| 1 | Data Entry Operator | Must have passed any Degree, typewriting in Tamil &, English (lower level), Certificate Course in computer on Office Automation. |

ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் கணினி பதிவாளர்களுக்கு அடிப்படை ஊதியத்துடன், பணியாளர் வருங்கால வைப்பு நிதி *(Employee's Provident Fund)*, பணியாளர் இன்சூரன்ஸ் *(Employee's State Insurance)*, சரக்கு மற்றும் சேவை வரி *(GST)*, மற்றும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டிய சேவைக்கட்டணம் *(Administrative Charges)* கீழ்க்கண்ட அளவில் வழங்கப்பட வேண்டியுள்ளது. சிறப்பு அதிகாரி/மன்றத் தீர்மான எண்.560/2020, நாள்.21.08.2020-ன்படி ஒப்பந்ததாரருக்கு நிர்வாக கட்டணமாக 10% (Salary+ESI+EPF) வழங்க அனுமதி அளித்துள்ளது.

மேற்கண்ட பணி மேற்கொள்ள கூடுதலாக மேலும் ஒரு ஆண்டுக்கு பணி நீடிப்பு செய்ய மன்றத் தீர்மான எண்.094/2025, நாள். 22.05.2025 அடிப்படையில் மின்னணு ஒப்பம் கோரப்பட்டதில் ஒப்பந்ததாரரால் அளிக்கப்பட்ட ஆவணங்களை பரிசீலிக்கப்பட்டதில் ஒப்பம் இறுதி செய்யப்படாத நிலையில் அவசரம் மற்றும் அவசியம் கருதி இப்பணியின் முக்கியத்துவம் கருதியும் கணினி பதிவாளர்களை பணியமர்த்தும் பணியினை M/s.Janishree Corporate Services Pvt Limited நிறுவனத்தின் மூலம் 26.07.2025 முதல் 25.09.2025 வரையிலான இரண்டு மாத காலத்திற்கு பணி நீடிப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**<u>அட்டவணை-5</u>**

| EMPLOYEE'S STATE INSURANCE (UPTO RS.21,000) | | EMPLOYEE'S PROVIDENT FUND (UPTO RS.15000) | | GST | ADMINISTRATIVE CHARGES |
|---|---|---|---|---|---|
| EMPLOYER CONTRIBUTION IN THE SALARY | EMPLOYEE CONTRIBUTION IN THE SALARY | EMPLOYER CONTRIBUTION IN THE SALARY | EMPLOYEE CONTRIBUTION IN THE SALARY | | |
| 3.25% | 0.75% | 13% | 12.00% | 18% | APPROXIMATELY (10%)(EXCLUSIVE GST) |

**அட்டவணை-6**

தற்போது தேவைப்படும் நிதி

| Category of Staff | Salary per Month (Rs) | EPF (13 %) (Rs) | ESI (3.25 %) (Rs) | Admin Charges Approximately (10%) (Rs) | GST 18% (1+2+3+4) (Rs) | Total (1+2+3+4+5) (Rs) | Required Staff | Cost for One year (Rs) (6x7x2) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| Data Entry Operator | 17,600 | 0 | 572 | 363.44 | 3336 | 21871.44 | 136 | 59,49,032 |

**பணி நீட்டிப்பு விவரம்**

| | |
|---|---|
| Total Contract Value | ரூ. 3,56,94,190.08 |
| 25% of Contract Value | ரூ. 89,23,547.52 |
| Extension Work Value | ரூ. 59,49,032 |

பணி நீட்டிப்பு தொகை ரூ.*59,49,032/-* யும் ஒப்ப மதிப்பிற்கான *25%* தொகையை விட குறைவாகவே உள்ளது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை மற்றும் மருத்துவ சேவைகள் துறைக்கு தேவையான 136 கணினி பதிவாளர்களை (Data Entry Operators) தகுதி வாய்ந்த வெளி நிறுவனம் மூலம் ஒருவருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் மின்னணு ஒப்பம் கோரி பணியமர்த்தப்பட்டது. இந்த பணியாணையினை 26.07.2025 முதல் 25.09.2025 வரை இரண்டு மாத காலத்திற்கு பணிநீட்டிப்பு செய்ததற்கு பின்னேற்பு அனுமதியும்,

2. இதற்கான நிர்வாக செலவினம் ரூ. 59,49,032/- (ரூபாய் ஐம்பத்தி ஒன்பது இலட்சத்து நாற்பத்தி ஒன்பதாயிரத்து முப்பத்தி இரண்டு மட்டும்) மேற்கொள்ள அனுமதியும்,
3. இப்பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி நிதி பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 230-15-09-00 என்ற தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.170/2025, நாள்.23.10.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"27.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.513/2025, நாள்.27.10.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**

******

**க.து.ந.க.எண்.பி1/2648/2025**

**தீர்மான எண்: 1138/2025** **பொருள் எண்.58**

**பெருநகர சென்னை மாநகராட்சி-கட்டடத்துறை- மண்டலம் - 04,வார்டு - 36, சர்மா நகரில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளியில் கூடுதலாக வகுப்பறைகள் (G + 2) கட்டடம் கட்டும் பணி மற்றும் சென்னை உயர் நிலைப்பள்ளியில் கூடுதலாக வகுப்பறைகள் (G + 2) கட்டடம் கட்டும் பணி மற்றும் மண்டலம் - 05,வார்டு - 55, போர்த்துகீசிஸ் சர்ச் தெருவில் அமைந்துள்ள சென்னை நடுநிலைப்பள்ளியில் புதிதாக தரைத்தளம் கட்டடம் அமைக்கும் பணிகளுக்காக திருத்திய நிர்வாக அனுமதிஅளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | 1. மண்டலம் - 04, வார்டு - 36, சர்மா நகரில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளியில் கூடுதலாக வகுப்பறைகள் (G+2) கட்டடம் கட்டும் பணி.<br>2. மண்டலம் - 04, வார்டு - 36, சர்மா நகரில் உள்ள சென்னை உயர்நிலைப் பள்ளியில் கூடுதலாக வகுப்பறைகள் (G+2) கட்டடம் கட்டும் பணி.<br>3. மண்டலம் – 05 வார்டு - 55, போர்த்துகீசிஸ் சர்ச் தெருவில் அமைந்துள்ள சென்னை நடுநிலைப்பள்ளியில் புதிதாக தரைத்தளம் கட்டடம் அமைக்கும் பணி. |
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | 1. ஆணையாளர் அவர்களின் அனுமதி நாள் : 17.09.2025, 24.06.2025.<br>2. மன்ற தீர்மானம் எண் : 1018/2025, நாள் : 29.09.2025. |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம் - 04 மற்றும் 05. |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2024-2025 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி. |

| | | |
|---|---|---|
| 5 | <u>மதிப்பீட்டின் தொகை</u> | |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 2,96,43,675.91 |
| | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 53,35,861.66 |
| | (இ) த.நா.க.தொ. ந.வா. 1% | ரூ. 2,96,436.76 |
| | (ஈ) தரக்கட்டப்பாடு 1% | ரூ. 2,96,436.76 |
| | (உ) மின்சார கட்டணம் | ரூ. 30,000.00 |
| | (ஊ) எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 5,97,588.92 |
| | மொத்தம் (Rounded Off) | ரூ. 3,62,00,000.00 |
| 6 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள் | 1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் 25.09.2025.<br>2. தினகரன் 23.09.2025.<br>3. நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் 23.09.2025. |
| 7 | ஒப்பப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் | 09.10.2025 |
| 8 | நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண் | Primary School (20-28-00 /412 - 400 - 401)<br>Middle School (20-28 - 00/412 - 400 - 402)<br>High School (20 - 28 - 00 / 412 - 400 - 403) |
| 9 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15/30 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? | ஆம் |
| 10 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | இரண்டு (e-Tender) ஒப்பப்படிவங்கள் இணையதளத்தின் மூலம் பெறப்பட்டுள்ளது |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு 10.09.2025 அன்று இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டது. அதன் விவரம் பின் வருமாறு :

| வ எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திருவாளர்கள் | பணியின் அலுவலக மதிப்பு 2024-2025 (ரூ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ) | 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்பிடுகையில் |
|---|---|---|---|---|
| 1 | Gajalakshmi Constructions | 2,96,43,675.91 | 3,26,11,007.87 | (+) 10.01% அதிகம் |
| 2 | Annamalai Constructions | 2,96,43,675.91 | 3,11,25,859.71 | (+) 5.00% அதிகம் |

இவ்வொப்பத்தில் திருவாளர். Annamalai Construction., அவர்கள் குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் ஆவார். இவ்வொப்பந்ததாரரிடம் மின்னணு மூலம் விலைக்குறைப்பு கோரப்பட்டதில் L1 ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து ஒப்ப புள்ளியினை அளித்துள்ளார். விவரம் பின்வருமாறு

| வ. எண் | மின்னணு விலைக்குறைப்பு அளித்த விவரம் | L1 ஒப்பந்ததாரர் **2024-2025**ஆம் ஆண்டு **SOR**-ன்படி அளித்துள்ள ஒப்பத்தொகை மற்றும் ஒப்பப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1 | முதற்கட்ட விலை குறைப்பு<br>நாள் 15.10.2025 | ரூ. 3,11,22,895.34 (+) 4.99 % அதிகம் |
| 2 | இரண்டாம் கட்ட விலை குறைப்பு<br>நாள் 15.10.2025 | ரூ. 3,11,19,930.97 (+) 4.98 % அதிகம் |

இதன்படி, மண்டலம்-04, வார்டு-36, சர்மா நகரில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளியில் கூடுதலாக வகுப்பறைகள் (G + 2) கட்டடம் கட்டும் பணி மற்றும் சென்னை உயர் நிலைப்பள்ளியில் கூடுதலாக வகுப்பறைகள் (G+2) கட்டடம் கட்டும் பணி மற்றும் மண்டலம் - 05, வார்டு - 55, போர்த்துகீசிஸ் சர்ச் தெருவில் அமைந்துள்ள சென்னை நடுநிலைப்பள்ளியில் புதிதாக தரைத்தளம் கட்டடம் அமைக்கும் பணிகளுக்காக 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+) 4.98 % அதிகம், ஒப்பத் தொகை ரூ.3,11,19,930.97 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.56,01,587.57ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.3,67,21,519.00- க்கு ஒப்பம் வழங்கப்பட வேண்டும்.

இப்பணிகளுக்கு 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி கோரப்பட்ட ஒப்பப்புள்ளிக்கு செலவீனத்தொகை கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| வ. எண். | மதிப்பீட்டின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூபாய்) (A) | தற்போதைய மதிப்பீட்டுக்கு கூடுதல் தொகை விவரம் (+) 4.98 % சேர்த்து (ரூபாய்) (B) |
|---|---|---|---|
| 1 | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 2,96,43,675.91 | ரூ. 3,11,19,930.97 |
| 2 | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 53,35,861.66 | ரூ. 56,01,587.57 |
| 3 | (இ) த.நா.க.தொ. ந.வா. 1% | ரூ. 2,96,436.76 | ரூ. 2,96,436.76 |
| 4 | (ஈ) தரக்கட்டுப்பாடு 1% | ரூ. 2,96,436.76 | ரூ. 2,96,436.76 |
| 5 | (உ) மின்சார கட்டணம் | ரூ. 30,000.00 | ரூ. 30,000.00 |
| 6 | (ஊ) எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 5,97,588.92 | ரூ. 5,97,588.92 |
| | மொத்தம் (Rounded Off) | ரூ. 3,62,00,000.00 | ரூ. 3,79,41,981.00 |
| | | கூடுதல் தொகை (B- A) | ரூ. 17,41,981.00 |

மேலும், இவ்வொப்பத்திற்கு பணி மதிப்புத்தொகையை விட (+)4.98%, 2024-25ஆம் ஆண்டின் விலை விகிதத்தின்படி அதிக ஒப்பப்புள்ளி அளித்துள்ளதால் மொத்த செலவீனத்தொகை ரூ.3,79,41,981.00-க்கு திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டியுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. இப்பணிக்கான திருத்திய மதிப்பீட்டு தொகையான ரூ.3,79,41,981.00-க்கு நிர்வாக அனுமதியும்,
2. மேற்கண்ட பணிக்காக 2024-2025 ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+) 4.98% அதிகம், ஒப்பத் தொகை ரூ.3,11,19,930.97 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.56,01,587.57ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.3,67,21,519.00க்கு (ரூபாய் மூன்று கோடியே அறுபத்து ஏழு இலட்சத்து இருபத்தோராயிரத்து ஐந்நூற்று பத்தொன்பது மட்டும்) ஒப்பத்தினை L1 ஒப்பந்ததாரர் திருவாளர். Annamalai Construction., அவர்களுக்கு ஒப்பம் வழங்கவும்,
3. இப்பணிக்கான செலவீனத்தினை கணக்கு குறியீட்டு எண் : Primary School ( 20 - 28 - 00 / 412 - 400 - 401 ), Middle School ( 20 - 28 - 00 / 412 - 400 - 402 ) மற்றும் High School ( 20 - 28 - 00 / 412 - 400 - 403 ) நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்)வின் அனுமதி வேண்டியும் மற்றும் இனம் 1ற்கு மட்டும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

> "24.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.605/2025, நாள்.24.10.2025 -ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது".'

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**க.து.ந.க.எண்.பி1/2988/2025**

**தீர்மான எண்: 1139/2025** **பொருள் எண்.59**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் - 5, பகுதி-13, வார்டு-57 Additional proposed lobby, staircase, additional height increase works in Community Hall at VOC Salai பணிக்காக - 2025-26ம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

பணியின்பெயர்:

| வ. எண் | வார்டு எண் | மதிப்பீடு எண் | பணியின்பெயர் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | 57 | 17808 | மண்டலம் - 5, பகுதி-13, வார்டு-57 Additional proposed lobby, staircase, additional height increase works in Community Hall at VOC Salaiபணி | ரூ. 4,86,00,000.00 |
| | | | மொத்தம் | ரூ. 4,86,00,000.00 |

| | | |
|---|---|---|
| 2. | பரிந்துரை செய்தவரின் விவரம் | மண்டலஅலுவலர் |
| 3. | எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | மண்டலம்-5 |
| 4. | சம்மந்தப்பட்ட துறையால் அனுமதி | மண்டல அலுவலர்-5 |
| 5. | தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி | தலைமை பொறியாளர் (கட்டிடம்) T.S.No.33 dtd.24.10.2025 |
| 6. | மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்டது | 2025-2026 ஆம் ஆண்டு |
| 7. | அ) பணியின் செலவினம் | ரூ. 4,00,00,474.77 |
| | ஆ)மேலான மேற்பார்வைசெலவினம் 10.0% | ரூ. ----------- |
| | இ) CMWSSB | ரூ. ------------ |

| | | |
|---|---|---|
| | ஈ) தரக்கட்டுப்பாடு செலவு 1.0% | ரூ. ------------ |
| | உ) மற்ற எதிர்பாராசெலவு 2.50% | ரூ 9,99,435.02 |
| | ஊ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரிய நிதி 1% | ரூ. 4,00,004.75 |
| | எ) ஜி.எஸ்.டிவரி 18% | ரூ 72,00,085.46 |
| | மொத்தம் | ரூ. 4,86,00,000.00 |
| 8. | மழைநீர்வடிகால்வாய் கட்டுவது நடைபாதை பகுதியா அல்லது சாலை பகுதியா அதன் அளவு குறிப்பிடவும் | ----- |
| 9. | ஒரு சதுரமீட்டருக்கு ஆகும் செலவு அல்லது ஒரு மீட்டருக்கு ஆகும் செலவு | கூடுதல் பணிகள் |
| 10. | வரைபடம்வைக்கப்பட்டுள்ளதா? | ------- |
| 11. | மதிப்பீடிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் | மண்டல வார்டு குழு தீர்மானம் பின்னர் பெறப்படும் |
| 12. | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | கூடுதல் பணிகள் |
| 13. | நிதியின் மூலத்தன்மை | மூலதனநிதி |
| | பிரிவு கணக்குஎண் | 202107/..................... |
| | அ) 2025-2026 ஆம்ஆண்டுவரவுசெலவுஒதுக்கீடு | ரூ.----- |
| | ஆ)மதிப்பீடுகளுக்குஇதுவரைஒதுக்கப்பட்டநிதி | ரூ.----- |
| | இ) மீதமுள்ளநிதி (அ-ஆ) | ரூ.----- |
| | ஈ) இக்கோப்பில்குறிப்பிட்டுள்ளபணிக்கு தேவைப்படும்நிதி | ரூ. 4,86,00,000.00 |

எனவே,

1. மண்டலம்-5, பகுதி-13, வார்டு-57 Additional proposed lobby, staircase, additional height increase works in Community Hall at VOC Salai பணிக்காக 2025-26 ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீட்டு தொகை ரூ.4,86,00,000/-க்கு நிர்வாக அனுமதியும்,
2. இப்பணியின் அவசர அவசியம் கருதி தற்போது ஒப்பம் கோரவும்,'

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மூலமாக நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 24.10.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.10.2025 அன்று தீர்மான எண்.*618/2025*ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி)வின் அனுமதி வேண்டி மற்றும் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது".

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 27.10.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.10.2025 அன்று தீர்மான எண்.545/2025ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**க.து.ந.க.எண்.பி1 / 2435 / 2025**

**தீர்மான எண்: 1140/2025** **பொருள் எண்.60**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் - 05, வார்டு - 62, நரசிங்கபுரம், ஆதிகேசவலு தெரு, சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளி (G + 1 Floors) கட்டும் பணிக்காக திருத்திய நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம் - 05, வார்டு - 62, நரசிங்கபுரம், ஆதிகேசவலு தெரு, சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளி (G + 1 Floors) கட்டும் பணி. |
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | 1. ஆணையாளர் அவர்களின் அனுமதி நாள்:07.08.2025.<br>2. மன்ற தீர்மானம் எண்:958 / 2025, நாள்: 26.08.2025. |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம் - 05. |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2024-2025 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி. |
| 5 | <u>மதிப்பீட்டின் தொகை</u> | |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 3,07,89,330.32 |
| | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 55,42,079.46 |
| | (இ) த.நா.க.தொ. ந.வா. 1% | ரூ. 3,07,893.30 |
| | (ஈ) தரக்கட்டுப்பாடு 1% | ரூ. 3,07,893.30 |
| | (உ) மின்சார கட்டணம் | ரூ. 60,000.00 |

| | | |
|---|---|---|
| | (ஊ) எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 5,92,803.62 |
| | மொத்தம் (Rounded Off) | ரூ. 3,76,00,000.00 |
| 6 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள் | 1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் 04.09.2025.<br>2. தினமலர் 05.09.2025.<br>3. தி இந்தியன் எக்ஸ்பிரஸ் 05.09.2025. |
| 7 | ஒப்பப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் | 22.09.2025 |
| 8 | நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண் | Middle School (20 -28 -00/412 - 400 - 402 ) |
| 9 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15/30 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? | ஆம் |
| 10 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | ஒன்று (e-Tender) ஒப்பப்படிவம் இணையதளத்தின் மூலம் பெறப்பட்டுள்ளது |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு 23.09.2025 அன்று ஒரு ஒப்பம் பெறப்பட்டது. அதன் விவரம் பின் வருமாறு :

| வ எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திருவாளர்கள் | பணியின் அலுவலக மதிப்பு ***2024-2025*** (ரூ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ) | ***2024-2025***ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டி ஒப்பிடுகையில் |
|---|---|---|---|---|
| 1 | Yogalakshmi Construction | 3,07,89,330.32 | 3,22,21,034.18 | (+) 4.65 % அதிகம் |

இவ்வொப்பத்தில் திருவாளர். Yogalakshmi Construction., அவர்கள் குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் ஆவார். இவ்வொப்பந்ததாரரிடம் மின்னணு மூலம் விலைக்குறைப்பு கோரப்பட்டதில் L1 ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து ஒப்ப புள்ளியினை அளித்துள்ளார். விவரம் பின்வருமாறு

| வ. எண் | மின்னணு விலைக்குறைப்பு அளித்த விவரம் | L1 ஒப்பந்ததாரர் 2024-2025ஆம் ஆண்டு SOR-ன்படி அளித்துள்ள ஒப்பத்தொகை மற்றும் ஒப்பப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1 | முதற்கட்ட விலை குறைப்பு<br>நாள் 26.09.2025 | ரூ. 3,22,05,639.51 (+) 4.60 % அதிகம் |
| 2 | இரண்டாம் கட்ட விலை குறைப்பு<br>நாள் 26.09.2025 | ரூ. 3,22,02,560.58 (+) 4.59 % அதிகம் |

இதன்படி, மண்டலம்-05, வார்டு-62, நரசிங்கபுரம், ஆதிகேசவலு தெரு, சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளி (G+1 Floors) கட்டும் பணிக்காக 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+) 4.59 % அதிகம், ஒப்பத் தொகை ரூ.3,22,02,560.58 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.57,96,460.90ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.3,79,99,021.00- க்கு ஒப்பம் வழங்கப்பட வேண்டும்.

இப்பணிகளுக்கு 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி கோரப்பட்ட ஒப்பப்புள்ளிக்கு செலவினத்தொகை கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது

| வ. எண். | மதிப்பீட்டின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூபாய்) (A) | தற்போதைய மதிப்பீட்டுக்கு கூடுதல் தொகை விவரம் (+) 4.59 % சேர்த்து (ரூபாய்) (B) |
|---|---|---|---|
| 1 | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 3,07,89,330.32 | ரூ. 3,22,02,560.58 |
| 2 | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 55,42,079.46 | ரூ. 57,96,460.90 |

| | | | |
|---|---|---|---|
| 3 | (இ) த.நா.க.தொ. ந.வா. 1% | ரூ. 3,07,893.30 | ரூ. 3,07,893.30 |
| 4 | (ஈ) தரக்கட்டப்பாடு 1% | ரூ. 3,07,893.30 | ரூ. 3,07,893.30 |
| 5 | (உ) மின்சார கட்டணம் | ரூ. 60,000.00 | ரூ. 60,000.00 |
| 6 | (ஊ) எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 5,92,803.62 | ரூ. 5,92,803.62 |
| | மொத்தம் (Rounded Off) | ரூ. 3,76,00,000.00 | ரூ. 3,92,67,612.00 |
| | | கூடுதல் தொகை (B- A) | ரூ. 16,67,612.00 |

மேலும், இவ்வொப்பத்திற்கு பணி மதிப்புத்தொகையை விட (+)4.59%, 2024-25ஆம் ஆண்டின் விலை விகிதத்தின்படி அதிக ஒப்பப்புள்ளி அளித்துள்ளதால் மொத்த செலவீனத்தொகை ரூ.3,92,67,612.00-க்கு திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டியுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. இப்பணிக்கான திருத்திய மதிப்பீட்டு தொகையான ரூ.3,92,67,612.00-க்கு நிர்வாக அனுமதியும்,
2. மேற்கண்ட பணிக்காக 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+)4.59% அதிகம், ஒப்பத் தொகை ரூ.3,22,02,560.58 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.57,96,460.90ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.3,79,99,021.00-க்கு (ரூபாய் மூன்று கோடியே எழுபத்து ஒன்பது இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து இருபத்து ஒன்று மட்டும்) ஒப்பத்தினை L1 ஒப்பந்ததாரர் திருவாளர். Yogalakshmi Construction., அவர்களுக்கு ஒப்பம் வழங்கவும்,
3. இப்பணிக்கான செலவீனத்தினை கணக்கு குறியீட்டு எண்: Middle School (20 -28 - 00 /412-400-402) நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்)வின் அனுமதி வேண்டியும் மற்றும் இனம்-1ற்கு மட்டும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

“24.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.603/2025, நாள்.24.10.2025 -ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

<u>பூ.து.ந.க.எண்.பி2/2127/2025</u>

**தீர்மான எண்: 1141/2025** **பொருள் எண்.61**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - பூங்கா (ம) விளையாட்டுதிடல் துறை - மண்டலம்-10, பகுதி-30, வார்டு-141ல் CIT நகர் 3வது பிரதான சாலையில் உள்ள பூங்கா மேம்படுத்துதல் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-10, பகுதி-30, வார்டு-141ல் CIT நகர் 3வது பிரதான சாலையில் உள்ள பூங்கா மேம்படுத்துதல் பணிக்காக. ரூ.2,72,00,000/-க்கு (ரூபாய் இரண்டு கோடியே எழுபத்திரண்டு இலட்சம் மட்டும்) 2024-2025 ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்து சமர்ப்பித்துள்ளனர். அதன் விவரம் பின் வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | பணியின் பெயர் | பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-10, பகுதி-30, வார்டு-141ல் CIT நகர் 3வது பிரதான சாலையில் உள்ள பூங்கா மேம்படுத்துதல் பணி. |
| 2. | பரிந்துரை செய்வதரின் விவரம் | மாண்புமிகு மேயர் அவர்கள் 07.07.2025 அன்று மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வு |
| 3. | தொழில்நுட்ப அனுமதியின் விவரம் | தலைமை பொறியாளர் (பூங்கா (ம) விளையாட்டுதிடல்) அவர்களின் தொழில்நுட்ப அனுமதி நாள். 22.10.2025 |
| 4. | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | பூங்காத்துறை |

| | | |
|---|---|---|
| 5. | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது. | 2024 - 25 ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்படி (மதிப்பீடு) |
| 6. | மதிப்பீட்டின் தொகை | ரூ.2,72,00,000/- |
| அ) | பணியின் மதிப்பு | ரூ.2,19,67,364.07 |
| (ஆ) | சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 39,54,125.53 |
| இ) | தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1% | ரூ. 2,19,673.64 |
| (ஈ) | மற்ற எதிர்பாரா செலவு 2.5% | ரூ. 5,09,652.66 |
| (உ) | தரக் கட்டுபாடு செலவு 1 % | ரூ. 2,19,673.64 |
| (ஊ) | இதர செலவு | ரூ. 3,29,510.46 |
| | மொத்தம் | ரூ.2,72,00,000.00 |
| 7. | வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா | ஆம் |
| 8. | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | -------- |
| 9. | நிதியின் தன்மை/ ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி/கணக்கு குறியீட்டு எண் | வருவாய் நிதி 2025 - 26 |
| 10. | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ.2,72,00,000/- |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-10, பகுதி-30, வார்டு-141ல் CIT நகர் 3வது பிரதான சாலையில் உள்ள பூங்கா மேம்படுத்துதல் பணிக்காக 2024-2025 ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் ரூ.2,72,00,000/-க்கு (ரூபாய் இரண்டு கோடியே எழுபத்திரண்டு இலட்சம் மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டியும்,

2. இப்பணிகளை பூங்காக்கள் பழுதுபார்க்கும் பணி நிதியின் தலைப்பு எண்.230-67-01-00 கணக்கு குறியீட்டு எண்.60-61-00 கீழ் நிதி ஒதுக்கீடு பெற அனுமதியும்,
3. இப்பணியினை மண்டலம்-10ன் மூலம் மேற்கொள்ளவும் மற்றும் பூங்காத்துறையின் மூலம் பட்டிதீர்வு செய்வதற்கு அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா மற்றும் விளையாட்டு திடல்)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 23.10.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.10.2025 அன்று தீர்மான எண்.100/2025ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று இதற்கு நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**TVKNGR/346/2025-ADMIN(ENGINEERING)-E1**

**தீர்மான எண்: 1142/2025** **பொருள் எண்.62**

**மதிப்பீடு-2025-26-பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, கோட்டம்-74, Proposed development of super net practicing Cricket ground, Badminton court, Special kids Play area, Open gym, Kids play area, Modernized International standard Skating Court for kids, Water supply arrangements, Toilet facility, feeding room facility, Reading center, Yoga center and other infrastructure facility at Cooks road (OSR Land) (1353 SQ.M) அமைக்கும் பணிக்காக 2024-25ஆம் ஆண்டின் விலை விவரப்படி தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம்-6, பகுதி-17, கோட்டம்-74, Proposed development of super net practicing Cricket ground, Badminton court, Special kids Play area, Open gym, Kids play area, Modernized International standard Skating Court for kids, Water supply arrangements, Toilet facility, feeding room facility, Reading center, Yoga center and other infrastructure facility at Cooks road (OSR Land) (1353 SQ.M) அமைக்கும் பணி. |
| 2 | பரிந்துரை செய்தவரின் விவரம் | |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம்-6 |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2024-25 ஆம் ஆண்டு |
| 5 | மதிப்பீட்டின் தொகை | ரூ.3,46,00,000.00 |
| (அ) | கட்டுமான பணி செலவு | ரூ.2,87,44,158.17 |
| (ஆ) | சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 51,73,948.47 |
| (இ) | தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நலவாரியம் 1% | ரூ. 2,87,441.58 |

| | | |
|---|---|---|
| (ஈ) | தரக்கட்டுப்பாட்டு செலவு 1% | ரூ. 2,87,441.58 |
| (உ) | மற்ற எதிர்பாரா செலவு 2.5% | ரூ. 1,07,010.20 |
| | மொத்தம் | ரூ.3,46,00,000.00 |
| 6 | வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா | ஆம் |
| 7 | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | புதிய பணி |
| 8 | நிதியின் தன்மை / ஒதுக்கீடு<br>செய்யப்பட்டுள்ள நிதி / கணக்கு குறியீட்டு எண் | மூலதன நிதி |
| 9 | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ.3,46,00,000.00 |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-17, கோட்டம்-74, Proposed development of super net practicing Cricket ground, Badminton court, Special kids Play area, Open gym, Kids play area, Modernized International standard Skating Court for kids, Water supply arrangements, Toilet facility, feeding room facility, Reading center, Yoga center and other infrastructure facility at Cooks road (OSR Land) (1353 SQ.M) அமைக்கும் பணிக்காக ரூ.3,46,00,000/-க்கு (ரூபாய் மூன்று கோடியே நாற்பத்தி ஆறு இலட்சம் மட்டும்) 2024-25ஆம் ஆண்டின் விலையின்படி தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும்,
2. மேற்கண்ட பணிக்கு 2025-26ஆம் ஆண்டின் கணக்குஎண்.20-21-07/ என்ற தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு பரிந்துரை செய்யவும்,
3. மன்றத்தின் ஒப்புதல் எதிர்நோக்கி ஒப்பம் கோரவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா மற்றும் விளையாட்டு திடல்)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 23.10.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.10.2025 அன்று தீர்மான எண்.99/2025ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று இதற்கு நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**ம.அ.15.ந.க.எண்.பி1/4953/2025**

**தீர்மான எண்: 1143/2025** **பொருள் எண்.63**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மழைநீர் வடிகால் துறை - மண்டலம்-15, வார்டு-195-ல் உள்ள பெரிய சத்திர குளத்தில் கூடுதல் மேம்படுத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மழைநீர் வடிகால் துறையில், *Amrut 2.0* திட்டத்தின் கீழ், மண்டலம்-*15* பகுதி-*45*, வார்டு எண்-*195*-ல் உள்ள பெரிய சத்திர குளத்தை மேம்படுத்தி புனரமைக்கும் பணிக்கு, திரு.எம். சரவணன் அவர்களுக்கு ஒப்ப தொகை ரூ.*92,77,339.18 (18% GST* வரி உட்பட*)*க்கு பணி ஆணை *23.08.2023* அன்று வழங்கப்பட்டது.

பணி மேற்கொள்ளும்பொழுது குளம் மிகவும் பழமையான குளம் என்பதனால் ஆழம் அதிகமாக காணப்பட்டது. எனவே குளத்தினை ஆழப்படுத்தும் பணி மேற்கொண்ட போது அதன் கரைகள் சரிந்து விழுந்தவாறு இருந்ததால் அதன் கரைகளை பலப்படுத்துவது இன்றியமையாததாக காணப்பட்டது. கரையை பலப்படுத்த *Pile Foundation raft beam* மற்றும் *Toe Wall* போன்ற பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாயிற்று. ஆனால் மேற்குறிப்பிட்ட பணிகள் ஒப்பந்த புள்ளியில் இல்லாத இனங்கள்

என்பதால் இப்பணிகள் கூடுதல் தலைமை செயலர் / ஆணையர் அவர்களின் 13.03.2024 நாளிட்ட ஆணை பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளபட்டது.

அதன் அடிப்படையில் பணி மேற்கொள்ளப்பட்ட நிலையில், குளத்தினை தூர் வாரும் பணி குளத்தினை அகலப்படுத்தியும் பணிகள் மேற்கொள்ளபட்டதால், தூர்வாருவதற்கும், நீர் இறைப்பதற்கும், Pile Foundation, Raft Beam, Toe Wall மற்றும் மண் கரை அமைப்பது ஆகிய பணிகளுக்கு ரூ.92.78 இலட்சம் செலவினத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், 195 வது மாமன்ற உறுப்பினர் அவர்கள் துணை ஆணையர் (பணிகள்) அவர்களுக்கு அளித்த 23.09.2024 நாளிட்ட கடிதத்தில், கூடுதல் அபிவிருத்தி பணிகளான, நடைபாதை மற்றும் கைப்பிடி சாய்வு, இருக்கை, வண்ண விளக்குகள், விளக்கு கம்பம், சுற்றுச்சுவர். ஓவியங்கள். திறந்தவெளி உடற்பயிற்சி மையம், சிறுவர் விளையாட்டு திடல் ஆகியவை அமைத்து தர கோரியிருந்தார்.

இக்குளத்திற்கு கூடுதல் அபிவிருந்தி பணிகள் மேற்கொள்ள ரூ.59,00,000க்கு மதிப்பீடு தயாரிக்கபட்டு ஆணையர் அவர்களின் 18.11.2024 நாளிட்ட அனுமதி பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வந்தது. இம்மதிப்பீட்டிற்கு ஒப்பம் கோரப்படவில்லை. இதில் குளத்தின் பக்கவாட்டில் காப்பு சுவர் (Revetment), சுற்றுச்சுவர், (Compound wall), நடைப்பாதை (Plat form), சிறுவர் விளையாட்டு பொருட்கள், பெரியவர் உடற்பயிற்சி உபகரணங்கள், Hand Rails, Greenery, Front Gate, Inlet, Outlet Pipe மற்றும் பூங்கா விளக்குகள் போன்ற பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.59,00,000க்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட ஆணையருக்கு சமர்ப்பித்த மதிப்பீட்டில் காப்பு சுவர் (Revetment) சேர்க்கபடவில்லை. எனவே தற்பொழுது காப்பு சுவர் (Revetment) உடன் கூடிய அனைத்து பணிகளையும் மேற்கொள்ள ஏதுவாக புதிய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1. மண்டலம்-15 பகுதி-45, வார்டு எண்-195, பெரிய சத்திர குளத்தில் கூடுதல் மேம்பாட்டு பணிகளான Concrete Block கொண்டு Revetment அமைக்கும் பணி, சுற்றுச்சுவர் அமைக்கும் பணி, நடைபாதை அமைக்கும் பணி ஆகிய பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1,82,00,000-க்கு மாண்புமிகு மேயர் அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும்,

2. இப்பணியினை மழைநீர் வடிகால் துறையின் மூலம் ஒப்பம் கோரி பணி மேற்கொள்ளவும்,

3. ரூ.59,00,000க்கு ஏற்கனவே ஆணையர் அவர்களிடம் பெறப்பட்ட நிர்வாக அனுமதியை ரத்து செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**மாண்புமிகு மேயர்**

**இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம். மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. க. ஏகாம்பரம் அவர்கள்.**

**திரு. க. ஏகாம்பரம்**

**மாண்புமிகு மேயர் அவர்களே, மண்டலம்-15, வார்டு-195-ல் உள்ள பெரிய சத்திர குளத்தில் கூடுதல் மேம்படுத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு பொருள் எண். 63ஆக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதற்காக திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், ஆணையர் உள்ளிட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.**

**மாண்புமிகு மேயர்**

**தீர்மானத்தை ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.**

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

******

**சி.தி.து.ந.க.எண்.பி2 / 1674 / 2025**

**தீர்மான எண்: 1144/2025** **பொருள் எண்.64**

**பெருநகர சென்னை மாநகராட்சி - சிறப்பு திட்டங்கள் துறை - மண்டலம் - 1 முதல் 15 வரை மற்றும் அனைத்து துறைகளிலும் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்ததாரர்களின் பதிவுகள் (Contractor Registration) - வருவாய் துறை மூலம் வழங்கப்பட்ட செல்வநிலைச் சான்றிதழ் (Solvency Certificate) நிறுத்தம் - செல்வநிலைச் சான்றிதழுக்குப் பதிலாக மாற்று ஆவணங்கள் பெறுவதற்கு அனுமதி**

மன்றத் தீர்மான எண்.122/2019 நாள்.19.02.2019ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் சாலை பணிகள் மற்றும் கட்டடப் பணிகளை ஒருங்கிணைத்து ஒரே பதிவாக பதிவு செய்து, ஒப்பந்ததாரர்களை அனைத்து கட்டுமானப் பணிகளை *(All Civil Works)* மேற்கொள்ள ஏதுவாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, ஒப்பந்ததாரர்களின் பதிவுகள் வகுப்பு வாரியாக வகுப்பு-1 முதல் 5 வரை தனித்தனியே கீழ்கண்டுள்ள செல்வநிலைச் சான்றிதழின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் விவரம் பின்வருமாறு,

**அட்டவணை-1**

| வ.எண். | வகுப்பு | செல்வ நிலை சான்றிதழ் *(Solvency Certificate)* (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|---|
| 1 | வகுப்பு-I | ரூ.30.00 |
| 2 | வகுப்பு-II | ரூ.22.50 |
| 3 | வகுப்பு-III | ரூ.9.00 |
| 4 | வகுப்பு-IV | ரூ.4.50 |
| 5 | வகுப்பு-V | ரூ.2.00 |

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, வருவாய் நிர்வாகப் பிரிவின் அரசாணை எண்.282, நாள்.26.05.2025ல் செல்வநிலைச் சான்றிதழ் *(Solvency Certificate)* பெறுவதில் உள்ள சிரமத்தை கருத்தில் கொண்டும் மற்றும் பொருளாதாரதன்மையை உறுதிப்படுத்துவதற்கு வேறு ஆவணங்கள்

இருப்பதாலும் செல்வநிலைச் சான்றிதழ் *(Solvency Certificate)* அளிப்பதை நிறுத்தி ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், அதற்கு பதிலாக கீழ்கண்ட ஆவணங்களின் விவரங்களை ஆராய்ந்து பொருளாதார நிலையை உறுதி செய்ய பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**<u>அட்டவணை-2</u>**

| | |
|---|---|
| a) | Income Tax Clearance Certificate |
| b) | Auditor’s Certificate |
| c) | Audited Accounts Certificate |
| d) | Annual turnover report |
| e) | Recent Audited Balance Sheets |
| f) | GST and VAT Clearance Certificate |
| g) | Solvency Certificate / Capability Certificate from Banks |
| h) | Bank Account Statement |
| i) | Bank Guarantee |
| j) | IT Returns |
| k) | Credit Line Certificate |
| l) | PAN Card |
| m) | Collateral documents that are kept for the issue of loans |
| n) | CRISIL rating and the like |

ஒப்பந்ததாரர்களின் பதிவிற்கு மேற்குறிப்பிட்டுள்ள ஆவணங்களில் ஏதேனும் மூன்று ஆவணங்களை எடுத்துக்கொள்ளும்படியும், மேலும், செல்வநிலைச் சான்றிதழ் *(Solvency Certificate)* பெறுவதை நிறுத்தும்படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில், வகுப்பு-1 முதல் 5 வரை ஒப்பந்ததாரராக பதிவு செய்வதற்கு செல்வநிலைச் சான்றிதழுக்கு பதிலாக மேற்கண்டுள்ளவற்றில் இருந்து ஏதேனும் 3 ஆவணங்களை பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் பெயரிலோ *(Company Name)* அல்லது தனிநபர் பெயரிலோ *(Individual)* சமர்ப்பிக்கவும், மேலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள ஆவணங்களையும் சேர்த்து சமர்ப்பிக்கும் பட்சத்தில் உரிய வகுப்பில் ஒப்பந்ததாரராக பதிவு செய்ய, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 24.10.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.10.2025 அன்று தீர்மான எண்.620/2025ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

பா.து.ந.க.எண்.பி3/0441/2025

**தீர்மான எண்: 1145/2025** **பொருள் எண்.65**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பாலங்கள் துறை - மண்டலம்-4, வார்டு-38ல், ஐ.ஓ.சி.எல் முனையம் அருகே தண்டையார்பேட்டையில் பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கே வடிவமைப்பு, பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமானம் (DEPC) முறையில் பாலம் அமைக்கும் பணி - மூலதன (Capital fund) நிதியின் கீழ் திரு. எம்.ராஜ்குமார் அவர்களுக்கு பணி ஆணை வழங்க அனுமதி.**

| | | | |
|---|---|---|---|
| 1. | பணியின் பெயர் மற்றும் பணியின் இடம் | : | மண்டலம்-4, வார்டு-38ல், ஐ.ஓ.சி.எல் முனையம் அருகே தண்டையார்பேட்டையில் பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கே வடிவமைப்பு, பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமானம் *(DEPC)* முறையில் பாலம் அமைக்கும் பணி. |

| | | | |
|---|---|---|---|
| 2. | மதிப்பீட்டின் ஒப்புதல் பெற்ற விவரம் | : | மன்ற தீர்மான எண் 667/2025 நாள்.28.05.2024 |
| 3. | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | : | பாலங்கள் துறை |
| 4. | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | : | 2024-25 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 5. | மதிப்பீட்டின் தொகை | | ரூ. 6,24,24,000.00 |
| | (அ)பணி செலவினம் மட்டும் | : | ரூ. 5,09,59,049.31 |
| | (ஆ) பொருட்கள் மற்றும் சேவை வரி - 18% | : | ரூ. 91,72,628.88 |
| | (இ) தமிழ்நாடு தொழிலாளர்கள் பொது நல நிதி – 1% | : | ரூ. 5,09,590.49 |
| | (ஈ) தரக்கட்டுப்பாடு – 1% | : | ரூ. 5,09,590.49 |
| | (உ) எதிர்பாரா செலவினம் – 2.5% | : | ரூ. 12,73,140.82 |
| | மொத்தம் | : | ரூ. 6,24,24,000.00 |
| 6. | எந்தெந்த பத்திரிக்கைகளில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள் | : | தினமலர், நாள்.17.06.2025<br>தி டைம்ஸ் ஆப் இந்தியா, நாள். 17.06.2025 |
| 7. | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள். | : | 01.07.2025 |
| 8. | நிதியின் தன்மை | : | மூலதன நிதி (Capital fund) |
| 9. | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? | : | ஆம் |
| 10 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | : | ஒரு ஒப்பம் (e-Tender) இணையதளத்தின் மூலம் பெறப்பட்டது. |

ஒப்ப நாளான 02.07.2025 அன்று ஒரு ஒப்பம் e-Tender மூலமாக பெறப்பட்டது. தொழில்நுட்ப ஒப்பத்தில் தகுதி பெற்ற ஒப்பந்ததாரரின் நிதி ஒப்பம் 10.07.2025 அன்று திறக்கப்பட்டது.

அதன் விவரம் பின்வருமாறு :-

| வ. எண் | தொழில்நுட்ப ஒப்பத்தில் தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்கள் (திருவாளர்கள்) | பணியின் அலுவலக மதிப்பு (GST@ 18% உட்பட) (ரூ) 2024-2025 | விலை விகிதம் விழுக்காடு அதிகம் / குறைவு 2024-2025 | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (GST@ 18% உட்பட) (ரூ) |
|---|---|---|---|---|
| 1. | திரு .எம்.ராஜ்குமார் | ரூ. 6,01,31,678.19/- | (+)21.54 | ரூ. 7,30,81,600/- |

10.07.2025 அன்று e-Tender மூலம் மேற்கண்ட பணிக்கு தகுதி பெற்ற ஒப்பந்ததாரரான திரு .எம்.ராஜ்குமார் அவர்களிடம் அட்டவணை A க்கு (BOQ) விலைக்குறைப்பு கோரப்பட்டது மற்றும் 10.07.2025 அன்று அட்டவணை B க்கு விலைக்குறைப்பு கோரப்பட்டது.

11.07.2025 அன்று திரு .எம்.ராஜ்குமார் அவர்கள் e-Tender வாயிலாக அட்டவணை A க்கு (BOQ) ஒப்பத்தொகையை ரூ.7,30,81,600/- (+)21.54% லிருந்து ரூ.7,27,21,000.00/ (+)20.94%க்கு விலைக்குறைப்பு செய்துள்ளார்.

ஒப்பந்ததாரரான திரு. எம்.ராஜ்குமார் அவர்கள் 11.07.2025 நாளிட்ட கடிதத்தில் அட்டவணை B க்கு விலைக்குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார்.

05.08.2025 அன்று e-Tender மூலம் மேற்கண்ட பணிக்கு அட்டவணை A க்கு (BOQ) விலைக்குறைப்பு செய்யுமாறு ஒப்பந்ததாரரான திரு.எம்.ராஜ்குமார் அவர்களிடம் கோரப்பட்டது.

07.08.2025 அன்று திரு .எம்.ராஜ்குமார் அவர்கள் e-Tender வாயிலாக அட்டவணை A க்கு (BOQ) ஒப்பத்தொகையை ரூ.7,27,21,000/ (+)20.94% விலைக்குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார்.

மேலும், 07.08.2025 அன்று e-Tender மூலம் மேற்கண்ட பணிக்கு விலைக்குறைப்பு செய்யுமாறு ஒப்பந்ததாரரான திரு.எம்.ராஜ்குமார் அவர்களிடம் அட்டவணை A க்கு (BOQ) கோரப்பட்டது.

08.08.2025 அன்று திரு.எம்.ராஜ்குமார் அவர்கள் e-Tender வாயிலாக அட்டவணை A க்கு (BOQ) ஒப்பத்தொகையை ரூ.7,27,21,000/ (+)20.94% லிருந்து ரூ. 6,91,45,416/- (+)14.99%க்கு விலைக்குறைப்பு செய்துள்ளார்.

எனவே, ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை மற்றும் ஒப்ப சதவீதம் பின்வருமாறு.

| பணியின் அலுவலக மதிப்பு (ரூ) SOR 2024-25 (GST@ 18% உட்பட) | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை மற்றும் விலைவிகித விழுக்காடு (GST@ 18% உட்பட) (2024-2025) | முதலாம் விலைக்குறைப்பிற்குப் பிறகு ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை மற்றும் விலைவிகித விழுக்காடு (GST@ 18% உட்பட) (2024-2025) | இரண்டாம் விலைக்குறைப்பிற்குப் பிறகு ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை மற்றும் விலைவிகித விழுக்காடு (GST@ 18% உட்பட) (2024-2025) | மூன்றாம் மற்றும் இறுதி விலைக்குறைப்பிற்குப் பிறகு ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை மற்றும் விலைவிகித விழுக்காடு (GST@ 18% உட்பட) (2024-2025 |
|---|---|---|---|---|
| ரூ. 6,01,31,678.19/- | ரூ. 7,30,81,600/- | ரூ.7,27,21,000/ | ரூ.7,27,21,000/ | ரூ. 6,91,45,416/- |
| | (+)21.54 | (+)20.94% | (+)20.94% (குறைக்கவில்லை) | (+)14.99% |

இப்பணியினை கீழ்க்கண்ட காரணங்களை கருத்தில் கொண்டு, திரு .எம்.ராஜ்குமார் அவர்களின் ஒப்பத் தொகையான ரூ. 6,91,45,416/- ((+)14.99%)ஐ ஏற்கலாம் எனக் கருதப்படுகிறது.

1. Ministry of Road Transport & Highways (MORT&H)-ன் விவரக்குறிப்புகளின் (Specifications)-படி பணி மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், பணி மேற்கொள்ள தேவையான பணியிட அலுவலகம், தொழிலாளர் தங்குமிடம், கட்டுமான பொருட்கள் சேமிப்பு கிடங்கு, தொழில்நுட்ப மேற்பார்வையாளர்களின் சம்பளம் ஆகியவற்றிற்கான செலவீனம்,
2. தொழிலாளர்களுக்கு காப்பீட்டுத் தொகை வழங்குவதற்காக கூடுதல் செலவீனம்,
3. Ministry of Road Transport & Highways (MORT&H)-ன் விவரக் குறிப்புகளின் (Specifications)-படி இரும்பு கம்பிகளுக்கு Laps மற்றும் Chair களுக்கு பணப்பட்டுவாடா செய்வதில்லை.
4. கட்டுமான பொருட்களான, சிமெண்ட் மற்றும் இரும்பு கம்பிகள் போன்றவற்றின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால்,

ஒப்பந்ததாரரின் ஒப்ப சதவீதமான (+)14.99% (SOR 2024-25)ன்படி ஒப்பத்தொகையான ரூ.6,91,45,416/- (18% GST உட்பட), ஏற்று இப்பணியினை திரு.எம்.ராஜ்குமார் அவர்களுக்கு வழங்க 14.08.2025 அன்று ஒப்ப பரிசீலனைக் குழு (Tender Scrutiny Committee)வின் பரிந்துரை பெறப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட பணியினை திரு.எம்.ராஜ்குமார் அவர்களின் ஒப்ப சதவீதமான (+)14.99%ன்படி ஒப்பத்தொகையான ரூ.6,91,45,416/-ஐ (18% GST உட்பட) ஏற்று, திரு.எம்.ராஜ்குமார் அவர்களுக்கு பணி ஆணை வழங்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு (ம) நிதி)) மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டும் குறிப்பில் ஆணையர் அவர்களின் 17.09.2025 நாளிட்ட அனுமதி பெறப்பட்டு நிலைக்குழு (பணிகள்)விற்கு சமர்ப்பிக்கப்பட்டது..

திரு. எம்.ராஜ்குமார் அவர்களின் ஒப்ப சதவீதமான (+)14.99%ன்படி ஒப்பத்தொகையான ரூ.6,91,45,416/- ஐ (18% GST உட்பட) ஏற்று, திரு. எம்.ராஜ்குமார் அவர்களுக்கு பணி ஆணை வழங்க 24.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் பின்வருமாறு கூறப்பட்டு தீர்மானம் ஒத்திவைக்கப்பட்டது.

*“26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் கடந்த ஜனவரி மற்றும் ஏப்ரல் மாதங்களில் நடைபெற்ற நிலைக்குழு கூட்டங்களில் பாலங்கள் கட்டும் பணிகளுக்கு ஒப்பந்ததாருக்கு பெருநகர சென்னை மாநகராட்சி குறிப்பிட்ட ஒப்பத்தொகையினைவிட கூடுதலாக குறைந்தபட்சம் 2.69 சதவீதம் முதல் அதிகப்பட்சம் 9.99 சதவீதம் வரையில் ஒப்பங்கள் வழங்கப்பட்ட நிலையில் ஒவ்வொப்பத்தில் மட்டும் 14.99 சதவீதம் கூடுதல் ஒப்பத் தொகையில் ஒப்பம் வழங்க அனுமதி கோரப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியின் வருவாய் காரணிகளை உயர்த்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் ஒப்பத் தொகையினைவிட கூடுதல் ஒப்பத் தொகைக்கு ஒப்பம் வழங்கினால் நிதி இழப்பீடு ஏற்பட வாய்ப்புள்ளதாகவும், எனவே ஒப்பந்ததாரரிடம் மீண்டும் ஒரு முறை பேச்சுவார்த்தை நடந்தி ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்ப சதவீதத்திற்குள் ஒப்பத் தொகையினை குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென பெரும்பான்மையான உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் தீர்மான எண்.479/2025, நாள்.26.09.2025ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி.) இதனை ஒத்திவைக்கின்றது.”*

நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தில் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் 07.10.2025 அன்று e-Tender வாயிலாக மற்றும் மின்னஞ்சல் மூலம், ஒப்பந்ததாரர் திரு.எம்.ராஜ்குமார் அவர்களிடம் விலைக்குறைப்பு (அட்டவணை A) கோரப்பட்டது.

08.10.2025 (ம) 09.10.2025 அன்று மின்னஞ்சல் மற்றும் e-Tender வாயிலாக, ஒப்பந்ததாரர் திரு.எம்.ராஜ்குமார் அவர்கள் கீழ்க்கண்ட காரணங்களால் ஒப்பத்தொகையான ரூ.6,91,45,416/- (+)14.99% (18% GST உட்பட) லிருந்து விலைக்குறைப்பு (அட்டவணை A) செய்ய இயலாது என தெரிவித்துள்ளார்.

1. இப்பணியிடம் பக்கிங்காம் கால்வாயில் அமைந்துள்ளது, அங்கு கழிவுநீர் தொடர்ந்து பாய்ந்து கொண்டிருக்கிறது. இப்படியான சூழ்நிலையில் அடித்தளப் பணிகளைச் செய்ய நீரை வடித்தல் (dewatering), தாங்கு அமைப்பு (shoring) மற்றும் அகழ்வு (excavation) பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது, இது மிகவும் கடினமான பணியாகும். இப்படியான நிலைகளில் பணியாற்றுவதற்காக தொழிலாளர்களுக்கு இரட்டிப்பு கூலி வழங்க வேண்டியுள்ளது. இதனால் கூடுதல் செலவீனம் ஏற்படும்.
2. இப்பணியிடத்தில் RMC இயந்திரம், பணியிட அலுவலகம் (site office), தொழிலாளர்கள், தங்குமிடம் பொருள் சேமிப்பு இடம் மற்றும் இரும்புக் கம்பிகளை வளைப்பதற்கு ஏதுவாக போதுமான காலியான இடம் பணியிடத்திற்கு அருகாமையில் இல்லை. எனவே, தொழிலாளர்கள் மற்றும் பொருட்களை தொழிலாளர் தங்குமிடத்திலிருந்து பணியிடத்திற்கும் மீண்டும் பணியிடத்திலிருந்து தொழிலாளர் தங்குமிடத்திற்கு தினமும் எடுத்துச் செல்ல போக்குவரத்து ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியுள்ளது. இதனால் கூடுதல் செலவீனம் ஏற்படும்.
3. கான்கிரீட் தயாரிப்புக்கும் தொழிலாளர்களின் தேவைகளுக்கும் நல்ல தரமான தண்ணீரைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. ஆனால், பணியிடத்தின் அருகில் நல்ல தரமான தண்ணீர் கிடைப்பதில்லை. எனவே, இதற்கு கூடுதல் செலவீனம் ஏற்படும்.

இப்பணியினை மேற்கண்ட காரணங்களை கருத்தில் கொண்டு, திரு .எம்.ராஜ்குமார் அவர்களின் ஒப்பத் தொகையான ரூ. 6,91,45,416/- ((+)14.99%)ஐ ஏற்கலாம் எனக் கருதப்படுகிறது.

எனவே, மேற்கண்ட பணியினை திரு.எம்.ராஜ்குமார் அவர்களின் ஒப்ப சதவீதமான (+)14.99%ன்படி ஒப்பத்தொகையான ரூ.6,91,45,416/-ஐ (18% GST உட்பட) ஏற்று, திரு.எம்.ராஜ்குமார் அவர்களுக்கு பணி ஆணை வழங்க, நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"27.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.538/2025, நாள்.27.10.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.2.ந.க.எண்.சி1/4010/2025**

**தீர்மான எண்: 1146/2025** **பொருள் எண்.66**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 2 (மணலி)- வார்டு-15 முதல் 22 வரைக்குட்பட்ட பகுதிகளில் அண்டை வீட்டு குழு சுய உதவி குழுக்கள் மூலம் பணிபுரியும் 28 தற்காலிக சாலை பணியாளர்களின் பணிக்காலம் 03.10.2025 உடன் முடிவடையவுள்ளது. பணிகாலத்தினை 06.10.2025 முதல் 05.10.2026 வரை பணி நீட்டிப்பு செய்ய நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மணலி மண்டலம் -2 ல் பகுதி 4 மற்றும் 5, வார்டு-15 முதல் 22 வரை 43.93 சதுர கி.மீ பரப்பளவுள்ள 8 வார்டுகளை உள்ளடக்கிய பகுதியாகும். இந்த மண்டலத்தில் 10 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 1344 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளும் சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு சாலை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மண்டலம்-2ற்கு அனுமதிக்கப்பட்ட நிரந்தர சாலைப்பணியாளர்களின் எண்ணிக்கை மொத்தம் 64 ஆகும். அதில் தற்போது நிரந்தர சாலை பணியாளர்கள் 56 நபர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அதில் மாற்றுப்பணி அடிப்படையில் 17 சாலைப்பணியாளர்கள் தலைமையிடத்தில் 6 சாலைப்பணியாளர்கள் மண்டல அலுவலகம்-2ல் மற்றும் 8 சாலைப்பணியாளர்கள் வரிவசூலிப்பாளர் (பொறுப்பு) வருவாய்துறையில் பணிபுரிந்து வருகிறார்கள். தற்போது மண்டலம்-2ல் 25 எண்ணிக்கை நிரந்தர சாலைப்பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகிறார்கள். சாலைப்பணியாளர்களின் அன்றாட பணிகளை கீழ்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

1. Road Patch work / pot hole attended

2. Removal of Debris

3. Clearing of unauthorized encroachment

4. Strom water Drain Silt catch pit cleaning & Chute pipe Cleaning

5. Water table cleaning

6. Filling of Road cut made by service department

7. Road Sectioning

8. Desilting of SWD & open Canal

9. Removing the storm water

10. Clearing the tree branches on the road to prevent the traffic block

11. Clearing the tree branches on the road tree prunning & branches cutting

    Fallen tree removing

**12.All other related road works**

1. Hot mix patch attended.
2. CC patch work attended
3. Cold mix patch attended

**13.In Rainy Season**

1. Diesel pump operation
2. Food distribution work
3. Relief centre work etc.

## 14. Election work

1. Defacing
2. Flag removing
3. Poster & Banners removing.
4. Flag post & Flag pole removing etc..

Municipal Administration and Water Supply G.O. No.95 நாள் 14.10.2012 ன்படி ஒரு வார்டுக்கு 8 சாலைப்பணியாளர்கள் என பணியாளர்கள் எண்ணிக்கை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மண்டலம்-2 வார்டு-15 முதல் 22 வரை உட்பட்ட பகுதிகளில் 56 சாலைப்பணியாளர்களில் 17 சாலைப்பணியாளர்கள் மாற்றுப்பணி அடிப்படையில் தலைமையிடத்தில் 6 சாலைப்பணியாளர்கள் மாற்றுப்பணி அடிப்படையில் மண்டலம்-2 அலுவலகத்தில் பணிபுரிகிறார்கள். 8 சாலைப்பணியாளர்கள் வரிவசூலிப்பாளர் ('பொறுப்பு) வருவாய்துறையில் பணிபுரிந்து வருகிறார்கள். மீதமுள்ள 25 சாலைப்பணியாளர்களை மட்டுமே கொண்டு மேற்குறிப்பிட்ட பணிகளை மேற்கொள்வதால், பணிகளில் தொய்வு ஏற்படும் நிலையுள்ளது.

மண்டலம்-2 (மணலி) வார்டு-15 முதல் 22 வரை உட்பட்ட பகுதிகளில் சாலைப்பணிகளை அண்டை வீட்டு குழு சுயஉதவி குழுக்கள் மூலம் 28 தற்காலிக தினக்கூலி சாலைப்பணியாளர்கள் மற்றும் 2 தற்காலிக தினக்கூலி மழைநீர் வடிகால்வாய் தூர்வாரும் நபர்கள் கொண்டு 06.10.2024 முதல் 05.10.2025 வரை சாலைப்பணிகள் மேற்கொள்ள, முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின், 16.10.2024 நாளிட்ட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இப்பணியானது 03.10.2025 அன்றுடன் முடிவடையவுள்ளது.

தற்போது புதியதாக 56 நிரந்தர சாலைப்பணியாளர்களில் 17 சாலைப்பணியாளர்கள் மாற்றுப்பணி அடிப்படையில் தலைமையிடத்தில் 6 சாலைப்பணியாளர்கள் மாற்றுப்பணி அடிப்படையில் மண்டலம்-2 அலுவலகத்தில் பணிபுரிகிறார்கள் 8 சாலைப்பணியாளர்கள் வரிவசூலிப்பாளர் ('பொறுப்பு) வருவாய்துறையில் பணிபுரிந்து வருகிறார்கள். அண்டை வீட்டு குழு சுயஉதவி குழுக்கள் பணியாளர்களின் எண்ணிக்கை 28 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றார்கள்.

வார்டு வாரியாக மண்டலம்-2ல் பணிபுரியும் நிரந்தர சாலைப்பணியாளர்களின் எண்ணிக்கை மற்றும் தற்காலிக சாலைப்பணியாளர்களின் எண்ணிக்கை கீழ்கண்டவாறு அட்டவணையிடப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | அனுமதிக்கப்பட்ட பணியிடம் | தற்போது பணிபுரியும் நிரந்தர சாலைப்பணியாளர்களின் எண்ணிக்கை | பணிநீடிப்பு செய்ய தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | 15 | 8 | 8 | 3 |
| 2. | 16 | 8 | 5 | 3 |
| 3. | 17 | 8 | 5 | 3 |
| 4. | 18 | 8 | 6 | 3 |
| 5. | 19 | 8 | 9 | 1 |
| 6. | 20 | 8 | 9 | 3 |
| 7. | 21 | 8 | 9 | 3 |
| 8. | 22<br>மழைநீர் வடிகால்வாய் தூர்வாரும் பணியாளர்கள் | 8 | 5 | 7<br>2 |
| மொத்தம் | | 64 | 56 | 28 |

*16.06.2023* நாளிட்ட அரசாணையில் திருத்திய குறைந்தபட்ச ஊதியம் *for employment under any local authority of different classes of employees* அனைத்து மாநகராட்சிகள், நகராட்சி, பஞ்சாயத்து, ஊராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கு வெவ்வேறு சராசரி குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு, இதன் பொருட்டான அரசாணையில், தெரிவிக்கப்பட்ட விவரங்கள் தமிழ்நாடு அரசின் அரசிதழ் வெளியிடும் *(Gazette Publication)* நாள்.*05.07.2023* முதல் அமுல்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மன்ற தீர்மான எண் *008/2024* நாள் *31.01.2024* ன்படி, மண்டலம்-2ல் பணிபுரியும் அண்டை வீட்டு குழு தற்காலிக தினக்கூலி சாலைப்பணியாளர்கள் மற்றும் மழைநீர் வடிகால்வாய் தூர்வாரும் பணியாளர்கள் நாளொன்றுக்கு தினக்கூலி ஊதியம் ரூ.*753* /- ஆக வழங்கப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் 29.07.2024 நாளிட்ட அனுமதியின்படி மண்டல அலுவலகம்-2 வார்டுகுழுவின் 25வது சாதாரண கூட்டத்தில் தற்போது 28 பணியாளர்களின் மேற்கண்ட தற்காலிக தினக்கூலி சாலைப்பணியாளர்களின் பணிக்காலத்தை 06.10.2024 முதல் 05.10.2025 வரை பணிநீட்டிப்பு செய்ய தீர்மானம் எண்:1971 நாள் 16.07.2024 அன்று நிறைவேற்றப்பட்டுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

பணியமைப்பு பெருநகர சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மைத்துறை அண்டை வீட்டு குழுவின் வழியாக மண்டலங்களில் பணியமர்த்தப்பட்டுள்ள தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கு (Unskilled worker) நாள் ஒன்றிக்கு 01.04.2024 முதல் தினக்கூலி ரூ.753/-உயர்த்தி மன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு நடைமுறைப்படுத்த ஆணை பெறப்பட்டது. இப்பணிக்கான கணக்கு குறியீட்டு எண். 20-21-07 கணக்கு தலைப்பு 210-100-603 கீழ் நடப்பு ஆண்டில் (2025 - 2026) ரூ.85,00,000/- நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ஆகஸ்ட்-2025 வரை 35,39,100/- செலவு செய்யப்பட்டு மீதம் ரூ. 49,60,900/- இருப்பில் உள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. Municipal Administration and Water Supply G.O. No.95 நாள் 14.10.2012 ன்படி மண்டலம்-2ற்கு ஒரு வார்டுக்கு 8 நபர்கள் வீதம் 8 வார்டிற்கு 64 நபர்கள் என்ற பணியாளர்களின் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பினும், மேற்குறிப்பிட்ட பணிக்காக மண்டலம் -2 (மணலி), பகுதி 4 மற்றும் 5 க்கு உட்பட்ட பகுதிகளில் சாலை பணிகள் மேற்கொள்ள அவசரம் மற்றும் அவசியம் கருதி தற்காலிக சாலைப்பணியாளர்கள் 26 நபர்கள் மற்றும் தற்காலிக மழைநீர் வடிகால்வாய் தூர்வாரும் பணியாளர்கள் 2 நபர்கள் மொத்தம் 28 தற்காலிக தினக்கூலி பணியாளர்கள் 06.10.2025 முதல் 05.10.2026 வரை (365 நாட்கள்) அண்டை வீட்டு குழு சுயஉதவி குழுக்கள் மூலம் பணிபுரிய பணிநீட்டிப்பு நிர்வாக அனுமதி வேண்டியும்,

2. மேற்கண்ட பணிக்காக ஆகும் செலவு தொகை ரூ.76,95,660/- (ரூபாய் எழுபத்து ஆறு இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரத்து அறுநூற்று அறுபது மட்டும்) (28நபர்கள்Xரூ.753X365நாட்கள்) இதில் இருப்பில் உள்ள தொகை போக மீதமுள்ள தொகையினை நிதிஆலோசகர் மூலம் கூடுதலாக நிதி ஒதுக்கீடு பெற நிர்வாக அனுமதி வேண்டியும்,

3. இச்செலவீனத்தை கணக்கு குறியீட்டு எண்20-21-07கணக்கு தலைப்பு எண் 210-100-603 கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 24.10.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.10.2025 அன்று தீர்மான எண்.619/2025ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 27.10.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.10.2025 அன்று தீர்மான எண்.546/2025ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

<u>ம.அ.4.ந.க.எண்.சி2/6809/2025</u>

**தீர்மான எண்: 1147/2025** **பொருள் எண்.67**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்- 4 - கோட்டம் 34 முதல் 48 வரை மற்றும் கே.டி.ஜியில் தூய்மை பணிக்கு போதுமான நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் அண்டை வீட்டு குழுக்கள் (SHG) கீழ் 1147 தூய்மை பணியாளர்கள் பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டனர் - அப்பணியாளர்களின் பணிக்காலம் 31.08.2025 உடன் முடிவடைவதால் மேலும் மூன்று மாத காலத்திற்கு 01.09.2025 முதல் 30.11.2025 வரை மொத்தம் 1147 தூய்மை பணியாளர்களை அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலமாக தூய்மை பணிகளை மேற்கொள்ள பணியமர்த்தியமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4ற்குட்பட்ட பகுதிகள் சென்னையின் பழமை வாய்ந்த பெரம்பூர், ஆர்.கே.நகர், வியாசர்பாடி மற்றும் இராயபுரம் போன்ற பகுதிகளை உள்ளடக்கியதாகும். மேலும், திருவொற்றியூர் நெடுஞ்சாலை, தண்டையார்பேட்டை நெடுஞ்சாலை ஆகிய நெடுஞ்சாலைகளை உள்ளடக்கிய 35.5 கி.மீ நீளமுள்ள 49 பேருந்து சாலைகள் மற்றும் 393.65 கி.மீ நீளமுள்ள 2846 உட்புறச் சாலைகளை, பெருநகர சென்னை மாநகராட்சியின் பணியாளர்களைக் கொண்டு தனியாக தினமும் தூய்மை பணிகளை மேற்கொள்ள வேண்டும். இது தவிர பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4க்குட்பட்ட பகுதிகளில் அரசு சின்ன ஸ்டான்லி மருத்துவமனை, தண்டையார்பேட்டை ரயில் நிலையம் , காசிமேடு சுடுகாடு, முல்லை நகர் சுடுகாடு, சீதாராம் நகர் சுடுகாடு, பூங்காக்கள், விளையாட்டு திடல்கள், ஓட்டல்கள் குடிசைமாற்று வாரிய குடியிருப்புகள் மற்றும் இலவச பொதுக் கழிப்பிடங்கள், மக்கும் குப்பை, மக்காத குப்பைகளை சேகரித்து தரம் பிரிக்கும் பணிகள் ஆகியவற்றை சீரிய முறையில் சுத்தமாக பராமரித்திட வேண்டும். மேற்கண்ட பகுதிகளில் பொது மக்கள் அதிகமாக வசிப்பதாலும் குப்பைகள் அதிக அளவில் அகற்ற வேண்டியுள்ளது. இந்நிலையில் தற்போது மண்டலம்-4, கோட்டம்-34 முதல் 48 வரை மற்றும் கே.டி.ஜியில் பணிபுரியும் 561 நிரந்தர பணியாளர்களில் (ஓய்வு, பணியிடமாற்றம், பதவி உயர்வு மற்றும் இறப்பு) காரணமாக 88 பணியாளர்கள் போக மீதம் உள்ள 473 நிரந்தர பணியாளர்கள் மற்றும் 1147 அண்டை வீட்டு குழுக்கள் (SHG) பணியாளர்களை மட்டுமே கொண்டு தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முதன்மைச் செயலர், தொழிலாளர் ஆணையர் அவர்களின் கடித எண்.செ3/5476/2024-3, நாள்:02.05.2024ல் தெரிவித்துள்ள corrigendumல் அரசாணை எண்.62ல் சுட்டிக்காட்டப்பட்ட The DA is linked to the Average Consumer Price Index number of the city for the year 2019/That is 161 points an increase of Rs.37.25 per month shall be paid as dearness allowance ன் படி அகவிலைப்படி ரூ.6593/- ம் மற்றும் unskilled தொழிலாளர்களுக்கு Minimum Rate of Basic Wages ன் படி ஒரு மாதத்திற்கு (ரூ.13000/- + ரூ.6593/- ) ஆக மொத்தம் ரூ.19593/- மாத கூலி கணக்கிட்டு தினக்கூலியாக ரூ.753/- என கணக்கிடப்பட்டுள்ளது-

கூடுதல் தலைமை செயலர் /ஆணையர் அவர்களின் 10.07.2024 நாளிட்ட ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் வரும் அனைத்து துறை, மண்டலங்களிலும் (கல்வித்துறை உட்பட) அண்டை வீட்டு குழுவின் (SHG) மற்றும் NMR கீழ் பணிபுரியும் தற்காலிக தூய்மை பணியாளர்கள், சுகாதார பணியாளர்கள் மற்றும் unskilled தொழிலாளர்களுக்கு அவர்கள் ஏற்கனவே, 05.07.2023 முதல் பெற்று வந்த மாத wages ரூ.17,867/- என்ற வீதத்தில் நாளொன்றிற்கு தினக்கூலி ரூ.687/- வழங்கியதை மன்றத்தின் பின்னேற்பிற்குட்பட்டும், 01.04.2024 முதல் மாதந்திர wages ரூ.19593/- என்ற வீதத்தில் நாளொன்றிற்கு தினக்கூலி ரூ.753/- என உயர்த்தி வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மண்டலம்-4, தூய்மை துறையில் கோட்டம்-34 முதல் 48 வரை மற்றும் கே.டி.ஜியில் மேற்கண்ட தூய்மை பணிகள் மேற்கொள்ள 1147 தூய்மை பணியாளர்கள் அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ள 01.06.2025 முதல் 31.08.2025 வரை மூன்று மாத காலத்திற்கு மன்றத் தீர்மான எண்.642/2025, நாள்.28.05.2025-ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது.

மண்டல அலுவலர்-4 அவர்களின் ஒப்புதலில் மேற்கண்ட 1147 SHG தூய்மை பணியாளர்களின் பணிக்காலம் 31.08.2025 அன்றுடன் முடிவடைவதால், மேலும் மூன்று மாத காலத்திற்கு (01.09.2025 முதல் 30.11.2025 வரை ) மொத்தம் 1147 SHG பணியாளர்கள் தூய்மை பணியில் ஈடுபடுத்த ஆணையர் அவர்களுக்கும் மற்றும் மன்றத்துறைக்கு குறிப்பு வைக்க மாவட்ட வருவாய் அலுவலர்-4 அவர்களின் 30.07.2025 நாளிட்ட ஆணை பெறப்பட்டது. இதனைத் தொடர்ந்து மேற்கண்ட பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு ஊதிய மதிப்பீடு கணக்கிடப்பட்டுள்ளது.

## அட்டவணை

## துப்புரவு பணியாளர் தேவைப்பட்டியல் கணக்கீடு

| வ.எண் | கோட்டம் | மொத்தம் அனுமதி பெற்ற தொழிலாளர்கள் எண்ணிக்கை | தற்போது பணிபுரியும் நிரந்திர பணியாளர்களின் எண்ணிக்கை | மன்றத்தீர்மானம் பெறப்பட்ட SHG பணியாளர்கள் எண்ணிக்கை | ஓய்வு/இறப்பு காலிபணியிடங்கள் | தலைமை பொறியாளர் (SWM) அவர்களின் சுற்றறிக்கை நாள் :10.08.2023 (நி.க.மே.து.ந.க.எண்.அ3/3974/2023) | தோராய செலவினம் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1. | 34 | 165 | 25 | 132 | 8 | | |
| 2 | 35 | 150 | 30 | 107 | 13 | | |
| 3 | 36 | 130 | 17 | 107 | 6 | | |
| 4 | 37 | 140 | 21 | 114 | 5 | | |
| 5 | 38 | 103 | 29 | 69 | 5 | | |
| 6 | 39 | 87 | 28 | 51 | 8 | | |
| 7 | 40 | 93 | 29 | 52 | 12 | | |
| 8 | 41 | 101 | 43 | 47 | 11 | | |
| 9 | 42 | 102 | 48 | 48 | 6 | | |
| 10 | 43 | 100 | 31 | 68 | 1 | | ரூ.753/- X 1147 |
| 11 | 44 | 94 | 22 | 69 | 3 | | (SHG தூய்மை |
| 12 | 45 | 114 | 25 | 84 | 5 | | பணியாளர்கள்) |
| 13 | 46 | 99 | 19 | 77 | 3 | ரூ.753/- | X 91 நாட்கள் = |
| 14 | 47 | 88 | 34 | 52 | 2 | | ரூ.7,85,95,881/- |
| 15 | 48 | 93 | 47 | 38 | 8 | | ( 01.09.2025 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 16 | KDG | 55 | 17 | 32 | 6 | | முதல் 30.11.2025 வரை) |
| மொத்தம் | | 1714 | 465 | 1147 | 102 | | |

எனவே, மண்டலம்-4, கோட்டம்-34 முதல் 48 வரை மற்றும் கே.டி.ஜியில் தூய்மை பணிகளை மேற்கொள்ள அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலமாக 1147 தூய்மை பணியாளர்களை பணிக்கு எடுத்துக்கொள்ள 01.09.2025 முதல் 30.11.2025 வரை மூன்று மாத காலத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

| | |
|---|---|
| (அ) | மண்டலம்-4, கோட்டம்-34 முதல் 48 வரை மற்றும் கே.டி.ஜியில் தூய்மை பணிகள் மேற்கொள்ள 1147 SHG பணியாளர்களை அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலமாக 01.09.2025 முதல் 30.11.2025 வரை மூன்று மாத காலத்திற்கு எடுத்துக் கொண்டமைக்கு பின்னேற்பு அனுமதியும். (91 நாட்கள்) |
| (ஆ) | கூடுதல் தலைமை செயலர்/ஆணையர் அவர்களின் 10.07.2024 நாளிட்ட சுற்றறிக்கையில் தெரிவித்துள்ள ஒரு நாளுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.753/- வீதம் 1147 நபர்கள் X 91 நாட்கள் X ரூ.753/- = ரூ.7,85,95,881/- (ரூபாய் ஏழு கோடியே எண்பத்தைந்து இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரத்து எண்ணூற்று எண்பத்தொன்று மட்டும்) அனுமதியும், |

| | |
|---|---|
| (இ) | தூய்மை பணியில் ஈடுபட்டு வரும் SHG தொழிலாளர்கள் தொடர்ந்து பணிக்கு வர தவறும் பட்சத்தில் அன்னாரை ஆணையர் அவர்களின் அனுமதியுடன் பணியிலிருந்து நீக்கம் செய்ய அனுமதியும், |
| (ஈ) | தேவைப்படும் பணியாளர்களை அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலம் மண்டல அலுவலர்-4 அவர்கள் மூலமாக பணியமர்த்திக்கொள்ளவும், |
| (உ) | தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் அரசாணை / சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் வரும் நிதியாண்டுகளில் திருத்தியமைக்கப்படும் பொழுது அதனடிப்படையில் ஊதியம் வழங்க அனுமதியும், |
| (ஊ) | நிதி ஆலோசகர் மூலமாக **ரூ. 7,85,95,881/-** (தலைப்பு எண்: 40-41-03 PAYMENT TO CASUAL STAFF CONSERVANCY WORKS, கணக்கு குறியீடு எண்.210-100-601) நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டியும், |
| (எ) | மன்ற தீர்மானம் பெறப்பெற்ற 1147 தற்காலிக தூய்மை பணியாளர்கள் விடுப்பு துய்க்கும் பட்சத்தில் 10 சதவீதம் பதிலி பணியாளர்களை பணியமர்த்துவதற்கு அனுமதி வேண்டியும், |
| (ஏ) | மண்டலம்-4ல் பணிபுரியும் தற்காலிக தூய்மை பணியாளர்களில் (SHG) 60 வயதை கடந்த பணியாளர்கள் எவரும் பணிபுரியவில்லை என சான்றிளிக்கப்படுகிறது, |

மேற்கண்ட அ முதல் ஏ வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.179/2025, நாள்.23.10.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"27.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.539/2025, நாள்.27.10.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."**

**********

<u>க.து.ந.க.எண்.அ1/4458/2025</u>

**தீர்மான எண்: 1148/2025** **பொருள் எண்.68**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - கல்வித்துறை - 2025-2026ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் அலுவலகம், நிர்வாகம் போன்ற பள்ளி சார் பணிகளை மேம்படுத்துதல் - பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் தற்காலிக கணினி உதவியாளர்கள் அக்டோபர் 2025 முதல் மே 2026 வரை பணியமர்த்துவதற்கும் மற்றும் அவர்களுக்கான ஊதியம் வழங்குவதற்கும் அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் *206* தொடக்கப்பள்ளிகள், *130* நடுநிலைப்பள்ளிகள், *46* உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் *35* மேல்நிலைப்பள்ளிகள் என *417* பள்ளிகள் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன. சென்னைப் பள்ளிகளில் அலுவலகம், நிர்வாகம் போன்ற பள்ளிசார் பணிகளில் ஏற்படும் தேவைகள், குறைவுகள், தொய்வுகள் ஆகியவற்றை சந்தித்திட மாணவர்களின் நலனுக்காக பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் தற்காலிக கணினி உதவியாளர்கள் பணியமர்த்தப்படுகின்றனர்.

தற்போது, 2025-2026ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் பள்ளி சார் பணிகளை மேற்கொள்வதற்கு கீழ்கண்டுள்ள அட்டவணையில் உள்ளவாறு தற்காலிக கணினி உதவியாளர்களுக்கு *Labour Welfare and Skill Development (J1) Department, G.O.(2D) No. 36, Dated: 16.06.2023* நாளிட்ட அரசாணையின்படி, நாள் ஒன்றுக்கு தினக்கூலியாக ரூ.802/- என நிர்ணயம் செய்யப்பட்டு ஜுன் 2025 முதல் மே 2026 வரை பணியமர்த்துவதற்கு மன்றத் தீர்மான எண். 802/2025, நாள்.30.06.2025ன்படி மன்றத்தின் அனுமதியும் பெறப்பட்டது.

| S. No. | Description | No. of Com. Asst. |
|---|---|---|
| 1 | Primary and Middle Schools | 29 |
| 2 | High and Higher Sec. Schools | 94 |
| 3 | Central Schools | 10 |
| 4 | Head Office | 30 |
| **Total** | | **163** |

மேற்குறிப்பிட்டுள்ள அனுமதியின்படி 163 தற்காலிக கணினி உதவியாளர்களுக்கு ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.802/-ல் இருந்து ரூ.868/- என நிர்ணயம் செய்து 01.07.2025 முதல் 31.05.2026 வரை ஊதியம் வழங்குவதற்கு துணை ஆணையர் (வ (ம) நிதி) அவர்களின் 23.07.2025 நாளிட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது.

2025-2026ஆம் கல்வியாண்டில் சென்னை தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை 500க்கும் மேல் உள்ள பள்ளிகளுக்கு ஒரு கணினி உதவியாளர் என 29 தற்காலிக கணினி உதவியாளர்கள் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

தற்போது, 19.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டுத் திடல்) கூட்டத்தில் வார்டு 128 மன்ற உறுப்பினர் திருமதி. ஆர். ஸ்டெல்லா ஜாஸ்மின் ரத்னா, அவர்கள் 400 மற்றும் 450 மாணவர்கள் உள்ள சென்னை பள்ளிகளில் பணிபுரியும் கணினி உதவியாளர்களை நீக்கம் செய்யாமல் தொடர்ந்து பணிபுரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டதற்கு - தலைவர் அவர்கள் 500 மாணவர்கள் இருந்தால்தான் ஒரு கணினி உதவியாளர் என்ற நிபந்தனையை தளர்வு செய்ய வேண்டும் என தெரிவித்தார், துணை ஆணையர்(கல்வி) (பொ.) அவர்கள் இது குறித்து அனைத்து சென்னை பள்ளிகளிலும் Near by 500 மாணவர்கள் உள்ள பள்ளிகளின் பட்டியல் தயார் செய்து, Relaxation Order பெற்று உரிய நடவடிக்கை எடுக்க கல்வி அலுவலர் அவர்களை அறிவுறுத்தினார்.

மேற்குறிப்பிட்ட துணை ஆணையர் (கல்வி) (பொ.) அவர்களின் அறிவுறுத்தலின்படி சென்னை தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை 400 முதல் 500 வரை உள்ள பள்ளிகளுக்கு அலுவலகம், நிர்வாகம் போன்ற பள்ளி சார் பணிகளை மேற்கொள்வதற்கு ஒரு கணினி உதவியாளர் என கீழ்கண்டுள்ள அட்டவணையில் உள்ள பள்ளிகளுக்கு தற்காலிக கணினி உதவியாளர்கள் நியமிப்பது அவசியமாகிறது.

**சென்னை தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை 400 முதல் 500 வரை உள்ள பள்ளிகளின் விவரம்**

| S.No | AEO | NAME OF THE SCHOOL | ROLL (KG TO 8) | NO OF COM ASST NEED |
|---|---|---|---|---|
| 1 | 2 | CPS MATHUR | 425 | 1 |
| 2 | 3 | CPS KODUNGAIYUR | 446 | 1 |
| 3 | 3 | CPS 731, T.H. ROAD | 421 | 1 |
| 4 | 3 | CMS CORONATION NAGAR | 456 | 1 |
| 5 | 3 | CMS NEW KAMARAJ NAGAR | 485 | 1 |
| 6 | 4 | CUGMS WASHERMENPET | 407 | 1 |
| 7 | 4 | CMS SANJEEVARAYAN STREET | 409 | 1 |
| 8 | 5 | CMS MADUMA NAGAR | 437 | 1 |
| 9 | 6 | CPS ALAPAKKAM | 447 | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | 6 | CPS METTUKUPPAM | 417 | 1 |
| 11 | 6 | CMS CHETTIYAR AGARAM | 415 | 1 |
| 12 | 7 | CMS VILLIVAKKAM | 435 | 1 |
| 13 | 9 | CPS NESAPAKKAM | 460 | 1 |
| 14 | 10 | CMS N.S. GARDEN | 419 | 1 |
| 15 | 10 | CPS UDHAYAM NAGAR | 453 | 1 |
| 16 | 10 | CMS GANDHI GRAMAM | 402 | 1 |
| 17 | 10 | CPS OKKIYAM THORAIPAKKAM | 419 | 1 |
| மொத்தம் | | | | **17** |

**<u>மேற்குறிப்பிட்ட தற்காலிக கணினி உதவியாளர்களுக்கு அக்டோபர் 2025 முதல் மே 2026 வரை ஊதியம் வழங்கப்பட வேண்டிய விவரம்</u>**

| S.No. | Description | No. of Com.Asst. | Per Day Salary Rs. | Total No. of Working Days | Total Amount (3 x 4 x 5) |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | Computer Assistant | 17 | 868 | 243 | 35,85,708 |

2025-2026ஆம் கல்வியாண்டில் சென்னை தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை 400 முதல் 500 வரை உள்ள பள்ளிகளுக்கு அலுவலகம் மற்றும் நிர்வாகம் போன்ற பள்ளி சார்ந்த பணிபுரிவதற்கு தற்காலிக கணினி உதவியாளர்களை அக்டோபர் 2025 முதல் மே 2026 வரை பணியமர்த்துவதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1. 19.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டுத் திடல்) கூட்டத்தில் எழுப்பப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் சென்னை தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை 400 முதல் 500 வரை உள்ள பள்ளிகளுக்கு அலுவலகம் மற்றும் நிர்வாகம் போன்ற பள்ளி சார்ந்த பணிபுரிவதற்கு 17 தற்காலிக கணினி உதவியாளர்களை அக்டோபர் 2025 முதல் மே 2026 வரை பணியமர்த்துவதற்கு அனுமதியும்,

2. மேற்குறிப்பிட்ட 17 தற்காலிக கணினி உதவியாளர்களுக்கு அக்டோபர் 2025 முதல் மே 2026 வரை ஊதியம் வழங்குவதற்கான செலவினத் தொகையான ரூ.35,85,708/-னை (ரூபாய் முப்பத்து ஐந்து இலட்சத்து எண்பத்து ஐந்தாயிரத்து எழுநூற்று எட்டு மட்டும்) கணக்கு குறியீடு எண். 80-82-01, வரவு செலவினத் தலைப்பு 230-11-02-02 (கல்வி செலவினங்கள்) என்ற தலைப்பில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் மேற்கொள்வதற்கு அனுமதியும்,

3. மேற்குறிப்பிட்ட தற்காலிக கணினி உதவியாளர்களுக்கு Labour Welfare and Skill Development (J1) Department அரசாணையின்படி ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்படுகிறது. அதனடிப்படையில் இனிவரும் காலங்களில் Labour Welfare and Skill Development (J1) Department அரசாணைக்கிணங்க உயர்த்தப்படும் ஊதியத்தினை இணை ஆணையர்(கல்வி) அவர்களின் ஒப்புதல் பெற்று ஊதியம் உயர்த்துவதற்கும்.

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 23.10.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.10.2025 அன்று தீர்மான எண்.96/2025ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று

நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 27.10.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.10.2025 அன்று தீர்மான எண்.541/2025ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**க.து.ந.க.எண்.அ4 / 12234 / 2023**

**தீர்மான எண்: 1149 / 2025** **பொருள் எண்.69**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கல்வித்துறை - கல்வித்துறையின் நிர்வாக வசமுள்ள மண்டலம் 1 முதல் 15 வரையிலுள்ள சென்னைப்பள்ளிகள், அரசுப்பள்ளிகளில் 200 மாணவர்களுக்கு ஒரு Sweeper, 10 கழிப்பறைகளுக்கு 1 Scavanger என தற்காலிக தூய்மை பணியாளர்கள் நிர்ணயம் செய்வதற்கும் மண்டலம் 8, சமுதாய கல்லூரி மண்டலம் 9 தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் 13 அரசு ஆதி திராவிட தொடக்கப்பள்ளிகளுக்கு தூய்மை பணியாளர்களை பணியமர்த்தவும் - திருத்திய 1829 தற்காலிக தூய்மை பணியாளர்கள் நிர்ணயத்திற்கு அனுமதி.**

அரசாணை நிலை) எண். *166* நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( மாந*4)* துறை, நாள்.*23.11.2016*ல் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலுள்ள உள்ளாட்சி பள்ளிகள், அரசு பள்ளிகளிலுள்ள வகுப்பறைகள் மற்றும் கழிவறைகளை பராமரிக்க பெருக்குபவர் / துப்புரவு பணியாளர்களை தனியார் நிறுவனங்களின் மூலம் நியமனம் செய்து அப்பராமரிப்பு பணிகளை நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்கள் வசூலிக்கும் கல்வி வரியின் மூலம் மேற்கொள்ளுமாறு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

கல்வித்துறையின் 23.01.2017, 30.03.2017, 31.05.2017 மற்றும் 14.09.2022 நாளிட்ட சுற்றறிக்கையில் மேற்காணும் அரசாணையின்படி மண்டலம்-1 முதல் 15 வரையிலுள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் சென்னை பள்ளிகள், அரசு பள்ளிகளிலுள்ள வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகளை பராமரிக்க பெருக்குபவர்/ துப்புரவு பணியாளர்களை ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் 11 மாதங்களுக்கு (ஜுன் முதல் ஏப்ரல் வரை) ஒவ்வொரு பள்ளிக்கும் தூய்மை பணிகளை மேற்கொள்ள தனியார் நிறுவன ஒப்பந்ததாரர்கள் மூலம் மேற்கொள்ள மண்டல அலுவலர்கள் 1 முதல் 15 வரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

மன்றத்தீர்மான எண்.1014/2025, நாள்.26.08.2025ன்படி 200 பள்ளி மாணாக்கர்களுக்கு ஒரு தூய்மை பணியாளர் என்ற விகிதத்தில் (200:1) மண்டலம் 1 முதல் 15 வரையுள்ள அனைத்து சென்னை பள்ளிகளில் 1747 தூய்மை பணியாளர்கள் பணியமர்த்திட அனுமதி பெறப்பட்டுள்ளது மற்றும் 74 (காலமுறை ஊதியம்) தூய்மை பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

நிலைக்குழுத் தலைவர் (கல்வி, பூங்கா(ம) விளையாட்டுத்திடல்) அவர்கள் தலைமையில் 19.09.2025 அன்று நடைபெற்ற கூட்டத்தில், நிலைக்குழு உறுப்பினர்களின் கோரிக்கையின்படியும் மற்றும் தலைவர் அவர்களின் பரிந்துரையின்படியும், சென்னை பள்ளிகளில் மாணவ மாணவிகளின் நலன்கருதியும், அவர்களின் சுகாதாரம் கருதியும், பள்ளிகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள எண்ணிக்கைக்கேற்ப தற்போது வரை பணிபுரியும் தூய்மை பணியாளர்களை பணி நீக்கம் செய்யாமல் தொடர்ந்து பள்ளியில் பணியில் ஈடுபடுத்த வேண்டுமென்றும், அதற்கு துணை ஆணையர் (கல்வி) (பொ) அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, 200 மாணாக்கர்களுக்கு 1 தூய்மைப்பணியாளர்கள் என்ற விகிதத்தில் திருத்திய 1829 தற்காலிக தூய்மை பணியாளர்கள் பணியமர்த்திட அனுமதி பெற வேண்டியுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

200 மாணவர்களுக்கு 1 தூய்மைப்பணியாளர் மற்றும்

10 கழிவறைகளுக்கு 1 தூய்மைப்பணியாளர்

| S. no | ZONE | AEO'S | NO.OF. CHENNAI SCHOOLS | NO. OF GOVT SCHOOLS | Time scale of pay Sweeper | Time scale of pay Scavenger | SWEEPER | SCAVENGER | TOTAL |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | 1 | 26 | 4 | 0 | 0 | 53 | 40 | 93 |
| 2 | 2 | 2 | 17 | 6 | 0 | 0 | 46 | 30 | 76 |
| 3 | 3 | | 13 | 6 | 0 | 0 | 39 | 26 | 65 |
| 4 | 4 | 3 | 46 | 5 | 1 | 8 | 105 | 76 | 181 |
| 5 | 5 | 4 | 42 | 7 | 11 | 3 | 72 | 74 | 146 |
| 6 | 6 | 5 | 48 | 7 | 6 | 4 | 95 | 88 | 183 |
| 7 | 7 | 6 | 35 | 5 | 0 | 0 | 65 | 53 | 118 |
| 8 | 11 | | 12 | 12 | 0 | 0 | 44 | 29 | 73 |
| 9 | 8 | 7 | 29 | 4 | 2 | 5 | 67 | 64 | 131 |
| | COMMUNITY COLLEGE (zone 8) | 7 | - | - | 0 | 0 | 2 | 2 | 4 |
| 10 | 9 | 8 | 53 | 4 | 13 | 10 | 78 | 86 | 164 |
| | ITI (ZONE 9) | 8 | - | - | 0 | 0 | 2 | 2 | 4 |
| 11 | 10 | 9 | 37 | 10 | 5 | 2 | 132 | 111 | 243 |
| 12 | 12 | 10 | 11 | 8 | 0 | 0 | 31 | 26 | 57 |
| 13 | 13 | | 24 | 4 | 1 | 3 | 90 | 57 | 147 |
| 14 | 14 | 11 | 8 | 4 | 0 | 0 | 19 | 18 | 37 |
| 15 | 15 | | 15 | 8 | 0 | 0 | 64 | 43 | 107 |
| TOTAL | | | 416 | 94 | 39 | 35 | 1004 | 825 | 1829 |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலங்கள் 1 முதல் 15 வரையிலுள்ள பள்ளிகளிலுள்ள வகுப்பறைகள், கழிவறைகளின் எண்ணிக்கை மற்றும் (200 : 1) மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவும், பகுதி நேர தூய்மை பணியாளர்களின் சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணிபுரியும் 74 பகுதி நேர பணியாளர்களில் பெரும்பாலானோர் வயது முதிர்வு காரணமாக பணி மேற்கொள்ள இயலாத நிலையில் உள்ளதால் அப்பணியிடத்திற்கேற்ப பணியாளர்கள் தேவைப்படுவதால் மேற்காணும் திருத்திய அட்டவணையின்படி தேவைப்படும் 1829 தற்காலிக தூய்மை பணியாளர்களை மண்டலங்களிலுள்ள ஒவ்வொரு பள்ளிகளுக்கும் பணியமர்த்தி கொள்ள அனுமதியும்,
2. இனிவரும் காலங்களில் கல்வி அலுவலர் கல்வித்துறை வாயிலாக அந்தந்த பள்ளி தலைமை ஆசிரியர்கள் மூலம் RTGS வாயிலாக தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 23.10.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.10.2025 அன்று தீர்மான எண்.97/2025ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 27.10.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.10.2025 அன்று தீர்மான எண்.542/2025ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**க.து.ந.க.எண்.அ1/4456/2025**

**தீர்மான எண்: 1150/2025** **பொருள் எண்.70**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கல்விதுறை - சென்னைப் பள்ளிகளில் 2025-2026 ஆம் கல்வியாண்டில் 206 தற்காலிக முதுகலைபட்டதாரி ஆசிரியர்கள் பணியமர்த்தப்பட்டது - கூடுதலாக 63 தற்காலிக முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்கள் SMC மூலம் பள்ளிகளில் பணியமர்த்துவதற்கு அனுமதி.**

மன்றத்தின் தீர்மான எண். *739/2025*, நாள்.*30.06.2025*ன்படியும், பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் இயங்கும் சென்னை மேல்நிலைப்பள்ளிகளில் *206* தற்காலிக முதுகலைப்பட்டதாரிகள் *SMC* (பள்ளி மேலாண்மைக்குழுவின்) மூலம் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

தற்போது, சென்னை பள்ளிகளில் ஏற்பட்ட காலிப்பணியிடங்கள் மற்றும் மாணவர்களின் எண்ணிக்கை கூடுதலாக உள்ளதால் கூடுதலாக *63* தற்காலிக முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் தேவைப்படுவதால் சென்னை மேல்நிலைப் பள்ளிகளில் பணியமர்த்துவது அவசியம் ஆகிறது. சென்னை

மேல்நிலைப்பள்ளிகளில் தேவைப்படும் தற்காலிக முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்களின் பணியிடங்கள் பள்ளிவாரியான விவரங்கள் சம்மந்தப்பட்ட உதவி கல்வி அலுவலர்கள் அளித்துள்ளார்கள்.

எனவே, பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதியும் மாணவர்கள் நலன் கருதியும், மேல்நிலைப்பள்ளிகளில் பணிகள் தொய்வில்லாமல் நடக்கவும், கூடுதலாக 63 தற்காலிக முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். அதன் விவரம் பின்வருமாறு.

| S.No | AEO | NAME OF THE SCHOOL | NAME OF THE SUBJECT | NO OF NEEDED TEACHER |
|---|---|---|---|---|
| 1 | 2 | CHSS LAKSHMIPURAM KOLATHUR | TAMIL | 1 |
| | | | MATHS | 1 |
| | | | BIOLOGY | 1 |
| 2 | 3 | CHSS PATEL NAGAR TONDIARPET | ZOOLOGY | 1 |
| 3 | 3 | CHSS 731 T.H ROAD NEW WASHERMENPET | HISTORY | 1 |
| | | | MATHS | 1 |
| | | | BOTANY | 1 |
| 4 | 3 | CHSS KALYANAPURAM VYASARPADI | ECONOMICS | 1 |
| | | | CHEMISTRY | 1 |
| | | | COM . APPLICATION | 1 |
| 5 | 3 | CGHSS BUDDHA STREET KORUKKUPET | CHEMISTRY | 1 |
| | | | COMMERCE | 1 |
| 6 | 4 | CHSS APPASAMY STREET OLD WASHERMENPET | TAMIL | 1 |
| | | | ENGLISH | 2 |
| | | | BIOLOGY | 1 |
| | | | COMMERCE | 1 |
| | | | PHYSICS | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | CHEMISTRY | 1 |
| 7 | 4 | CGHSS ROTLER STREET | TAMIL | 1 |
| | | | ECONOMICS | 1 |
| | | | COMMERCE | 1 |
| 8 | 5 | CHSS KOLATHUR<br>KOLATHUR | TAMIL | 1 |
| 9 | 5 | CGHSS MARKET STREET<br>PERAMBUR | COMMERCE WITH ACCOUNTS | 1 |
| 10 | 5 | CHSS BUNDER GARDEN<br>PERAMBUR | ENGLISH | 1 |
| 11 | 5 | CGHSS M.H ROAD<br>SCHOOL ROAD, PERAMBUR | TAMIL | 2 |
| | | | PHYSICS | 2 |
| | | | HOME SCIENCE | 1 |
| | | | HISTORY | 1 |
| 12 | 7 | CHSS PALAVOYAL ROAD<br>AYANAVARAM | ENGLISH | 1 |
| | | | ECONOMICS | 1 |
| | | | COM .SCIENCE | 1 |
| 13 | 7 | CBHSS G.KOIL ST<br>PURASAIWAKKAM | TAMIL | 1 |
| | | | ENGLISH | 1 |
| | | | BIOLOGY | 1 |
| 14 | 7 | CGHSS PULLA AVENUE<br>SHENOY NGAR | TAMIL | 1 |
| | | | ENGLISH | 1 |
| 15 | 7 | CHSS SUBBARAYAN ST<br>SHENOY NAGAR | TAMIL | 2 |
| | | | ENGLISH | 1 |
| | | | ECONOMICS | 1 |
| | | | BIOLOGY & ZOOLOGY | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| 16 | 8 | CBHSS NUNGAMBAKKAM | ENGLISH | 1 |
| 17 | 8 | CHSS CHOOLAIMEDU CHOOLAIMEDU | ECONOMICS | 1 |
| 18 | 8 | CHSS LLOYDS ROAD ROYAPETTAH | ENGLISH | 1 |
| 19 | 8 | CHSS ALWARPET ALWARPET | ECONOMICS | 1 |
| | | | BIOLOGY | 1 |
| 20 | 9 | CHSS KOYAMBEDU SCHOOL STREET KOYAMBEDU | TAMIL | 1 |
| | | | ACCOUNTANCY | 1 |
| | | | ECONOMICS | 1 |
| 21 | 9 | CHSS VIRUGAMBAKKAM SCHOOL STREET VIRUGAMBAKKAM | PHYSICS | 1 |
| | | | ECONOMICS | 1 |
| 22 | 9 | CHSS PULIYUR KODAMBAKKAM | COMMERCE | 1 |
| 23 | 9 | CHSS WEST MAMBALAM T-NAGAR | PHYSICS | 1 |
| | | | MATHS | 1 |
| | | | CHEMISTRY | 1 |
| 24 | 9 | CHSS NESAPAKKAM | COMMERCE | 1 |
| 25 | 10 | CHSS TARAMANI | TAMIL | 1 |
| | | | ECONOMICS | 1 |
| 26 | 10 | CHSS THIRUVANMIYUR | CHEMISTRY | 1 |
| | | | COMMERCE | 1 |
| TOTAL | | | | 63 |

எனவே,

1. 2025-2026 ஆம் கல்வியாண்டில் அக்டோபர்-2025 முதல் மார்ச்-2026 வரை கூடுதலாக 63 தற்காலிக முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஆகும் செலவினம் (63 x 6 x 18,000) = ரூ.68,04,000/- (ரூபாய் அறுபத்து எட்டு இலட்சத்து நான்காயிரம் மட்டும்)-க்கு நிர்வாக அனுமதியும்,
2. மேற்படி 63 தற்காலிக முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்கள் SMC (பள்ளி மேலாண்மைக் குழுவின்) மூலம் பணியமர்த்த அனுமதியும்,
3. மேற்படி 63 தற்காலிக முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதியம் கல்வி அலுவலர் மூலமாக சம்மந்தப்பட்ட பள்ளிகளின் தலைமையாசிரியர் வங்கி கணக்கில் RTGS மூலம் வழங்கவும் மற்றும் சம்மந்தப்பட்ட தற்காலிக முதுகலை பட்டதாரி ஆசிரியர்களின் வங்கி கணக்கில் தலைமையாசிரியர் மூலமாக RTGS செய்வதற்கு அனுமதியும்,
4. மேற்குறிப்பிட்ட செலவினங்களுக்குரிய தொகையான (63 x 6 x 18,000) = ரூ.68,04,000/- (ரூபாய். அறுபத்து எட்டு இலட்சத்து நான்காயிரம் மட்டும்)-க்கு கணக்கு குறியீடு எண். 80-82-01, 230-11-02-02 கல்விச் செலவினங்கள் என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 23.10.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.10.2025 அன்று தீர்மான எண்.98/2025ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

“ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 27.10.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.10.2025 அன்று தீர்மான எண்.543/2025ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

<u>பூ.து.ந.க.எண்.பி2/2031/2025</u>

**தீர்மான எண்: 1151/2025** **பொருள் எண்.71**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - பூங்கா (ம) விளையாட்டுதிடல் துறை - மண்டலம்-15, பகுதி-44, வார்டு-199ல் சோழிங்கநல்லூர், ராஜீவ்காந்தி சாலையில் உள்ள தாங்கல் ஏரியின் நுழைவு வாயிலில் சுற்றுச்சுவர், நடைபாதை, வாகனம் நிறுத்தும் இடம் மற்றும் Landscaping Work அமைக்கும் பணிக்காக நிர்வாக அனுமதிஅளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-15, பகுதி-44, வார்டு-199ல் சோழிங்கநல்லூர், ராஜீவ்காந்தி சாலையில் உள்ள தாங்கல் ஏரியின் நுழைவு வாயிலில் சுற்றுச்சுவர், நடைபாதை, வாகனம் நிறுத்தும் இடம் மற்றும் *Landscaping Work* அமைக்கும் பணிக்காக ரூ.4,31,00,000/- (ரூபாய் நான்கு கோடியே முப்பத்தொரு இலட்சங்கள்)க்கு 2024-2025 ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்து உதவி ஆணையர் முதுநிலை, மண்டலம்-15 அவர்களின் 21.07.2025 நாளிட்ட பரிந்துரையின்படி சமர்ப்பித்துள்ளனர். அதன் விவரம் பின் வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | பணியின் பெயர் | பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-15, பகுதி-44, வார்டு-199ல் சோழிங்கநல்லூர், ராஜீவ்காந்தி சாலையில் உள்ள தாங்கல் ஏரியின் நுழைவு வாயிலில் சுற்றுச்சுவர், நடைபாதை , வாகனம் நிறுத்தும் இடம் மற்றும் Landscaping Work அமைக்கும் பணி. |
| 2. | பரிந்துரை செய்தவரின் விவரம் | உதவி ஆணையர் முதுநிலை, மண்டலம்-15 அவர்களின் 21.07.2025 நாளிட்ட பரிந்துரை |
| 3. | தொழில்நுட்ப அனுமதியின் விவரம் | தலைமை பொறியாளர் (பூங்கா (ம) விளையாட்டுதிடல்) அவர்களின் தொழில்நுட்ப அனுமதி நாள். 11.10.2025 |
| 4. | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | பூங்காத்துறை |
| 5. | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப் பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது. | 2024-25 ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்படி (மதிப்பீடு) |
| 6. | மதிப்பீட்டின் தொகை | ரூ.4,31,00,000.00 |
| அ) | பணியின் மதிப்பு | ரூ.3,45,87,775.19 |
| (ஆ) | சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 62,25,799.53 |
| இ) | தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1% | ரூ. 3,45,877.75 |
| (ஈ) | மற்ற எதிர்பாரா செலவு 2.5% | ரூ. 7,78,398.29 |

| | | |
|---|---|---|
| (உ) | தரக் கட்டுபாடு செலவு 1 % | ரூ. 3,45,877.75 |
| (ஊ) | இதர செலவு | ரூ. 8,16,271.49 |
| | மொத்தம் | ரூ.4,31,00,000.00 |
| 7. | வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா | ஆம் |
| 8. | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | - |
| 9. | நிதியின் தன்மை/ ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி/ கணக்கு குறியீட்டு எண் | மூலதன நிதி *2025-26* |
| 10. | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ.*4,31,00,000/-* |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-15, பகுதி-44, வார்டு-199ல் சோழிங்கநல்லூர், ராஜீவ்காந்தி சாலையில் உள்ள தாங்கல் ஏரியின் நுழைவு வாயிலில் சுற்றுச்சுவர், நடைபாதை, வாகனம் நிறுத்தும் இடம் மற்றும் Landscaping Work அமைக்கும் பணிக்காக. 2024-2025 ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் ரூ.4,31,00,000/- (ரூபாய் நான்கு கோடியே முப்பத்தொரு இலட்சங்கள்)க்கு நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. இப்பணிகளை பூங்காத்துறையின் மூலதன நிதியின் தலைப்பு எண்.412-400-200 கணக்கு குறியீட்டு எண்.60-61-00 கீழ் நிதி ஒதுக்கீடு பெற அனுமதியும்,
3. இப்பணியினை மண்டலம்-15ன் மூலம் மேற்கொள்ளவும் மற்றும் பூங்காத்துறையின் மூலம் பட்டிதீர்வு செய்வதற்கு அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா மற்றும் விளையாட்டு திடல்) மூலமாக நிலைக்குழு (வரி விதிப்பு (ம) நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 23.10.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.10.2025 அன்று தீர்மான எண்.101/2025ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்பிக்கப்படுகிறது.”

ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 27.10.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 29.10.2025 அன்று தீர்மான எண்.544/2025ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.”

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

<u>மது.ந.க.எண்.அ1/443/2025</u>

**தீர்மான எண்: 1152/2025** **பொருள் எண்.72**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - மன்றத்துறை - மாண்புமிகு மேயர் அவர்களின் மேம்பாட்டு திட்டப் பணிகள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் வார்டு மேம்பாட்டு திட்டப் பணிகள் பட்டியலில் கூடுதலாக சக்கர தடை உபகரணம் (Skid Steer Loader) கொள்முதல் செய்யும் பணியினை சேர்ப்பதற்கு மன்றத்தின் அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சியில், 30.10.2025 அன்று நடைபெற்ற சாதாரண மன்றக் கூட்டத்தில், கேள்வி நேரத்தின் போது திரு.வே.ராஜன், மன்ற உறுப்பினர், வார்டு எண்.143 அவர்கள் மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் Bobcat வாகனம் கொள்முதல் செய்வதற்கு சிறப்பு நிகழ்வாக

அனுமதி வழங்கப்படுமா? என தெரிவித்ததற்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என பதிலளிக்கப்பட்டது.

மன்றத் தீர்மான எண்.402/2013, நாள்.26.06.2013ல், வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் மேம்பாட்டு திட்டப் பணிகள் மற்றும் மன்ற உறுப்பினர்கள் அவ்வப்போது பரிந்துரைக்கும் வார்டுக்கு தேவையான வளர்ச்சிப் பணிகளை, மண்டல அலுவலர்களாலும், துறைத் தலைவர்களாலும் வழிகாட்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டு மன்றத் தீர்மானம் எண்.126/2004, நாள்.24.06.2004ன்படி இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

மன்றத் தீர்மான எண்.732/2025, நாள்.30.06.2025ல் அட்டவணை "அ" வில் அங்கீகரிக்கப்பட்ட திட்டப் பணிகளில் 38வது பணியாக "பல்நோக்கு கட்டடம்" கட்டும் பணியையும் சேர்த்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது எனவும், மேலும் மாண்புமிகு மேயர் அவர்களின் மேம்பாட்டு திட்டப் பணிகள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் வார்டு மேம்பாட்டுத் திட்ட பொதுக்கொள்கை வழிகாட்டு மற்றும் நிறைவேற்றும் முறைகளின்படி அட்டவணை "அ"வில் கீழ்கண்ட 38 பணிகள் அனுமதிக்கக்கூடிய பணிகளாகவும், அட்டவணை "ஆ"வில் 14 பணிகள் அனுமதிக்கக்கூடாத பணிகளாகவும் வகைப்படுத்தப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும் இது குறித்து தெரிவிப்பது யாதெனில், மாமன்ற உறுப்பினர் கோரிக்கைகேற்பவும், மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023ல் மன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகார பகிர்வினை பின்பற்றியும் சிறப்பு நிகழ்வாக இத்திட்டத்தின் செயல்பாட்டை, காலத்திற்கேற்ப அனுமதிக்கககூடிய பணிகள் பட்டியலில் (அட்டவணை "அ" மற்றும் "ஆ" வில்) சில மாறுதல்கள் செய்ய வேண் டியது அவசியமாகிறது.

**<u>அட்டவணை "அ"</u>**

**<u>அங்கீகரிக்கப்பட்ட திட்டப் பணிகள்</u>**

1. கழிப்பறைகள் கொண்ட நவீன கழிப்பிடம்
2. தடுப்புகள் கொண்ட சிறுநீர் கழிப்பிடம்
3. மாநகராட்சி கட்டிடங்களுக்கு சுற்று சுவர்கள் கட்டுதல்.
4. சாலையோர கால்வாய்.
5. குளியல் அறை கட்டுதல்.
6. மாநகராட்சி பள்ளிகளுக்கு கணிப்பொறிகள்.

7. மாநகராட்சி பள்ளி வகுப்பறை மேம்படுத்துதல்.
8. மாநகராட்சி கட்டட வளாகத்தில் கைபம்புகள் அமைத்தல்.
9. பேருந்து நிழற்குடை அமைத்தல்.
10. பூங்காக்களில் சிறுவர் விளையாட்டு சாதனங்கள் அமைத்தல்.
11. பூங்கா மேம்படுத்துதல்.
12. குடிசைப் பகுதியில் அடிப்படை வசதிகளை குடிநீர் அமைத்து சாலை பொது கழிப்பிடம் மற்றும் குளியலறை.
13. சாலைகளின் குறுக்கே சிறு பாலம் கட்டுதல்.
14. இணைப்புச் சாலை மற்றும் அணுகுசாலை
15. உடற்பயிற்சிக் கூடம் கட்டுதல் மற்றும் அதற்கான சாதனங்கள் நிறுவுதல்
16. குப்பை சேகரிக்கும் பெட்டகம்
17. தாய்சேய் நல விடுதிகளுக்கான மின்னணு சாதனம் வாங்குதல்
18. மருத்துவ பரிசோதனை நிலையங்களுக்குத் தேவையான பரிசோதனை கருவிகள்.
19. மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் மழைநீர் சேமிப்பு அமைப்பு ஏற்படுத்துதல்.
20. பள்ளிகளில் கலையரங்கம் அமைத்தல் மற்றும் புதிதாக பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல்.
21. விளையாட்டு மைதானங்களில் திறந்தவெளி அரங்கங்கள் அமைத்தல்.
22. விளையாட்டு மைதானம் அமைத்தல் மற்றும் மேம்பாட்டுப் பணிகள்.
23. நீத்தார் நிறைவுக்கூடம் அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல்.
24. இடுகாடு மற்றும் சுடுகாடுகளில் அபிவிருத்திப் பணிகள் மற்றும் மேம்படுத்துதல்.
25. குப்பை அகற்றுவதற்கு மூன்று சக்கர மிதிவண்டி மற்றும் தேவையான பிளாஸ்டிக் *(PLASTIC)* தொட்டிகள் தள்ளுவண்டி வாங்குதல்.
26. பள்ளிகளுக்குத் தேவையான ஆய்வுக்கூட உபகரணங்கள் மற்றும் ஒலி, ஒளிகாட்டு கல்வி சாதனங்கள் மற்றும் கற்றல் கற்பித்தல் உபகரணங்கள்.
27. போக்குவரத்து தீவு மற்றும் நீரூற்றுகள்.
28. சாலை மையத் தடுப்பு அமைத்தல்.
29. சுரங்க நடைபாதைகள் மேம்படுத்துதல்.
30. மழைநீர் கால்வாய்.
31. சத்துணவுக் கூடங்கள் மேம்படுத்தும் பணி.
32. மாநகராட்சி கட்டிடங்களில் நிலத்தடி நீர் சேமிப்பு தொட்டி, மேல்நிலை தொட்டி மற்றும் மின்சார மோட்டார் அமைத்தல்.
33. சாலை மற்றும் நடைபாதைகள்.
34. தாய் சேய் நல மருத்துவமனை மற்றும் மருந்தகம் கட்டுதல்.
35. கால்வாயின் குறுக்கே சிறுபாலம் அமைத்தல்.
36. மாநகராட்சி கட்டட வளாகம் மற்றும் பூங்காவில் குழாய் கிணறு மற்றும் கை பம்பு அமைத்தல்.

37. கட்டடங்களின் கூரை மேல் சூரிய சக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் தகடுகளிலான உபகரணங்கள் *(Solar Roof Top Plant)* அமைத்தல்.

38. பல்நோக்கு கட்டடம் கட்டுதல்/

**கூடுதலாக சேர்க்க கூடிய பணிகள்**

**39. சக்கர தடை உபகரணம்" *(Skid Steer Loader)* கொள்முதல் செய்தல்**

**அட்டவணை "ஆ"**

**அனுமதிக்கக் கூடாத பணிகள்**

1. அலுவலகக் கட்டடம்.
2. குடியிருப்பு வீடுகள்.
3. வணிக நிறுவனங்களில் பணிகள், டிரஸ்ட், பதிவு பெற்ற சொசைடி, தனியார் நிறுவனங்கள் அல்லது கூட்டுறவு நிறுவனங்கள்.
4. நீடித்து பயன் தரக்கூடிய சொத்தின் தனித் தகுதி பெற்ற பழுதுபார்ப்பு அல்லது மேம்படுத்துல் தவிர எந்தவிதமான பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகளும் செய்யக்கூடாது.
5. மானியம் மற்றும் கடன்கள்.
6. நினைவாலயம், சிலைகள் மற்றும் நினைவு கூடங்கள்.
7. தளவாட சாமான்கள், உபகரணங்கள் (அட்டவணை 'அ'வில் வரிசை எண்.37 தவிர) , குழல் ஆவி விளக்குகள்.
8. நிலம் கையகப்படுத்துதல் அல்லது கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு ஈடுசெய்தல்.
9. அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் பகுதிக்குட்படாத தனிப்பட்ட நபருக்கு பயன்படுத்தக் கூடிய சொத்துக்கள்.
10. வழிபாட்டு இடங்கள்.
11. குப்பை அகற்றுவதற்கு சிறு வாகனங்கள் வாங்குதல்.
12. தெருவிளக்கு.
13. பிறத் துறைகள் மற்றும் வாரியங்களின் பணிகள்
14. தொடர் செலவினங்கள் தேவைப்படும் பணிகள்.

**நீக்க வேண்டிய பணிகள்**

**11. குப்பை அகற்றுவதற்கு சிறு வாகனங்கள் வாங்குதல்.**

எனவே, மேலே கண்டவாறு அட்டவணை 'அ' வில் அங்கீகரிக்கப்பட்ட திட்டப் பணிகளில் *38* பணிகளுடன் கூடுதலாக *39*வது பணியாக சிறப்பு நிகழ்வாக **"சக்கர தடை உபகரணம்"** ***(Skid Steer Loader)*** கொள்முதல் செய்யும் பணியை சேர்த்தும் மற்றும் அட்டவணை "ஆ" வில் அனுமதிக்கக் கூடாத பணிகளில் வரிசை எண்-*11*ல் உள்ள **"குப்பை அகற்றுவதற்கு சிறு வாகனங்கள்வாங்குதல்"** என்கின்ற பணியினை நீக்கவும், மாண்புமிகு மேயர் அவர்களின் மேம்பாட்டு திட்டப் பணிகள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் வார்டு மேம்பாட்டுத் திட்ட பொதுக் கொள்கை வழிகாட்டு மற்றும் பணிகள் நிறைவேற்றும் முறைகளின் கீழ் திருத்தம் மேற்கொள்வதற்கும், மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

நன்றி. இத்துடன் இன்றைய கூட்டம் முடிவடைகிறது. அடுத்த கூட்டம் நடைபெறும் நாள் மற்றும் நேரம் பின்னர் அறிவிக்கப்படும்.

நாட்டுப்பண்.

**(அவையில் நாட்டுப்பண் பாடப்பட்டது)**

கூட்டம் முடிவுற்ற நேரம்: 1 மணி 45 நிமிடம்